


# புதிய மறைக்கல்வி நூல்

8ஆம் வகுப்பு

**GRADE - 8**

# புனித லூக்காஸ் நற்செய்தி

# விளக்கவுரை

756

756

# எம்முரை

கிறிஸ்தவ விசுவாச வாழ்வில் வளர்ச்சியும், முதிர்ச்சியும் பெறுவதற்கு 6ஆம் 7ஆம் வகுப்பு மாணவர்களுக்கும் புதிய மறைக்கல்வி நூல்கள் பெரிதும் உதவியாக அமைந்தன. கத்தோலிக்க மாணவ இளைஞர் தங்கள் வாழ்வில் ஒரு வகுப்பில் என்ருலும் " ஆண்டவரின் அருள் வாக்கின் " ஒளியிலே அடிப்படையான விடையங்களைப் புரிந்து கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றுவது பெரும்பேறுடைய வாழ்வாகும். எனவே 8ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் புதிய ஏற்பாட்டில் சிறப்பாக புனித லூக்காஸ் நற்செய்தியின் ஒளியில் விளக்க உரைகளைக் கொண்ட புதிய மறைக்கல்வி நூலை வெளியிட்டுள்ளோம். இவ் வகுப்பு மாணவர்கள் இறை வார்த்தையின் ஒளியில், கிறிஸ்தவ மதிப்பீடுகளுடன் வாழவும், இறையரசுக்காகப் பணிபுரியவும் இம் மறைக்கல்வி நூல் உதவும் என நம்புகிறோம்.

—யாழ்-மறைக்கல்விக் குழு.

COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P. O. BOX 601
COLOMBO.

220

அச்சிடலாம் :

+ வ. தியோகுப்பிள்ளை,
யாழ். மறைமாவட்ட ஆயர்,
10-8-1978.

# பொருளடக்கம்


| அலகு | | பக்கம் |
|---|---|---|
| 1. | அறிமுகம் ... ... ... ... | 1 |
| 2. | இறைவன் எம்மை வாழவும்,பணிபுரியவும் அழைக்கிறார் | 4 |
| 3. | ஆதவன் உதித்தனன் ... ... ... | 9 |
| 4. | தந்தையின் அலுவல் ... ... ... | 13 |
| 5. | பாலைவனத்தில் எழுந்த குரலொலி ... ... | 17 |
| 6. | புதிய ஆதாம் ... ... .. .. | 21 |
| 7. | சிலுவையில் இருந்து விலகி...... குறுக்குவழி ... | 24 |
| 8. | ஏழைகளுக்கு நற்செய்தி ... ... | 28 |
| 9. | பகிரங்கப் பணி ... ... ... | 32 |
| 10. | உயிருள்ள விசுவாசத்தின் வழியாக சான்று ... | 35 |
| 11. | சட்டத்திலும் மேலான வாழ்வு ... ... | 40 |
| 12. | புதிய இஸ்ராயேலரின் பண்புகள் ... ... | 43 |
| 13. | இறை அரசைச் சார்ந்தோரின் கடமைகள் ... | 47 |
| 14. | மீட்பு அனைவர்க்கும் பொதுவானது ... ... | 51 |
| 15. | புகழ்ச்சியும் மன்னிப்பும் ... ... ... | 55 |
| 16. | இறை வார்த்தைக்குச் செவிமடுத்தல் ... ... | 59 |
| 17. | மீட்பின் அடையாளங்கள் ... ... ... | 62 |
| 18. | புது உலகம் அமைக்க ஓர் அழைப்பு ... ... | 66 |
| 19. | இறைவனின் கிறிஸ்து ... ... ... | 71 |
| 20. | மெசியா போதிக்கிறார் ... ... ... | 75 |
| 21. | மெசியா போதிக்கிறார் ... ... ... | 78 |
| 22. | எழுபத்திரண்டு சீடர்களின் பணி ... ... | 81 |
| 23. | முடிவில்லா வாழ்வு பற்றிய கேள்வி ... ... | 85 |
| 24. | மெசியா போதிக்கிறார் ( அத்தாட்சியுடன் ) .. | 89 |
| 25. | அடையாளங்கள் ... ... ... | 94 |

| அலகு | | | பக்கம் |
|---|---|---|---|
| 26. | கிறிஸ்தவ மதிப்பீடுகள் | i. ... ... | 98 |
| 27. | கிறிஸ்தவ மதிப்பீடுகள் | ii ... ... | 101 |
| 28. | வரவிருக்கும் கிறிஸ்து | ... ... ... | 105 |
| 29. | மீட்பினதும் இறையரசினதும் நன்மைகள் | ... | 110 |
| 30. | இன்றைய சமுதாயத்தில் செயற்படும் கிறிஸ்தவன் | | 115 |
| 31. | இரக்கத்தின் உவமைகள் | ... | 120 |
| 32. | இரு தலைவர்களுக்கு நாம் ஊழியம் செய்ய முடியுமா? | | 125 |
| 33. | கடவுளின் அரசு உதயமாகிறது | ... ... | 129 |
| 34. | செபமும் தியாகமும் மதிப்புள்ளது | ... | 134 |
| 35. | ஆண்டவர் பெயரால் அரசராக வருபவர் | ... | 138 |
| 36. | யூதத் தலைவர்களுடன் முரண்பாடு | .. | 142 |
| 37. | மனுமகனின் வருகைக்காலம் | ... ... | 147 |
| 38. | சிலுவையின் பாதையில் | i. ... ... | 150 |
| 39. | சிலுவையின் பாதையில் | ii. ... | 154 |
| 40. | சிலுவையின் பாதையில் | iii. ... ... | 158 |
| 41. | சிலுவையை நோக்கி | iv. ... ... | 162 |
| 42. | தமது சாவினால் எமக்கு வாழ்வு தந்த செம்மல் கிறிஸ்து | | 166 |
| 43. | சாவை வென்ற சத்தியன் கிறிஸ்து. | .. ... | 171 |
| 44. | விண்ணேற்றம் ... | ... ... ... | 174 |

அலகு : I

# அறிமுகம்

"மாண்புமிக்க தெயோப்பிலுவே, நம்மிடையே நிறைவேறிய நிகழ்ச்சிகளைத் தொடக்கமுதல் கண்கூடாகக்... கண்டேன்."

(லூக். 1 : 1 — 5)

1. இந்த நற்செய்தியை எழுதியவர் லூக்காஸ். அவர் கிரேக்கநாட்டவர்; மருத்துவர். சீரியா தேசத்துள்ள அந்தியோக்கு என்னுமிடத்தில் பிறந்தார். கி. பி. 4ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவரான புனித எயூசேபியஸ் எழுதிவைத்துள்ள பின்வரும் கூற்று இதை உறுதிப்படுத்துகிறது. அந்தியோக்கைச் சேர்ந்த மருத்துவரான லூக்காஸ் தூய ஆவியானவரின் துணைகொண்டு எமக்கு இரு நூல்களை யாத்துத் தந்துள்ளார். அவையாவன : லூக்காஸ் நற்செய்தி, அப்போஸ்தலர் பணி. லூக்காஸ் மனந்திரும்பியதற்கு இந் நூல்கள் சான்றாக அமைகின்றன.

முதன்முதல் வேதம் போதித்த அப்போஸ்தலர்களால், லூக்காஸ் மனந்திரும்பி திருமறையில் சேர்ந்தார். அவரது திருமுழுக்கு எப்போது இடம்பெற்றது என்பதை நாம் அறியோம். புறவினத்தாரின் அப்போஸ்தலரான புனித சின்னப்பரின் சீடரானார் லூக்காஸ். பல இடங்களுக்கும் பயணம் செய்து இயேசுவைப்பற்றி வினவினார். அப்போஸ்தலரான அருளப்பரிடமிருந்தும், இயேசுவின் அன்னையாகிய மரியாளிடமிருந்தும் பலவற்றைக் கேட்டு அறிந்தார். அக்காலத்தில் இயேசுவைப்பற்றி எழுதியிருந்த அனைத்தையும் வாசித்தார். இயேசுவின் இளமைப்பருவ வாழ்வுபற்றி மரியாளிடமிருந்து கேட்டு அறிந்திருக்கலாம். இயேசு அளித்த நற்செய்தியை அறிவிக்கும் பணியில் புனித சின்னப்பருக்குத் துணையாக விளங்கி அவருடன் சென்றார். பிலிப்பி என்ற இடத்தில் மறைபரப்பும் பணியில் ஆர்வத்துடன் உழைத்தார். புனித சின்னப்பர் உரோமை நகரில் சிறையில் இருந்த நாட்களிலும் அவருடன் தோழமைகொண்டார்,

(2 திமொ. 4 : 11)

2. லூக்காஸ் யூத இனத்தவர் அல்லர். தம்து நற்செய்தியை புறவினத்தார்க்கென்றே எழுதினார். கிரேக்கம் புறவினத்தார் ஏற்றுக்கொண்ட மொழியாக விளங்கியது. இதனால் லூக்காஸ் கிரேக்க மொழியில் நற்செய்தியை எழுதினார். புறவினத்தாருக்கு இயேசுவை அறிவிக்க அவர் விரும்பினார். உயர் அதிகாரியான தெயோப்பிலுவை விளித்து அவர் நூலை எழுதினார், திருமணம் ஆகாத மறைபரப்பா

ளர் லூக்காஸ். கொன்ஸ்தாந்திநோபிள் என்னும் நகரில் தமது 84ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார். அவரது உடல் அந்நகரிலே அடக்கம் செய்யப்பட்டது,

ஜெருசலேம் தேவாலயத்தில் சக்கரியாஸ் பலி ஒப்புக்கொடுத்தார். இந்த நிகழ்ச்சியை லூக்காஸ் விபரிக்கிறுர். அவரது நூலின் தொடக்கமாக இடம்பெறுவது இந் நிகழ்ச்சி. அக்காலத்தில் வழமையான பலிப்பொருள் எருதுவாக இருந்தபடியால் எருது புனித லூக்காசின் அடையாளமாகவிருந்தது. இயேசுவின் பிள்ளைப்பருவ வாழ்க்கைபற்றி நீண்ட விளக்கத்தை லூக்காஸ் தமது நூலில் எமக்குத் தந்துள்ளார். அவர் கிறிஸ்துவின் சீடர் அல்லர். ஆனுல் லூக்காஸ் பெற்ற ஆழ்ந்த விசுவாசத்திலும் அன்பிலும் அவரைத் தேடிக் கண்டடைந்தார். அவரது உயிருள்ள விசுவாசம் எமக்கு ஒரு பாடமாக அமைகிறது. இந்த விசுவாசமே இயேசுவின் வாழ்வைப்பற்றி நன்கு ஆய்ந்து கற்க லூக்காசைத் தூண்டியது. இதன்விளைவாக இயேசுவின் வாழ்க்கை வரலாற்றை அவர் சிறந்தமுறையில் எழுதி எமக்கு அளித்துள்ளார். எனவே நீங்களும் விசுவாசம், அன்பு கொண்டவர்களாய், இயேசுவைத் தேட வேண்டியவர்கள். அப்போது நீங்கள் அவரை அறிவதுடன், அவரைப் பிறர்க்கு அறிவிக்கவும் ஆற்றல் பெறுவீர்கள். இங்ஙனம் நீங்கள் செயற்படுவீர்களா ?

8. இந்த நற்செய்தியில் இறைவன் தமது திருமகனை இயேசுவைப்பற்றி உங்களுக்குக் கூறுவார். கிறிஸ்து ஏன் மனிதனுஞர் என நீங்கள் படிப்பீர்கள்; அவரது அறிவுரைகளையும் செயல்களையும் நீங்கள் அறிவீர்கள். கிறிஸ்தவம் வெறும் கோட்பாடு அல்ல; அது ஓர் ஆள் என்பது பற்றி அறிய இது உங்களுக்குத் துணைபுரியும். உங்களது கிறிஸ்தவ அழைப்பு எத்தகையது என அறியவும் உதவியாக இருக்கும். அப்போது இயேசு செயற்பட்டதுபோல நீங்களும் வாழத் தூண்டும். உங்களுக்கு மகிழ்வையளித்து, மீட்பின் வழியையும் அது அளிக்கவல்லது. அயலாரை இறைவனிடம் வழிநடத்தும் முறையை நீங்கள் அறிவீர்கள். நற்செய்தியில் கிறிஸ்துவைத் தேடுங்கள்.... அப்போது இறைவனைக் காண்பீர்கள்.

நீங்கள் செயற்படச் செய்யத்தக்கன :

1. புனித லூக்காஸ், புனித சின்னப்பர் என்பவர்களைப்பற்றி மேலும் அறிய முயல்க. பங்குத் தந்தையுடனே, பெரியோருடனே அவர்களைப்பற்றிக் கலந்துரையாடுக. குறிப்புப் புத்தகத்தில் அவர்களின் பண்புகள் பற்றிச் சுருக்கமாக எழுதுக,

2. புனித லூக்காஸ் யூத இனத்தவரும் அல்லர்; இயேசு இவ்வுலகில் வாழ்ந்தபோது அவருடன் பழகியவரும் அல்லர். எனினும் அவர் கிறிஸ்துவைக் கண்டடைந்து அவரது செய்தியைப் போதித்தார். இது அவரால் எவ்வாறு முடிந்தது? சிந்திக்குக.

3. புனித லூக்காசுக்கு எருது அடையாளம். மற்றைய நற்செய்தி ஆசிரியர்களேயும் அவர்களது அடைளாளங்களேயும் அறிக. அவ்வடையாளங்களே வெளிக்களப் புத்தகத்தில் வரைந்து அவற்றின் பொருளேயும் விளக்குக.

4, பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக.
   i. புனித லூக்காசின் நற்செய்தி உமக்கும் எழுதப்பட்டதா? ஏன் ?
   ii. கிறிஸ்துவை அறியச்செய்தல் உமது கடமையா ? ஏன் ?
   iii. படிப்படியாக இறைவனேக் கண்டடைதலே உண்மையான கிறிஸ்தவ வாழ்வு — இக் கூற்றினல் நீர் விளங்குவது என்ன ?

நீங்கள் எடுத்துக்கூறிய முடிவுகள் :

1. மறைக்கல்விப் பாடம்பற்றி அதி அக்கறை கொள்வேன்.
2. கிறிஸ்துவைப் பற்றிப் பேசத் தயங்கமாட்டேன்.
3. கிறிஸ்தவ அழைப்பை எனக்கு அளித்த இறைவனுக்கு நன்றி நவில்வேன்.

அலகு : 2

# இறைவன் எம்மை வாழவும், பணிபுரியவும் அழைக்கிறார்

## 1. அழைப்பு :

மனிதன் தற்செயலாக இவ்வுலகில் தோன்றவில்லை. மரணத்துடன் முடிவடையக்கூடிய மிருகம் அல்ல மனிதன். அவனது இருத்தலுக்கு அல்லது வாழ்வுக்குக் குறிக்கோள் ஒன்றுண்டு. அவனது குறிக்கோள் எதுவென புனித வேதாகமத்தில் படிமுறையாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பழைய உடன்படிக்கை நாட்களில் இறைவன் குல முதல்வர்கள் வழியாகவும், இறை வாக்கினர், வழியாகவும் எபிரேய மக்களுடன் பேசினார். அவர்கள் இறைமக்கள் என்ற உண்மையை அவர்களுக்குக் கற்பித்தார் ; வழிகாட்டினார். பரிசுத்த இனமாக அவர்களை வாழும்படி அழைத்தார்.

> "ஆகையால் நீங்கள் நமது வாக்கைக் கேட்டு, நமது உடன்படிக்கையைக் கைக்கொண்டு அனுசரிப்பீர்களேயாகில், எல்லா மக்களிலும் நீங்களே நமது உடைமையாக இருப்பீர்கள். ஏனென்றால் பூமியெல்லாம் நம்முடையது. அன்றியும் நீங்கள் நமக்கு இராஜரீக ஆசாரியக் கூட்டமும் பரிசுத்த சனமுமாய் இருப்பீர்கள்."
>
> ( யாத்திராகமம் 19 : 5—6 )

ஒழுகவேண்டிய நெறியை அவர்கள் அறியச்செய்யக் கட்டளைகளை அவர் அருளினார். மற்றைய இனத்தவர்க்குத் தம்து மறைபரப்பாளர்களாக விளங்குவதற்காக அவர்களை அழைத்தார்.

மனிதன் இறைவனைப் பின்சென்று வாழ்வதற்காகவே இறைவன் மனிதன் ஆனார் என்பதைப் புதிய ஏற்பாட்டிலிருந்து அறிகிறோம். இறையன்பின் உன்னத அடையாளமான கிறிஸ்து, அன்பு வாழ்வுக்கு எம்மை அழைக்கிறார்.

> "நான் உங்களுக்கு ஒரு புதிய கட்டளை கொடுக்கிறேன்.
> நீங்கள் ஒருவருக்கொருவர் அன்பு செய்யுங்கள்,
> நீங்கள் ஒருவர்மீதொருவர் அன்புகொண்டிருந்தால்தான்
> நீங்கள் என்சீடர் என்பதை எல்லாரும் அறிந்துகொள்வார்கள்."
>
> ( அருளப்பர் 13 ; 34—35 )

அன்பு நிறைந்த இறையரசைப் பரப்புவதற்காகவே கிறிஸ்து இவ்வுலகுக்கு வந்தார். தம்து வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்ய எம்

மைப்போன்ற ஒரு மனிதனை .. அவர்தான் திருமுழுக்கு அருளப்பர் .. அனுப்பினர். பழைய உடன்படிக்கையின் இறுதி இறைவாக்கினரும் புதிய உடன்படிக்கையின் முதல்வரும் இவரே.

## 2. இறைவனிடம் இருந்து ஒரு செய்தி :

( லூக்காஸ் 1 : 5—23 )

வயது முதிர்ந்த யூதகுருவாகிய சக்கரியாஸ் ஒரு புனிதர் ; நீதிமான். எளிமையான வாழ்வை மேற்கெண்டார். அன்பும் பரிவும் நிறைந்தவர். இறைவனின் கட்டளையைக் கடைப்பிடிப்பதைப் பேருகக் கருதியவர். ஆனல் வயது முதிர்ந்த தன் மனைவி மகப்பேற்றை அடைய விருக்கிருள் என்ற செய்தி கேட்டு வியப்பில் மூழ்கினர். இறைவனின் வழிகளை மனிதன் புரிந்துகொள்ளுதல் எத்துணை சிரமமானது என்பது இவரின் கலக்கத்தில்இருந்து தெரிகிறது. இவை நிகழும் என்பதை எந்த அடையாளங்கொண்டு அறிய முடியுமென சக்கரியாஸ் தூதரிடம் வினவினர். இதனல் பேசர்மலும், பேசமுடியாமலும் ஆக்கப்பட்டார். அவர் கேட்ட அடையாளம் தண்டனையாக மாறியது. மனிதனல் இயலாதது இறைவனல் முடியும் என்பதை அவர் [பின்னரே அறிந்து கொண்டார். வயதுமுதிர்ந்த எலிசபேத்து கருத்தரித்தபின் மகிழ்ச்சியுடன்,

> " மக்களுக்குள் எனக்கிருந்த இழிவைப்போக்க ஆண்டவர் என்னைக் கடைக்கண் நோக்கி. இந்நாளில் இவ்வாறு செய்தருளினர் என்று ஆர்ப்பரித்தாள்." ( லூக் 1 : 24—25 )

இறைவன்மேல் சந்தேகம்கொண்டதற்காகச் சக்கரியாஸ் தன்னைத் தானே நொந்திருப்பார். இறை வார்த்தை எழுத்து வடிவான ஓர் அடையாளமாகும். இறைவார்த்தையில் நாமும் சந்தேகம் கொள்வோமாகில் சக்கரியாசைப்போல மனம் வருந்துவோம்.

## 3. கலிலேயாவின் கன்னிகை : ( லூக்காஸ் 1 : 26—38 )

இஸ்ராயேலரைக் காக்க வரவிருக்கும் மீட்பரின் தாயாகும் பேறு எனக்குக் கிடைக்காதோ என்று யூத இளம் பெண்கள் அனைவரும் ஏங்கினர். மாமன்னன் தாவீதின் தூரத்து உறவினத்தாரான பெண்கள் கூட இம் மகிமை தமக்குக் கிடைக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் ஊக்கமாகச் செபித்தனர். யுவக்கீம் என்பவருக்கும் அன்னம்மாளுக்கும் மகளாகிய மரியாள் வேதாகமத்தை நன்கு அறிந்திருந்தாள். யூத மக்

களின் இழிநிலை கண்டு அவள் மனம் இரங்கினாள். உரோமையர்க்கு அவர்கள் அடிமைகளாக வாழ்ந்தனர் அல்லவா ? மீட்பர் வரவேண்டும் என்ற கருத்துடன் முழுமனதுடன் செபித்தாள்.

ஆனால் — மீட்பரின் தாயாகத் தான் வருவாளென்று அவள் கனவிலும் கருதவில்லை. "அருள் நிறைந்த மரியே வாழ்க கர்த்தர் உம்முடனே...... உம் வயிற்றில் கருத்தரித்து ஒரு மகனைப் பெறுவீர்......" என்று கபிரியேல் தூதர் உரைத்ததும் அவள் கலங்கினாள். ஆனால் வானதூதர், பரிசுத்த ஆவி உம்மீது வருவார். உன்னதரின் வல்லமை உம்மீது நிழலிடும் ( லூக்காஸ் 1 : 35 — 37 ) என்று தேற்றினார். தாழ்மையே உருவான மரியாள் பரிசுத்த வேதாகமத்தை நன்கு அறிந்திருந்தாள். இதனால் இறைவனின் திருச்சித்தத்திற்குத் தன்னை அர்ப்பணித்து ' ஆம் ' என்று சொல்ல உடன்பட்டாள். "இதோ ஆண்டவருடைய அடிமை நான் உமது சொற்படியே எனக்கு ஆகுக" என்றாள். உலகை மீட்க, மனித இனத்துக்கு நம்பிக்கையும் மகிழ்வும் அளிக்க அவளது விடை துணைபுரிந்தது. இறைவனின் விருப்புக்கு உடன்பட்ட மரியாள் மாண்புள்ள எடுத்துக்காட்டாக விளங்குகிறாள். உலகம் மீட்புப் பெறுவதற்காகத் தனக்குள்ள அனைத்தையும் அளித்தாள். தனது தூய்மையையும், கன்னிமையையும் இறைவனுக்கு அர்ப்பணித்தாள். தன்னை இறைவனுக்கு முழுமையாகக் கொடுத்து வெறுமையானாள்.

கிறிஸ்தவ தியாகத்தினதும், அர்ப்பணிப்பினதும் ஆழத்தை நாம் விளங்குவதற்கு மரியாளின் வாழ்வு எமக்குத் துணையாகிறது. எமது அன்றாட நிகழ்வுகளில் இறைவனின் திருச்சித்தத்திற்கு உடனே உடன்படவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக மரியாள் விளங்குகிறாள். அன்னைமரிபோல் நாமும் இறைவனின் அழைப்பு வரும்போது தயக்கமின்றி உடன்படுவோம்.

### 4. ஓர் அடையாளம் ( லூக்காஸ் 1 : 39—56 )

சக்கரியாஸ் போலவே மரியாளும் வானதூதன் வழியாக ஓர் அடையாளத்தைப் பெற்றாள். உம் உறவினளான எலிசபேத்தை நினைவு கொள். அவள் முதிர்ந்த வயதினள். மலடியாய் இருந்தவளுக்கு இது ஆறும் மாதம் என்று வானதூதன் கூறினான். வானதூதரின் இவ் வார்த்தையைக் கேட்ட தாய்மரி தனது உறவினளான எலிசபேத்திடம் சென்றாள். அவளது விசுவாசம் வீண்போகவில்லை. தனது மகிழ்ச்சியை: "என் ஆன்மா ஆண்டவரை ஏற்றிப் போற்றுகிறது; என் மீட்பராம் கடவுளை நினைந்து என் இதயம் களிகூருகிறது"...... என்று பாடித் தெரிவித்தாள். ( லூக்காஸ் 1 : 46 — 55 )

அன்னைமரியின் பாடல் கிறிஸ்தவ உலகில் எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. ஆர்வமும் அன்புமுள்ள இதயங்கள் இறைவனைப் புகழ வேண்டிய முறையை இப் பாடல் எமக்குத் தெளிவாகக் கூறுகிறது. முன்னரே அறிவிக்கப்பட்டிருந்த மெசியாவின் மீட்புப்பணிக்காக மரியாள் இறைவனின் மகிமையைப் பாடினள். இயேசு தொடங்க விருந்த பெரும் புரட்சிக்காக இறைவனைப் புகழ்ந்தாள்.

"அவர் தமது கைவன்மையைக் காட்டினர்
நெஞ்சிலே செருக்குற்றவர்களைச் சிதறடித்தார்,
வலியோரை அரியணையினின்று அகற்றினர்.
தாழ்ந்தோரை உயர்த்தினர்.
பசித்தோரை நலன்களால் நிரப்பினர்.
செல்வரை வெறுங்கையராய் அனுப்பினர்."

(லூக்காஸ் 1 : 51 — 53)

## 5, திருமுழுக்கு அருளப்பர் (லூக்காஸ் 1 : 57 — 80)

அருளப்பரின் பிறப்பு அதி சிறப்பானது ; ஈடு இணையற்றவராக, அவர் வாழ்ந்தார். பழைய உடன்படிக்கையையும், புதிய உடன்படிக்கையையும் இணைத்தலே அவரது பணியாகவிருந்தது. நசரேத்தூரைப் பிறப்பிடமாகக் கொண்டார். சிறந்த முனிவராகவும், பெரும் போதகராகவும் விளங்கினர். பழைய புதிய உடன்படிக்கைகளுக்கு நடுவே ஒளி விளக்காகத் திகழ்ந்தார். அவரது பெயரே தனிச்சிறப்பு வாய்ந்தது. அவரது உறவினர் எவருக்கும் இல்லாத பெயர். தந்தையான சக்கரியாஸ் இப் பெயரை உச்சரித்ததும் ஊமைத்தனத்திலிருந்து விடுபட்டார். இதனுல் இறைவனது மாண்பு விளங்கிற்று ; ஆனுல் அயலவர்கள் அச்சமும் வியப்பும் அடைந்தனர். இக் குழந்தை எத்தகையவன் ஆவானே? என்று அனைவரும் வியப்படைந்தனர்.

லூக்காசின் நற்செய்தி, மகிழ்வின் நற்செய்தி என்றும், புகழ் பாடும் நற்செய்தி என்றும் அழைக்கப்படுகின்றது. லூக்காஸ் மக்களின் மன எழுச்சிகளைத் தனது நூலில் வெளிப்படுத்த விரும்பினர். சக்கரியாசின் பாடலில் மீட்பரின் மகிமையையும், அருளப்பரின் அழைப்பையும் உலகுக்கு அறிவிக்கிருர்.

"நீயோ பாலனே, உன்னதரின் வாக்குரைப்பவன் எனப்படுவாய்
பாவமன்னிப்பில் உளதாகிய மீட்பை,
அவர் தம் மக்களுக்கு அறிவித்து,
ஆண்டவருடைய வழிகளை அமைக்க
அவர் முன்னே செல்வாய்." (லூக்காஸ் 1 : 76 — 77)

**சிந்திப்போம் :**

1. ஒவ்வொருவரையும் சிறப்பான பணிக்கென இறைவன் அழைக்கிறார்.

2. முன்னோடியானவருக்குத் தந்தையாய்ச் சக்கரியாசையும், மீட்பரின் தாயாகும்படி அன்னைமரியையும், மீட்பரின் வருகைக்கு முன்னறிவிப்பாளராகத் திருமுழுக்கு அருளப்பரையும் இறைவன் அழைத்தார்.

3. அவரது அழைப்பை ஏற்றுச் செயற்பட வலுவையும், அருளையும் இறைவன் எமக்குத் தருகிறார். நல்மனதுடன் பதில் அளித்தல் மனிதனது கடமை.

4. எனது அழைப்பு என்ன? கிறிஸ்துவை உலகுக்கு அறிவிக்கும் பணிக்கு நான் அழைக்கப்பட்டுள்ளேன். கிறிஸ்துவை அறியாத மக்கள் இவ்வுலகில் இன்னும் இருக்கிறார்கள். எனது உடன் மாணவரில் கிறிஸ்துவை அறியாதவர் இல்லையா? 'ஆம்' என்றால் அவர்கள் மட்டில் எனது கடமை என்ன?

இப்பகுதிக்குப் பொருத்தமான செபம் ஆக்குக.

**ஆய்ந்து அறிக :**

1. உமது வாழ்க்கையிலே சிறந்த கிறிஸ்தவ வாழ்வை மேற்கொள்ள 3 வழிகளைக் காண்க.

2. சக்கரியாஸ் ஏன் ஊமை ஆக்கப்பட்டார்? இதிலிருந்து நீர் படிக்கக்கூடிய பாடம் ஏதேனும் உண்டா?

3. லூக்காஸ் 1 : 4 — 17ஐ வாசித்து திருமுழுக்கு அருளப்பரின் அழைப்பை ஆய்வுசெய்க.

4. லூக்காஸ் 1 : 38ஐ வாசித்து இந் நிகழ்ச்சியை மீளவும் நினைவுக்குக் கொண்டுவர உதவும் செபத்தைக் கண்டுகொள்க.

அலகு 3.

# ஆதவன் உதித்தனன்

## 1. இறைமகன் கிறிஸ்து உலகிற்கு வருகின்றூர் :

(லூக்காஸ் 2 : 1 — 7)

பெத்தலேகம் சிற்றூரில் இயேசுவை மரியாள் பெற்றெடுத்தாள். இயேசுவின் பிறப்பு ஒரு வரலாற்று நிகழ்ச்சி. உலகின் ஒளியாக விளங்குபவர் இயேசு. அவரது பிறப்பை புனித லூக்காஸ் பின்வருமாறு விளக்குகிறூர்.

"அவள் தலைப்பேருன மகனை ஈன்றெடுத்து, துணிகளில் பொதிந்து முன்னிட்டியில் கிடத்தினுள் — ஏனெனில் சத்திரத்தில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை."

ஏன் இந்த அளவுக்கு இறைவன் தம்மைத் தாழ்த்தினுர்? இதைப் புரிந்துகொள்வது எமக்குக் கடினம். இறைவன் எம்மிடம் ஒன்றுமே அறியாத, குழந்தையாகப் பிறந்தார். மர்மம் என்ன? ஒளியாகிய இறைவன் பாவ இருள் சூழ்ந்த உலகுக்குவந்தார். இது தற்செயலாக நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியா? அவர் தம்மை இவ்விதம் தாழ்த்தியது இழிவுக்குரிய ஒரு செயலா?

கிறிஸ்து மனுவுரு எடுத்தது, அவரது பிறப்பு என்பதுபற்றித் தவறுன சிந்தனைகள் இருந்ததென்பதைத் திருச்சபை வரலாற்றில் இருந்து அறிகிறேும். ஆனுல் பெத்லகேமில் நடந்த இந்த மாபெரும் நிகழ்ச்சி மனித சமுதாயத்துக்கு வேறுபட்ட நோக்கைக் கொடுத்தது. இறை இயல்பும் மனித இயல்பும் ஓர் ஆளில் எப்படி அமைந்தன என்று நாம் விளங்குவது இலகுவானதல்ல. இது ஒரு மறைபொருள். விளங்கச் சிரமமானது. கிறிஸ்து உண்மையான மனிதன்; உண்மையான இறைவனும் அவர். அவர் எம்முடன் மனிதனுக வாழ்ந்தார்; அவர் எமக்குப் போதித்தார்; அவர் எமக்காகப் பாடுகளை அனுபவித்துச் சிலுவை மரணம் எய்தினுர்; அவர் மீளவும் உயிர்த்தார். மனிதராகிய எமக்கு பேரன்பும் பெரும் பரிவும் காட்டியவர் அவர். விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்ட அன்பினுல் நாம் இந்த உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டியவர்கள்.

இயேசுவின் பிறப்பு எமக்கு ஓர் அறைகூவல். அண்ணல் இயேசுவின் மொழிகளே இதற்குச் சான்ருக விளங்குகின்றன.

"ஆம் என் தந்தையின் விருப்பம் இதுவே. மகனைக்கண்டு அவரில் விசுவாசம் கொள்பவன் எவனும் முடிவில்லாத வாழ்வு பெற வேண்டும். நானும் அவனைக் கடைசிநாளில் உயிர்ப்பிப்பேன்."

(அருளப்பர் 6 : 40)

பெத்தலகேமில் குளிரில் நடுங்கிய குழந்தை இயேசு எமக்கு முக்கிய பாடம் ஒன்றைப் படிப்பிக்கிறுர்.

—கிறிஸ்துவத்தின் அடிக்கல் தாழ்ச்சி.

2. வானதூதர் (லூக்காஸ் 2 : 8 — 21)

ஏழ்மையும், எளிமையும் கொண்ட இடையர்களுக்கு வானதூதர் இயேசுவின் பிறப்பை அறிவித்தனர். இறைவனைத் தேடிக் கண்டடைவதற்கு அன்பும், விசுவாசமுமே தேவை. உயர் கல்வியல்ல, என்ற பேருண்மையை இந் நிகழ்ச்சியிலிருந்து அறிகிறோம். மனிதன் மேலானதெனக்கொள்ளும் பொன், பொருள், பதவி என்பவற்றை இறைவன் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. இறைவனின் மகன் மனிதனைச் சந்திப்பதற்காகவே மனிதன் ஆனுர். அவர்வழி செல்லவிழையும் நாம் எமது சகோதரர் மத்தியில் மனிதருள் மனிதராக வேண்டும். இறைவனின் செய்தியை உலகுக்குக் கொண்டுவரவேண்டின் நாம் தன்னலமற்றவர்களாகவும், தாழ்ச்சி உள்ளவர்களாகவும் வேண்டும். இயேசுவிடமிருந்து நாம் படிப்பது இதுவே.

3 அர்ப்பணம் (லூக்காஸ் 2 : 22 — 36)

எளிமையான வாழ்வை எம்மிற் பலர் விரும்புவதில்லை. எம் நாட்டு வழக்கங்களை மதித்து நடப்பதில்லை. ஆனுல் இயேசுவின் வாழ்வு இவ்வகையில் எமக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. அவரின் வாழ்வை நோக்குவோம். அவர் விருத்தசேதனம்செய்யப்பட்டார். ஜெகோவா அல்லது இயேசு [என்றபெயரை ஏற்றுக்கொண்டார். மோயீசன் சட்டப்படி சுத்திகரிப்புச் சடங்கை நிறைவேற்றுவதற்காக ஜெருசலேம் ஆலயத்தில் காணிக்கையாக்கப்பட்டார். பெற்றேர் தமதுசார்பில் இரண்டு மாடப்புருக்களைப் பலியாக்க அனுமதித்தார். நாட்டு வழக்கங்களையும், சமயச் சடங்குகளையும் அவர் மதித்து நடந்தார் என்பது இதிலிருந்து தெரிகிறது. நாமும் இவ்விதம் செய்யவேண்டாமோ ?

மனிதன் மேற்கொண்ட அன்பினுல் மெசியா மனிதநிலைக்குத் தம்மைத் தாழ்த்தினுர். தேவாலயத்திற்கு அவர் கொண்டுவரப்பட்டபோது தேவாலய உயர் அதிகாரிகள் அவரை வரவேற்கவில்லை. ஆனுல்

வயோதிபரான சிமியோனும், அன்னாளும் அவரை வரவேற்றனர். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டவர்களுடனேயே எக்காலமும் ஒன்றித்து வாழ்ந்தார் என்பதை இந்நிகழ்ச்சி எமக்குக் காட்டுகிறது. ஒடுக்கப்பட்டவர்களின் பக்கமே இயேசு சார்ந்திருந்தார்.

சிமியோன் ......... உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும் என்று கூறியபோதே கல்வாரியின் நிழல் குழந்தை இயேசுவில் விழுந்தது. மெசியா அமைதியின் அரசர் என அழைக்கப்பட்டார். ஆனால் அவர் புரட்சிகரமான பணியை ஆற்றவேண்டியிருந்தார்.

" இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாகவோ எழுச்சியாகவோ அமைந்துள்ளார். எதிர்க்கப்படும் அறிகுறியாக இருப்பான்.

என்ற சிமியோன் வார்த்தையின் பொருள் இதுவே. இயேசுவின் அன்னைக்கு இந்த வயோதிபர் கூறமுனைந்ததென்ன? அவரது வார்த்தை பொருள் பொதிந்துள்ளதா?

அமைதியை அளிக்கவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். ஆனால் அவர் வாழ்நாள் முழுவதும் எதிர்ப்பையும் இன்னல்களையும் எதிர் நோக்கவேண்டியவரானார். இருந்தும் மனம் சலியாது அமைதிக்காகவே போராடினார். இது எமக்கும் சிறந்த பாடமாக அமைகிறது. நாமும் வாழ்வில் ஏற்படும் துன்பங்கள், தொல்லைகள் மத்தியிலும் மனிதரிடையே அமைதியை ஆக்க உழைப்போமாக.

நற்சிந்தனைகள் :

1. உண்மையான கிறிஸ்து பிறப்பு விழாவுக்கும், ஆடம்பரப் போக்குள்ள கிறிஸ்து பிறப்பு விழாவுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

2. தமது சகோதரர்களின் பசி, பிணி, ஏமாற்றம், துன்பங்களைக் கண்டும் இன்றைய கிறிஸ்தவர்களிற் பலர் அதைப்பற்றி அக்கறையற்று இருக்கின்றனர். ஆனால் நத்தார்ப் பண்டிகை அன்று,

   " உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமை உண்டாகுக
   உலகிலே அவர் தயவு பெற்றவர்களுக்கு அமைதியும் ஆகுக."

   என்று உரக்கப் பாடுகின்றனர். இவ்வித போலிவாழ்க்கையால் பயன் ஏதும் உண்டா?

3. அயலவரில் பொறுமை உள்ளவர் — பிறர் நல்வாழ்வைக் கண்டு பகைமை கொள்பவர்—பிறருக்குரியவற்றைத் திருடுபவர் — பிறரை நாசம் செய்பவர் — அயலாரின் மகிழ்ச்சியைச் சகிக்க முடியாதவர்கள் — பிறர் அழ தாம் சிரிப்பவர்கள்-இவ் விழாவைக் கொண்டாடுவது போலிவேடமில்லையா ?

4. நீதி, உண்மை எவை என்று தெரிந்தும் அநீதி, பிழை என்பவற்றைச் சமுதாயத்தில் இடம்பெறச் செய்பவன் கிறிஸ்தவ அர்ப்பணிப்பு வாழ்வை வாழ்கிறனு ? உலகை அவன் அவமதிக்கவில்லையா ?

5. சமய வழிபாடுகளை அவமதித்து வெறும் போலி வாழ்வை வாழ்ந்து, வாழ்வின் நோக்கை இழந்து வாழும் கிறிஸ்தவனின் வாழ்வு எத்தகையது ? அவன் சமுதாயத்திற்குத் தீங்கு இழைக்கிறனு ? சமூகத்தை இறைவனிடமிருந்து பிரிக்கிறனு?

இவ்வாறு செயல்படுவாயா ?

1. கல்வி, திறமை, தகுதி, வயதில் உம்மிலும் குறைந்த பள்ளி மாணவருடன் நட்புடன் பழகுவீரா ? உம்மைத் தாழ்த்தி அவர்களுடன் நட்புடன் பழகுவீரா ?

2. சமய வழிபாடுகளையும், வழக்கங்களையும் மதித்து வாழ முடியுமா ?

விடை தருக

1. கிறிஸ்து பிறந்த அன்றுமட்டும் தருமம் கொடுத்தல் போதுமா ? ஆண்டு முழுவதும் உதவி வேண்டியவர்களுக்கு உதவக்கூடிய 5 வழிகளைக் கூறுக.

2. நன்னெறியுள்ள கிறிஸ்தவனுக நீர் வாழ, குழந்தை யேசுவிடமிருந்து கற்ற 3 படிப்பினைகளைத் தருக.

3. வகுப்பில் ஒற்றுமை நிலவச் செய்யக்கூடிய 5 வழிவகைகள் எவை ?

4. யூத சட்டத்திற்கு இயேசு பணிந்தது ஏன்? இதிலிருந்து நீர் என்ன பாடம் கற்கிறீர் ?

COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P.O. BOX 601
COLOMBO

அலகு : 4.

# தந்தையின் அலுவல்

## 1. நசரேத்தில் பயிற்சி ; ( லூக்காஸ் 2 : 39 — 40)

இயேசுவின் பிள்ளைப்பருவத்தைப்பற்றி எமக்கு மிகவும் சிறிதளவே தெரியும். புனித லூக்காஸ் இதுபற்றிச் சுருக்கமான விளக்கம் தருகிறார்.

" பாலன் வளர்ந்து வலிமைபெற்றார். ஞானம் நிறைந்தவராகவும் இருந்தார். கடவுள் அருளும் அவர்மேல் இருந்தது."

( லூக்காஸ் 2 : 40 )

திருக்குடும்பத்தில் நிலவிய வறுமையும் அமைதியான சூழ்நிலையும் இயேசு புனிதத்திலும், ஞானத்திலும் வளர்வதற்கு உதவின என்பதை இக்கூற்றிலிருந்து தெளிவாக அறிகின்றோம்.

நசரேத் ஒரு சிறிய கிராமம். பிரதான வர்த்தகப் பெருஞ்சாலைக் குத் தூரமாக இது அமைந்துள்ளது. அங்கு வசித்தவர்கள் அமைதியும், எளிமையுமான வாழ்வை மேற்கொண்டவர்கள். இயேசு இவ்வித சூழ லிலேயே வாழ்ந்தார். உண்மையான சமய சூழ்நிலை நிலவிய குடும்பத் தில் அவர் வளர்ந்தார். ஆனால் அன்றைய எமது நிலை முழு மாறுபா டானது. ஆடம்பர வாழ்வையே இன்றைய உலகம் விரும்புகிறது. நாமும் அதனால் கவரப்படுகிறோம். இவ்வித வாழ்வு எம் ஆன்மாவைப் பாதிக்கிறது. நாம் உலகசார்புள்ளவர்களாக வாழ்ந்து ஆன்மீகவாழ்வில் தேய்ந்து வருகின்றோம். இதனால் நாம் பெரும்பாலும் கிறிஸ்துவைப் போல வாழ்வதில்லை.

யூத அறிஞர்கள் கலிலேயர்களையும் நசரேயர்களையும் மதித்து நடக் காதவர்கள். நத்தானியேல் என்ற மூதறிஞர் கேலியாக நசரேத்தில் இருந்து நன்மை ஏதேனும் வரமுடியுமா? என்று வினவினார். நாம் எதிர்பார்த்த இடத்திலேயே தெய்வீக ஞானம் (இறை ஞானம்) காணப்படுகிறதென்பதை இது காட்டுகிறது. எம்முடன் கல்விபயிலும் ஏழைப் பிள்ளைகள் பொதுவாக எம்மிலும் புத்தியுள்ளவர்களாக இருப் பதைப் பார்க்கிறோம். கூடிய ஆற்றலும், திறமையும் அவர்களிடம் இருக்கிறது. ஆனால் அவர்கள் ஏழ்மையால் உயர் கல்வி பெற முடியா தவர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்கு உதவுவது எமது கிறிஸ்த வக் கடமை என்பதை உணர்ந்து வாழ்வோம்.

2, பாடுகளின் முன்னறிவிப்பு : ( லூக்காஸ் 2 : 41 — 50 )

எம்மை மீட்பதற்காகவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். தம்து தந்தையின் சித்தத்தை நிறைவேற்றுவதே அவரது முதற் பணியாக அமைந்தது. பிள்ளைப்பருவத்திற்கூட இறைவனின் விருப்பத்தை அவர் நிறைவேற்றினர். தேவாலயத்தில் காணமற்போன இயேசுவை கண்டு கொண்டபோது மரியாளுக்கும் சூசைக்கும் அவர் அளித்த பதிலில் அவர்கள் மனம் உடைந்திருக்கக்கூடும்.''

'' ஏன் என்னைத் தேடினீர்கள் ? என் தந்தையின் இல்லத்தில் நான் இருக்கவேண்டுமென்பது உங்களுக்குத் தெரியாதா?''

ஆனல் அவர் சொன்னதை அவர்கள் புரிந்துகொள்ளவில்லை.

இந்த உலகில் இறைவனைப் பிறர் அறியச்செய்யவே கிறிஸ்தவன் அழைக்கப்பட்டுள்ளான். இறைவனின் அழைப்பை என்றுமே மறந்து வாழக்கூடாதென்ற உண்மையை இயேசுவின் பதில் எமக்கு நினைவூட்டு கிறது. இறைவனின் விருப்பத்தை நிறைவேற்றுவதே எம்து வாழ்வின் ஏக குறிக்கோள். வேடதாரிகள் அல்லது போலி மனிதர்களைப் பின் பற்றி நாம் வாழாதிருப்போமாக.

ஜெருசலேம் தேவாலயத்தில் இடம்பெற்ற இந் நிகழ்ச்சி மேலும் பல விடயங்களையும் நமக்குச் சுட்டிக் காட்டுகிறது.

1. இயேசுவின் பெற்றோர் அவரைத் தேடிச் சென்றனர். தம்து பிள்ளைகளில் கவனம் செலுத்துதல் பெற்றோரின் கடமை என் பதை இதிலிருந்து அறிகிறோம்.

2, தம் மக்கள் தவறு செய்யும்போது, எத்தச் சூழ்நிலையிலும் அவர்களைத் திருத்தல் பெற்றோரின் கடமையாகும்.

3. பிள்ளைகள் கூறும் விளக்கங்களுக்குப் பெற்றோர் பொறுமை யாகச் செவிமடுக்கவேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளத்தக்க விடையைப் பிள்ளை கூறக்கூடும். இது பெற்றோரின் மனதைப் புண்படுத்தவும் கூடும். ஆனல் பெற்றோருக்கு மதிப்பளித்து, அவர்களுக்கு அமைவதும், நம் பிக்கையுடன் அவர்களின் ஆலோசனைகளைக் கேட்பதும் பிள் ளையின் கடமையாகும்.

மேலேயுள்ள விடயங்கள் குடும்பத்தின் ஒற்றுமையை மேலும் அதி கரிக்க உதவும் காரணிகள் என்பது தெளிவு.

### 3. மறைந்த வாழ்வு : ( லூக்காஸ் 2 : 51 — 52 )

தேவாலய நிகழ்ச்சியின் பின் இயேசு பெற்றோருடன் நசரேத்துக்குச் சென்று அவர்களுக்குப் பணிந்திருந்தார் என்றும் வாசிக்கிறோம். இயேசுவின் பிள்ளைப்பருவ நிகழ்ச்சிகளைப்பற்றி எமக்குச் சிறிதளவே தெரியும். ஆனால் புனித லூக்காஸ் அவரைப்பற்றிக் கூறும் 2 : 51 — 52 சுருங்கிய பகுதி பல பண்புகளை எமக்கு அறிவிக்கிறது.

### 4. இயேசு வளர்ந்தார் : உடல் வளர்ச்சி

வளமான உடலில் வளமான உள்ளம் வளரும் என்பதை நாம் அறிவோம். உடல் வளர்ச்சி நிறைவுபெருத ஒருவரது ஆழுமை குறைபாடுள்ளது ; பலமற்றது. இயேசு தகுந்த உடல் வளர்ச்சி பெற்றிராவிடில், அது மீட்புப் பணிக்குத் தடையாக் இருக்கும்.

### ஞானத்தில் முதிர்ந்தார் :

இறைவனின் மகன் என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால் இது காலத்தில் நிறைவுபெற வேண்டியதாய் இருந்தது. வயது முதிர முதிரத் தமது அழைப்பைப்பற்றி விரிந்த ஆழமான முறையில் அறிந்திருந்தார்.

### கடவுளுக்கு உகந்தவர் ஆனார் :

கடவுளின் விருப்புக்கு ஆளாகுதல் புனித வாழ்வுக்கு வழியாகும். இயேசு ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும் வளர்ந்தார். ' மனித ஆள் வளர்ச்சிக்கு இவ்வித முதிர்ச்சி அவசியமாகும்.

### மனிதருக்கு உகந்தவர் ஆனார் :

மனிதன் முழு மனிதன் ஆவதற்கு சமுக வாழ்வு இன்றியமையாதது. உகந்த சமுதாயத்தில் தன்னை இசைவுபடுத்துதல் அவனது கடமையாகும். மனிதனாகிய இறைவன் தமது சமுதாயத்தில் சுமுகமாகச் சமுக வாழ்வு வாழத் தம்மைப் பயிற்றிக்கொண்டார்.

இங்ஙனம் இயேசுவின் ஆளுமை வளர்ச்சியைப்பற்றி லூக்காஸ் 2 : 51 — 52 பகுதியில் முழுமையான விளக்கத்தைத் தருகிறார். சமுதாயத்திற்கு எம்மால் கொடுக்கக்கூடிய அளவில் அதிகம் கொடுத்து அதன்பயனாக சீரிய மகிழ்ச்சியடைய வேண்டின் நாமும் உடல் உள ஒழுக்க சமுதாயப்பண்புகளில் இயேசுவைப்போல வளர்ச்சியடைவோம்.

**உமது வாழ்க்கைக்கு :**

1. நசரேத் ஊரில் இயேசு தச்சகத்தில் தந்தையாகிய சூசையப்ப ருடன் சேர்ந்து வேலை செய்தார். எமது அன்றாட வேலைக ளில் இறைவனின் திரு விருப்பை அறிந்து நடக்கவேண்டு மென அவர் எமக்குப் படிப்பித்துள்ளார். சோம்பியிராது கடி னமாக நாம் உழைத்தல் அவசியம். எனவே கிறிஸ்தவனான நீர் இறைவனின் சித்தத்திற்குப் பணிந்து நன்கு படிக்க வேண் டியவன்.

2. உமது நாளாந்த செயல்களில் இறைவனின் சித்தம் எது எனக் காண முயல்க. பிறரையும் அவ்விதம் செயற்படத் தூண்டுக.

3. மூத்தோர் சொல்லுக்கும், நல்லுரைகளுக்கும் செவிமடுத்து ஏற்று அதற்கேற்ப நடக்க முயல்க.

4. வீட்டில் பெற்றாருக்கு விருப்புடன் உதவி செய்க.

5. உமது கிராமத்தில், நகரில் இடம்பெறும் சிரமதானப் பணி களிலும், பிற பணிகளிலும் பங்கு கொள்க.

6. வகுப்பு முன்னேற்றத்திற்கும், பாடசாலையின் உயர்வுக்குமான முயற்சிகளில் முன்னணியில் நின்று உழைக்குக. உமது ஆசிரியர் களுடன் ஒத்துழைக்குக.

**செயற்பாடு :** உமது வாழ்க்கைக்குப் பொருத்தமான காலை, மாலை வழிபாட்டுச் செபம் ஆக்குக.

**விடை தருக :**

1. உமது ஆளுமையை முழுமையாக வளர்ப்பதில் உமக்குள்ள கிறிஸ்தவக் கடமைகள் எவை ?

2. லூக்காஸ் 2 : 46 — 50 ஐ வாசித்து தாய் தந்தையர்க்கும், பிள்ளைகளுக்குமிடையேயுள்ள கடமைகளை வகைப்படுத்துக.

3. பிள்ளைகள் பெற்றோருக்குச் செய்யக்கூடிய கடமைகள் எவை? லூக்காஸ் 2 : 51 ஐ வாசித்தபின் விடை எழுதுக.

4. இயேசு தமது 12ஆவது வயதில் தேவாலயத்தில் தங்கியிருந்த தன் நோக்கம் என்ன ?

அலகு : 5

# பாலைவனத்தில் எழுந்த குரலொலி

## 1. பின்னணி : ( லூக்காஸ் 3 : 1 — 2 )

வரலாற்று அடிப்படையில் லூக்காஸ் தமது நற்செய்தியை அமைத்துள்ளார். திபேரியு, செசார் ஆட்சிக்காலத்தில் பலஸ்தீனு பிளவுபட்ட இராச்சியமாக விளங்கியது. பெரிய ஏரோது இறந்தபோது அவரது மக்கள் மூவரும் தந்தையின் அரசுக்கு உரிமையாளர் ஆகினர். கலிலேயா, பெரேயா பகுதிகளுக்கு ஏரோது அந்திப்பாஸ் (கி. மு. 4 — கி. பி. 39) அரசனுனுன். இத்துரேயா, திராக்கோனி நாட்டுக்கு பிலிப் ( கி. மு. 4 —கி. பி. 32) அரசனுனுன். யூதேயா, சமேரியா, இதுமேயா பகுதிகளுக்கு ஆக்காலேயுஸ் (கி. பி. 4 — கி. பி.) அரசனுக விளங்கினுன். அபிலேனியாவை ஆண்ட விசானியாவைப்பற்றி அதிகம் அறிய முடியவில்லை. ஆக்கேலேயுஸ் கொடுங்கோலனுக இருந்தபடியால் கி. பி. 6இல் தனது அரசை இழந்தான். எனவே கி. பி. 26இல் போஞ்சியுபிலாத்து என அழைக்கப்பட்ட உரோமானியன் ஒருவன் யூதேயா, சமாரியா, இதுமேயா பகுதிகளுக்கு ஆள்பதியாக நியமிக்கப்பட்டான்.

கி. பி. 6 — 15 வரை தலைமைக் குருவாக இருந்த அன்னுஸ் தனது மக்கள் ஐவரும் பேரனும், மருமகனுன கைப்பாசும் (கி. பி. 18 — 36) உயர் அதிகாரிகளாக இருப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளைத் தன் ஆட்சிக் காலத்தில் செய்தான். அந்தக்காலத்தில் புதிய இறைவாக்கினர் ஒருவர் இஸ்ராயேலில் தோன்றினுர். அவர் பெயர் அருளப்பர். யோர்தான் நதி அண்மையில் அவர் போதித்தார். அவர் மக்களுக்கு ஒரு புதிய சமுதாயக் கோட்பாடுகளைக் கொடுத்தார்.

## 2. உண்மையான மனமாற்றத்திற்கு வழி :

( லூக்காஸ் 3 : 3 — 20 )

இறைவாக்கினர் அருளப்பரைப்பற்றி லூக்காஸ் இவ்வாறு விபரிக்கிருர் :

“ பாலைவனத்தில் ஒருவன் கூக்குரல் ஒலிக்கிறது :
ஆண்டவர் வழியை ஆயத்தப்படுத்துங்கள் ;
அவர்தம் பாதைகளைச் செம்மைப்படுத்துங்கள் ;
பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரவப்படுக,

மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படுக,
கோணலானவை நேராகவும்,
கரடுமுரடானவை சமமான வழிகளாகவும் ஆக்கப்படுக.
மனிதரெல்லாம் கடவுளின் மீட்பைக் காண்பர்."

( லூக்காஸ் 3 : 4 — 6 )

இறைவாக்கினர் அருளப்பரின் நல்லுரைகளைக் கேட்கப் பலர் வந்தனர். அவர் ஒரு புதிய சமுதாயக் கோட்பாட்டைப் பொதுமக்களுக்குக் கற்பித்தார். ஆபிரகாமின் உறவினர் என்பதால் எவ்வித பயனும் விளையப்போவதில்லை. பாவத்திற்காகத் துக்கப்படுதலும், உள மாற்றமுமே அதிக முக்கியம். அல்லது இறைவன் அவர்களை அழித்துவிடுவார். பண்ணையிலுள்ள வேண்டாத மரங்களையும், செடிகளையும் கமக்காரன் வெட்டி நெருப்பில் போடுவதில்லையா? இறை அரசை நிறுவ வந்த இறைவனும் இவ்விதமே செயற்படுவார். செல்வந்தர் தமக்குரியவைகளை ஏழைகளுடன் பகிரும்படி அறிவுரை வழங்கினர் அருளப்பர். அப்போதுதான் சமத்துவமும்,நேர்மையுமான பொருள் பங்கீடும் நிலவும்.

வரிப்பணம் சேர்க்கும் ஆயக்காரரை அருளப்பர் கண்டித்துப் பேசினர். அதிகம் கேட்கவேண்டாம் என்றும் ; ஏழைகளை ஒதுக்காது நடக்கும்படியும் ஆலோசனை கூறினர்.

அதன்பின் படைவீரர் அவரிடம் வந்தனர். எவரிடமிருந்தும் பயமுறுத்திப் பணம் பறிக்கவேண்டாமெனவும், கையூட்டு வாங்காதிருக்கும்படியும் கட்டளையிட்டார். அவர்களுக்குக் கிடைத்த பணமே போதுமென்றும் கூறினர். ( லூக்காஸ் 3 : 8 — 14 )

## திருமுழுக்கு அருளப்பரிடம் இருந்து நாம் கற்கவேண்டியவை :

அ. நற்செய்தி அனைவருக்கும் உரியது. எனவே இதைப் பரப்ப வேண்டியது எம் கடமை. (லூக். 8 : 6)

ஆ. திருமுழுக்குப் பெறுதலால் மட்டும் ஒருவன் புனிதத்தன்மை அடையான். ஆபிரகாமைப்போல கிறிஸ்தவன் தன் விசுவாசத்தில் பயிற்சி பெறவேண்டும். (லூக். 3 : 8)

இ. இறை அரசு அண்மித்துவிட்டது. எனவே மனந்திரும்பி புண்ணியத்தில் வளரவேண்டும்.

ஈ. கிராம முன்னேற்றச் சங்கங்கள் போன்ற அமைப்புகளில் முன்னின்று உழைத்து ஏழைகளுக்கும் உதவி தேவைப்பட்டோர்க்கும் உதவுதல் கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும். ( லூக்காஸ் 8 : 10 — 14)

**3. சிரிய சமுதாயத் தலைவன் — அருளப்பர்(லூக். 3 : 15 — 20)**

இறைவாக்கினரான அருளப்பர் ஆற்றல் மிகுந்த ஒரு போதகர். அவர் மீட்பரின் வருகையைத் தயார்செய்ய அனுப்பப்பட்டார். அருளப்பரை மக்கள் மீட்பர் எனத் தவருக நினைக்கும் அளவுக்கு அவர் தம் பணியில் ஊக்கமாக ஈடுபட்டார். ஆனல் தமது பணியின் தம்மை பற்றித் தாழ்ச்சியுடன்,

"மீட்பரின் பாதவணியின் வாரை அவிழ்க்கக்கூட
தகுதியில்லாத அடியேன் நான்."

என அருளப்பர் விளக்கமளித்தார்.

வீட்டு எசமானன் வீடு திரும்பும்போது வீட்டிலிருந்த அடிமை, எசமானனின் பாதவணிகளைக் கழற்றுதலும், கால்களைக் கழுவுதலும் பழைய யூத மரபாகும். அடிமை வீட்டுஎசமானின் சொந்தமாகக் கருதப்பட்டான். அடிமைகள் அக்காலத்தில் சந்தையில் விலைக்கு வாங்கப்பட்டனர். திருமுழுக்கு அருளப்பரின் கூற்றிலிருந்து அவர் எவ்வளவு தாழ்ச்சியும் உண்மையும் உள்ளவர் என்பதை அறியலாம். வரவிருக்கும் மீட்பருடன் தன்னை ஒப்பிடவோ அல்லது அவருக்கும் தமக்குமுள்ள தொடர்பால் பெருமை பாராட்டவோ அவர் விரும்பவில்லை. மீட்பரின் அடிமையாக வரக்கூடத் தகைமை இல்லா எளியேன் எனக் கருதியே முன் குறிப்பிட்டவாறு கூறினர். இங்ஙனம் அருளப்பர் வரவிருப்பவரின் மகிமைக்கும் வல்லமைக்கும் சான்ருகத் திகழ்ந்தார்.

ஆனல் அரசன் ஏரோது அந்திப்பாசுடன் உரையாடியபோது அருளப்பர் முற்றிலும் முரணுன முறையில் நடப்பதைக் காண்கிறோம். அந்திப்பாஸ் அரசன் தனது சகோதரனின் மனைவியிடம் தகாத முறையில் தொடர்புகொண்டிருந்தான். இறைவாக்கினரான அருளப்பர் அந்திப்பாஸ் அரசனை நேருக்குநேர் நின்று வன்மையாகக் கண்டித்தார்; காமுகன் என்று குற்றம்சாட்டினர். உண்மைக்குச் சான்றுபகரும்போது அருளப்பர் எத்துணை வீரமுள்ளவராக விளங்கினர் என்று பார்க்கிறோம். சினங்கொண்ட அரசன் அருளப்பரைச் சிறையில் அடைத்தான். பின்னர் அருளப்பர் கொல்லப்பட்டார். புதிய உடன்படிச்கைக்கால இறைவாக்கினரான இவரின் வாழ்க்கை எமக்குப் பெரியதொரு பாடத்தைப் படிப்பிக்கிறது. தூக்குமேடைதான் பரிசாகக் கிடைப்பினும், மரணத்தை எதிர்கொள்ளவேண்டிவரினும் கிறிஸ்தவர்கள் உண்மைக்குச் சான்று பகரக் கடமைப்பட்டவர்கள். எமது உயிரினும் மேலாக உண்மையை நாம் மதிக்கவேண்டும். மனிதசமுதாயத்தில் நீதி, நேர்மைக்காக உழைக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

வாழ்வில் கடைப்பிடிப்போம்;

1. நீர் ஒரு கிறிஸ்தவ மாணவன். இதனால் என்றுமே உண்மை பேசுதல் உம்து கடமை.

2. பிறரின் குற்றத்தைக் கூறும்போது அன்பினால் உந்தப்பட்டு அவ்விதம் செய்க.

   அவரது குறைபாட்டிலிருந்து விடுபட சரியான வழியைக் காட்டுக.

3. உம்மிடம் மேலதிகமாக நூல்கள், உடைகள் இருக்கலாம். இல்லாதவர்களுக்கு அவற்றைக் கொடு. கொடுக்குமுன் உமது பெற்றோரின் உத்தரவைப் பெறுதல் அவசியம்.

4. பிறரின் நன்மைத்தனத்தைப் பாராட்டப் பழகுக. அதை அவர்களுக்குக் கூறுக.

விடை தருக,

1. பலஸ்தீனா நாட்டின் படம் வரைந்து பின்வரும் இடங்களைக் குறிப்பிடுக.

| | | |
|---|---|---|
| அ. கலிலேயா | ஆ. பேரியா | இ. யூதேயா |
| ஈ. சமேரியா | உ. இத்தூரியா | ஊ. இதுமேயா |
| எ. அபிலேன் | ஏ. திராக்கோனிந்து | |

2. நேர்மையற்றவனுக்வும், பொய் கூறுபவனுக்வும், ஏமாற்றுபவனுகவும் நடக்கும் உமது நண்பனுக்கு நேர்மை, நீதியாக நடப்பதின் அவசியத்தை விளக்கி ஒரு கடிதம் எழுதுக.

3. சமுதாயத்தில் உள்ள பிழைகளைக் களைந்து சமுதாய வளர்ச்சிக்குத் துணைபுரிவேன். இது தொடர்பான பாடல்கள், கடிதங்கள், கட்டுரைகளைச் சேர்த்து வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுக.

4. உண்மை பேசப்பழக நீர் எடுக்கக்கூடிய செயல்முறைகளைத் தருக.

அலகு 6:

# புதிய ஆதாம்

## 1. அன்பார்ந்த மகன்: (லூக்காஸ் 3 : 21 — 22)

இறைவாக்கினர் திருமுழுக்கு அருளப்பரின் பொன் மொழிகளுக்குச் செவிமடுத்த மக்கள் மீட்பரை ஆவலுடன் எதிர்பார்க்கத் தொடங்கினர். அந்நாட்களில் இயேசுவும் அருளப்பரிடம் வந்து, திருமுழுக்கு அளிக்கும்படி கேட்டார். இயேசு தமது வெளியரங்க வாழ்வைத் தொடக்கவிருந்த காலம் அது. இறைவன் மனிதரை அளப்பரிய விதமாக அன்பு செய்கிறார் என்பதை இயேசுவின் இச்செயல் வாயிலாக அறிகிறோம். பாவ அடிமைத்தனத்திலிருந்து மனிதனை விடுதலையாக்க அவர் விரும்புகிறார். இதனால் மனித இனம் முழுவதின் பாவங்களைத் தம்மீது ஏற்றுக்கொண்டார். மனித இனத்தின் பாவங்களுக்காகக் கழுவாய் தேட (பரிகாரம்) அவர் முன்வந்தார். திருமுழுக்கு அருளப்பர் கையால், இயேசு திருமுழுக்கு பெற்றபோது தமது மீட்புப்பணி பற்றிச் சிந்தித்தார். அந்நேரம் வானம் திறந்து; பரிசுத்த ஆவி புறாவைப்போல அவர்மீது இறங்கினார். யோர்தான் நதிக்கரையில் நிலவிய அமைதியை வானத்திலுண்டான குரலொலி குலைத்தது.

"நீரே என் அன்பான மகன், உம்மிடம் நான்
பூரிப்பு அடைகிறேன்."

என்பதே அக் குரலொலி (லூக். 3 : 22)

மூவொரு கடவுள் தம்மை வெளிப்படுத்திய ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

இயேசு பெற்ற திருமுழுக்கு அவரது அபிஷேகத்திற்கு (திருநிலைப் படுத்துவதற்கு) ஓர் அடையாளமாய் விளங்கியது. அந்நேரம் இயேசுக் கிறிஸ்து; மீட்பர் என வெளிப்படுத்தப்பட்டது. இதற்கு இறைவனே சான்று பகர்கிறார். புதிய இஸ்ராயேலர்க்கு — திருச்சபைக்கு — இயேசு அடையாளமாக இருப்பதை பரிசுத்த ஆவி வெளிப்படுத்தினார். இயேசு புனிதம் நிறைந்தவர்; வஞ்சகம் சூது இல்லாத செம்மறிப்புருவை; துன்புறும் ஊழியனுக அவர் வந்தார். துன்பங்களையும் கல்வாரிப் பலியையும் ஏற்று மனித இனத்தை அவர் மீட்க முன்வந்தார். அவரது மரணமே ஒருவகையில் திருமுழுக்காக அமைகிறது.

'நான் பெறவேண்டிய திருமுழுக்கு ஒன்றுண்டு
அது நிறைவேறும் அளவும் நான் எவ்வளவோ ஏக்கமாயிருக்கி
கிறேன்.' (லூக். 12 : 50)

என்ற கூற்று இதைக் காட்டுகிறது.

இயேசு மரணத்தைத் தழுவி புதிய இஸ்ராயேலைக் கட்டி எழுப்பினுர். சாவிலிருந்து உயிர்த்தெழுந்து அவர் விண்ணகத்தில் தந்தையுடனிருந்து அரசாளுகிருர். தமது ஆவியை எம்மீது அனுப்பினுர். இதனுல் கிறிஸ்தவர்களாகிய நாம் மனிதகுலத்தை மீட்கும்பணியில் கிறிஸ்துவைத் தொடர்ந்து செயற்படவேண்டியவர்கள். திருமுழுக்கினுல் நாம் பெற்ற அழைப்பு இதுவாகும். கிறிஸ்துவின் மீட்புப்பணியில் நாமும் பங்கு கொள்வோம்.

## 2. இயேசுவின் தலைமுறை (லூக்காஸ் 3 : 23 — 38)

பகிரங்க வாழ்வை மீட்பர் இயேசு தொடங்கியபோது அவர் 30 — 33 வயதுக்கிடைப்பட்டவராக இருந்தார். நசரேத்தூரில் ஏழ்மையை அனுபவித்தவர் வாழ்க்கைத் தேவைகள் பலவற்றைத் துறந்து வாழ்ந்தார். இறைவன் அருளுபவற்றை அன்புடன் ஏற்று, அவரில் தங்கி வாழ்தலே ஆன்ம அமைதிக்குக் காரணம் என்பதை இயேசு அறிந்திருந்தார். இஸ்ராயேலரின் வரலாற்றில் அவரது முன்னேர்களின் தலைமுறை மறைந்து கிடக்கிறது. புனித லூக்காஸ், முதல் மனிதனுன ஆதாமின் தலைமுறையில் இருந்து வழிவந்தவர் இயேசு எனக்குறிப்பிடுகிருர். ஆதாமும் இறை'மகன்' ஆவதற்கு அழைக்கப்பட்டவரல்லவா? மாந்தர் அனைவரும் இயேசுவின் வழியாக மீட்கப்பட வேண்டும். இயேசு ஆதாமின் பரம்பரை என்பதால் உலக மாந்தர் அனைவரும் — புறவினத்தார்கூட — மீட்புப் பெறுவதற்காகவே இயேசு வந்தார். லூக்காஸ் தமது நற்செய்தியில் இப் பண்பை நன்கு விளக்க முயன்றுள்ளார்.

## 3. நமக்கு ஒரு செய்தி :

இயேசுவைப்போல நாங்களும் தாழ்மையுள்ளவர்களாக வேண்டும். இறைவனின் திருச் சித்தத்திற்கு அமைந்து நடத்தல் எம் கடன். அப்போதுதான் எம்மில் பரிசுத்த ஆவியானவர் விரைந்து செயலாற்றுவார். திருமுழுக்கினுல் நாம் பெற்ற அழைப்பை ஏற்று அதற்கு இயைந்த வாழ்வு வாழத் துணைபுரியும்படி இறைவனை வேண்டுவோம். இறையரசுக்கு முதலிடம் கொடுத்து உலகில் தீமை அகலப் போராடுதல் எமது கடமையாகும். திருச்சபையில் ஊக்கத்துடன் செயற்படும் உறுப்பினராக நாம் பயிற்சிபெற வேண்டுமெனக் கிறிஸ்து எதிர்பார்க்கிருர். எனவே கிறிஸ்துவிற்கு உகந்தவர்களாக இருக்க முனைவோம். பொருள்களைப் பேணி வாழ்வோம். நமது வாழ்வில் எதிர்ப்படும் தோல்விகள், பிணி, துன்பதுயரங்கள் அனைத்திலும் இறைவனின் சித்தத்தை அறிந்து வாழ முயலுவோம். கிறிஸ்து சிலுவையை அணைத்து வாழ்ந்ததுபோல நாமும் இவை அனைத்தையும் ஏற்றுவாழ்வோம்.

தீர்மானிப்போம் !

1. எனது திருமுழுக்கு அழைப்பை விளங்கிக்கொள்ள முயல்வேன். தேவையான அறிவுரைகளைப் பெற பங்குக் குரவரிடம் அல்லது மூத்தோரிடம் செல்வேன்.

2. நோய், துன்பம், துக்க வேளைகளில் இறைவனின் சித்தத்தை விளங்கி ஊக்கம் எடுப்பேன்.

3. நான் மீட்படைய வேண்டுமென்று மட்டுமல்ல, மக்கள் அனை வரும் மீட்படைவதற்காகச் செபிப்பேன்.

விடை தருக !

1. உம்து திருமுழுக்கு அழைப்பு எத்தகையது ? இது தொடர் பாக உமக்குள்ள கடமைகள் எவை ?

2. நற்செய்தியை லூக்காஸ் எழுதிய முக்கிய நோக்கம் என்ன ?

3. உமது சக மாணவன், ஆசிரியரின் அனுமதியின்றி பாடநேரத் தில் வெளியே போக உம்மை அழைக்கிறான் — நீர் பெற்ற திருமுழுக்கு அழைப்புக்கு சான்று பகரத்தக்க முறையில் இது தொடர்பாக நீர் எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் எவை எனக் கூறுக.

4. தொல்லைகள், தோல்விகள் வாழ்வில் ஏற்படும்போது ஆண்ட வரை நோக்குவேன். இத் தலைப்பின்கீழ் உரையாடல் ஒன்று எழுதி வகுப்பில் வாசிக்க முயலுக.

அலகு: 7

# சிலுவையில் இருந்து விலகி.........
# குறுக்கு வழி

## 1. யூதேயா நாட்டுப் பாலைவனம்: (லூக்காஸ் 4 : 1—2)

பரிசுத்த ஆவி இயேசுவைப் பாலைவனத்துக்கு வழிநடத்தினார். அவர் அங்கு உண்ணாதிருந்து செபித்தார். அவர் மேற்கொண்ட உன்னத பணிக்கு ஆயத்தமாக இச் செயல் அமைந்தது. தியோனுன அலகை இயேசுவுக்குச் சோதனை வருவிக்கும் எண்ணத்துடன் அங்கு சென்றதில் வியப்பில்லை. நன்மைக்கும் தீமைக்கும் போர்; புனிதத்தின் நிறைவு முழுத் தீமைக்கும் எதிராகச் சண்டையிட்டு அதை ஒழிக்க வேண்டிய நிலை. இயேசு புதிய ஆதாமாக விளங்கினார். உலகை மீட்பது அவரது பணியாகஇருந்தது. எனவே தீயோனுன அலகை இயேசுவைச் சிலுவையிலிருந்து விலக்க — தள்ளிவைக்க — முனைந்தது. தடுமாற்றத்தை விளைவிக்கக்கூடிய இரண்டுமூன்று வியத்தகு செயல்களை புதுமைகளைச் செய்தலே மனித மீட்புக்குச் சிறந்த வழி என அலகை இயேசுவுக்கு ஆலோசனை கூறியது. இறைவனது வல்லமையைத் தனிப்பட்ட நலனுக்காகப் பயன்படுத்தல் தவறு என்பதை இயேசு அறிந்திருந்தார். தமது தந்தையின் திருவுளத்தைப் புரிந்துகொண்ட இயேசு இதனால் யூதேயா பாலைவனத்தில் சிலுவையின் பாதையைத் தெரிந்து, அலகையை மேற்கொண்டார். நன்மை தீமையை மேற்கொண்டதை இங்கு காண்கிறோம்.

## 2. இன்ப நாட்டமுள்ள வாழ்வை விரும்புக: (லூக். 4 : 3—4)

"நீ கடவுளின் மகனானால் அப்பமாக மாறும்படி இந்தக் கல்லுக்குச் சொல்லு ......" பசியோடு இருத்தல் உமக்கு எவ்வித பயனையும் தராது. உமது சொந்த நலனுக்காக உமது இறை வல்லமையைப் பயன்படுத்தலாமே. அப்போது ஏழைகளுக்கு உணவளித்து, எல்லாரும் அறிந்த வீரனாக விளங்குவீர். எனது நல்ல புத்தியைக் கேட்டால் பெயர்போன சமூக சேவையாளனாக நீர் கருதப்படுவீர். அப்போது இஸ்ராயேலர் உம்மைப் பின்செல்வர் ......... அலகையின் எண்ணம் இவ்வாறு அமைந்தது.

தந்திரம் மிக்க சோதனையாக இது விளங்கியது. ஆனால் இயேசுவா ஏமாறுபவர்? அவர் அலகையின் தந்திர எண்ணத்தை அறிந்திருந்தார்.

இறைவார்த்தையால் ஊட்டம்பெறும் ஆன்ம வாழ்வு, அப்பத்திஞல் ஊட்டம் பெறும் உடல்வாழ்விலும் சிறந்தது என இயேசு அலகைக்குக் கூறினர். சொகுசான வாழ்விலும் பார்க்கச் சிலுவை வாழ்வை இயேசு விரும்பித் தேர்ந்தெடுத்தார். மனித இனத்தை மீட்பதற்கு நாம் சிலுவை(யில் தொங்கவேண்டுமென) யை நாடிச்செல்லவேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார். இறையரசை நிறுவவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். இதனல் உலக உணவுக்கு ( அப்பம் ) அவர் அத்துணை முக்கியத்துவம் கொடுக்கவில்லை. மனிதன் உயிர்வாழ்வது அப்பத்தினல் மட்டுமன்று, என வேதாகமத்தில் எழுதியிருக்கிறதே என இயேசு அலகைக்குக் கூறினர்.

உலக உணவில் மட்டும் மனித வாழ்வு தங்கி இருக்கவில்லை. மனிதனின் வாழ்வு உணவிலும் மேலானது. மனிதன் இறைவனுடன் ஒன்றிக்க (தெய்வீகத்துக்கு) அழைக்கப்பட்டவன். இதனல் புனிதத் துவத்துக்கு உணவு தடையாயிருத்தல் ஆபத்தானது. சிலுவையை நாடிச்சென்ற இயேசு உலக மேன்மையைத் தள்ளினர்.

## 3. அரசியல் மீட்பர் ஆகலாமே : *(லூக்காஸ் 4 : 5 — 9)*

இதன்பின் அலகை உலக அரசுகளை இயேசுவுக்குக் காட்டுகிறது. சிலுவையை நாடிச்சென்றல் மக்கள் உம்மை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பெயர்போன அரசனுதல் உமக்கு எத்துணை நல்லது ! அதிகாரத்துடன் பெரியவராக இருப்பதாக யூத இனத்தவரின் எதிர்பார்ப்பு அரசியல் மீட்பர் அல்லவா ? "அவர்களின் நம்பிக்கையைத் திருப்தி செய்வீராயின் அவர்கள் உமது பின் வருவார்கள். நான் கூறும் வழியில் சென்றல் மனித இனம் இலகுவாக மீட்கப்பட்டுவிடும்,"

அரசியல் ஆதிக்கம் கிறிஸ்தவ சமுதாயத்தைப் பல்வேறு பிளவு படுத்திவிட்டது. ஆதிக்கப் பேரவா கொண்டோர் கிறிஸ்தவ சகோதரத்துவத்தை மறந்துவிட்டனர். உலகம் பசியால் வாடுகிறது. ஆனல் கோடிக்கணக்கான டொலர்களும் பவுண்களும் விண்வெளி யாத்திரைகளுக்காகச் செலவழிக்கப்படுகின்றன. உலகத்தில் அதிக ஆதிக்கம் பெறவேண்டுமென்ற வேணவா மனிதனுள்ளே செயற்படும் ஆன்மாவைக் கொன்றுவிட்டது. உலகம் எங்கும் மனிதன் தன்னலத்திற்கு அடிமையாகி வருகிருன். கிறிஸ்தவ நாடுகள்கூட இவ்வித குற்றத்துக்கு விதிவிலக்கல்ல...... அதுதான் இன்றைய நிலை.

ஆனல்.........கிறிஸ்துவின் வழி இவ்விதம் அமையவில்லை.

" உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவரை மட்டுமே ஆராதிப்பாயாக " அவரின் விடை இது. சிலுவையைத் தேர்ந்தெடுத்த இயேசு உலக அரசையும், உலக ஆதிக்கத்தையும் தள்ளினர். எனவே இறைவனுக்கு மேலான வணக்கத்தைச் செலுத்துதல் எனது கிறிஸ்தவக் கடமையாகும். பணம், பதவி, ஆதிக்கம் என்பவறைத் தெய்வமாகக் கருதி வணங்காதிருப்போமாக.

## 4. பெயர்போன மீட்பர் ஆக விருப்பம் இல்லையா ?

( லூக்காஸ் 4 : 9— 13 )

ஜெருசலேம் தேவாலயத்தின் தென்கிழக்கு மூலையில் அமைந்து இருந்த தேவாலயத்தின் முகடு 575 அடி உயரமானது, இயேசு இம் முகட்டில் நின்று பரந்திருந்த கெத்ரோன் சமவெளியைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

அலகை இயேசுவுக்குக் கூறியது ! காண்க (லூக். 4 : 9 — 11)

பயப்பட வேண்டாம் உமக்கு ஒரு ஆபத்தும் வராது. புதுமை செய்யக்கூடிய உமது வல்லபத்தை பட்டினத்துள்ளார்க்குக் காட்டலாமே. புகழ்ச்சிப்பாதையில் சென்று அனைவரும் பாராட்டும் வீரனுகலாம் ..... இவ்வித புதுமையைக் காணும் மக்கள் நீர் இறைவனிடமிருந்து வருபவர் என்பதைக் காண்பர். அதனுல் மீட்பு வேலை மிக இலகுவாகிவிடும்.

அலகை வேதாகமத்திலிருந்து மேற்கோள் காட்டுகிறது. தீயோன் எவ்வளவு கெட்டிக்காரன் ... மூன்ருவதாக அமைந்துள்ள இச் சோதனை இலகுவான முறையில் பெயர் எடுக்க விழைபவர்களுக்கு ஓர் அறைகூவல். ஒருவனது சொந்த நலனுக்காக அற்புதங்கள் செய்யக்கூடாதென்ற நிலையை இயேசு தொடர்ந்தும காட்டுகிருர். உலகப் புகட்சிக்கான பாதையல்ல, சிலுவையின் பாதை. சிலுவையில் இருந்து அவரை விலக்க அலகை எவ்வளவோ முயன்றது சிலுவையின் பாதையில் இருந்து இயேசுவை விலக்க குறுக்குவழிகாட்ட அலகை முனைந்தது.

நாங்களும் இன்று இவ்வித சோதனைக்குட்படுகிறோம். எமக்குப் பிணிவரும்போது அன்றேல் தொல்லைகளுக்குட்படும்போது இறைவன் புதுமைசெய்து எம்மைக் காக்கவேண்டுமென விரும்புகிறோம். இவ்வித எதிர்பார்ப்புகள் நிறைவேருதபோது முழுக் குற்றத்தையும் இறைவன் மீது சுமத்துகிறோம். ஆனுல் மனிதனைத் திருப்திப்படுத்துவதற்காக இறைவன் வியத்தகு செயல்கள் செய்வதில்லை.

"உன் கடவுளாகிய ஆண்டவரைச் சோதியாதே" என இயேசு கூறியபோது இக் கருத்தையே வற்புறுத்துகிறார்.

சிலுவையின் வழியே உண்மை விசுவாசத்தின் வழியாகும். மீட்புக்கு இட்டுச்செல்லும் ஒரே வழி இதுவே.

தியானத்துக்காக !

1. இறைவன் கரங்களில் எம்மை அர்ப்பணிப்போம். பரிசுத்த ஆவியானவர் எம்மில் செயற்பட்டு எமது கிறிஸ்தவ அழைப்பை நாம் விளங்கிக்கொள்ள எமக்குத் துணைபுரிவாராக.

2. பாவச்சோதனை பாவம் அன்று. அதற்கு நாம் இடம் கொடுத்தாலே பாவம். சோதனையை எதிர்த்து அதை மேற்கொள்ளவே நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

3. எமது வாழ்வில் இறைவனுக்குரிய இடத்தை உணவு, செல்வம், அதிகாரம், செல்வாக்கு என்பவற்றிற்கு அளிக்காதிருப்போம். எமது வழி சிலுவைக்குச் செல்லும் தாழ்மையான வழி.

4. மனித இதயங்களில் இறை அரசை வளர்த்தலை இலக்காகக் கொண்டு எமது கிறிஸ்தவப்பணி அமைதல் வேண்டும். உலக அரசை அடைதல் எமது நோக்கமல்ல.

விடை தருக !

1. இயேசு ஏன் சோதனையை எதிர்கொண்டார்? இதிலிருந்து நாம் கற்க்கூடிய பாடம் என்ன?

2. கிறிஸ்துவின் சோதனையை அடிப்படையாகக் கொண்டு ஒரு சிறுகதை எழுதுக.

3. இறை அரசை பரப்புவதற்காக உம்மை அர்ப்பணித்துள்ளீர். பின்வரும் சந்தர்ப்பங்களில் என்ன செய்வீர் என்று குறிப்பிடுக.

    1. உமது வகுப்பில் கல்விபயிலும் ஒரு மாணவன் அதிபருக்கு உம்மைப்பற்றி அவதூறுகக் கூறுவதை அறிந்தால் ......

    2. உமது நண்பன் ஒருவன் ஒன்றுமே படிக்காது, புனித அந்தோனியாருக்குச் செவ்வாய் தோறும் நவநாள் செய்து பரீட்சையில் சித்தியடையலாம் என்ற எண்ணத்துடன் இருந்தால்.........

அலகு : 8

# ஏழைகளுக்கு நற்செய்தி

## 1. கலிலேயாவில் இயேசுவின் பணி : *(லூக்காஸ் 4 : 14 — 15)*

இயேசு மீட்புப் பணியைக் கலிலேயாவில் தொடங்கினார். செபக் கூடங்களில் அவர் போதித்துவந்தார். வியத்தகு புதுமைகள் பல அவர் ஆற்றினார். இச் செயல்கள்வழியாக மக்கள் உண்மையாக மனம் நொந்து உளமாற்றம் பெறவேண்டுமென இயேசு மக்களை அழைத்தார். வேண்டுதல் செய்யும் இடங்களே செபக்கூடங்கள் என அழைக்கப்பட்டன. 'சபாத்' என அழைக்கப்பட்ட ஓய்வு நாட்களில் யூதர்கள் வேண்டுதல் கூட்டங்களுக்கு ஒன்று கூடுவர். சாதாரணமாக செபக்கூட்டங்கள் மூன்றுபகுதிகளைக் கொண்டிருந்தன. முதலில் வேதாகமத்திலிருந்து ஒருபகுதி வாசிக்கப்பட்டது. அதன்பின் வாசிக்கப்பட்ட வேதாகமப் பகுதிக்கு போதகர் விளக்கம் அளித்தலும், விளக்கமான மறையுரையும் இடம்பெற்றன. மூன்றாவது பொதுஜெபமும், சங்கீதம் ஒன்று பாடுதலும் இடம்பெற்றன. நசரேத்திலுள்ள செபக்கூடத் தலைவன் இயேசுவைச் செப வழிபாடு நடத்தி, ஓய்வுநாள் பற்றிய சிற்றுரை ஒன்றும் நிகழ்த்துமாறு அழைத்திருந்தான். இந்த அழைப்பை அவர் ஏற்றார். யூத செபக்கூடத்தில் இயேசு போதித்தார் என்றும், அனைவராலும் பாராட்டப்பெற்றார் எனவும் புனித லூக்காஸ் குறிப்பிடுகிறார்.

தேவாலயத்தில் இடம்பெறும் வழிபாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளலும், இவ்வித வழிபாடுகளை ஒழுங்கு செய்வதில் பங்குக்குரவருக்கு எம்மால் இயன்றவகையில் உதவுதலும் எமது கடமை என்பதை இந் நிகழ்ச்சிவாயிலாக இயேசு எமக்குப் படிப்பிக்கின்றார். இக் கடமையிலிருந்து நாம் தப்பி ஓட முடியாது. குடும்ப செப வேளையில்கூட வேதாகம வாசிப்பு இடம்பெறுதல் நல்லது. இவ்விதம் நடந்தால் இறைவார்த்தையை எமது வாழ்வில் தொடர்புபடுத்தும் பயிற்சியைப் பெறுவோம்.

## 2. நசரேத்தில் இடம்பெற்ற முரண்பாடு : *( லூக் 4 : 16—30 )*

கிறிஸ்துவின் பணிபற்றிய மாதிரி நிகழ்ச்சி ஒன்றை லூக்காஸ் இங்கே சித்தரிக்கிறார். தமது சொந்த மக்களால் ஏற்றுக்கொள்ளப் படாத வேளைகளிலும் இயேசு மனந்தளராது செயற்பட்டார். புறவினத்தாரில் ஏழைகளுக்கும், ஒடுக்கப்பட்டவர்களுக்கும் கூட நற்செய்தியைப் போதித்தார்.

நசரேத்தின் செபக்கூடத்தில் இயேசு இசையாஸ் இறைவாக்கின ரின் நூலிலுள்ள ஒரு பந்தியை வாசித்தார். அது பின்வருமாறு : ..... நீங்கள் கேட்ட இந்த மறை நூல் வாக்கு இன்று நிறைவேறிற்று. ஏழைகளுக்கு நற்செய்தி போதிக்கவும், ஆன்மீகக் குருடருக்குப் பார்வை அளிக்கவும், ஒடுக்கப்பட்டோருக்கு ஆறுதல் தரவுமே...... தாம் வந்த தாக அவர்களுக்குக் கூறினர். இதனுல் அவர்கள் அவர்மேற் பொருமை கொண்டார்கள்.

இறைவாக்கினர் எவரும் தம் சொந்த ஊரில் ஏற்கப்படுவதில்லை என்ற இயேசுவின் கூற்று இதை எமக்கு எண்பிக்கிறது. நசரேத்து வாழ் மக்கள் தமது உலக நன்மைகளை இயேசு விருத்தி செய்வார் என எதிர்பார்த்திருந்தனர். ஆனுல் மீட்பரின் பணி இதுவாக இருக்க வில்லை. மனித இதயங்களில் ஆன்மீக வாழ்வை மீளவும் புதுப்பித்து வளர்த்தலே அவரது பணியாக இருந்தது.

இறைவாக்கினரான எலியாஸ், எலிசேயு என்னும் இருவரும் புற வினத்தார்க்குப் பணிபுரிந்தார்கள். ஆனுல் இஸ்ராயேலர் அவர்களைப் புறக்கணித்த பின்னரே இஸ்ராயேலை விட்டு நீங்கிப் புறவினத்தார் மத் தியில் வாழ்ந்தனர். தாமும் எலியாஸ், எலிசேயு போல நடக்க வேண்டிவரும் என இயேசு கூறியபோது நசரேத் மக்கள் சினங் கொண் டனர். (காண்க : லூக். 4 : 25 — 28) இச் செயல் நசரேத் மக் மக்களுக்கு ஒரு அடையாளமாக இருந்தது. பொருமையால் அடையா ளம் எதையும் அறியமுடியாதிருந்தனர்.

இதிலிருந்து நாம் கற்கக்கூடிய பாடங்கள் பல உள. எந்தக் கிராமத்திலோ அன்றி நகரத்திலோ சிறப்பான திறமைகளும், ஆற்றல் களும் உடைய மக்கள் பலரை நாம் காண்கிறோம். அவர்கள்மேற் பொருமை கொள்வதைவிட்டு, பொது நன்மைக்கான பணிகளில் அவர் களை நாம் ஈடுபடச் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும். அவர்களைப்பற்றி இழிவாகக் கதைப்பதும், ஏழை எளியவர்கள் என்பதால் அவர்களைத் தகுதியற்றவர்கள் எனத் தள்ளிவைப்பதும் கிறிஸ்தவமல்லாச் செய லாகும்.

இறையரசுக்காகத் தம்மை அர்ப்பணித்தோரிடம் இருந்து உலக் நன்மைக்கானவற்றை மட்டும் எதிர்பார்த்து வாழ்வதும் பிழையாகும்.

### 3. கப்பர்நகூமில் ஒரு நாள் : (லூக்காஸ் 4 : 31 — 34)

கலிலேயாக் கடலின் வடமேற்குக் கரையோரமாகக் கப்பர்நகூம் நகரம் இருந்தது. அது ஓர் ஆயத் துறைமுகம். கடல்மட்டத்தின் கீழ்

686 அடியில் இது அமைந்திருந்தது. புனித லூக்காஸ் விளக்கிக் கூறும் முதற் புதுமைஇந் நகரத்தில் உள்ள உரோமையனை நூற்றுவர் தலைவன் கட்டிய ஒரு செபக்கூடத்தில் இடம்பெற்றது. அலகையின் அரசுக்கு நல்லதோர் அடி விழுந்த சம்பவம் செபக்கூடத்தில் நிகழ்ந்தது. புகழும் நோக்குடன் அல்ல ஆனல், அச்சத்தினுல் வயப்பட்ட அலகை,

"நீர் யார் என்று எங்களுக்குத்தெரியும். நீர் கடவுளின் பரிசுத்தர்" என்று கத்தியது. கிறிஸ்துவின் அரசின் படிமுறையான வளர்ச்சியை எண்ணிய அலகை பயந்தது. இதனுல் தன் அரசு அழிந்துவிடும் என்பதை அது அறிந்திருந்தது.

இராயப்பரின் மாமியாரைக் குணமாக்கியது மனிதர் மத்தியில் இயேசு பழகியதைக் காட்டும் ஒரு நிகழ்ச்சியாகும். அன்பும் பரிவும் நிறைந்த மீட்பர், பிணியாளரின் விசுவாசத்தைத் திடப்படுத்தி, பாவத்திலிருந்து மீட்பு அளிப்பதற்காக வியத்தகு செயல்களைச் செய்கிருர். (லூக். 4 : 38 — 39) மனிதர் பிணிகளுக்கு அடிமையாயிருப்பது தீமையினுல் (லூக். 4 : 40 — 41) என்பதை இயேசு தெளிவாகக் காட்டுகிருர். இயேசு அருளிய உடற்சுகம், ஆன்மாவுக்கு அருளிய உள்வலுவுக்கு அடையாளமாகும். விசுவாசத்தை உறுதிப்படுத்துவதாகவே புதுமைகள் அமைந்திருந்தன. அவை மீட்பின் அடையாளங்களாகும்.

இயேசு அதிகநேரத்தைச் செபிப்பதில் செலவிட்டார். (லூக்காஸ் 4 : 42) அவரிடம் சென்றவர்க்கு தமது செய்தி அவர்களுக்கு மட்டுமன்றி, அனைவர்க்கும் உரியது என்று கூறினுர். (காண்க லூக்காஸ் 4 : 43) பலஸ்தீன நாட்டின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்று அரசைப் போதிப்பதில் ஈடுபட்டார் என லூக்காஸ் குறிப்பிடுகிருர். (லூக்காஸ் 4 : 44)

வாழ்க்கைக்கு :

1. உமது கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றும்போது மேய்ப்பர்களுடன் ஒத்துழைக்க முயல்க : ஏனெனில் அவர்களும் இறையரசுக்காக சிறப்பான முறையில் அர்ப்பணிக்கப்பட்டவர்கள்.
2. வீட்டில் செபிக்கும் வேளையில் வேதாகமத்தை வாசிப்பதிலும், அதுபற்றித் தியானிப்பதிலும் பழகுக.
3. கிறிஸ்துவைக் கண்டு பாவித்து ஏழைகளுக்கு இயன்றவரை உதவுக.
4. உமது ஊரில் உள்ள சமுதாய விருத்திக் கழகங்கள்... மன்றங்கள் ஆகியவற்றின் உறுப்பினராகி உமது ஊரின் நன்மைக்காக உழைக்க முயல்க.

விடை தருக !

1. உமது கிறிஸ்தவக் கடைமகளை நிறைவேற்றும்போது மேய்ப் பர்களுடன் ஒத்துழைக்க முயல்க.

பலஸ்தீனுவின் படம் வரைந்து பின்வரும் இடங்களைக் குறிப் பிடுக. அ. கலிலேயா ஆ. கப்பர்நாகூம் இ. நசரேத் ஈ. கலிலேயாக் கடல்

2. நசரேத் செபக்கூடத்தில் இயேசு போதித்த வேளையில் நீர் இருந்திருந்தால் என்று கற்பனை செய்து அந் நிகழ்ச்சிபற்றி உமது எண்ணங்களை எழுது.

3. பிணியாளரின் ஆன்ம வாழ்வை வலுப்படுத்தும் நோக்குடனே இயேசு உடற்பிணிகளை குணமாக்கினுர். — இக் கூற்றுக்குச் சான்று காட்டுக.

4. உடற் சுகம் அளிப்பதன் வழியாக ஆன்ம விடுதலை அளிக்க லாமென இயேசு எதிர்பார்த்தார்.
கிறிஸ்துவின் வழி செல்பவனுன நீர் பின்வரும் சூழ்நிலைகளில் எவ்வாறு நடப்பீர் ?

(i) பாடசாலையில் செபத்திற்காக ஒன்றுகூடும்போது ஒருவர் மயங்கி விழுந்தால் ...

(ii) வீதியைக் கடக்கமுயலும் குருடன் ஒருவனைக் கண் டால்......

(iii) வீட்டில் உள்ளவர் அனைவரும் தொற்று வியாதியால் பீடிக்கப்பட்டால் ... ..

COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P. O. BOX 601
COLOMBO

அலகு : 9

# பகிரங்கப் பணி

## 1. மனிதர்களை வலைபோடுபவர் : ( லூக்காஸ் 5 : 1 — 11 )

மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டிருந்த சீமோன் இயேசுவிடமிருந்து அதிசயமான ஓர் அழைத்தலைப் பெற்றார். அவரையும் அவரது நண்பர்களையும் ' மனிதர்களை வலைபோடும் ' பணிக்கு இறை அரசின் மறைபரப்புப் பணிக்கு வரும்படி இயேசு அழைப்பு விடுத்தார். இவ்வித அழைப்பு கருத்துமிக்கது, வலைஞர்க்கும், மறைபரப்பாளர்க்கும் இடையில் ஒன்றுபட்ட பல பண்புகளை நாம் காணலாம். இருதரத்தாரும் மதிப்புள்ள பணியை ஆனால் சலசலப்பின்றி ஆற்றுகின்றனர். இரு பிரிவினரும் உயர்ந்த பொறுமையுள்ளவர்களாக இருக்கவேண்டியவர்கள். மனித சமுதாயத்தில் வாழும் பல்வேறு நிலையினருக்கேற்ப தம்மை மாற்றி அமைத்துக்கொள்ளும் பண்பும் இரு பகுதியினர்க்கும் உண்டு.

இறை அரசுக்கு மக்களை உட்படுத்துதல் இலகுவானதல்ல. எனவே மறைபரப்புப் பணிக்கென அழைக்கப்பட்டவர்கள் பல கொடைகளைப் பெற்றவர்கள். வாழ்வில் வெற்றியின் கொடுமுடியையே காணக்கூடியவர்கள். புதுமையான வகையில் ஏராளமான மீன்கள் சீமோனுக்குப் பிடிபட்ட பின்பே இயேசு அவரை அரசுக்கு உழைக்க அழைத்தார். சீமோனின் வாழ்வில் பெரு வெற்றியீட்டிய நேரம் அது. இவ்வித நல்ல மீன்பாடு சீமோனுக்கு முன்னொருபோதும் கிட்டவில்லை. மீன்களை விற்று அதிக இலாபம் ஈட்டவும் அவருக்குச் சந்தர்ப்பம் இருந்தது. ஆனால் இலாபந் தரும் அத் தொழிலை அங்கேயே அப்படியே விட்டு, உடனடியாக வரும்படி இயேசு அழைத்தார். தனக்குள்ள அனைத்தையும் தியாகம் செய்யவேண்டியது மறைபரப்பாளரின் கடன் என்பதை இது எமக்குக் காட்டுகிறது. தனது சொத்து, பதவி, நேரம், சக்தி .. அனைத்தையும் இறை அரசுக்காகத் தியாகம் செய்தல் — கிறிஸ்தவ அழைப்பின் இயல்பு இத்தகையது.

இன்றைய மனிதனுக்கு நற்செய்தியை அறிவித்தல் அவசியம் தேவை, வெற்று மிருகங்கள்போல பலர் வாழ்கின்றனர். அவர்கள் கட்டளைகளுக்கு அஞ்சுவது இல்லை. தமக்காகவே வாழும் தன்னலப் பிரியர்களாக, பிறரைச் சுரண்டி வாழ்பவர்களாக, கொலை, களவு, கொள்ளை என்பவற்றில் ஈடுபட்டவர்களாக... வாழ்கின்றனர் பலர். மனிதநிலைக்கு அவர்களைக் கொண்டுவரவேண்டும். சான்றுவாழ்வும்,

உரையாடலும் இதற்கு அவசியம். தமது வாழ்வுக்கு இறைவன் வேண்டியவர் என்பதை உணரும்போது. நற்செய்தியைக் கேட்க அவர்கள் ஆயத்தமாவார்கள். அதன்பின்...... அவர்கள் உண்மையாகவே மனந் திரும்புவர்.

இவ்வித பணி இலகுவானதல்ல. நல்ல மனதுள்ள ஆண், பெண் அனைவரதும் உதவி கிறிஸ்தவர்களாகிய எமக்குத் தேவை. எனவே பிற மறையைச் சேர்ந்தவர்களுடன் உரையாடல்கள் இடம்பெற வேண்டும். நாங்கள் ஒன்றித்து வாழ வேண்டியவர்கள். முதலில் கிறிஸ்தவர்களாகிய நாங்கள் எம்முள் பிளவுபடக்கூடாது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் உரையாடலையும், பிற மறைகளுடன் நல்லுறவையும் தூண்டுகிறது. இது சிறந்த ஓர் அடையாளம். இராயப்பரின் கப்பலுக்கு (திருச்சபை) பிற வள்ளங்களின் துணையும் (பிற மதத்தினர்) வேண்டும். அப்போதுதான் வாழ்க்கை என்ற சமுத்திரத்தில், இறை அரசுக்கான மீன்களை (திருச்சபைக்கான உறுப்பினரை) பிடிக்கமுடியும். மறைபரப்பும் பணியில் ஒற்றுமை நிலவவேண்டும். இது எமது பொது அழைப்பு.

## 2. தொழு நோயாளன் : (லூக்காஸ் 5 : 12 — 16)

இன்றைய உலகில் பலர் ஆன்ம நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். தீமைக்கு அடிமைகளாக அவர்கள் வாழ்கின்றனர். அவர்களைப் பார்த்துக் கேலிசெய்வதும் உதவாதவர்கள் என்று தள்ளிவிடுவதும் பிழையாகும். ஒழுக்க சீர்கேடுகளைக் காணும் உண்மைக் கிறிஸ்தவன் அவற்றைக் கண்டு இரக்கம் கொள்ள வேண்டும். தவறிய தன் சகோதரன் மீட்பைக் கண்டடையத் துணைபுரிதல் கிறிஸ்தவனது கடமையாகும். தொழு நோயாளி குணப்பட்டமை இந்தச் செய்தியையே எமக்கு அளிக்கிறது.

கிறிஸ்துவைக் கண்டடையும் பாவி தாழ்மையுள்ளவனாவான். இயேசுவில் அகத்தூய்மையை அவன் காண்பான். இதனால் விசுவாசம் கொள்ளத் தொடங்குவான். மேலும் ஆண்டவரே நீர் விரும்பினால் என்னைத் தூய்மையாக்க உம்மால் கூடும் என்றும் அவன் கூறக்கூடும். பாவத்தில் உழலும் எம் சகோதரர்க்கு இந்த விசுவாசநெறியைக் காட்டுதல் எம் கடன். இவ்வித பொறுப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ளச் சம்மதிக்கிறீர்களா? மனித சமுதாயத்தில் ஆன்மீகத் தொழுநோயைக் குணமாக்கும் கிறிஸ்தவக் கடமை உமக்கும் உண்டு. இதைப்பற்றி உமது கருத்தென்ன? (காண்க : உரோமர் 3 : 10 — 18)

இன்றைய சமுதாயநிலையை மேலே உள்ள விளக்கம் எவ்வளவுக்கு எடுத்துக் காட்டுகிறது ?

இவ்வித நிலை குறித்து உமது கடமை என்ன ?

கிறிஸ்தவ மாணவனுன நீர் இதைச் சீர்செய்ய என்ன செய்வீர் ?

இவற்றைச் செய்ய நீர் தயாரா ?

இறைவனை அணுகிச் செல்ல, உமது உரையாடல் வழியாக கிறிஸ்தவ மதிப்பீடுகளை வெளிப்படுத்த, சமுதாயத்தில் நிலவும் தீமைகளை ஒழிக்க முன்வர, உண்மைக் கிறிஸ்தவனுவதற்கு நல்ல கல்விபெற, மனித இன மீட்புக்காகச் செபிக்க,

விடை தருக :

1. 'அனைவர்க்கும் நன்மை செய்வேன்' —இந்த விருதுவாக்கியத்துக்கு ஏற்ப எப்படி வாழ்வீர் என்று குறிப்பிடுக.

2. பிறசமய நண்பனுக்கு இறைவனை எப்படி அறிமுகம் செய்வீர் என்ற உரையாடல் ஒன்று எழுதுக. அல்லது இறைவனைப் பற்றிச் சந்தேகிக்கும் சக மாணவனுடன் நிகழ்த்தும் உரையாடல் ஒன்று எழுதுக.

3. பொய், களவு, பாடசாலைக்கு வராதிருத்தல்...... போன்ற குணங்களுடைய சக மாணவனுக்கு நீர் கூறக்கூடிய அறிவுரை எழுதுக.

4. இறையரசுக்கு மக்களைச் சேர்த்தல் தொடர்பாக உமக்குள்ள கடமைகள் எவை ?

4. தொழு நோயாளன் குணமான சம்பவத்தில் இருந்து (லூக்காஸ் 5 : 12—16) நீர் படிக்கக்கூடிய படிப்பினைகள் எவை?

# உயிருள்ள விசுவாசத்தின் வழியாக சான்று

## 1. பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் : ( லூக். 5 : 17 — 16 )

முற்காலத்தில் வாழ்ந்த யூத மக்கள் தொழுநோய், திமிர்வாதம் போன்ற நோய்கள் பாவத்தின் தண்டனையாக இறைவன் அனுப்புபவை என்று நம்பிவந்தனர். ஆனல் திமிர்வாதக்காரனை இயேசுவிடம் கொண்டுவந்த அவனது நண்பர்கள் அவரிடத்தில் அபார நம்பிக்கை கொண்டிருந்தனர். தனது பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்றுல் அன்றி, தனது பொல்லாப்பிணி நீங்காது எனத் திமிர்வாதக்காரன் அஞ்சினன். ஆனல் இயேசு அன்பையும், பரிவையும் மேலாக மதிப்பவர். பிணியாளரின் நண்பர்களின் உண்மை அன்பையும், ஆக்கமுள்ள விசுவாசத்தையும் இயேசு கண்டு மகிழ்ந்தார். இதனல் திமிர்வாதக்காரனுக்கு அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன, என்ருர். இதைக் கேட்ட திமிர்வாதக்காரன் அச்சம் நீங்கி, நம்பிக்கை கொள்ளத் தொடங்கினன். ஆனல் அவன் குணமடைந்தமை அவனது விசுவாசத்தினல் ஏற்பட்ட விளைவு அல்ல என்பதை லூக்காஸ் மிக்வும் தெளிவாகக் கூறுகிருர். பிணியாளனின் அச்சத்தையும், அவனது பிணியையும் இயேசு குணமாக்கியதற்கு அவனை இயேசுவிடம் கொண்டு சென்ற நண்பர்களின் பாரிய விசுவாசமே காரணமாயிருந்தது. அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு.........

இந் நிகழ்ச்சியிலிருந்து நாம் அறிவது என்ன ? பிறருக்குச் சேவை செய்ய முன்வரும் கிறிஸ்தவர்களாகிய நாம் எவ்வித பாகுபாடுமின்றி பிறர்க்குப் பணிசெய்ய முனையவேண்டும். விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட முழுமையான அர்ப்பணிப்புச் செறிந்ததாக எமது பணி அமையவேண்டும்.

இறைவன் ஒருவரே பாவத்தை மன்னிக்க வல்லவரென யூதர்கள் விசுவசித்தனர். அன்பனே உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. என இயேசு மொழிந்தபோது அதைத் தேவ நிந்தையெனக் கருதினர். இது போலவே இயேசுவும் யூதப் பெரியார்களும் முரண்பட்ட பல சம்பவங்களை நாம் நற்செய்தியில் காண்கிருேம். மனுமகன் பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் உடையவரா ? இன்று வாழும் பலருக்குக்கூட இது புரியாத புதிராக இருக்கிறது.

திமிர்வாதக்காரனைக் குணமாக்கியதும் பாவங்களை மன்னிக்க இயேசுவுக்கிருக்கும் வல்லமையை, அதிகாரத்தைக் காட்டுகிறது. அதே அதிகாரத்தினால் இன்றைய திருச்சபையும் செயற்படுகிறது. திருச்சபைக்கு இந்த அதிகாரத்தை கிறிஸ்து அளித்தார் என நாம் விசுவசிக்கிறோம். இவ்வித விசுவாசமின்றி நாம் பாவ மன்னிப்பு அடையச் செல்வதில் பயன் இல்லை.

## 2. பாவிகளுடன் பந்தி அமர்கிறாரே :

( லூக்காஸ் 5 : 27 — 32 )

ஒன்று சேர்ந்து உணவும், பானமும் அருந்துதல் அன்புக்கு அடையாளமாகும். தம்மைப் பின்செல்லும்படி அழைத்த லேவியுடன் உணவருந்த இயேசு அமர்ந்தார். இச் செயலினால் மறைநூல் அறிஞரும், பரிசேயரும் ஆத்திரங்கொண்டு முணுமுணுத்தனர். அவர்கள் இயேசுவின் சீடரிடம்,

ஆயக்காரரோடும் பாவிகளோடும் நீங்கள் உண்பதும் குடிப்பதும் ஏன் என முறையிட்டனர். ஆனால் இவ்விதம் கேட்டவர்களே நேர்மை உள்ளவர்களாக நடக்காதவர்கள்; பக்தி உள்ளவர்களென்றும்; நீதிமான்களென்றும் தங்களைக் காட்டிக்கொண்ட வெளிவேடக்காரர்கள் அவர்கள். சட்டத்தைக் கைக்கொள்பவர்கள் தாங்கள் என்று அவர்கள் காட்டிக்கொள்வதுடன் மனநிறைவு அடைந்தார்கள். தமது போலித் தூய்மையினால் தம்மையே ஏமாற்றி வாழ்ந்தார்கள். இங்ஙனம் நடந்து வந்தமையால் தங்கள் குற்றத்தை அறியமுடியாதவர்களாக இருந்தார்கள். பாவங்களுக்காகச் சிறிதாவது மனம் வருந்தும் நற்பண்பை இயேசு அவர்களிடம் காணவில்லை. எனவே இயேசு சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்களிடமும், யூதரல்லாத புறவினத்தாரிடமும் தம் கவனத்தைத் திருப்பினார்.

> "மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று, நோயுற்றவர்க்கே தேவை, நீதிமான்களை அன்று, மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்துள்ளேன்."

என்று மொழிந்தார். வேடதாரிகளைக் கண்டிப்பதற்காகவே இயேசு இவ்விதம் கூறினார். இன்றைய சமுதாயத்திலும் பல பரிசேயர்கள் வாழ்கிறார்கள். அவர்களைப் பின்பற்றாது இருத்தல் கிறிஸ்தவர்களாகிய எமது கடனாகும்.

சமுதாயத்தில் கீழ்நிலையில் உள்ளவர்களுடன் நட்புடன் வாழவேண்டியது எம் கடன் என இயேசு எமக்குக் காட்டுகிறார். திக்கற்ற எமது

சகோதர சகோதரிகளுக்குக் கருணை காட்டுதல், ஒடுக்கப்பட்டவர்களுக் குத் துணைபுரிதல், பாவிகளை எம் அண்டை சேர்த்தல் .. இவைதான் இயேசு எம்மிடம் எதிர்பார்ப்பவை. தம் பாவங்களுக்காக உண்மை யில் மனம் வருந்துபவர்கள் கிறிஸ்துவின் சீடராயிருக்கும் தகைமை யுடையவர்கள். ஆனால் பத்திமான்களாக நடிக்கும் வெளிவேடதாரிகள் கிறிஸ்துவின் பெயரைக் கூறவே அருகதை அற்றவர். கிறிஸ்தவ உல கில் அவமானச் சின்னங்களாக அவர்கள் இருக்கிறார்கள்.

### 3. நோன்புபற்றி ஒரு வினா : (லூக். 5 : 33 — 39)

பழைய, புதிய உடன்படிக்கைகளுக்கிடையில் முரண்படும் ஓர் அடையாளமாக இயேசு விளங்கினார். மெசியா தங்கள் பதவிகளைக் காப்பதில் தம் பக்கம் சார்ந்திருப்பார், மோயீசனின் சட்டங்களுக் குத் தாங்கள் அளிக்கும் விளக்கத்தை ஏற்றுக்கொள்வார் என பரிசே யரும், சட்டவல்லுனரும் எதிர்பார்த்தனர். ஆனால் இயேசுவோ இதற்கு முழு எதிராகவே நடந்தார். அவர்களின் போலிவேடத்தை இயேசு எல்லோருக்கும் வெளிப்படுத்தினார். இதனால் இயேசுவுக்கும் அவர்களுக் கும் முரண்பாடு எற்பட்டது. இம்முரண்பாடு அத்தலைவர்கள் இயேசு வைத் தொலைக்கும் அளவுக்கு வளர்ந்தது.

> "மணமகன் தன் தோழர்களோடு இருக்குமளவுக்கும் அவர்களை நோன்பிருக்கச் செய்யக்கூடுமா? மணமகன் அவர்களை விட்டுப் பிரியும் நாள் வரும், அப்பொழுது அவர்கள் நோன்பு இருப் பார்கள்."

என இயேசு கூறியது தமது மரணத்தைச் சுட்டிக்காட்டுவதற்காகவே. மக்களின் தலைவர்களையும், பெரியவர்களையும் பாவங்களுக்காக மனம் வருந்தும்படி இயேசு அழைத்தார். நேர்மையாகத் தம்மைப் பின்பற் றும்படி அன்பின் குரலெழுப்பினார். ஆனால் அவர்களோ, !தாங்கள் ஆக்கிக்கொண்ட வெளிவேடத்தில் தாங்களே மயங்கிய குருடராக இருந்தனர்.

பழைய, புதிய போர்வையின் உவமை, கிறிஸ்தவன் காலத்தின் அடையாளங்களை விளங்கிக்கொள்ள வேண்டியவன் என்ற உண்மை யைத் தெளிவாகக் கற்பிக்கிறது. திருமுழுக்கினால் நாம் பெற்ற அழைப்பு இயக்காற்றல் சக்தி உடையது. காலத்தோடு ஒவ்வாத வழக்கங்களை யும், சடங்குகளையும் கைக்கொண்டு அவற்றின்வழியாக உண்மையான தூய்மை பெற்றுவிடுவோம் என எதிர்பார்த்தல் பயனற்றது. காலத் துக்குத் தக்கதாக மீட்பின் நற்செய்தியை அவ்வக்கால மக்களுக்கு அளிப்பது எவ்வளவோ சிறந்தது இதுவே பழைய போர்வை உவமை யின் உட்கருத்தாகும்.

இதேபோன்ற பாடம் சுளகின் உவமை வாயிலாக்வும் கற்பிக்கப் பட்டுள்ளது. பிழை என்று அறிந்தபின்னரும், சில எண்ணங்களை மாற்ற மனிதன் விருப்பமில்லாதவனுக இருக்கிறுன். கிறிஸ்தவ அழைப்புக்கு இது பெருந் தடையாக அமைகிறது. தெளிவான மனச்சான்றுள்ளவ னுகக் கிறிஸ்தவன் வருங்காலத்தை எதிர்நோக்கவேண்டும். பிழையான பாசாங்குகளையும், வெற்று வெளிச்சடங்குகளையும் விட்டு விலகவேண்டி யது கிறிஸ்தவனது கடமை. எமக்குத் தேவையாவது உளமாற்றமே. செய்தியை, அர்த்தமுள்ள பொருளுள்ள வழியில் பிறருக்கு அளிப்பது எமது கிறிஸ்தவக் கடமையாகும். பழைய முறையையே கைக்கொள் ளின் அது தடையாக்வும் அமையலாம். சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டு அதைப் புனிதப்படுத்துதல் எமது அழைப்பாகும். மாறுபடும் சூழ்நிலைகளுக்கேற்ப எம்மை மாற்றியமைத்துக்கொள்ளாவிடில் — ( இசைவுபடுத்திக் கொள்ளாவிடில் ) — சமுதாயத்தைப் புனிதப்படுத் தல் முடியாத காரியமாகிவிடும்.

சகோதரத்துவம் நோன்பிருப்பதிலும் சிறந்தது. கட்டளைகளின் மகிமையிலும், உண்மையான மனமாற்றம் மேலானது. எந்தப் பழைய வழக்கத்திலும் பார்க்க இறை அன்பு உன்னதமானது. மோயீசனது தகனப் பலியிலும் கல்வாரியில் இடம்பெற்ற அன்புப் பலி உகந்தது. வெற்று அக்ங்காரம், போலித்தன்மை என்பவற்றிலும் ஒருமைப்பாடு சிறந்தது.

**தியானிப்பதற்கு :**

1. மனித இதயங்களில் இறையரசைப் பரப்புவதற்காகக் கிறிஸ் தவன் அழைக்கப்பட்டுள்ளான். எவ்வித பாகுபாடுமின்றி இறையரசைப் பரப்புவதற்குத் தயாராக இருக்கும்போதே அதில் ஈடுபட முன்வரவேண்டும். அத்துடன் அவன் விசுவா சத்தில் ஊக்கமும், திடமும் கொண்டவனுதலும் வேண்டும்.

2. பழைய வழிகளைக் கைவிட்டு, இறைவன் பக்கமாகப் புதிய அடி வைத்தலே உண்மையான உளமாற்றம்.

3. மனித சமுதாயத்தில் வாழும் தாழ்த்தப்பட்டோருடனும், ஒடுக்கப்பட்டோருடனும் பழகுதல் என் கடமை. இவ்வித அவல நிலையிலிருந்து அவர்களை மீட்க என்னுல் ஆனதைச் செய்யக் கடமைப்பட்டுள்ளேன்.

4. பிழையான கோட்பாடுகளை எடுத்துக்காட்டி அவற்றிற்கு எதி ராகச் செயல்படுதல் எமது கிறிஸ்தவக் கடமை.

5. காலத்திற்கு ஏற்ப கிறிஸ்துவின் செய்தியைப் புரிந்துகொள்ளுதலும், ஊக்குவித்தலும் இறை அரசைப் பரப்ப எமக்குத் துணை புரியும்.

விடை தருக :

1. லேவியை அழைத்த நிகழ்ச்சிக்கு (லூக். 5 : 27 — 32) தொடர்பாக உமது உள்ளத்தில் எழுந்த எண்ணங்களைக் குறிப்பிடுக.

2. பாவங்களை மன்னிக்கத் தமக்கு அதிகாரம் உண்டென்பதைக் கிறிஸ்து எவ்விதம் காட்டினார்.

3, திமிர்வாதக்காரனுக்கு நண்பர்கள் உதவியது போன்ற பணியை உமது நண்பர்களுக்கு ஆற்றக்கூடிய பல்வேறு சந்தர்ப்பங்களைக் குறிப்பிடுக.

4. தூற்றுபவனின் உவமையை இயேசு ஏன் கூறினார்?

அலகு : 11

# சட்டத்திலும் மேலான வாழ்வு

## 1. ஓய்வு நாட் பிரச்சனை : ( லூக்காஸ் 6 : 1 — 4 )

பழைய சட்டத்தை இயேசு அழிக்கவில்லை, ஆனால் அதை நிறை வேற்றினர். இருந்தும் இயேசு சட்டத்திற்கு இரண்டாம் இடமே கொடுத்தார். மனிதனின் தேவைகளுக்கே முதலிடம் கொடுத்தார். மோயீசனின் சட்டத்திற்குப் பிழையான முறையில் சட்டவல்லுனர்கள் பொருள் கொடுத்துவந்ததை அவர் விரும்பவில்லை. அவர்கள் சட்டத்தைத் தூக்கிப்பிடித்து வாழ்ந்தார்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள். அன்பும், புரிந்துகொள்ளும் மனப்பாங்கும் சட்டத்தை நுணுக்கமாக அனுசரிப்பதிலும் மேலானது என்று அவர் கற்பித்தார். உடன் வாழ்வோரைப் பரிவுணர்வுடன் நடத்தும்படி யூதத் தலைவர்களை இயேசு அழைத்தார். மனித சட்டங்களிலும் பார்க்க இறைவனின் சட்டமே மேலான மதிப்பீடு உள்ளதென இயேசு கூறினர். அற்ப களவு செய்தவர்களையும் சிறையில் இடுவது மனித சட்டத்தின்படி சரியான செயல் ஆகலாம். ஆனால் குற்றம் இழைத்தவனை இறைவன் வேறொரு கோணத்திலிருந்து பார்த்தே தீர்ப்பளிக்கிறார். மனித தேவை சட்டத்திலும் உயர்ந்தது. தனது வீட்டாரின் பசியைப் போக்குவதற்காக ஓய்வு நாளில் வேலை செய்யும் ஒருவன் சாவான பாவத்தைக் கட்டிக்கொள்ளவில்லை. சட்டம் மனிதனுக்காக ...... ஆனால் மனிதன் சட்டத்திற்காக அன்று. பிறருக்காக வாழும் இறைவனின் மனிதனே நல்ல கிறிஸ்தவன். அவன் சட்டத்தை எழுத்தெழுத்தாகக் கைக்கொள்ள வேண்டிய அடிமை அல்லன். அவன் கபடதாரி அல்லன்.

## 2. மனுமகன் : ( லூக். 6 : 1 — 5 )

தமதுபணி மனிதன் நிறுவிய நிறுவனங்களைக் கடந்ததொன்றென இயேசு தெளிவாகக் கூறினர். இறைவன் மனித சட்டங்களுக்குக் கட்டுப்பட்டவரல்லர் எனவும் அவர் படிப்பித்தார். தெய்வீகசட்டம் மனித சட்டங்களைப்போல் அல்லாது நிறைவுள்ளதென அவர் அறிவுறுத்தினர். சட்டங்கள் மனிதனுக்கேயன்றி, மனிதன் சட்டத்திற்கு அல்ல என்பதால் நீதியற்ற சட்டங்களின் சுமையை மனிதனில் திணிப்பது பிழை என்று அவர் போதித்தார். இறைவனிடமிருந்து வரும் அதிகாரத்தை மனிதனை நசுக்கப் பயன்படுத்துதல் பாவமாகும். சட்டம் மனிதனைப் பாதுகாத்து, மனித வாழ்வை வளர்க்கவேண்டும். இன்று வாழும் எமக்கு இது சிறந்த பாடமாகும். சமுதாய அநீதிகளுக்கெதிராகப்

போர் தொடுப்பதும், அது சமுதாயத்தில் இடம் பெருது தடுப்பதும் எமது கிறிஸ்தவக் கடமையாகும். இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர் ?

3. சூம்பிய கையுள்ள ஒருவன்: (லூக்காஸ் 6 : 6 — 11)

அன்று வாழ்ந்த பரிசேயரும், மறைநூல் அறிஞரும் மனித சமூகத்தை அடிமைப்படுத்த மோமீசனின் சட்டங்களை எவ்வாறு பயன்படுத்தினர் என வேதாகமத்திலிருந்து அறிகிறோம். ஓய்வுநாளன்று. மரணப்படுக்கையில் இருப்பவர்களைத் தவிர்ந்த மற்றையோர்க்குச் சிகிச்சை செய்வதே பிழை என்று அவர்கள் கருதினர். இவ்வித கபடவேடத்தை இயேசு வன்மையாகக் கண்டித்தார். சட்டத்தின் போர்வையில் மறைந்திருத்தலும், பொறுப்பிலிருந்து தப்பி ஓடுதலும் பிழை என்று இயேசு காட்டினர். என்ன நாள் என்று நோக்காது மனித நலனுக்காக உழைத்தல் எமது கடமை. எடுத்துக்காட்டாக ஞாயிறு பலிப்பூசையில் பங்குபற்றித் தன் கடமையைத் தீர்த்தபின், கிறிஸ்தவன் ஒருவன் திக்கற்ற தன் அயலானுடன் ஒழுகும் கூரையை வேய்ந்து துணைபுரிவதாகச் செல்கிறுன் எனக் கொள்வோம். இது பாவமான செயலா? இறைவன் இது அநீதியென நியாயம் வழங்குவாரா? இயேசுவின் போதனைப்படி இவ்விதம் அயலானுக்குத் துணை செய்யும் ஒருவன் கிறிஸ்தவ மதிப்பீடுகளை மதித்து நடக்கிறுன்.

> "ஓய்வு நாளிலே எது செய்வது முறை பிறருக்கு நன்மை செய்வதா? தீமை செய்வதா? உயிரைக் காப்பதா? அழிப்பதா?"
>
> (லூக். 6 : 6 — 9)

இதே வினவை இயேசு இன்று எம்மிடமும் கேட்கிறுர். எமக்கு விடுக்கப்படும் அறைகூவல் இது. இதற்கு எமது விடை என்ன? உங்கள் வாழ்க்கைக்கு :

1. இறை சட்டமும், மனித சட்டமும், மனிதனின் நலனுக்காகவே என்பதை அறிந்துகொள்க.

   அன்பு செய்பவன் சட்டத்தை நிறைவேற்றுகிறுன் என்ற புனித சின்னப்பரின் கூற்றை மையப் பொருளாகக் கொண்டு தியானிக்குக.

2. உமது சமுதாயத்தில் ஏழைக்கொரு நீதி, பணக்காரனுக்கு ஒரு நீதி என்ற முறையில் சட்டம் செயல்படுகிறதா என ஆராய்க.

3. ஓய்வு நாளில் ஓய்ந்து இருப்பது கட்டளை. ஆனால் ஓய்வு நாளிலும் ஏழைகளான அயலவர்க்கு எவ்வகையில் உதவலா மெனச் சிந்திக்குக. செயற்படுக.

4. தகுந்த உடையில்லாததால் ஞாயிறு மறைக்கல்வி வகுப்புக்கு வரமுடியாது இருக்கும் உமது வகுப்பு மாணவன் மாணவிக்கு யாது செய்வீர்.

5. சமுதாயத்தில் நிலவும் தீமைகளை ஒழிப்பதில் கிறிஸ்தவன் ஏனை யோர்க்கு வழிகாட்ட வேண்டியவன். கிறிஸ்தவனாகிய நீர் இவ்வித பணிக்கு உம்மைப் பயிற்றுதல் அவசியம்.

விடை தருக !

1. இயேசுவுக்கும் பரிசேயருக்கும் இடையில் முரண்பாடு ஏற் படக் காரணம் என்ன ?

2. லூக்காஸ் 6 : 5ஐ வாசித்து இதிலிருந்து நீர் படிக்கக்கூடிய வற்றை எழுதுக.

3. ஓய்வுநாள் மனிதனுக்கேயன்றி, மனிதன் ஓய்வுநாளுக்கன்று —என்ற தலைப்பின் கீழ் உரையாடல் ஒன்று எழுதுக.

4. நீர் இன்றைய சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவன், (லூக்காஸ் 6 : 9இல் இருந்து நீர் அறியக்கூடிய கிறிஸ்தவ மதிப்பீடுகள் எவை ?

அலகு 12

# புதிய இஸ்ராயேலரின் பண்புகள்

## 1. அப்போஸ்தலர் பன்னிருவர் : (லூக். 6 : 12 — 16)

யூதர்களின் தலைவர்கள், புதிய இஸ்ராயேலில் தலைமைத்துவத்துக்கு தகுதியற்றவர்கள் என்பதை இயேசு நன்கறிந்திருந்தார். புதிய இஸ்ராயேல் என்பது அவர் நிறுவிய திருச்சபை ஆகும். இதனால் தகுந்த புதிய தலைவர்களைத் தேர்ந்தெடுக்க இயேசு நினைத்தார். இதற்காக ஒரு முழு இரவைச் செபத்தில் செலவிட்டார். (லூக். 6 : 12) தமது சீடர்களில் பன்னிருவரைத் தெரிந்தெடுத்து அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பெயரிட்டார். அப்போஸ்தலர் என்ற சொல் அனுப்பப்பட்டவர் என்ற பொருளுடையது. இயேசுவின் பெயரால் போதிப்பதும், அவரது அதிகாரத்தால் செயல்படுவதுமே அப்போஸ்தலரின் பணியாகும்.

திருமுழுக்கும் உறுதிப்பூசுதலும் பெறும் கிறிஸ்தவன் இன்றைய சமுதாயத்தில் அப்போஸ்தலனாக விளங்க அழைக்கப்படுகிறான். புதிய இஸ்ராயேல் அல்லது திருச்சபையைப் பரவச் செய்வதிலும் அதன் வளர்ச்சியிலும் கருத்தாக உழைப்பதே அவன் கடமையாகும். இத்தகைய பணிக்குத் தாழ்ச்சி அவசியம். கிறிஸ்தவன் என்றும் உண்மையாக வாழவேண்டும். அப்போது கடவுளின் தூய ஆவியின் கருவியாக மாறுவான்,

## 2. பிணி நீங்கியோர் பலர் : (லூக். 6 : 17 — 18)

கிறிஸ்து குணமாக்கியவர்களின் தொகை எண்ணிலடங்கா. ஆனால் இவ்விதம் குணப்படுத்தியமை அனைத்தும் உள் அடிமைத்தனத்தின் விடுதலைக்கு அடையாளங்களாக விளங்கின. தம்மை முழுமையாகத் தந்தைக்கு அர்ப்பணித்துத்து வாழ்ந்தமையால் இயேசு அளப்பரிய ஆற்றல் உள்ளவராக விளங்கினர். அன்னை திருச்சபையும் மறைபரப்புப் பணிகளில் கைகொடுத்து வாழும் நாமும் இவ்வித மனமார்ந்த அர்ப்பணமும், ஆர்வமும் கொள்ள வேண்டும்.

## 3. மகிழ்வும் ஆருத்துயரும் : (லூக். 3 : 20 — 26)

சமதளத்தில் நின்று இயேசு ஆற்றிய போதனை கிறிஸ்தவ அழைப்பின் கொடுமுடிக்கு எம்மை அழைத்துச் செல்கிறது. புனித மத்தேயு 'மலைப்பொழிவு' என இதை அழைக்கிறார். இறையரசுக்காக முன் வந்து உழைப்பவர்களின் பண்புகள் இங்கு விபரிக்கப்படுகின்றன.

அ. ஏழைகளே நீங்கள் பேறுபெற்றவர்கள் ! தாழ்ச்சியும் இறை பயமும் உள்ளோர், தமது ஆற்றுமையை ஏற்றுக்கொண்டு, இறைவனில் நம்பிக்கை கொள்பவர்கள்; இறைவனின் திரு வுள்ளத்தை வாழ்பவர்கள்; இவர்கள்தான் ஏழைகள். அவர் கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் கடவுளின் அரசு அவர் களுக்குரியது.

ஆ. இப்பொழுது பசியாய் இருப்பவர்களே ! இறைவனின் திருச் சித்தத்தைக் கைக்கொள்வதற்கு ஆழ்ந்த ஏக்கம் உடையவர் களே பசியாய் இருப்போர் எனப்படுகின்றனர். அவர்கள் பேறுபெற்றவர்கள். ஏனெனில் அவர்கள் இறைவனின் உள் ளத்தைப் புரிந்து அதன்படி நடக்கும் வாய்ப்பைப் பெறுகின் றனர். கடவுள் அவர்களுக்குத் துணைபுரிகிறார்.

இ. இப்பொழுது அழுபவர்களே : வாழ்க்கை தரும் கவலைகள், தொல்லைகள் மத்தியிலும், இறைவனை நோக்குபவர்கள்...... இறைவனில் நிறைவாக்கத்தை அவர்கள் காண்பார்கள். ஆத லால் பேறுபெற்றவர்கள்.

ஈ. மனுமகனுக்காக வருந்துபவர்கள் ! கிறிஸ்துவுக்காகப் பிறரின் வெறுப்பைச் சம்பாதித்துக் கவலைப்படுபவர்கள்.... இவர்களை இறைவன் இறைவாக்கினராக முடிசூட்டுவார். கிறிஸ்துவுக் காக வருந்துவதற்குத் தகுதியுள்ளவராகுதல் இவ்வுலகில் ஒரு வனுக்குக் கிடைக்கும் பெரும் பேறுகும்.

மேற்போந்த பண்புகளைக் கொள்ளாத எவரும் இறையரசுக்குத் தகுதியற்றோர் ஆவார். அவர்கள் உலகப்போக்குடையவர்கள், உலகச் சார்புடையவர்கள் அவர்களுக்கு என்ன கிட்டும் கீழே பாருங்கள் !

அ. பணக்காரர்களே உங்களுக்கு ஐயோ கேடு !

செல்வங்களுக்கு அடிமையானவன் அறிவிலி. அவனுக்கு ஆன் மீக மதிப்பீடுகள் இல்லை. பொருளே தஞ்சமென வாழும் சடப் பொருள் வாதி. இவ்வுலக செல்வங்களைப் பெறக்கூடும். ஆனால் இறையரசை அவன் இழந்துவிடுவான்.

ஆ. இப்பொழுது திருப்தியாய் இருப்பவர்களே உங்களுக்கு ஐயோ கேடு!

உண்பதிலும், குடிப்பதிலும், உடல் இச்சைகளிலும் இன்பம் காண்பவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். தங்கள் ஊன் இச்சை களுக்கு அடிமையாக வாழும் இவர்கள் உடற் செல்வங்க ளைப் பெறக்கூடும். ஆனால் முடிவில்லாப் பெருவாழ்வை இழந்துவிடுவார்கள்.

இ. இப்பொழுது சிரிப்பவர்களே உங்களுக்கு ஐயோ கேடு :

உலக இன்பங்களுக்காக அலைந்து, பொருட் செல்வ இன்பங்களில் திருப்திகாண்பவர்கள் பேறு அற்றோர். மனம் வருந்தவே அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. மனமாற்றம் பெருது அவர்கள் பாவத்தில் மடிவர். அவர்கள் இறையரசை இழப்பார்கள்.

ஈ. மனிதர் எல்லாரும் உங்களைப் புகழும்போது உங்களுக்கு ஐயோ கேடு!

மனிதர்களின் புகழ்ச்சியைப் பெற்றுத் தன்னிறைவு கொள்பவர்களுக்கு அகங்காரமும், தற்பெருமையும் உண்டாகும். பிறர் தம்மைப் புகழவேண்டும் என்ற எண்ணத்துடன் வாழும் இவர்கள் புகழ்ச்சிக்கு அடிமைளாகிவிடுவர். இவர்களின் நிலை இரங்குதற்குரியது. போலி இறைவாக்கினர் சென்ற இடத்திற்கே இவர்களும் செல்வர். கிறிஸ்துவை நிராகரித்துவாழும் இவர்களுக்கு இறையரசு எட்டாக் கனியாகிவிடும்.

இறைவனால் படைக்கப்பட்ட உலகு அழகானது, நன்மைமிக்கது. எமது வாழ்வில் சுகத்திற்குத் தேவையானவை தனிச்சொத்துரிமை நீதியானது. மகிழ்ச்சி, இறைவன் மனிதனுக்குத் தரும் கொடையே. எனினும் இவற்றை எந்த அளவில் மதிக்கவேண்டும் என்பதற்கு ஓர் எல்லையுண்டு; அதற்கு நாம் அளிக்கவேண்டிய இடம் உண்டு. இதை விடுத்து அவற்றையே இறைவனாகக் கருதி வாழ்பவன் அவற்றிற்கு அடிமையாகிறான். அனைத்திலும் மேலான இன்பமும், இறுதி நிறைவாக்கமும் இறைவனிடத்தில் மாத்திரம் உள்ளது. அதிசிறந்த நல்லுரையான "மலைப்பொழிவு" வாயிலாக நாம் அறியும் பேருண்மை என்ன? கிறிஸ்தவன் இறையரசுக்கு முதலிடம் அளித்துத் தேவையான புண்ணியங்களை வாழ்க்கையில் கொள்பவனே உண்மையான கிறிஸ்தவன்.

தீர்மானங்கள் :

1. இறைவனது அழைப்பை உணர்ந்து அதற்குத்தக செயற்பட என்னால் இயன்றவரை முயற்சிப்பேன்.

2. கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களின் வாழ்வை ஆய்ந்து, உண்மையான அப்போஸ்தலனின் பண்புகள் எவை என்று தீர்மானிப்பேன்.

3. தற்பெருமையால் பிறரை அடக்கி வாழாதிருப்பேன்.

4. எனது சொந்த அனுபவங்களைக்கொண்டு இறைவனது திருவுளத்தைத் தேடுவேன்.

5. தூய ஆவி தரும் ஏவுதல்களுக்குச் செவிமடுத்து, இறைவனின் நிறைவாக்கத்தை அடைவேன்.

வினட தருக !

1. அப்போஸ்தலனின் பண்புகள் எவை ?

2. பொருளாசைகொண்டு, உலக அரசை நாடி உழைப்போரின் பண்புகளையும், இறையரசை நாடி உழைப்பவர்களின் பண்பு களையும் அட்டவணைப்படுத்துக,

3. ( லூக்காஸ் 6 : 23)ஐ வாசித்து வாசித்தவற்றை எழுதுக.

4. சம்தளத்தில் இயேசு ஆற்றிய மலைப்பொழிவில் கூறப்பட்டுள் ளதுபோல பேறு அடைய நீர் மேற்கொள்ளக்கூடிய 4 நடவ டிக்கைகளைக் குறிப்பிடுக.

அலகு : 13

# இறை அரசைச் சார்ந்தோரின் கடமைகள்

## 1. கிறிஸ்தவ வாழ்வின் பண்புகள் : (லூக்காஸ் 6 : 27 — 42)

இறையரசுக்குத் தகுதியானவர் யார் ? தகுதியற்றவர் யார் ? இந்த வினவுக்கு விடையளித்த இயேசு, இறையரசின் உறுப்பினர் கடமைகள் பற்றி இங்கு விளக்குகிறார். உலகப் போக்குடையோர் கொண்டிராத சில பண்புகள், கிறிஸ்தவ வாழ்வுக்கு மிக இன்றியமையாதவை என்றார் இயேசு. இயேசு அன்பு, கருணை, தன்நல மறுப்பு என்பவற்றின் மகத்துவத்தை வற்புறுத்துகிறார். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வு இன்னும்மேலான சிலவற்றை — மதிப்பீடுகளை வேண்டி நிற்கிறதென்பதை இதிலிருந்து நாம் அறிகிறோம்.

| சாதாரண மனித மதிப்பீடுகள் | கிறிஸ்தவ மதிப்பீடுகள் |
|---|---|
| 1. எம்மை அன்பு செய்வோரை அன்பு செல்தல் | எம் பகைவரையும் அன்பு செய்தல் |
| 2. எம்மை வெறுப்போரை வெறுத்தல் | எம்மை வெறுப்போர்க்கு நன்மை செய்தல் |
| 3. எம்மைத் தூற்றுபவர்களைத் தூற்றல் | எம்மைத் தூற்றுவோர்க்கு ஆசி கூறல் |
| 4. எம்மை ஏளனம் செய்பவர்களை ஏள்னம் செய்தல் | எம்மை ஏளனம் செய்வோருக்காக வேண்டுதல் |
| 5. பழிக்குப் பழி வாங்குதல் | எமக்குக் குற்றம் செய்தவர்களை மன்னித்தல் |
| 6. திருடனைப் பிடித்துக் கொடுத்தல் | தேவையானோர்க்குத்தாராளமாக உதவிசெய்தல் |
| 7. நாம் விரும்புபவர்களுக்கு உதவுதல் | அனைவர்க்கும் உதவுதல் |
| 8. பிரதி உபகாரம் கிடைக்கும் என்ற எண்ணத்துடன் கொடுத்தல் | பிரதிபலன் நோக்காது கொடுத்தல் |
| 9. பிறரிடம் எதிர்பாராத எதையும் செய்யாதிருத்தல் | பிறர் எமக்குச் செய்யவேண்டுமெனவிரும்புபவற்றை நாம் பிறருக்குச் செய்தல் |

கிறிஸ்தவ மதிப்பீடுகள், உலக மதிப்பீடுகளுட்கு எதிரானவை; வேறுபட்டவை, இதனுல் கிறிஸ்தவ மதிப்பீடுகளேச் செயற்படுத்தல் சிரமமே. இம் மதிப்பீடுகளேக் கைக்கொள்பவர்கள் பழிச்சொல் கேட்பர், பிறரால் இகழவும்படுவர். தாங்கமுடியாத சுமைகளே உண்மைக் கிறிஸ்தவன் எதிர்பார்க்கலாம். ஆனுல் மீட்பரின் அரசில் உறுப்பினராக உழைக்க விரும்புபவன் பகைவரை மன்னித்து அன்புசெய்வான். பிறரின் குற்றங்களேப் பொருட்படுத்தான்; அநீதியாக நடப்பவர்களுக்காக வேண்டுவான்; பிறரை அநீதியாகத் தீர்ப்பிடமாட்டான்; பொய்க் குற்றம் சாட்டாது இருப்பான். இவை மட்டுமன்றி பிறர் குற்றங் காணுமுன் தன் குற்றம் காணும் செம்மலாக வாழ்வான், பழிச்சொல் கூருதவன் அவன். ஆசிரியர்களேயும், முதியோர்களேயும் மதிப்பவன். நல்லுரைகளே நயமாகக் கேட்டு ஒழுகுபவன்; உதவி வேண்டியவர்களேத் தேடிச்சென்று கேட்காமலே உதவிபுரிவான். சாதாரண மதிப்பீடுகளே விட்டு தான் ஆற்றக்கூடிய சிறு பணியை மென்மேலும் செய்ய முனேபவன். இவ்வித வாழ்க்கைக்கு எம்மை அழைக்கும் இயேசு எம்மிடமிருந்து எதிர்பார்ப்பவை எவை எனப் பார்ப்போம்.

1. " குருடனுக்குக் குருடன் வழிகாட்ட முடியுமா ? அவ்விதம் நடக்க முயன்முல் இருவரும் குழியில் விழமாட்டார்களா ?"
( லூக்காஸ் 6 : 39 )

2. " எந்தச் சீடனும் குருவுக்கு மேற்பட்டவனல்லன், தேர்ச்சிபெற்ற எவனும் தன் குருவைப் போன்றிருப்பான்." ( லூக். 6 : 40 )

3. ,, உன்கண்ணிலுள்ள விட்டத்தைக் கவனியாது உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பைப் பார்ப்பதேன் ?,'

மேற்போந்த உவமைகளிலிருந்து பல்வேறு பாடங்களே நாம் அறியலாம். கிறிஸ்துவை மாதிரியாகக்கொண்டு வாழ்வதன்வழியாகவே கிறிஸ்தவன், பிறரை இறையரசுக்கு இட்டுச் செல்லும் தகைமையைப் பெறுவான். பிழையான கோட்பாடுகளினுல் மற்றவர்களேத் தவமுன நெறியில் செலுத்தாது வாழும் கடப்பாட்டை அவன் கொண்டுள்ளான். தன் பிழைகளே அறியமுடியாத கண்மூடியாக அவன் வாழக்கூடாது. திருத்தவேண்டும் என்ற நல் எண்ணத்துடன், அன்பினுல் உந்தப்பட்டு, தேவை ஏற்படின் பிறரைக் குற்றம் சாட்டவேண்டிய கடமையும் அவனுக்குண்டு. தனது பணிக்கெனத் தன்னே முழுமையாக அர்ப்பணித்து, அயலாரின் நிறைந்த அன்புடன் வாழவேண்டும். தான் பெற்றுள்ள செல்வம், அறிவு, சக்தி, நேரம் அனேத்தையும் பிறரின் நலனுக்காகத் தியாகம்செய்ய அவன் தயாராக இருக்கவேண்டும்.

## 3. மரத்தை அறிவது அதன் கனியால்... :

( லூக்காஸ் 6 : 43 — 45 )

நீதியான வாழ்வை மதிப்பிடுவது எங்ஙனம்? இதை நாம் பிறர் அறியத் துணையாக நல்லதோர் உவமையை ( லூக். 6 : 43 — 45 ) இயேசு கூறினர். பிறரில் குற்றம்காணும் திறமையைக்கொண்டு கிறிஸ் தவர்களின் நடத்தையைக் கணிக்க முடியாது. அவனது நல்ல நடத் தையைக்கொண்டே அவனை மதிப்பிடலாம். நல்ல மனதுள்ளவன் நல்ல கனி தரும் மரம் போன்றவன். கெட்ட இதயமுள்ளவனே கெட்ட கனி கொடுக்கும் மரத்துக்கு ஒப்பாவான். இதயத்தின் வாயிலாக விளங்குவது வாய். இதனால் இதய நிறைவினல் வாய் பேசுகிறது என லாம். நீதிமான் இறைவன் முன் மதிக்கப்பெற்றவன். அவனது நோக்கு நல்லவையாதலால் அவனிலிருந்து நன்மை வருகிறது. தீயவன் தீயதி னின்று தியவற்றை உண்டுபண்ணுகிறன். இவ்விதம் எம் தூய்மைக் கோ அன்றி பாவத்துக்கோ எமது கருத்து, உணர்வு, சொல் என்பன காரணமாகின்றன.

## 3. அடித்தளம் பாறையிலா, மண்ணிலா?

( லூக்காஸ் 6 : 46 — 49 )

கிறிஸ்துவின் போதகங்களில் உள்ளதுபோல இறைவனின் திரு வுள்ளத்தின்படி நடப்பவர் — கிறிஸ்தவன் பெயரளவில் மட்டும் கிறிஸ் தவன் ஆக இல்லாதவர்கள். அவர்கள் இறைவனின் சித்தத்திற்கேற் பத் தமது வாழ்வைக் கிறிஸ்தவ மயமாக்குவதில் கண்ணும் கருத்து மாய் இருப்பார்கள். இரு அடித்தளம்பற்றிய உவமையில் இது தெளி வாக்கப்படுகிறது.

கிறிஸ்துவை உண்மையாகப் பின் செல்பவன் ஆழத்தோண்டி, பாறைமீது அடித்தளம் அமைத்து வீடு கட்டுபவனுக்கு ஒப்பாகிறன். இவ்வித மனிதன் கிறிஸ்தவத்துக்கு எதிரான சத்திகளால் அலைக்கழிக் கப்படான் ; அழியமாட்டான். சாத்தானின் தீமைகளால் அவனது ஆன்ம வாழ்வு என்றுமே சிதைவுறுது. பெயரளவில் கிறிஸ்தவனுக இருப்பவன் மணல் தரையில் வீடு கட்டுபவனை ஒத்தவன். இவன் ஆழ மில்லாதவன், ஆன்மீக வலுக்குறைந்தவன். அலகையின் தாக்கத்தால், அதன் பிடிக்குள் இலகுவாக அகப்படக்கூடியவன்.

இந்த உவமையில் இருந்து, எமது வாழ்வின் அடிப்படை அல்லது அத்திவாரமாகக் கிறிஸ்துவாகிய பாறையைக் கொள்ளவேண்டுமென்று அறிகிறேம். கிறிஸ்துவின் ஆளுமை நிறைவுள்ளது; அலகையால் வெல்

லப்பட முடியாத ஆளுமை அது. கிறிஸ்துவின் ஆளுமைமேல் சாத்தானுக்கு அதிகாரம் இல்லை. ஆனால்... நாம் உலகஞ் சார்ந்த கொள்கைகளுடன் மட்டும் திருப்தி உள்ளவர்களாக, ஆண்டவரே ஆண்டவரே என்று வாய்ச்சொல்லாளர்களாக இருப்பின் நாம் கிறிஸ்தவர்களாக (அல்லது இறை அரசின் உறுப்பினராக) மாட்டோம். கிறிஸ்துவின் ஆளுமையே உண்மைக் கிறிஸ்தவ வாழ்வின் உறுதியான அடித்தளமாகும்.

**விடை தருக :**

1. லூக். 6 : 37ஐ வாசித்து அதில் காணும் அறங்களை எழுதுக.
2. பகைவர்களுக்கு அன்பு காட்டும்படி கிறிஸ்து எமக்கு ஏன் கட்டளையிட்டார் ?
3. லூக். 6 : 31ஐ எழுதுக. வகுப்பில் இவ் அறிவுரையை எப்படிச் செயற்படுத்துவீர் ?
4. லூக். 6 : 40ஐ வாசித்து, மாணவன் ஆசிரியரை எப்படிப் பின்பற்றவேண்டும் என எழுதுக.
5. லூக். 6 : 43 — 45இல் கூறப்பட்டுள்ள எண்ணங்களை வெளிக்காட்டக்கூடிய ஒரு கதை எழுதுக.
6. சமுதாயத்தில் இன்று அருகிக் காணப்படும் (மறைந்து போய்க்கொண்டிருக்கிற) மூன்று கிறிஸ்தவ மதிப்பீடுகளை எழுதுக. இவைபற்றி உம்து கடமை என்ன ?

JAFFNA 756

அலகு 14:

# மீட்பு அனைவர்க்கும் பொதுவானது

(எல்லாரும் மீட்புப் பெற.........)

## 1. நூற்றுவர் தலைவனின் ஊழியன் : (லூக். 7 : 1 — 10)

இறைமகன் கிறிஸ்து அனைத்துலக மக்களின் மீட்புக்காகவே இவ்வுலகுக்கு வந்தார். எல்லா இன மக்களும் இறையரசில் பங்குகொள்ள வேண்டும் என்பதே அவர் திட்டம். எனவே (அவர் முதலில் யூதர்கள் மத்தியில் தொடங்கிய நற்பணி புற இனத்தார்க்கும் பரந்து சென்றது.) அவர் முதலில் யூதர்களுக்கு அளித்த நற்செய்தி பின்னர் புற இனத்தாரையும் கவர்ந்தது. புறவினத்தான் ஒருவனுக்கு இயேசு உதவ வந்த முதல் நிகழ்ச்சியாக லூக்காஸ் இதைக் குறிப்பிடுகிறார். உரோமானியனான நூற்றுவர் தலைவனது (செந்தூரியனது) அன்பையும், விசுவாசத்தையும் இயேசு இங்கு பாராட்டுகிறார்.

"இஸ்ராயேல் மக்களிடையே இத்துணை விசுவாசத்தை
நான் கண்டதில்லை என உங்களுக்குச் சொல்லுகிறேன்."

(லூக். 7 : 9)

இந்த நூற்றுவர் தலைவன் புற இனத்தானாக இருந்தும் நீதிமானாக இருந்தான். அவன் யூத இனத்தாரின் நலனுக்கான பணிகளில் ஈடுபட்டு உழைத்தான். அவர்களுக்காகச் செபக்கூடம் ஒன்றையே அமைத்திருந்தான். இதனால் யூத மூப்பர்கள் நூற்றுவர் தலைவனை மதித்து வந்தனர்; நட்பாக்வும் பழகினர். மூப்பர்கள் இயேசுவிடம் அவனுக்கு உதவும்படி பரிந்து பேசினர். சாதாரணமாக அந் நாட்களில் இருந்த உரோமானிய அதிகாரிகள் தம் ஊழியரைக் கொடுமையாக நடத்தினார்கள்; மிகவும் கண்டிப்பாகவே அவர்களுடன் பழகினார்கள். ஆனால் இந்த நூற்றுவர் தலைவன் மற்றையோர் போன்றவனல்லன். அவன் தனது ஊழியனை உண்மையாகவே அன்புசெய்து வந்தான். இதனால் அருஞ்செயல் வழியாக எனினும் நூற்றுவர் தலைவனின் ஊழியனைக் குணமாக்கியதில் வியப்பில்லை.

நற்பண்புகள் நிறைந்த நூற்றுவர் தலைவன் போன்ற பலர் இன்றும் எம் சமுதாயத்தில் உளர். அவர்களது நற்குணங்களை மதித்தலும், மனித மதிப்பீடுகளை வளர்ப்பதில் அவர்களுக்கு உதவுதலும் எமது கடமையாகும்.

**2. கைம்பெண் ஆற்றாது அழுத கண்ணீர் :**

( லூக்காஸ் 7 : 11 — 12 )

லூக்காஸ் தமது நற்செய்தியை சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர்க்காகவும், வாழ்வின் வாய்ப்புகளை இழந்தோர்க்காகவும் எழுதினார். அவளது ஒரே மகனின் இறப்பினால் நயீம் ஊர் விதவை செய்வது இன்னதென்று அறியாது திகைத்தாள். உழைத்துக்கொடுத்த ஒரே மகனின் பிரிவு, அவளைத் துயரத்தில் ஆழ்த்தியது. அவளுக்கு உதவுவார் யார் ? பாவம்...... இயேசு அவளிடத்தில் கருணைகொண்டார். எவரும் கேட்காமலே இயேசு அருஞ்செயல் ( புதுமை ) ஒன்றை நிறைவேற்றினார். இறந்த உடலைத் தொடுவதை 'துடக்கு' என்று யூதர்கள் கருதிவந்தனர். ஆனால் இயேசு இவ்வித சடங்காசாரங்களுக்கு அணுவளவும் மதிப்பளிக்கவில்லை. தம்மை மற்றவர்கள் பார்க்கிறார்களே என்றும் அஞ்சவில்லை. அவர் பாடையைத் தொட்டு, இறந்த இளைஞனைப் பார்த்து,

" இளைஞனே, உனக்கு நான் சொல்லுகிறேன் எழுந்திரு என்றார்."

இறந்தவன் எழுந்திருந்து பேசத் தொடங்கினான். அவனை இயேசு தாயிடம் ஒப்படைத்தார். ஒரு அபலைப்பெண் சிந்தும் கண்ணீர் இறைவன்முன் மதிப்புள்ளது.

கிறிஸ்துவின் வழி செல்பவர்களாகிய நாம் பிறர் உதவி கோராமல் இருக்கும்போதுகூட உதவவேண்டும். நாம் வெறும் சடங்காசாரங்களை அல்ல, மனித உயிரை மதித்து நடக்கும் கடப்பாடுடையவர்கள். நாம் செய்யவேண்டியவற்றைச் செய்ய வேண்டும். பிறர் என்ன சொல்வார்களோ என்று தயங்கக்கூடாது. ஏழை எளியோர், துன்பம் படுவோர், அநாதரவான பெண்கள் அவர்கள் யார், எவர் என்று பாராது எங்கு கண்டாலும் அவர்களுக்கு உதவுவேன்.

**3. மீட்பர் நீர்தாமோ ?** ( லூக்காஸ் 7 : 18 — 23 )

சாக்கடலின் கீழ்ப்புறத்தில் மக்கேரியாஸ் என்னும் பழைய கோட்டை அமைந்திருந்தது. ஏரோது அந்திப்பாஸ் இதை ஒரு சிறைச் சாலையாக மாற்றி அமைத்திருந்தான். ஆழமான இருண்ட இந்தச் சிறைச்சாலையில் இருந்த நிலவறையில் மனிதன் ஒருவன் தனிமையாக் நடந்து கொண்டிருந்தான். அந்திப்பாசின் குற்றங்களை எடுத்துக்கூறியதற்காக அம் மனிதன் சிறைவாசம் அனுபவிக்க நேரிட்டது. மீட்பரின் முன்னோடியாக இருக்க அவர் அழைக்கப்பட்டார். தமது கடமையே கண்ணாக வாழ்ந்தவர். கடந்த காலத்தைக்கொண்டு வருங்

காலத்தை விளக்க அவர் முயன்றார். தமது சீடர்கள் இருவரைத் தன் மைத்துனன் முறையுள்ள இயேசுவிடம் அனுப்பி இருந்தார். அவர்கள் திரும்பிவரும்வரை ஆவலோடு அவர் எதிர்பார்த்திருந்தார். இந்த இரு சீடர்களும் இயேசுவிடம் சென்று, அவரிடம் ஒரு வினவை உசாவினர்.

" வரப்போகிறவர் நீர்தாமோ ? வேறொருவரை எதிர்பார்க்க வேண்டுமோ ?" ( லூக்காஸ் 7 : 20 )

இவ் வினவுக்கு விடையளித்த இயேசு வந்தவர்களிடம் திருமுழுக்கு அருளப்பரை மீட்பரென்றோ அன்றி அவரது பகைவர்களை நிர்மூலமாக்குவார் என்றோ கூறவில்லை. பதிலாகத் தமது பணி இன்னதென அவர்களுக்குக் காட்டினார். இயேசு நோயாளரைக் குணமாக்கினார் ; பேய்களை ஓட்டினார் ; அந்தகருக்குப் பார்வை அளித்தார். இவ்விதம் உயிருள்ள சான்று அளித்தபின் இவ்விதம் கூறுவார்.

( காண்க: லூக். 7 : 22 — 23)

தெய்வீகத்தையோ அல்லது தெய்வீகச் செயல்களையோ புரிந்து கொள்ளுதல் சிரமமானது. இறைவனது திட்டம் மனிதனது திட்டத்திலும் வேறுபட்டதாய் இருப்பதே இதற்குக் காரணம். உலக வெற்றிகள் இறைவனுடையதன்று. அருளப்பரின் சீடர்க்கு இயேசு அளித்த விடையில் இரண்டு முக்கிய பங்குகளை நாம் காண்கிறோம். தமது போதனைகளையும், பணிகளையும் இயேசு சுட்டிக்காட்டி, தமது புதுமைகள் இறையரசின் அடையாளங்களாக இருப்பதாகக் காட்டினார். இச்செயல்கள் தமக்குச் சான்றாக அமைவதையும் எடுத்துக் கூறினார். இத்துடன் தமது போதனைகள் தம் தெய்வீகத்தையும் எடுத்துக்காட்டுவதாகவும் கூறினார்,

" எளியவர்க்கு நற்செய்தி அறிவிக்கப்படுகிறது." ( லூக். 7 : 22 )

ஏழை எளியவர்க்கு நற்செய்தி போதிக்கப்படுதல் மீட்பருக்கு ஒரு சிறப்பு அடையாளமாக அமைந்திருந்தது. யூத மறைநூலில் இது சிறப்பாக எடுத்துக்காட்டப்பட்டு இருந்தது. இதனால் திருமுழுக்கு அருளப்பரின் சீடர்கள் இந்த அடையாளத்தைக் கண்டு, இயேசு மீட்பரென விசுவசித்தனர். இயேசுவைப் பின்செல்ல அவர்கள் விழைந்தனர். இதற்காகவே திருமுழுக்கு அருளப்பர் தம் சீடர்களை இயேசுவிடம் அனுப்பியிருந்தார்.

**உங்கள் வாழ்க்கைக்கு :**

1. பிற மறைகளைப் பின்பற்றுபவர்களிடத்தில் உள்ள மனித மதிப்பீடுகளையும், நம்பிக்கையையும் பாராட்டப் பழகுக.

2. இன்றைய சமுதாயத்தில் வாழும் பலர் நயீம் ஊர் விதவை போன்று வாழ்கின்றனர். அவர்கள் அனாதைகள்; தள்ளிவைக்கப்பட்டவர்கள். அவர்களுக்குப் பணி செய்ய முன்வருக.

3. இறையரசின் இயல்புகளைச் சிந்திக்கவும். இதற்காக உமது பெற்றோருடனும், முதியோருடனும் கலந்துரையாடுக.

4. அன்பு, இரக்கம், பரிவு, ஏற்று வாழும் தன்மை, அமைதி, நீதி என்பவற்றை உமது பள்ளி, வீடு, கிராமம், நகரம் இவற்றில் உருவாக்க உம்மால் ஆனதைச் செய்ய முயல்க.

விடை எழுதுக :

1. பிற மறைகளைச் சார்ந்த எனது சக மாணவர்களை ஏற்று, மதித்து வாழப் பயில்வேன். அவர்களுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்வேன். — இத் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

2. லூக்காஸ் 7 : 6 — 8ஐ வாசித்து, அந்த நூற்றுவர் தலைவரின் விசுவாசமும், நன்மைத்தனமும் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளன என்று காட்டுக.

3. பள்ளியில் நல்ல சூழ்நிலை நிலவக் கைகொடுத்து உதவுவேன் — இந்தக் குறிக்கோளையடைய நீர் செய்யக்கூடிய 5 செயல் முறைகளைக் குறிப்பிடுக.

4. கிறிஸ்தவனல்லாத நண்பனுக்கு மீட்பரை அறிமுகம் செய்து ஒரு கடிதம் எழுதுக.

அலகு : 15

# புகழ்ச்சியும் மன்னிப்பும்

## 1. இறைவன் புகழ்ந்த மனிதன் : (லூக்காஸ் 7 : 24 — 37)

திருமுழுக்கு அருளப்பர் இறைவாக்கினரில் மேலான இறைவாக்கினர் ஆவார். வரவிருக்கிருரென அறிவிக்கப்பட்ட ஒரே இறை வாக்கினரும் அவரே. அவர் ஆழ்ந்த விசுவாசமும், அஞ்சா நெஞ்சமும், அடக்கமான வாழ்வும் உள்ளவராக வாழ்ந்தார். இந்த நல்ல பண்புகளால் தம்து ஆன்ம வாழ்வில் ஆழமுள்ளவராகவிளங்கினர். தன்னலம் மறந்து, தவவாழ்வை மேற்கொண்டு வாழ்ந்ததினுல் புனிதத்துவத்தில் ஈடு இணையற்றவராக விளங்கினர். இதனுல் மீட்பரின் முன்னேடியாக இறைவன் அவரை அழைத்ததில் எவ்வித வியப்புமில்லே.

திருமுழுக்கு அருளப்பரின் பிறப்பே ஓர் அருஞ்செயலாக அமைந்ததை அறிவீர்கள். திருமுழுக்கு அருளப்பரைப்பற்றிய பேச்சு எழுந்த போது இயேசு அவர் காற்றில் அசைந்தாடும் நாணல் போன்றவர் அல்லர் என்ருர். இன்னும் அதிகார வேட்கையும், அவாவும் உள்ள உலக மனிதரும் அல்லர் அவர் என்று அவரைப் புகழ்ந்து கூறினுர்.

> "நான் உங்களுக்குச் சொல்கிறேன். பெண்களிடம் பிறந்தவர்களுக்குள் அருளப்பருக்கு மேலானவர் யாருமில்லே."
>
> (அருளப்பர் 7 : 28)

இயேசு அவர்களிடம் எதைப் பார்க்கப் போனீர்கள் என மும்முறை கேட்டார். யோர்தான் நதிக்கரைக்கு அவர்கள் சென்றது அருஞ் செயல்களேக் காணும் நோக்குடன் ஆகும். இதுதான் அவர்களது பிழை. இறைவனின் சித்தத்தை அறியும் எண்ணம் அவர்களுக்கிருக்கவில்லே. அவர்கள் அருஞ் செயல்களே ஆற்றுவிக்கும் எண்ணத்துடனேயே அருளப்பரை நாடிச் சென்றனர். இறைவனின் செய்தியைக் கேட்கவேண்டுமென்ற ஆவலோ ஈடுபாடோ அவர்களுக்கு இருக்கவில்லே. அருளப்பரின் பெரும் புண்ணியங்களேக் கைக்கொள்ளும் எண்ணத்துடன் அவர்கள் அங்கு செல்லவில்லே. அருளப்பரின் விசுவாசத்தைக் கண்ணுற்ற அவர்கள் அவன் ஒரு பேய்பிடித்தவன் எனக் கேலியும் செய்தனர். ஆனுல் அவர்களின் கொள்கை பிழை என இயேசு சுட்டிக்காட்டினுர். அருளப்பரின் செயல்களேப் பாராட்டியும், பரிசேயரைக் கண்-

டித்தும், தேவஞானம் சரியென்று அதை ஏற்றுக்கொண்ட மக்கள் அனைவராலும் விளங்கிற்று என்று கூறினர். ( லூக். 7 : 35 )

## 2. அவளோ பாவி — ஆனால் மன்னிப்புப் பெற்றாள் :

( லூக். 7 : 36 — 50 )

மீட்பின் மறைபொருளின் அதி ஆழத்திற்கு எம்மை இட்டுச் செல்லும் நிகழ்ச்சியாக இது அமைகிறது. பரிசேயனான சீமோன், இயேசு உண்மையில் இறைவாக்கினர் தானோ என அறிய ஆவலாக இருந்தான். இயேசுவைப்பற்றி நல்ல எண்ணங்கள் உடையவனாக அவன் இருந்திருக்கலாம். பாவியான அந்தப் பெண், பரிசேயனான சீமோன் மறந்துபோயிருந்த வரவேற்பு உபசாரங்களை நிறைவேற்றினாள். அவள் இயேசுவின் பாதங்களைக் கழுவி, தலையில் பரிமள எண்ணெயும் பூசினாள். இந்தச் சம்பவத்தை இயேசு பயன்படுத்தி ஓர் உவமை வாயிலாக பாவியான பெண்ணின் விசுவாசத்தையும், மனம் வருந்துதலையும், அன்பையும் எடுத்துக்காட்ட விரும்பினர். சீமோனின் தப்பபிப்பிராயத்தைப் போக்க இச் சந்தர்ப்பத்தையும் பயன்படுத்துகிறார்

"இவளைப் பார்த்தீரா ?" என சீமோனிடம் இயேசு கேட்ட கேள்வி வியப்புக்குரியதொன்று.

சீமோன் ஒரு பாவியை, ஒழுக்கங்கெட்ட ஒரு பெண்ணைக் கண்டான். ஆனால் இயேசுவோ மனம் வருந்தும் ஒரு நல்ல இதயத்தைக் கண்டார். புரிந்துகொள்ளவேண்டும் என எதிர்பார்த்த நல்லிதயம் படைத்தவர்களை, மன்னிப்புக்காகவும் — அன்புக்காகவும் ஏங்கிய இறைவனின் பிள்ளையை இயேசு பார்த்தார். சீமோனின் உள்ளம் வெறுப்பினாலும் அமைதியின்மையாலும் நிறைந்திருந்தது. மீட்பரான இயேசுவின் இதயமோ கருணை வழிந்தோடும் ஊற்றாக இருந்தது. உண்மை அன்பும், பரிவும் இறைவனிலிருந்து மனிதனுக்குப் பாய்கிறது. மனிதனிலிருந்து மனிதனுக்கல்ல .. என்பதற்கு இந் நிகழ்ச்சி சிறந்த எடுத்துக்காட்டாக அமைகிறது. தன் பாவச் செயல்களுக்குப் போலி நியாயம் காட்டி வாழ்பவன் இறைவனிடம் இருந்து பிரிந்து செல்கிறான். தன் பாவங்களுக்கு உளம் வருந்தும் பாவியோ இறைவனை அண்டிச் செல்கிறான்.

நான் உமக்குச் சொல்வதாவது :

"அவள் செய்த பல பாவங்கள் மன்னிக்கப்பட்டன.
அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று."

உளம் வருந்துதலுக்குக் காரணமாய் இருப்பது அன்பு. பாவத்துக்கு வழியாய் இருப்பது பகைமை. தனது ஆற்றல்களையும் திறமைகளையும் பாவி தீமையை உற்பத்தியாக்கப் பயன்படுத்துகிறுன். ஆனுல் மனமாற்றம் பெற்றபின் இறைவனின் பணிக்காக அவற்றை நெறிப்படுத்துகிறுன். பாவியான பெண் செய்தது இதுதான். சீமோனுக்கு இது நல்லதொரு பாடமாக அமைந்தது. அன்புக்காக மனித இதயங்களைத் திறந்து, பாவங்களுக்காக மனம் வருந்தச் செய்யவே மீட்பர் இவ்வுலகுக்கு வந்தார். ஆனுல் இதை வலுக்கட்டாயத்தினுல் வற்புறுத்திச் செய்ய அவர் விரும்பவில்லை. இறைவன் மனிதனது சுதந்திரத்தை மதிப்பவர். இதனுலேதான் எமக்கு ஒன்றைத் தேர்ந்தெடுக்க அல்லது விட மனச் சுயாதீனத்தை அவர் தந்துள்ளார். இதை விளங்குவதற்கு, மனிதன் தன்னைத் தாழ்த்த வேண்டும். தன் பாவங்களை ஏற்றுக்கொண்டு .. மன்னிப்பு வேண்டி இறைவனிடம் செல்லவேண்டும். இறைவனைச் சோதித்தல் மனிதனின் வேலையல்ல. ஆனுல் இறைவனிடமிருந்து உண்மை அன்பு எது என்பதை அறியவேண்டிய கடமை அவனுக்குண்டு.

" உன் விசுவாசம் உன்னை மீட்டது. அமைதியாகப்போ. " நேற்றும் இன்று, நாளை முக்காலத்துக்கும் உரிய செய்தி இது. உண்மையான விசுவாசத்துக்குக் கிடைக்கும் சம்பாவனை அன்பான மீட்பாகும். உடைந்த உள்ளத்தில் பரிசுத்த ஆவியானவர் ஊடுருவிச் செல்கிறுர். பாவத்தின் அடிமைத்தளைகளை அறுத்து இதயத்தை அமைதியினுலும் அன்பினுலும் நிரப்புகிறுர். மீட்பின் படிமுறை இதுவே. இம் மீட்பைப் பெற உமக்கு விருப்பமா ?

சிந்தனை :

1. வேதாகமத்தின் வழியாக ஆண்டவராகிய இறைவனைத் தேடுகிறேன். உள்ளத்தில் தற்பெருமையின்றி, தாழ்மையான உள்ளத்துடன் அவரைத் தேடுவேன். என் மீட்பராகிய கிறிஸ்துவைக் கண்டடைய என்னுல் ஆனதெல்லாம் செய்வேன்

2. எனக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் அனைவர்க்காகவும் இறைவனுக்கு நன்றி நவில்வேன். அவர்களைப்போல் வாழ முயற்சிப்பேன்.

3. என்னைச் சூழ உள்ள பலர் பலவீனர், உதவி தேவையானேர், பாவிகள். இவர்களைப்பற்றி வீணுகத் தீர்ப்பிடாது, அவர்கள்மட்டில் கருணையுடன் வாழ்வேன். அவர்களுக்காகச் செபிப்பேன். இயன்ற உதவி அவர்களுக்குச் செய்வேன்.

4. நான் மற்றவர்களிலும் மேலானவன், உயர்ந்தவன் எனக் கருதாது அனைவரையும் சகோதரராக ஏற்று வாழப் பழகுவேன். குற்றம்புரிபவர்களை மன்னிப்பேன். என் பாவங்களுக்காக உண்மையாக மனம்வருந்திப் பாவமன்னிப்பை இறைவனிடம் வேண்டுவேன். பச்சாத்தாபம் என்னும் திருவருட்சாதனத்தின் வழியாக மனிதனை மன்னிக்கும் இறைவனுக்கு என்றும் கடப்பாடுடையவனாயிருப்பேன்.

விடை தருக:

1. சமுதாயத்தில் மீட்பரை அறியச் செய்வதற்கு நீர் ஆற்றக் கூடிய 5 பணிகள் எழுதுக.

2. பாவியான பெண் ஏன் மன்னிக்கப்பட்டாள்?

3. லூக். 7 : 41 — 43 உவமை வழியாக இயேசு என்ன பாடம் படிப்பிக்க விரும்பினார்?

4. லூக். 7ஆம் அதிகாரத்தை வாசித்து இயேசு கூறிய கூற்றுக்களில் உம்மைக் கவர்ந்த சில பகுதிகளை மனனம் செய்க.

5. லூக். 7 : 36 — 50 வாசித்து உண்மையான உளம் வருந்துதலின் பண்புகளை எழுதுக.

அலகு : 16

# இறைவார்த்தைக்குச் செவிமடுத்தல்

## 1. இயேசுவுடன் சென்ற பெண்கள் : ( லூக். 8 : 1 — 3 )

இயேசுவும் அவரது சீடர்களும் மேற்கொண்ட மறைபரப்புப் பணிக்கு உதவுவதற்குச் சில பெண்கள் அவர்களது உடைமைகளைப் பயன்படுத்தினர்கள். சிலர் பணக்காரர், சிலர் ஏழைகள். உயர் குடும்பத்தைச் சேர்ந்தோர் சிலர், எளிய குடும்பத்திலிருந்து வந்தோர் சிலர். சகோதர சமத்துவத்துடன் ஒன்றுகூடி இறை அரசுக்காக உழைக்க அவர்கள் முன்வந்தனர். இங்ஙனம் செயற்பட்ட இப் பெண்கள் இறை அரசு அமைப்பில் பொது ஒருமைப்பாட்டுக்காகச் சான்றுபகர்ந்து வாழ்ந்தனர். அவர்கள் நற்செய்தியை உலகறியச் செய்வதற்காகத் தம் பொருள், காலம், சக்தி என்பவற்றைத் தியாகம் செய்தனர்.

இறைவனுக்குப் பணிபுரிவதில் ஈடுபட்டுள்ள நாம் சகோதரத்துவ அன்பில் ஒன்றுகூடிச் செயற்படவேண்டும். எவ்வித பாகுபாடுமின்றி, ஒன்றித்து நாம் உழைக்கவேண்டும். நாம் சாதிசமய வேறுபாடுகளையும், தப்பெண்ணங்களையும், பொறாமையையும் களைந்து வாழவேண்டியவர்கள். கடவுளின் அரசுக்காக எமது நேரம், பொருள் பண்டங்கள் ஆற்றல்கள் என்பவற்றைத் தியாகம் செய்யவும் முன்வர வேண்டும்.

## 2. விதைப்பவன் உவமை : ( லூக். 8 : 4 — 15 )

இயேசு மொழிந்த முக்கிய உவமைகளில் இதுவும் ஒன்று. மத்தேயு, மாற்கு ஆகியோரும் இவ் உண்மையைக் கூறுகின்றனர். இது ஒத்தமை நற்செய்தி மூன்றிலும் ( மத்தேயு, மாற்கு, லூக்கா ) காணப்படுகிறது. மிக ஆழ்ந்த கருத்தைக் கொண்டுள்ள உவமை இது.

விதை இறைவனின் வார்த்தை. விதைப்பவர் கிறிஸ்து. வேறுபட்ட நோக்கங்களையுடைய மக்கள் பலர் யேசுவின் நல்லுரைகளைக் கேட்கச் சென்றனர். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டிருக்கும்போதே சிலர் வேறு பராக்குகளில் ஈடுபட்டனர். அவர்கள் செய்தியை மறந்து, சோதனைக்குட்பட்டு, கூலி கொடுக்க மறந்துவிட்டனர். இரண்டாவது சாரார் இறைவார்த்தையை மகிழ்வுடனே கேட்டனர். ஆனால் வாழ்க்கைப் பிரச்னைகள் குறுக்கிட்டபோது தம் பழைய வழிகளில் சென்றனர். இறைவார்த்தையைக் கேட்டபின் தாம் மேற்கொண்ட தீர்மானங்களைத் தள்ளிவைத்து வாழத் தலைப்பட்டனர்.

அவர்கள் கொண்டிருந்த தூய கனிகளை மனித இயல்பு அழித்துவிட்டது. மூன்ருவது கூட்டத்தினர் சில காலத்துக்கு மட்டும் இறைவார்த்தைக்குப் பிரமாணிக்கமாய் இருந்தனர். ஆனல் நாளாவட்டத்தில் உலக இன்பங்களுக்கு இடம்கொடுத்து, பொல்லாத சோதனைகளை வெல்வதற்கு வலுக் குறைந்தவர்களாகினர். அவர்களும் விசுவாசத்தை இழந்தவர்களே. ஆனல் நான்காவது வகுப்பினர் இறுதிவரைக்கும் தம் அன்ருடப் பிரச்சினைகளுக்குக் கிறிஸ்தவ முறையில் தீர்வுகண்டனர். எனவே, மீட்பின் நற்செய்தி அவர்களில் கனிகொடுத்தது. அவர்களின் இதயக் கதவுகள் இறை அரசுக்காகத் திறக்கப்பட்டன.

இவ்வுவமை எமக்குக் கற்பிக்கும் முக்கிய பாடம் ஒன்றுண்டு. ஞாயிறு திரு உரையைக் கேட்கும் நாம் இறை வார்த்தையை ஏற்றுக்கொள்ள முன்வரவேண்டும். உரிய மதிப்புடன் திருஉரையைக் கேட்டல் அவசியம். நற்செய்தி எம்மை மீட்புக்கு இட்டுச்செல்ல வல்லது. இந்த நம்பிக்கை உள்ளவர்களாக இருக்கவேண்டும். இறை வார்த்தை எமது நாளாந்த வாழ்வில் கைக்கொள்ளப்படவேண்டியது. சோதனையால் துன்புறும் வேளைகளில் வேதாகமத் துணையை நாடவேண்டும். எமது விசுவாசத்தைக் காப்பது இறைவார்த்தை. நாளாந்தம் நற்செய்தி வாசித்தல் எமது கடமையாகும். நற்செய்தி தரும் அறிவுரைக்கேற்ப எமது நடத்தை அமைய வேண்டும். எதிர்மாருக நாங்கள் பாவத்திற்கு அடிமைப்பட்டவர்களாய் வாழ்ந்தால், இறைவனின் வார்த்தையாகிய விதை எம்மில் பலன் அளிக்காது. எம்மை முழுமையாக இறைவனின் கரங்களில் ஒப்படைத்து, அவரே எம் தஞ்சமென வாழவேண்டுமென இவ்வுவமை சுட்டிக்காட்டுகிறது. சிற்றின்ப நாட்டங்கள் அனைத்திற்கும் எதிராக நாம் போராடவேண்டும். தூய ஆவியானவர் எம் இதயங்களில் செயலாற்ற வழிவிடவேண்டும். அப்போது புதுவாழ்வின் விதை எம்மில் கனி கொடுக்கும்.

### 3. பாத்திரத்தால்மூடிய விளக்கு: ( லூக். 8 : 16 — 18 )

இந்த உவமையில் பல கருத்துக்கள் பின்னிப் பிணைந்துள்ளன இறைவார்த்தை மனித இதயங்களில் செயலாற்ற வல்லது. இதன் ஆற்றல் கிறிஸ்தவனில் இருந்து என்றும் வெளியாகிக்கொண்டிருக்கும். எல்லா இதயங்களிலும் மீட்பின் ஒளியை ஒளிரச் செய்வது இறைவார்த்தையாகும். இந்த ஒளியை மூடிவைக்க முடியாது. மனித வலுவின்மையையும், தப்பான கொள்கைகளையும் கைவிட்டு வாழ்ந்தால் இறைவார்த்தை எம்மில் ஒளிரத் தொடங்கும். அப்போது நாம் எமது வாழ்வுச் சான்றுகளால் இந்தப் பேரொளியை அனைவர்க்கும் அளிப்போம்.

**4. உண்மையான கிறிஸ்தவக் குடும்பம் :** *(லூக். 8 : 19 — 20)*

ஒருநாள் யேசுவின் தாயாரும், உறவினர் சிலரும் இயேசுவைக் காணச் சென்றனர். இறைமக்கள் கூட்டத்தின் உண்மை இயல்பை மக்களுக்கு எடுத்துக்கூற இயேசு இச் சந்தர்ப்பத்தை நழுவவிடாது பயன்படுத்தினார். "கடவுளின் வார்த்தையைக் கேட்டு அதன்படி நடக்கிறவர்களே எனக்குத் தாயும் சகோதரரும் ஆவர்." (லூக். 8 : 31)

கடவுளின் வார்த்தையைச் செயற்படுத்தல் திருச்சபையின் அடிப்படைப் பண்பாகும். இந்நிகழ்ச்சி இதைத் தெளிவாக்குகிறது. பெயரளவில் கிறிஸ்தவனாயிருந்தால் மீட்பை அடைய முடியாது. இறை வார்த்தையை ஏனோதானோ என்று கேட்பதால் மட்டும் பயன் விளைவதில்லை. நாம் பெறும் அறிவைச் செய்கைகளால் வெளிப்படுத்தல் அவசியம்.

**உமது வாழ்க்கைக்கு :**

1. திருச்சபையின் மறைபரப்புப் பணியில் என்னால் இயன்றளவு உதவுவேன். எனது காலத்தையும் ஆற்றலையும் பொருளையும் இதற்காகத் தியாகம் செய்வேன். ஆனால் மனித புகழ்ச்சியையோ செல்வாக்கையோ எதிர்பாரேன். தாழ்ச்சியுடன் இறைவனின் வார்த்தைக்குச் சான்றாக விளங்குவேன்.

2. விசுவாசம் இறைவன் தரும் ஒரு கொடை. ஆனால் என்னில் இதை வளர்த்தல் என் கடன். எனவே அக்கறையுடன் விசுவாசத்தின் குரலொலிக்கு செவிமடுத்து ஊட்டம்பெறுவேன்.

3. கிறிஸ்தவ கொள்கைகளுக்கியைய வாழ்வேன்; கடவுளின் குடும்பத்தில் திருச்சபையில் செயல்படும் உறுப்பினனாக இருப்பேன். இங்ஙனம் வாழ்ந்து உயிருள்ள விசுவாசம், மீட்பு என்பவற்றில் மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக வாழ்வேன்.

**விடை தருக**

1. மறைபரப்புப்பணியில் கைகொடுத்து உதவ நீர் ஆற்றக்கூடிய 3 செயல்களைக் குறிப்பிடுக.

2. லூக்காஸ் 8 : 21இல் இருந்து உமது வாழ்க்கைக்கு என்ன வழிகாட்டுதலைப் பெறுகிறீர் எனக் குறிப்பிடுக.

3. ஞாயிறு உரையைச் சிறந்த முறையில் கேட்க விதைப்போன் உவமை உமக்கு எவ்வகையில் வழிகாட்டும்?

4. இன்றைய சமுதாயத்தில் நற்செய்தியின் ஒளியைப் பரப்புபவன் என்ற தலைப்பில் உரையாடல் ஒன்று எழுதி வகுப்பில் நடிக்க முயல்க.

அலகு : 17

# மீட்பின் அடையாளங்கள்

## 1. புயலை அடக்கினுர் : ( லூக்காஸ் 8 : 22 — 25 )

எமது தலைவர் கிறிஸ்து நிறைவான விசுவாசம் உள்ளவர்களாக நாம் வாழ வேண்டுமென எம்மை அழைக்கிறுர். இறைவனின் பராமரிப்பை என்றும் நினைவுகொள்ளவேண்டியது எம் கடமையாகும். வாழ்க்கைக் கடலில் பயணிகளாகிய நாம், கணக்கற்ற தடைகளை எதிர்நோக்குகிறேம், ஆனுல் இறைவன் எம்மைப் பராமரிக்கிறுர் என்ற விசுவாசம் எம்மிடத்தில் உறுதியாக இருக்கவேண்டும்.

" உங்கள் விசுவாசம் எங்கே ?" — கலிலேயாக்கடலில் அப்போஸ்தலர்களின் பதட்டத்தைப் பார்த்த இயேசு இவ்விதம் வினவினுர். இதே வினவையே எம் அனைவரையும் இயேசு இன்றும் கேட்கிறுர்.

தொல்லைகள் வரும் வேளைகளில் கடவுள் எமக்கு துணைபுரிவதில்லையே என்ற முறையீட்டை நாம் கேட்கிறேம். கிறிஸ்தவன் பலவீன நிலையில் உள்ளான் என்பதற்கு இது அடையாளமாகும். நாம் கிறிஸ்துவின் வழி செல்பவர்கள். எனவே எம் ஏக தலைவரான கிறிஸ்துவைப்போன்று நாமும் வாழ்வின் சிலுவைகளை இறை நம்பிக்கையுடனும், உரம்கொண்ட நெஞ்சுடனும் சுமப்பதற்கு முன்வரவேண்டும். கலிலேயாக் கடலின் அலைகளைக் கடிந்து கட்டளையிட்ட இயேசு இன்று எம்முடன் இருக்கிறுர். எமக்கு நேரும் தொல்லைகளில் அவர் எமக்குத் துணையாக வருகிறுர்; எமது துன்பதுயரங்கள் வழியாக அவர் எம்மை மீட்புக்கு இட்டுச்செல்கிறுர், இறைவனின் பராமரிப்புக்கு அடையாளமாக லூக்காஸ் மொழிந்த இவ்வருஞ்செயல் அமைகிறது. படைப்பாளரான இறைவன் படைப்பின்மேல் அதிகாரம் கொண்டுள்ளார். மனிதன் ஆக்கிய தீமைகளை அழித்து, அதிலிருந்து இறைவனை அறியச்செய்தல் அவரது திருவுள்ளமாகும். தீமையில் இருந்து எங்களை மீட்டருளும். — என செபிக்கும் நாம், எமது உறுதியான விசுவாசத்தை வெளிப்படுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

## 2. கெரசேனர் நாட்டில் அலகைகள் : (லூக்காஸ் 8 : 26—39)

மீட்பு அனைவர்க்கும் உரியதாகையால் இறைவனின் இரக்கம் ஏதோ ஒரு நாட்டினத்தார்க்கு மட்டும் உரியதல்ல. கெரசேனர் நாட்டில் நடந்த இப் புதுமை இதை நிரூபிக்கிறது. நிறைவான நன்மைத்தனத்துக்கும், உண்மையான தூய்மைத்தனத்துக்கும் முன்பாக அலகை வலு

விழந்து செயலற்றுப்போனது. அலகை என் பெயர் "படை" என்று பெருமை பாராட்டியும் பன்றிகளுடன் கடலில் தள்ளப்பட்டான். இறைவன் அலகையிலும் வல்லமை மிக்கவர். பேய்களினால் ஆட்கொள்ளப் பட்டவன் குணமடைந்ததைக் கண்ட கெரசேனர் நாட்டுமக்கள் இறைவனின் வல்லமையை எண்ணி அச்சத்துக்குள்ளாகினர். நன்மைத்தனம் நிறைந்த இறைவன் உலக நன்மைகளைப் பொருட்படுத்துபவர் அல்லர் என்பது பேய்களுக்குப் புரியாத புதிராக இருந்தது. அவர்கள் மனித னொருவனின் உயிரிலும், பன்றிகளை மேலாக மதித்தனர். இதனால் தங்களை விட்டு அகலும்படி கிறிஸ்துவை வேண்டினர். நாங்கள் ஆன்மீக விடுதலைக்காக உலக செல்வங்களைத் தியாகம் செய்யவேண்டும்—என்ற உண்மையைக் காட்டும் நிகழ்ச்சியாக இது அமைகிறது. இதைப்பற்றி உமது கருத்தென்ன ? தியாகம் செய்ய அஞ்சுகிறீரா?

மறைபரப்பாளன் ஒருவனைக் கெரசேனர் நாட்டில் இயேசு விட்டுச் சென்றார். அவன் உண்மையாகவே புறவினத்தான். இறைவனின் இரக்கத்தை நாட்டு எல்லைக்குள் அடக்கிவிட முடியாது. குணமடைந்த கெரசேனியன் தன் நாடு அனைத்திலும் இறையரசுக்குச் சான்றுபகர்ந்திருப்பான் என்று கூறலாம். இந்நிகழ்ச்சியிலிருந்து நீர் பெறும் செய்தி என்ன ? உம் கடமை என்ன ? என சிந்திக்குக.

## 3. குணமடைந்த பெண்கள் இருவர் : (லூக்காஸ் 8 : 40 — 56)

இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்த அனைவருமே குணமடைந்தனர், ஜாயீர் என்பவன் ஒரு குடும்பத்தின் தந்தை. தனது மகளுக்காக அவன் இயேசுவிடம் உதவி வேண்டினான். அவன் விசுவாசம் உள்ளவனாக இருந்ததினால் இறந்த சிறுமி மீளவும் உயிர் வரப்பெற்றாள். இயேசு விசுவாசத்தின் தகைமையைப் புகழ்ந்து கூறிய வார்த்தைகள் இவை. ( காண்க : மத்தேயு 21 : 21 — 22)

இரத்தம் பெருகிய நிலையில் பன்னிரண்டு ஆண்டுகளாகப் பெரும்பாடு நோயுற்றிருந்த அந்தப் பெண் இயேசுவில் தளரா விசுவாசம் உள்ளவளாக இருந்தாள், கூட்டத்தின் ஊடாக நெருங்கிக்கொண்டு சென்ற அவள், இயேசுவை அணுகி, அவர் அணிந்திருந்த போர்வையின் விளிம்பைத் தொட்டாள். அவளது விசுவாசத்தைக் கண்ட இயேசு அந்தப் பெண்ணின் வேண்டுகோளுக்கு விடை அளித்தார்; அவள் குணம் அடைந்தாள். அவளது விசுவாசத்தைப் பாராட்டிய இயேசு, ' மகளே, உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று, சமாதானமாய் போ ' என்றார். இந் நிகழ்ச்சி எமக்குக் காட்டும் செய்தி ஒன்றுண்டு. ஆன்மீக விடுதலைக்கு அடிப்படை, தளராத விசுவாசமே ஆகும்.

இன்றைய சமுதாயத்தில் நாம் தீமையின் மத்தியில் வாழ்கிறோம். நாம் பெற்ற அன்பின் காரணமாக அன்று... ஆனால் விசுவாசத்தினாலேயே மீட்புப் பெறுகிறோம். அப்போஸ்தலரான புனித யாகப்பர் அதை எமக்குப் படிப்பிக்கிறார். அவரின் கூற்று ... ( காண்க : யாகப்பர் 2 : 21 — 22 )

கிறிஸ்து உடல் நோய்களைக் குணமாக்கியமை ஆன்ம நோயைக் குணமாக்கியமைக்கு அடையாளமாகும். விசுவாசத்தினால் உடற்சுகம் பெறுபவன், முடிவில்லா மீட்பையும் பெறுகிறான் என்பதைக் கிறிஸ்துவின் புதுமைகளில் அறிகிறோம்.

ஆழ்ந்து சிந்திப்பதற்கு :

1. உலகில் நாம் நோய், பிணி, துன்பம், கவலைகளுக்கு ஆளாகி வருந்துகிறோம். இந்நிலையைத் தாழ்மையுடன் ஏற்றுக் கொள்வோம்.

2. ஆனால் இவ் வருத்தங்களை வீரத்துடன் ஏற்று வாழ்வதற்கு மனித வலு போதாது. பாவங்களுக்காக மனம் வருந்துதலும், விசுவாசமும் இதற்கு அவசியம்.

3. வாழ்வில் இடம்பெறும் துன்பதுயரங்கள் சோதனைகள் எம்மை மீட்புக்கு இட்டுச் செல்கின்றன. எனவே கவலைகள் எம்மை வாட்டும்போது அவற்றின்வழியாக இறைவனின் உள்ளத்தை அறிந்து, அவற்றைப் பொறுமையுடன் அனுபவித்தல் எமது கிறிஸ்தவக் கடமை.

4. எமது விடுதலைக்காகத் தமது ஒரே மகனை அனுப்பிய இறைவன் உறுதியாக எம்மைக் காப்பாற்றுவார்.

5. நாம் நிறைவான விசுவாசம் உள்ளவர்களாய் விளங்கவேண்டுமெனக் கிறிஸ்து விரும்புகிறார். விசுவாசம் இல்லாத இடத்தில் மீட்பும் இல்லை.

6. செயற்படுத்தும் விசுவாசம் கிறிஸ்துவின் அடிப்படைப் பண்பாகும்.

விடை தருக :

1. உங்கள் விசுவாசம் எங்கே என இயேசுவை வினவ வைத்த சீடர்களின் நடத்தை எப்படிப்பட்டது ?

2. லூக்காஸ் 2 : 85ஐ வாசித்து பன்றிகள் கொல்லப்பட்டமை நீதியானதா? ஏன் என்று விளக்குக.

3. ஆன்ம மீட்புக்காக உலக செல்வங்களைத் தியாகம் செய்தல் அவசியமா? ஏன்?

4. 'வாழ்வுக்கும் இறப்புக்கும் ஆண்டவர் இறைவன்' ஜாயீரின் மகளுக்கு உயிர் அளித்தமையை விளக்கி இக்கூற்றை நிறுவுக.

5. லூக்காஸ் 8 : 39ஐயும் 8 : 56ஐயும் வாசித்து, கெரசேனியருக்கு ஒரு கட்டளையும், ஜாயீருக்கும் மனைவிக்கும் வேறொரு கட்டளையும் இயேசு ஏன் கொடுத்தார் என விளக்குக.

6. அன்று இயேசுவில் செயல்பட்ட அதே வல்லமை, இன்று திருச்சபையிலும் செயற்படுகிறது. நீர் அறிந்தவற்றை அல்லது கேட்டவற்றின் மேற்கோள்களைக் காட்டி இக்கூற்றை நிறுவுக.

அலகு 18

# புது உலகம் அமைக்க ஓர் அழைப்பு

**1. பன்னிருவரின் பணி :** ( லூக்காஸ் 9 : 1 — 6 )

இருளுக்கும் ஒளிக்குமிடையே இருந்த கார் மேகங்கள் அகலத் தொடங்கின. பரிசேயரும், சட்டவல்லுனரும் கொண்டிருந்த பொறுமை நிரம்பி வழியத் தொடங்கியது. ஏரோது அந்திப்பாஸ் இயேசுவைச் சந்திக்க விருப்புக்கொண்டான். செபக்கூடத் தலைவர்கள் கலிலேயத் தச்சனின் கோட்பாட்டை எதிர்த்தனர். சிலுவையின் நிழல் தெளிவாகத் தெரியத் தொடங்கிவிட்டது. இந்நிலையில் தமது இடத்தை எடுப்பதற்குத் தம் பணியைத் தொடர்ந்து ஆற்ற அப்போஸ்தலரை ஆயத்தம் செய்வதற்கு இயேசு முன்வந்தார். அலகையின் அரசை எதிர்த்துப் போராட, அவர் அப்போஸ்தலரை அனுப்பினார். அவர்களின் பயணத்தின் முன் இயேசு கூறிய நல்லுரைகள் இவை :

1. பயணத்துக்கு எதையும் எடுத்துச் செல்லாதீர்கள் —
   உங்களை இறைவனின் கரங்களில் ஒப்படைத்து வாழுங்கள்.

2. கோலோ, பையோ கொண்டுபோகாதீர்கள் —
   இறைவனே உங்களுக்கு வழிகாட்டியும், வலுவுமாயிருப்பார்.

3. உணவு எடுத்துச் செல்ல வேண்டாம் —
   இறைவன் தமது பணியாட்களுக்கு ஊட்டம் அளிப்பவர்.

4. பணம் கொண்டு போகாதீர்கள் —
   பணத்திற்கு அடிமையாகி விடாதீர்கள்.

5. இரண்டு உள்ளாடைகளை வைத்திராதீர்கள் —
   ஆடை அணிகளுக்கு அடிமையாகிப் போகாதீர்கள்.

6. எந்த வீட்டிற்குப் போனாலும் அங்கே தங்கி, அங்கிருந்தே புறப்படுங்கள். —
   மறைபரப்பாளர் வீடுவீடாய்ப் பயணம் செய்தலைத் தவிர்க்க வேண்டும்.
   எல்லா வீடுகளுக்கும் சென்று உண்ணலும், குடித்தலும் அவரது வேலையல்ல.
   அவர் இறைவனின் பணிக்குத் தன்னை அர்ப்பணிப்பவர்.

7. யாராவது உங்களை ஏற்றுக்கொள்ளாவிடின், அவர்களுடைய ஊருக்கு வெளியேபோய், உங்கள் கால்களில் உள்ள தூசியைத் தட்டிவிடுங்கள் —

இவ்விதம் நடந்தால் சிலரின் சிந்தனையைத் தூண்டுவதற்கு வழி செய்யும்,

பின்னர் மனம் வருந்துவதற்கும் அவர்களுக்கு உதவியாயிருக்கும்.

இங்ஙனம் தமது அப்போஸ்தலர்களுக்கு நல்லுரை கூறிய எம் இயேசு அவர்களுக்கு,

1. அலகைகளை அடக்கவும்
2. நோய்களைக் குணமாக்கவும்,
3; இறை அரசை அறிவிக்கவும் அதிகாரம் வழங்கினர்.

மறைபரப்பும்பணியில் ஈடுபட்டோர் தமது செயல்கள் அனைத்திலும் இறைவனை வெளிக்காட்டுபவர்களாகவும், முழுமையாகத் தம்மை அர்ப்பணித்தும் உழைக்கவேண்டும். சிறப்பாக, இறைவனின் அதிகாரத்தால் அவர்கள் செயற்படுவதே இதற்குக் காரணம். புதிய உலகைப் படைக்கும் கடமையைக் கொண்டுள்ள கிறிஸ்தவன் கிறிஸ்துவின் அப்போஸ்தலன் ஆவான். நற்செய்தி நல்லுரைகளே அவனுக்கு வழிகாட்டப் போதுமானவை. வேறு எந்த அறிவுறுத்தல்களும் நற்செய்திக்கு ஈடாகா. அப்போஸ்தல அர்ப்பணத்தில் ஈடுபட விரும்புகிறீரா? அலகை, உலகம், சரீர இச்சை மூன்றையும் துறந்து திருமுழுக்கினால் நீர்பெற்ற அழைப்புக்கு ஏற்ப வாழத் தயாராக இருக்கிறீரா? உமது மனப்பாங்கை ஆய்ந்து பார்த்து, குருத்துவத்துக்கு அல்லது துறவற வாழ்வுக்கு நீரும் அழைக்கப்பட்டிருக்கிறீரா என்பதைக் காண முயற்சி செய்க........ இதுபற்றிச் சிந்தித்து இறைவனிடம் வேண்டுதல் செய்க.

2. ஏரோதனின் கலக்கம்: ( லூக்காஸ் 9 : 7 — 9 )

திருமுழுக்கு அருளப்பரின் துக்ககரமான இறப்பைப்பற்றிய விபரங்களை லூக்காஸ் குறிப்பிடவில்லை. இறந்தோர் உயிர்த்தெழுவர் என்பதை ஏரோது அந்திப்பாஸ் விசுவசியாதவனாய் இருந்தான். ஏரோது அரசன் அருளப்பரைக் கொன்ற கொலைக்காரன். இதனால் இயேசு பற்றியும், அவரது செயல்கள் பற்றியும் கேள்விப்பட்ட அவன் அச்சத்துக்குள்ளாகினான். அதனால் கொல்லப்பட்ட திருமுழுக்கு அருளப்பர் உயிர் பெற்று விட்டாரோ என்று நினைக்கவும் தொடங்கினான். இதனால் அவன் இயேசுவைச் சந்தித்துத் தனது ஐயத்தைப் போக்க ஆவல் கொண்டான். இதற்காக இயேசுவைக் காண விரும்பினான் அன்றி, அவனுக்கு மீட்புச் செய்தியை அறியவேண்டுமென்ற அக்கறை இருக்கவில்லை.

எமது சமுதாயத்தில் இப்படியானவர்கள் இன்றும் உள்ளனர். கொலேக்காரனுக்கு உள்ள அமைதி இருக்காது. கொலேக்காரர் அச்சத்துடனும், ஐயத்துடனும் வாழ்வர். 5ஆம் கட்டளையை மீறிப் பாவம் புரிபவன், தானே ஆக்கிய நரகத்தில் எரிந்துகொண்டிருப்பான். இத்தகையோர் சமயத்தைப் பழிப்பவர். உலகத்துக்கு அடிமையான இவர்கள், இறை அரசின் பகைவர்களாக வாழ்வர். இத்தகையோரைக் கிறிஸ்தவன் பின்பற்றல் அவனது பெருமைக்குப் பொருந்தாச் செயலாகும். ஆனல் இவ்வித பாவிகளேயும் இறைவனிடம் மீள அழைத்து வரும் ஒருவன் துன்பங்கள் பலவற்றை ஏற்க வேண்டும்.

### 3. அப்போஸ்தலர் திரும்பி வருகின்றனர் :

> ‘‘ அப்போஸ்தலர் திரும்பி வந்து தாங்கள் செய்ததெல்லாம் அவருக்குத் தெரிவித்தனர். ( லூக். 9 : 10)

அப்போஸ்தலர் தாம் செய்த அருஞ் செயல்களேப்பற்றிப் பெருமையாய் பேசத்தொடங்கினர். பேய்களே ஓட்டினேம் ; பிணியாளரைக் குணமாக்கினேம்...... அப்போஸ்தலர்கள் சிறியதொரு சோதனைக்கு உட்பட்டுவிட்டார்கள் என்பதை இயேசு உணர்ந்தார். அவர்கள் செய்தவை யாவும் அவர்களின் வல்லமையால் அன்று, இறைவனின் வல்லமையே அவர்களேச் செயற்படுத்தியது என்பதை அவர்கள் அறியவைக்க இயேசு விரும்பினர். எனவே தியான ஒடுக்கத்திற்கு இயேசு அவர்களே அழைத்தார். அவர்கள் தனித்துச் செபித்தனர்; தியானித்தனர். அதன்பயனுக அவர்கள் (ஒளி) உண்மையைக் கண்டு கொண்டனர். தாம் செய்யமுடிந்த நன்மைகளுக்காக இறைவனேப் புகழ்ந்தனர் ; தாழ்ச்சியுள்ளவர்களாகினர் , ஆன்ம வாழ்வில் வளம் பெற்றனர்.

மறைபரப்புப்பணி வெற்றிபெறவேண்டின், இறைவனுக்கும் அவரது கருவிகளான மறைபரப்பாளருக்கும் இடையில் உரையாடல் இடம் பெறவேண்டும். தனிப்பட்ட அனுபவங்களேப் பகுத்து ஆய்தலும் அவசியம். இவ்விதம் செயற்பட இறைவனேடு மறைபரப்பாளர் உறவாடி உரையாட வேண்டும். இவ்வித உரையாடலே செபம் என அழைக்கப் படுகிறது. செபிக்கும் ஊழியன் தன் வாழ்வில் குற்றங்களே ஏற்றுக் கொள்கிறன் ; கண்டனங்களே வரவேற்கிறன் ; தாழ்மையுள்ளவனுகிறன் ; தன்னேயே பகுத்து ஆய்கிறன், தனது மறைப்பணிகள் பற்றி மதிப்பீடு செய்கிறன், நல்ல உள்ளத்துடன் புதிய புத்திமதிகளுக்குச் செவி கொடுக்கிறன், கூடிய சக்தியும் தன்னம்பிக்கையும் பெறுகிறன், தன்னல வேட்கையைக் கட்டுப்படுத்துகிறன், மறைப்பணியின் வெற்றிக்காக இறைவனுக்கு நன்றி கூறுகிறன், தனது வெற்றிக்குக் காற

ணம் இறைவன் என்றும் தோல்விக்குக் காரணம் மனித பெலவீனம் என்றும் அறிகிருன். ஆண்டவரின் திராட்சைத் தோட்டத்தில் வேலை செய்பவர்களுக்குத் தியான ஒடுக்கம் அத்தியாவசியமானது. சமுதாயத்தில் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம், அதைப் புனிதப்படுத்தும் கடமை உடையவர்கள். இதனுல் எமக்கு ஆன்மீகப் பயிற்சிகளும், தியான ஒடுக்கங்களும் அவசியம்.

" அவர் அவர்களை அழைத்துக்கொண்டு தனித்திருக்கும்படி பெத்சாயிதா என்னும் ஊருக்குச் சென்ருர். (லூக். 9 : 10)

ஆன்மீகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவன் உடற்சோர்வு அடைவான். இதைத் தடுக்க அவனுக்கு ஓய்வு அவசியம். ஓய்வின்றி உழைத்தல் பாவமாகும். அவன் தூய ஆவியின் கருவியாவான். எனவே தன் பணிக்குத் தகுதியான நிலையில் தன்னை வைத்துக்கொள்ள வேண்டும். உடல் — உள சமநிலையை அவன் காக்கவேண்டும். அவன் அளவுக்கு மீறிய உழைப்பினுல் தனது ஆளுமையைச் சிதைக்கக்கூடாது. இது ஆர்வம் அன்று. ஆனுல் பாவமாகும். அளவுக்கு மீறிய உழைப்பில் ஈடுபடுதல் சரியன்று.

## 4. ஐயாயிரம்பேர் வயிருர உண்டனர் :

( லூக்காஸ் 9 : 11 — 17 )

நற்செய்தி ஆசிரியர்கள் நால்வரும் குறிப்பிடும் புதுமை இது ஒன்றே. பொழுது சாயும் நேரம். அங்கு ஐயாயிரம் மக்களுக்குமேல் இருந்தனர். இதனுல் மக்களை உண்ணவும், விடுதிவசதி பெறவும் அயலூருக்கு அனுப்பும்படி அப்போஸ்தலர்கள் இயேசுவை வேண்டினர். வந்தவர்களுக்கு விருந்தோம்புதல் அப்போஸ்தலர்களின் பொறுப்பாக இருந்தும் அதிலிருந்து தப்ப முயன்ற அவர்களுக்கு இயேசு நல்ல பதில் அளித்தார்.

" நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் " என்ருர்.

அப்போஸ்தலர்கள்... செய்வது என்னதென்று தெரியாது தவித்தனர். தங்களது சொந்த வல்லமையையே சிந்தித்த அப்போஸ்தலர்,

" எங்களிடம் ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும்தான் உண்டு. நாங்கள் போய் இத்தனைபேருக்கும் உணவு வாங்கி வந்தால்தான் முடியும் " என்றனர்.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தேவபராமரிப்பைப்பற்றி அப்போஸ்தலர்களுக்கு ஒரு பாடம் புகட்ட இயேசு விரும்பினுர். ஐம்பது ஐம்பது பேராகப் பந்தி அமர்த்தக் கட்டளையிட்டார் இயேசு.

அப்பங்களையும், மீன்களையும் எடுத்து, வானத்தை அண்ணார்ந்துபார்த்து, இறைவனை வேண்டியபின்னர் மக்கள் கூட்டத்துக்குப் பரிமாறச் சொன்னார். குழுமியிருந்தோர் அனைவரும் வயிறார உண்டு திருப்தியடைந்தனர். மீதியான துண்டுகளை அப்போஸ்தலர் பன்னிரண்டு கூடைகளில் எடுத்தனர்.

இந்நிகழ்ச்சி எமக்கு நல்லதொரு பாடமாக அமைகிறது. எம்க்குள்ளவற்றைத் தியாகம்செய்ய, நாம் தயாராக இருந்தால் எமது உழைப்பின் பயனை அதிகரிக்க இறைவன் விரும்புகிறார். மீட்புப்பணியில் எந்தத் திறமை அல்லது ஆற்றலும் முக்கியத்துவம் குறைந்ததல்ல. மனிதனின் ஆற்றல்களிலிருந்து தூய ஆவியானவர் சிறந்த பலனை விளைவிக்கக்கூடியவர். இத்த உண்மையை அன்று அப்போஸ்தலர் புரிந்துகொண்டிருப்பார்கள்.

நீங்கள் மேற்கொள்ளக்கூடிய தீர்மானங்கள் ;

1. எனது கிறிஸ்தவ அழைப்பைத் தீர்மானிக்க முயல்வேன்.
2. திருச்சபையின் மறைப் பணிகளில் நான் உதவுவேன்.
3. என்னிடம் உள்ளவற்றை இறை அரசுக்காக இழக்க முன்வருவேன்.
4. கிறிஸ்தவர்களாகிய எம்மில் செயலாற்றும் பரிசுத்த ஆவியை மதித்து வாழ்வேன்.
5. என் நண்பர்கள் கிறிஸ்துவை அறியச் செய்வேன்.
6. உதவி தேவையானோர்க்கு என்னால் இயன்ற உதவி செய்வேன்.
7. குருவாகும் அல்லது துறவியாகும் அழைப்புக்காகச் செபிப்பேன். இவ்விதம் அழைக்கப்பட்டவர்களை ஊக்குவிப்பேன்.

விடை தருக ;

1. அப்போஸ்தலனின் பண்புகள் எவை ?
2. தமது அப்போஸ்தலர்களுக்கு இயேசு வழங்கிய அதிகாரங்கள் எவை ?
3. இறை அரசுக்காக இன்று பணியாற்றுவோர் தூய ஆவியின் ஆற்றலினால் வாழ்கின்றனர். இத்தலைப்பின்கீழ் சில படங்களைச் சேர்த்து வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுக.
4. கிறிஸ்துவின் அப்போஸ்தலப் பணிக்கு நீர் அழைப்பைப் பெற்றால், உமது திறமைகளையும் ஆற்றல்களையும் இறைவனின் பணிக்கு எவ்விதம் பயன்படுத்துவீர் என விளக்குக.

# இறைவனின் கிறிஸ்து

## 1. இராயப்பரின் விசுவாச அறிக்கை: (லூக். 9 : 18 — 20)

மத்தேயு, மாற்கு ஆகிய இருவரும் இந்நிகழ்ச்சி செசாரியா பிலிப்பியில் இடம்பெற்றதாகக் குறிப்பிடுகின்றனர்.

"மக்கள் என்னை யார் என்று சொல்கிறார்கள்?"

(லூக். 9 : 18)

மக்களிடமிருந்து விலகித் தனிமையான இடத்துக்கு இயேசு அப்போஸ்தலர்களைத் தியானம் ஒன்றுக்கு அழைத்துச் சென்றார். ஓர் ஆண்டுக்கு மேலாக இயேசு அவர்களுடன் இருந்தார். எனவே அப்போஸ்தலர் தம்மைப்பற்றிக் கொண்டிருந்த கருத்தை அறிய அவர் விரும்பினார். அவர்கள் இயேசுவின் வினவுக்குப் பல்வேறு விடைகளைக் கூறினர்,

" சிலர் திருமுழுக்கு அருளப்பர் என்கின்றனர்.........
சிலர் எலியாஸ் என்கின்றனர்.........
சிலர் முற்காலத்து இறைவாக்கினர் என்று சொல்கின்றனர்."

அப்போஸ்தலரின் இந்த விடையிலிருந்து இயேசு மெசியா என்பதைப் பொதுமக்கள் அறியாதிருந்தனர் என்பது தெரிகிறது.

" நீங்களோ என்னை யார் என்று சொல்கிறீர்கள் ......... ?"

என்று இயேசு அவர்களைக் கேட்டார், எல்லோர் சார்பிலும் இராயப்பர் விடையளிக்க முன்வந்தார்.

" நீர் கடவுளின் மெசியா " (லூக். 9 : 20)

ஒருவேளை தான் கூறியதன் பொருளை இராயப்பர் அப்போது அறியாதிருக்கலாம். பரிசுத்த ஆவி அவரில் உறைந்திருந்து, அவர் வழியாகப் பேசினார்.

## 2. பாடுகளும் மரணமும் முன் அறிவிக்கப்படுகின்றன : (லூக். 9 : 21 — 22)

மெசியாபற்றி யூதர்கள் தப்பான எண்ணங்கள் கொண்டிருந்தனர். இயேசுவோ மெசியா என்பது தெரிந்திருந்தால் ஆபத்தான விளைவுகள் ஏற்பட்டிருக்கலாம். தாவீதின் அரசாட்சியை மீளவும் நிறுவுவதற்கோ

அன்றி யூதர்களுக்காக உலகை வென்று கொடுப்பதற்கோ இயேசு இவ்வுலகுக்கு வரவில்லை. உரோமைப் பேரரசை அழிப்பதுதான் அவரது பணியாகவும் இருக்கவில்லை. ஆனால் மனிதரின் இதயங்களில் ஆன்மீக அரசை நிறுவுதலையே தம் பணியாகக் கொண்டார். இதனால் அவரே மெசியா என்பதை எவர்க்கும் கூறவேண்டாம் என இயேசு அப்போஸ்தலர்களுக்கு ஆணையிட்டார்.

இவ்வளவுடன் இயேசு நிற்கவில்லை. சிலுவையில் அறைந்து கொல்லப்படுவதற்காக யூதர்களுக்குக் கையளிக்கப்படுவார். என்றும் ( லூக். 9 : 22 ) கூறினார். இதனால் அப்போஸ்தலர்கள் மனம் கலங்கினர்.

### 3. அப்போஸ்தலத்துவத்துக்கு நிபந்தனைகள் .

( லூக்காஸ் 9 : 23 — 27

இயேசுவைப் பின் செல்வதற்கு நிபந்தனைகள் :

தம்மைப் பின் செல்பவர்களுக்கு இயேசு குறிப்பிட்ட சில நிபந்தனைகளைக் கொடுக்கிறார்.

1. அவர் தன்னை மறக்கவேண்டும் :

முழுமையாகத் தம்மை மறத்தல் என்பது பொருள்.

2. நாள்தோறும் தன் சிலுவையைச் சுமத்தல் :

உறுதியான விசுவாசமும், பிரமாணிக்கமும், அர்ப்பணிப்பும் அவசியம் என்பது பொருள்.

3. என்னைப் பின்செல் :

மரணம் வரையும் அமைச்சல் என்பது பொருள். இங்கு உயிர் என்ற சொல்லுக்கு இரு பொருள் அளிக்கிறார் இயேசு. உலகச் சார்புள்ள வாழ்வுக்கு முதலிடம் அளிப்பவன் தன் ஆன்மீக வாழ்வை இழந்துவிடுவான். ( காண்க ; லூக். 9 : 24—25 )

மனுமகனின் இரண்டாம் வருகைபற்றியும் அவர் இங்கு பேசுகிறார். தம்மில் பிரமாணிக்கமாய் இருப்போர்க்குக் கிடைக்கும் பேறுகளையும், பிரமாணிக்கமற்றோருக்கு நிகழவிருக்கும் தண்டனைகளையும் அவர்களுக்கு விளக்குகிறார்.

( லூக். 9 : 26 )

ஜெருசலேமின் அழிவுக்குப்பின் யூதேய எல்லைகளைத் தாண்டி உலக மெங்கும் கிறிஸ்தவம் பரவும் என்றும் இயேசு அறிக்கையிட்டார்.
( லூக். 9 : 27 )

4. இயேசு மறு உருப் பெறுகிறார் : ( லூக். 9 : 28 — 36 )

இயேசுவுக்கு நிகழவிருந்த பாடுகளையும், மரணத்தையும் பற்றிய முன்னறிவிப்பைக் கேள்வியுற்ற அப்போஸ்தலர் துக்கத்துக்கு ஆளாகினர். ஒருவேளை அவர்களது விசுவாசம் நிலைதளர்ந்திருக்கக்கூடும். இயேசு அவர்களில் பரிவிரக்கம்கொண்டு அவர்களை விசுவாசத்தில் திடப் படுத்தவும், மரணத்தின்பின்னர் வரவிருக்கும் மகிமையை அவர்களுக் குக் காட்டவும் தீர்மானித்தார். அவரில் பழைய சட்டங்கள் நிறைவு பெற்றதையும் அவர்கள் உணரச்செய்து, சிலுவைமரண அதிர்ச்சிக்கு அவர்களைத் தயார்ப்படுத்தவும் அவர் திருவுளம்கொண்டார். இயேசு மறுவுருப்பெற்றபோது இராயப்பர், இயாகப்பர், அருளப்பர் ஆகிய மூவரும் அவருடன் இருந்தனர்.

அவர்கள் கண்ட காட்சி மனித மொழியில் விளங்க முடியாது. இரு உடன்படிக்கைகளும் இயேசுவில் சந்தித்தன. தந்தையாகிய கட வுள் இயேசுவின் போதனைகள், அவரது பாடுகள், மரணம், என்ப வற்றை ஏற்றுக்கொண்டார்.

" இவரே என் மகன், நான் தேர்ந்துகொண்டவர் இவரே.
இவருக்குச் செவி சாயுங்கள்." ( லூக். 9 : 35 )

இன்று...... உலகம் அனைத்தும் கிறிஸ்துவுக்குச் செவி சாய்க்க வேண்டும். இறைவனின் உண்மையான மகன் அவர். இறைவாக்கின ரின் கூற்றுக்களும் போதனைகளும், மோயீசனின் சட்டமும் அவரில் அர்த்தமுள்ளனவாகின்றன. இதனால் நற்செய்தியை ஏற்றுக்கொண்டு, அதைச் செயற்படுத்துவது எமது கடமை.

தியானம் :

1. இறைவன் கிறிஸ்து வழியாக எம்முடன் பேசுகிறார். எனவே நற்செய்தியை நாம் வாசித்து கிறிஸ்துவை அறியும்போது இறை வனைச் சந்திக்கிறோம்.

2. கிறிஸ்துவைப் பின்செல்பவன் மரணம் வரையும் அவருக்குப் பிரமாணிக்கமாய் இருக்க வேண்டியவன்.

3. இறைவன் வகுத்த திட்டத்தின்படி, மீட்பின் மறைபொருளாக இருப்பவை : கிறிஸ்துவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு மூன்றுமாகும். கிறிஸ்தவன் இதில் பங்குகொள்ள வேண்டியவன்.

4. இயேசு மறுவுருப் பெற்றமை நாமும் உயிர்ப்போம் என்பதற்கு முன்னடையாளம்.

5. கிறிஸ்துவைப் பின்செல்லுதல் சுலபமானதல்ல. வெறும் மனித வலு மட்டும் இதற்குப் போதாது. விசுவாச ஒளியும், நலன் பெறுவோம் என்ற நம்பிக்கையும், அன்பின் ஆற்றலும் கிறிஸ்தவனது அன்றாட வாழ்க்கைக்கு இன்றியமையாதன.

நீங்கள் செயற்பட :

1. நீங்கள் என்னை யார் என்று சொல்லுகிறீர்கள் — இந்த வினவை இயேசு உம்மிடம் இன்று கேட்டால் என்னவிடை தருவீர் ? இதை உமது பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.

2. இன்றைய உலகில் கிறிஸ்துவின் வீரர்கள் — என்ற தலைப்பின் கீழ் கதை ஒன்று எழுதுக.

3. நீர் ஒரு கிறிஸ்தவன்.... பின்வரும் சூழ்நிலைகளில் என்ன செய்வீர் என எழுதுக.

அ. நீர் பசியுடன் பாடசாலைக்குப் போகவேண்டி வந்தால்...

ஆ. கொடிய வியாதியால் நீர் பீடிக்கப்பட்டு வருந்தினல்...

இ. உமது நண்பர்களில் ஒருவர் உமது நற்பெயருக்கு இழிவு உண்டாக்கினல்...

அலகு : 20

# மெசியா போதிக்கிறார்

## 1. தீய ஆவி பிடித்த பையன் : ( லூக். 9 ; 37 — 43 )

இயேசு மறுவுருப்பெற்றபோது உடன் இருந்து பார்க்காத அப்போஸ்தலர்களிடம் இயேசு பின்னர் சென்றார். பேய்களை அகற்றுவதற்கு அவர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர். 'ஆனால் தீய ஆவியால் பீடிக்கப்பட்ட ( காக்காய் வலியுள்ள )' இந்தப் பையனைச் சுகமாக்க அவர்களால் முடியவில்லை. இதனால் மக்கள் அவர்களைப் பார்த்துக் கேலிசெய்தனர். எனவே இயேசு அவனில் இரக்கங்கொண்டு அவனைக் குணமாக்கினார். அப்போஸ்தலர் குணமாக்க முடியாமற் போனதற்குக் காரணம் அவர்களின் விசுவாசக் குறைவேயாகும். மேலும் செபத்தில் நிலைகொள்ளாததுடன், தவ வாழ்வையும் மறந்திருந்தனர்.

விசுவாசமற்ற சீர்கெட்ட தலைமுறையே... என்று இயேசு குறிப்பிட்டது தமது அப்போஸ்தலர்களையும், யூத இனத்தவரையும் பற்றியேயாகும். இஸ்ராயேலரின் விசுவாசக் குறைவைப்பற்றி இயேசு ஏமாற்றம் அடைந்தார்.

கிறிஸ்தவனின் விசுவாசம் எத்தகையதாக் அமையவேண்டும் என்பதற்கு இந் நிகழ்ச்சி ஒரு வழிகாட்டியாக அமைந்துள்ளது. செபத்தின் தேவையையும், தபத்தின் முக்கியத்துவத்தையும் இது உணர்த்துகிறது. இன்றைய நவீன சமுதாயத்தில் படிப்படியாகக் குறைந்து கொண்டுபோகும் விசுவாசத்திற்கு புத்துயிர் ஊட்டும்படி இறைவனை வேண்டுதல் எமது கடமை.

## 2. துன்புறும் ஊழியன் : பாடுகளின் இரண்டாம் அறிவிப்பு ( லூக். 9 : 44 – 45 )

கலிலேயா நாட்டில் தான் ஆற்றிய பணியை முடித்துக்கொண்டு ஜெருசலேமுக்குச் செல்ல இயேசு தீர்மானித்தார். இரண்டாவது தடவையாக இயேசு தனது பாடுகளையும், மரணத்தையும் முன்னறிவிக்கிறார். ஆனால் அவரது அப்போஸ்தலர்களோ அதை விளங்கும் ஆற்றல் இன்னும் பெறாதிருந்தனர். மீட்பர் இயேசு கூறியதற்கு சொல்லுக்குச் சொல் ஆகப் பொருள் கொள்ள அவர்கள் அஞ்சினர்.

ஏழை, எளியோரின் வாழ்வில், வருந்தும் சகோதரர்களின் வாழ்வில்... இன்று கிறிஸ்து சிலுவையை அனுபவிக்கிறார். என்பதை எம்

மில் ஒரு சிலரே அறிகின்றனர். எமது மீட்புப்பணியின் முக்கியத்து வத்தை உணர முடியாதவர்களாக நாம் வாழ்கிறோம்.

3. யார் பெரியவன் : ( லூக். 9 : 46 — 48 )

இயேசு மறுவுருப் பெற்ற மாபெரும் நிகழ்ச்சியை இராயப்பர், இயாகப்பர், அருளப்பர் என்ற அப்போஸ்தலர் மூவருமே கண்டனர். இது மற்றைய அப்போஸ்தலர்களின் பொறாமையைத் தூண்டியிருக்க லாம். இதனால் தங்களுள் தலைவன் அல்லது பெரியவன் யார் என்ற வாக்குவாதம் அப்போஸ்தலர்களிடையே ஏற்பட்டது. தமது அரசு தாழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டது என்பதை அவர்கள் அறியச் செய்யவேண்டும் என இயேசு திருவுளங் கொண்டார். ஒரு குழந்தை யின் இயல்பை விளக்கி அதன்வழியாக இந்தப் பேருண்மையை இயேசு படிப்பித்தார். குழந்தை கபடற்றது; தூயது; தாழ்ச்சியுள்ளது; நேர் மையும், அமைச்சலும் நம்பத்தக்க பண்பும் இதன் இயல்பு. தன் பெற் றோரை மதிக்கும் பண்பும் குழந்தைக்கு உண்டு; தான் வாழ்வதற்கு அது பெற்றோரில் முழுமையாகத் தங்கியிருக்கிறது. நாம் கடவுளிடம் கொள்ளவேண்டிய உறவு குழந்தை பெற்றோரிடம் கொண்டுள்ள தொடர்பை ஒத்தது என இயேசு எடுத்துக் காட்டுகிறார். இறையரசில் எல்லாரும் சமத்துவமுள்ளவர்கள்; பதவி வேறுபாடுகள் அங்கு இல்லை. இறைவனின் பிள்ளைகள் சகோதரத்துவம் என்ற பிணைப்பினால் இணைக் கப்பட்டு, ஒரே மனத்தினராய் வாழவேண்டியவர்கள்.

"உங்கள் அனைவருள் சிறியவன் எவனோ, அவனே பெரியவன்..."

உண்மையான கிறிஸ்தவன், சிறியோர் ஒருவருக்குப் பணிபுரியக் கிடைத்தாலும் அதைப் பெரும் பேறாகக் கருதுபவன் இறைவனின் கீழ் பணிபுரிதலுக்கு அடையாளமாய் இருத்தலே தாழ்ச்சி ஆகும்.

தியானிப்பதற்கு :

1 இயேசு எமக்குக் கருணை காட்டுபவர். எனவே என் அயலார் மட்டில் நான் கருணையுள்ளவனாய் இருப்பேன்.

2. செபம், உண்ணா நோன்பு, தவம் என்பவற்றைக் கிறிஸ்தவன் மதிக்கவேண்டும். நானும் ஆன்மாவுக்கு நன்மைதரும் இச் செயல்களில் இயன்ற அளவு ஈடுபடுவேன்.

3. ஏழைகளுக்கும், உதவி வேண்டியோர்க்கும், சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோர்க்கும் பணிபுரிந்து வாழ முயல்வேன். என்னி

லும் மற்றையோர் பெரியவர்கள் என்ற எண்ணம் உள்ளவனாக் வாழ்வேன்.

உங்கள் பதில் என்ன :

1. உமது ஊரில் பேய் பிடித்த ஒருவன் இருந்தால் நீர் என்ன செய்வீர் ?

2. தமது பாடுகளையும், மரணத்தையும் இயேசு ஏன் முன்னறிவித்தார் ?

3. மெசியாபற்றி அப்போஸ்தலர்கள் என்ன நினைத்தனர் ?

4. வகுப்புத் தலைவன் ஆக நீர் ஆக்கப்பட்டால், லூக். 9 : 48-ல் உள்ளபடி நீர் எப்படி ஒழுகுவீர்.

அலகு : 21

# மெசியா போதிக்கிறார்

## 1. உங்களுக்கு எதிராக இல்லாதவன் உங்கள் சார்பானவன் : ( லூக். 9 : 49 — 50 )

பேய்களை அகற்றும் அதிகாரம் அப்போஸ்தலர்களுக்கு அளிக்கப் பட்டது. ஆனால் இயேசுவின் பெயரால் பேய்களைத் துரத்தும் இன்னொருவனை அப்போஸ்தலர்கள் சந்தித்தனர். அவனை அவ்விதம் செய்ய வேண்டாம் என்று அவர்கள் தடுத்தனர். அப்போஸ்தலர்களின் சார்பில் அருளப்பர் இயேசுவுக்கு இவ்வாறு கூறினர்.

> " குருவே, ஒருவன் உம் பெயரால் பேயோட்டுவதைக் கண்டு அவனைத் தடுக்கப் பார்த்தோம். ஏனெனில் அவன் நம்மைச் சாராதவன்." ( லூக். 9 : 49 )

கடவுள் பெயரால் நன்மை செய்பவர்களை தடுக்கவேண்டாம் என இயேசு அவர்களுக்கு மொழிந்தார். அந்த மனிதன் இயேசுவின் சீடனாகாதபோதும், இறைவனில் விசுவாசம் உள்ளவனாக இருந்தான் என்பதை இயேசு அறிந்திருந்தார். இதனால் அவனது செயல் சரியானதே என இயேசு கருதினர். " உங்களுக்கு எதிராக இல்லாதவன் உங்கள் சார்பாக இருக்கிறான். ( லூக். 9 : 50 )

இறைவன் பெயரால் நற்செயல்கள் புரிவது கிறிஸ்தவனுக்கு மட்டும் உள்ள தனி உரிமை அன்று. நன்மை செய்தல் அனைவருக்கும் பொதுவானது. எனவே பிற மறைகளைச் சார்ந்தோர் தாங்கள் அறியாமலேயே நற்பணிகளை ஆற்றும்போது, நாங்கள் அவர்களை மதித்து நடக்க வேண்டியது எம் கடன் என்பதை இயேசு நினைவூட்டுகிறார். நன்மை புரிதல் மனித உரிமைகளில் ஒன்று. அதை நாம் மதிக்க வேண்டும்.

## 2. சமாரிய ஊரில் எதிர்ப்பு : ( லூக். 9 : 51 — 52 )

சமாரியா வழியாக இயேசு ஜெருசலேம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தார். ஆனால் சமாரியர் அவரைத் தடுத்தனர். கெரெசீம் மலையில் அவர்களுக்கென்று கோவில் ஒன்று இருந்தது. எனவே தங்கள் ஊர்வழியாக ஜெருசலேம் தேவாலயத்துக்கு இயேசு செல்வதை அவர்கள் விரும்பவில்லை. இதனாலேயே சமாரியர்கள் இயேசுவும் அவரது சீடர்களும் தம் ஊரால் செல்ல அனுமதி வழங்கவில்லை.

அவருடைய சீடர்களான யாகப்பரும், அருளப்பரும் இங்ஙனம் தாங்கள் அவமரியாதை அடைவதைக் கண்டு சினங்கொண்டனர். இதனால் அவர்கள், இயேசுவை நோக்கி,

"ஆண்டவரே இவர்களை அழிக்க வானத்திலிருந்து நெருப்பு விழும்படி நாங்கள் சொல்லவேண்டுமென்று விரும்புகிறீரா? என்று கேட்டனர்."

பகைவர்களையும் மன்னித்து, அன்புசெய்ய வேண்டுமென்று இயேசு கற்பித்த அரும் பெரும் கட்டளையை அவர்கள் மறந்திருந்ததே இவ்வாறு அவர்களைக் கேட்கத் தூண்டியது. எனவே அவர்களுடைய மனக் கடினத்தை இயேசு கண்டித்தார்.

இயேசுவைப் பின்செல்லும் நாம் பழிக்குப்பழி வாங்கும் சிந்தை உடையோராய் என்றுமே வாழாதிருப்போம். எமக்குத் தீங்கு இழைக்கும் பகைவரையும் மன்னித்து வாழ்வோம்.

### 3. சீடனாய் இருப்பதற்குத் தகுதியற்றோர்: (லூக். 9 : 57 — 62)

இயேசு பெருமான் ஏழையாக வாழ்ந்தவர். அவரது சீடர்கள் இதை அறிந்திருக்க வேண்டும். தலைசாய்க்கவும் அவருக்கென்று சொந்த இடம் இருக்கவில்லை. உலகைச்சார்ந்த அலுவல்களைக் கவனிப்பதற்கு அவருக்கு நேரம் இருக்கவில்லை. கலப்பையில் கை வைத்தபின் திரும்பிப் பார்ப்போரை அவர் விரும்பவில்லை. தமது வாழ்வையும், தம் ஆற்றல் அனைத்தையும் இறையரசின் பணிக்காக முழுமையாக அர்ப்பணித்து வாழ்ந்தவர் அவர். எனவே அவரைப் பின்செல்பவர் உடனடியாக அவரின் மறைபணியில் ஈடுபடவேண்டும். தந்தையின் பிரேத அடக்கம்கூட தாமதத்துக்குப் பொருத்தமான சாக்குப்போக்கன்று. அவன் தன் தந்தையையும், தாயையும். நண்பர்களையும் விட்டு விலகி இறைபணியில் ஈடுபடவேண்டும். கலப்பையில் கை வைத்த பலஸ்தீன உளவன், சால் அல்லது உழும் பாதை நேராக அமைய அதையே பார்த்துக் கொண்டிருப்பான். இதேபோல இறையரசில் பணியாற்ற விழைபவர் முன்நோக்கிப் பார்க்கவேண்டுமேயன்றி, அக்கம் பக்கமோ பின்னுக்கோ பார்க்கக்கூடாது. தாம் மேற்கொண்ட பணியில் கண்ணுங் கருத்தும் கொண்டு ஊக்கமுடன் உழைக்க வேண்டும்.

கிறிஸ்தவ அழைத்தலுக்கு ஏற்ப வாழுதல் எத்துணை கடினமானதென இந் நிகழ்ச்சி வாயிலாக அறிகிறோம். அர்ப்பண வாழ்வை மேற்கொள்ள விரும்பாத சீடன், தனது அழைப்பின் இயல்பைப் புரிந்து கொள்ளாதவன். எனவே கிறிஸ்துவின் ஆற்றல் மிக்க சீடனாய் இருக்க விரும்புபவன் ஏழ்மையை ஏற்று, அதைக் கடைப்பிடிக்க முன்வருதல்

அவசியம். உலகப் பொருட்களில் கிறிஸ்தவன் மதிமயங்கி வாழக்கூடாது. மனிதனிலும் மேலாக இறைவனை மதிப்பவனாக அவன் வாழவேண்டும். மதிமேற் பூனையாக இருமனங்கொண்டு வாழக்கூடாது. அவனது வழி நேரானதும் தெளிவானதுமாகும்.

நினைவில்கொள்வதற்கு :

1. நன்மை செய்வதில் ஈடுபட்டுள்ள கிறிஸ்தவர் அல்லாதவர்க்கு உதவி செய்யும்போது இறையரசைப் பரப்பத் துணைபுரிகிறோம். அவர்களைப் புகழ்வதும் ஊக்குவிப்பதும் எம் கடமை.

2. எமக்குத் தீங்கு இழைப்பவர்களை மன்னித்தல் ஒரு கிறிஸ்தவப் பண்பு. 'நியாயத் தீர்ப்பு' இறைவனுக்கு மட்டும் உரிய செயல். ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும் கட்டி யெழுப்ப மன்னிப்பும், அன்பும் எமக்குத் துணை செய்யும். பகைமையோ வெறுப்போ எம்க்கு உதவாதன.

3. கிறிஸ்துவுக்குச் சான்றுபகர முன்நிற்பேன். நான் கிறிஸ்துவுக்கு என்னை அர்ப்பணித்து, கடவுளின் உண்மையான பிள்ளையாக வாழ்வேன்.

3. இறை அரசுக்காக உழைத்தல் — இதுதான் என் வாழ்வின் இலட்சியம். வாழ்நாள் முழுவதும் இதைக் கடைப்பிடிப்பேன்.

விடை எழுதுக :

1. பிற மதங்களைச் சார்ந்த, சக மாணவர்களிடம் உள்ள நல்ல பண்புகளைக் காட்டும் ஒரு அட்டவணை தயாரிக்குக.

2. மன்னிப்பதன் மதிப்பு — என்ற தலைப்பில் சிறுகதை அல்லது உமது வாழ்வில் நடந்த நிகழ்ச்சி ஒன்று எழுதுக. வகுப்பில் நடித்துக் காட்டுக.

| நல்ல கிறிஸ்தவன் | கெட்ட கிறிஸ்தவன் |
|---|---|
| 1. வறுமையை ஏற்றுக்கொள்ளல் | |
| 2. இறைவனில் விசுவாசம் கொள்ளல். | |
| 3. புகழ்ச்சியை வெறுத்துத் தள்ளுதல். | |
| 4. பகைவரை மன்னித்து அன்பு செய்தல். | |
| 5. கிறிஸ்தவர்களல்லாத நண்பர்களை மதித்து நடத்தல். | |

அலகு : 22

# எழுபத்திரண்டு சீடர்களின் பணி

## 1. கிறிஸ்துவின் சீடர்கள் : (லூக். 10 : 1 — 12)

இந்நிகழ்ச்சியை லூக்காஸ் மட்டும் குறிப்பிடுகிறார். இங்கு கூறப் படுவது ஏற்கனவே 9 : 1 — 6இல் லூக்காசினால் கூறப்பட்டுள்ளது. உண்மையான மறைபரப்பாளன் அல்லது சீடனின் பண்புகளே இப் பகுதியில் இடம் பெற்றுள்ளன. ஆனால் சீடர்கள் அயராது உழைக்க வேண்டுமென்பது இங்கு கூடுதலாக வற்புறுத்தப்படுகிறது.

அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு. இது இன்றைக்கு மிகவும் பொருத்தமானது. இன்றைய சமுதாயத்தில் விசுவாசம் மறைந்துபோவதைக் காண்கிறோம். கிறிஸ்தவர்கள் சிலருக்கு மீளவும் நற்செய்தியைப் போதிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. குருத்துவ அழைத்தலும், துறவற அழைத்தலும் அருகிக்கொண்டு வருதலை நோக் கும் நாம் துயரடையாது இருக்க முடியாது. பொதுநிலையினர் பலர் அப்போஸ்தலப் பணியில் ஆர்வம் இல்லாதோராய் வாழ்கின்றனர். எனவே கிறிஸ்துவின் நல்லுரையைப் பின்பற்றித் தம் அறுவடைக்கு அதிகம் வேலையாட்களை அனுப்பும்படி அறுவடையின் ஆண்டவரை வேண்டுதல் எம் கடமை.

இன்று, கிறிஸ்தவ மதிப்பீடுகளைப் படிப்படியாக எறிந்து வாழ முற்படுகின்றோம். மக்கள் மிருகங்கள்போல வாழ்கிறார்கள். இறைவ னில் அக்கறை அற்ற பலர் எம்மத்தியில் உளர். இறைவனின் வார்த் தையை அவர்கள் இகழ்ச்சியாக மதிக்கின்றனர் எனவே... இத்தகைய மக்களுடன் உரையாட, ஆழ்ந்த விசுவாசப் பற்றுள்ள மறைபரப்பா ளர் இன்று தேவைப்படுகின்றனர். அம்மக்களின் இதயங்களில் விசுவாச விதையை மீளவும் விதைக்க ஆர்வமுள்ள சீடர்கள் பலர் முன்வர வேண்டும். இந்தப் பாரிய பொறுப்பை ஏற்க விரும்புகிறீரா? இத்த கைய அழைப்புக்காக அறுவடையின் ஆண்டவரை வேண்டத் தயக்கம் கொள்கிறீரா? இதுபற்றி உமக்குள்ள கடமையைச் சிந்தித்துப்பார்.

## 2. விசுவாசம் இல்லாத நகரங்கள் : (லூக். 10 : 13 — 16)

கொராசின், பெத்சாயிதா, கப்பர்நகூம் என்ற நகர்களில் வாழ்ந்த மக்கள் இயேசுவின் நல்லுரைகளைக் கேட்கும் பேற்றைப் பெற்றிருந்த னர். அவர் ஆற்றிய அருஞ்செயல்களுக்கும் அவர்கள் சாட்சிகளாக இருந்தனர். ஆனால் மனம் மாறுவதற்கும், வருந்துவதற்கும் அவர்கள்

மனமில்லாதிருந்தனர்; இறையரசை வேண்டாமென மறுத்து வாழ்ந்தனர். இதனுல் அவர்களுக்கு நிகழவிருந்த கேடுகளைப்பற்றி இயேசு லூக். 10 : 13 — 15இல் பேசுகிருர். இயேசு தமது சீடர்களை புற இனத்தவர்க்கு இறையரசை அறிவித்து, அவர்களுடன் சகோதரத்துவமும் ஒன்றிப்புங்கொண்டு வாழ அனுப்பினுர். ( காண்க லூக். 10 : 6-7 ) மீட்பின் நற்செய்தி அனைவர்க்கும் உரியது என்பதை இது காட்டுகிறது. இது எமக்கு ஒரு எச்சரிக்கையாகவும் அமைகிறது எனலாம். எமது கிறிஸ்தவ அழைத்தலுக்குப் பிரமாணிக்கம் அற்றோராய் வாழ்ந்தால், நாமும் அவரது அரசை இழந்துவிடுவோம். ( லூக். 10 : 15 )

அறிந்த பின்பும் இறையரசை மறுத்து வாழ்தல் பிழையாகும். இறைவனை மறுப்பதும், இறையரசை மறுப்பதும் ஒன்றே. மறை பரப்பாளருக்கு உதவ முன்வராவிடில் பாவம் கட்டிக்கொள்கிறோம். கிறிஸ்தவ அழைம்புக்கு இது ஒவ்வாத செயல்......

> " உங்களுக்குச் செவி சாய்ப்பவன் எனக்குச் செவி சாய்க்கிருன். உங்களைப் புறக்கணிப்பவன் என்னைப் புறக்கணிக்கிருன். என்னைப் புறக்கணிப்பவனே என்னை அனுப்பியவரையே புறக்கணிக்கிருன்." ( லூக். 10 : 16 )

### 3. சென்றவர் திரும்புகின்றனர் : ( லூக். 10 : 17 — 20 )

இறையரசைப் போதித்தமை அலகையின் அழிவுக்குத் தொடக்கமாக விளங்கிற்று.

விண்ணிலிருந்து விழும் மின்னலைப்போல சாத்தான் விழுவதைக் கண்டேன்...... இவ்வித கூற்றுகள் பலவற்றைப் பழைய ஏற்பாட்டிலும் காண்கிறோம். ( யோபு 1 : 6 ; சக்கரி 3 : 1 ) தனது தந்திரமிக்க விவாதத்தினுல் இறைமக்களின் வளர்ச்சியைத் தடுக்க சாத்தான் எவ்வளவுக்கு முனைகிருன் என்பதை இவை விளக்குகின்றன.

தூய வாழ்வு ஒரு போராட்டமே. ஆனுல் கிறிஸ்துவின் பிரமாணிக்கமுள்ள சீடர்கள் வெற்றியை அடைந்தே ஆகவேண்டும். அவரைப் பின்செல்வோர் ஏமாற்றமடையாதவர்களாக வாழ வேண்டும். தனது ஆற்றலைப்பற்றி அகங்காரம் கொள்ளல் ஆகாது . ஏனெனில் இவ்ஆற்றலைத் தருபவர் இறைவனே. கிறிஸ்துவின் விசுவாசம், நம்பிக்கை, அன்பில் பங்குகொள்ள அழைக்கப்பட்டதினுல் அவன் மகிழ்ச்சி கொள்ளவேண்டும்.

" தீய ஆவிகள் உங்களுக்கு அடங்கி இருங்கின்றன என்று மகிழ வேண்டாம், ஆனுல் உங்கள் பெயர் வானத்தில் எழுதிஉள்ளது என்றே மகிழுங்கள்.'' ( லூக். 10 : 20 )

**4. இயேசு பெருமகிழ்வு அடைகிருர் : ( லூக். 10 : 21 — 24 )**

கிறிஸ்துவின் மறைபொருளின் உண்மை இங்கே ஓரளவு வெளிப் படுத்தப்படுகிறது. அவரில் செயற்பட்ட மூவொரு கடவுளின் அன்பு நாம் விளங்கமுடியாத புதிர், உலக ஞானிகளுக்கு இது மறைக்கப்பட் டுள்ளது. விசுவாசிகளுக்கும் கபடமற்ருேர்க்கும் இந்த மறைபொருளே வெளிப்படுத்தல் இறைவனது திருவுள்ளமாகும். மூவொரு கடவுளின் அன்பு விசுவாசம் உள்ளோர்க்கே புலனுகும் தன்மையது.

(லூக். 10 : 21 )

எளியவர்களும் தாழ்ச்சியுள்ளவர்களும் தமது விசுவாசத்தின் வழி யாகத் தெய்வீக வாழ்வை அனுபவிக்கின்றனர். இறைவனைச் சார்ந்த நல்லோர் அவர்கள் தந்தையும் மகனும் கொண்டுள்ள அன்பு மனித புத்திக்கு எட்டாதது. தந்தையும் மகனும் அன்றி வேறு எவரும் இதை வெளிப்படுத்த முடியாதவர் ( காண்க லூக். 10 : 22 ) எனவே கிறிஸ்தவ மறைபொருளேப் புரிந்துகொள்வதற்கு விசுவாசமும், தாழ்ச்சி யும் வேண்டுமேயன்றி உலகப் படிப்பல்ல என்பது விளங்குகின்றது. ஏழைகளும் தாழ்ச்சியுள்ளோருமாகிய நீங்கள் காண்பதைக் காணுங் கண்கள் பேறுபெற்றவை. ( காண்க லூக். 10 : 24 ) ஆபிரகாமின் வழி வந்தோர் மெசியாவுக்காகக் காத்திருந்தனர். ஆனுல் அவர்கள் காணவில்லை. கிறிஸ்து இறைவாக்கு களுக்கு வெறும் விடைமட்டுமன்று. கோடிக்கணக்கான மக்களது இதயங்களிலிருந்த நம்பிக்கைக்கும் ஆறுத லுக்கும் நிறைவேற்றம் ஆகவும் விளங்குகிருர்.

சிந்திப்போம் :

1. இன்றைய சமுகத்தில் மீட்பின் செய்திக்குச் சான்ருக வாழ்ப வர்கள் ஒரு சிலரே. இதற்கு நானும் பொறுப்பு. எனவே இயேசுவை மேலும் அறிந்து அவரைப்போல் வாழ்வேன்.

2. இறைவனின் திருவுளத்தை அறிய நான் என்றும் முயல்வேன். அப்போது இறைவனின் பிள்ளையான நான் இறையரசுக்கு என்ன செய்யவேண்டும் என்பதை அறிவேன். எனது அழைப்பை நான் விளங்க வல்லவனுக வாழ எனக்கு ஒளி தருமாறு இறைவனை வேண்டுவேன். முதியோரின் நல்லுரை களையும் கேட்பேன்.

3. பல்வேறு திறமைகளையும், ஆற்றல்களையும் எனக்கு அருளிய இறைவனுக்கு நன்றி உள்ளவனாக வாழ்வேன். தற்பெருமையை அகற்றி இறைவனுக்கும், அயலவர்க்கும் பணிபுரிய என் திறமைகளைப் பயன்படுத்துவேன்.

4. நீதி வாழ்வு ஒரு போராட்டம் ..... அலகைக்கும், பாவத்துக்கும் எதிரான போர்...... ஆனால் நான் சோர்ந்து போகமாட்டேன். கிறிஸ்துவின் வெற்றி என்னுள் இருக்கிறது. எனவே இறைவனில் நம்பிக்கை கொண்டு விசுவாசம், நம்பிக்கை அன்பில் வளர்ந்து வாழ இயன்ற அளவு முயல்வேன்,

5. தெய்வீக வாழ்வின் மறைபொருளை அறிய, நான் என்னைத் தாழ்த்தி வாழ்வேன். விசுவாசத்திற்கு உயர்ந்த மதிப்பளித்து வாழ என்னைப் பயிற்றுவேன் சமய நிகழ்ச்சிகளில் மரியாதையுடன் நான் பங்குகொள்வேன்.

விடை தருக!

1. லூக். 10 : 32ஐ வாசித்து கிறிஸ்துவின் அறிவுரைக்குத் தொடர்பாக நீர் செய்யக்கூடியவற்றை எழுதுக.

2. புனித வாழ்வு வாழ முயல்பவர்களை எதிர்ப்பவர் யார்?

3. பலஸ்தீனாவின் படம் வரைந்து பின்வரும் இடங்களைக் குறித்துப் பெயரிடுக.
   அ. கொராசிம் ஆ. பெத்சாயிதா இ. கப்பர்நகூம்

4. குருத்துவம், துறவற வாழ்வு, பொதுநிலையினர் அப்போஸ்தலத்துவம்... என்பவற்றிற்கு மேலும் பலர் அழைப்பைப் பெற ஒரு செபம் எழுதுக.

5. நீர் அலகையை எதிர்த்துப் போராட வேண்டியவன். உமது வகுப்புத் தலைவன் கத்தோலிக்க தமிழ் மன்றம் ஒன்று அமைக்கத் திட்டமிடுவதைச் சிலர் எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்பை எவ்விதம் முறியடிப்பீர் என எழுதுக.

அலகு : 23

# முடிவில்லா வாழ்வு பற்றிய கேள்வி

**1. நல்ல சமாரியன் :** (லூக். 10 : 25 — 37)

முடிவில்லா வாழ்வுபற்றி மனிதன் கனவு காண்கிறான். அதற்காக ஏங்குகிறான். அதுபற்றி மேலும் மேலும் அறிய அவன் விரும்புவதில் எவ்வித வியப்புமில்லை. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த சட்டவல்லு னன், இயேசுவிடம் கேட்ட கேள்வி இன்றைய உலகிலும் எதிரொலி க்கிறது.

> "போதகரே முடிவில்லா வாழ்வுபெற நான் செய்யவேண்டிய தென்ன ?" (லூக். 10 : 25)

மனிதன் நித்தியத்துக்கும் வாழ — இறக்காது இருக்க — விரும்பு கிறான். எனவே அவன் விஞ்ஞான ஆய்வுகூடத்தில்... ஆய்வுகளை நிகழ்த்துவதில் அதி ஊக்கத்துடன் உழைக்கிறான். முதுமை அடையக் காரணம் என்ன ? வயோதிபத்தைத் தடுத்து நிறுத்தலாமா ? மரண த்தை நாம் மேற்கொள்வோமா ? உடலின் அழிவு இயற்கையின் தன் மையா ? இது இயற்கையானதா ? இவை போன்ற பல்வேறு வினுக் கள் மனிதனை வாட்டுகின்றன. அவற்றிற்கு விடை காணத் தன்னால் ஆனதெல்லாம் செய்கிறான். தனது சொந்த வல்லமையைப் பயன்ப டுத்தி விடை காண முயல்கிறான் மனிதன். விஞ்ஞானம் இதற்கு விடை தரும் என முழுமையாக அவன் நம்புகிறான்.

இறவாப் பெருவாழ்வைத் தேடுதல் என்பது மனித வரலாற்றில் மாறி மாறி நிகழும் ஒரு நிகழ்ச்சி, அது மனித இயல்பிலே உள்ள ஒரு தூண்டுதல். மனிதனைக் அவதரித்த இறைவன், சட்ட வல்லுன னின் கேள்வியை, மாற்றி அவனையே வினவினார் ;

> "திருச்சட்ட நூலில் என்ன எழுதியுள்ளது. அதில் என்ன வாசிக்கிறீர் ? ( அவற்றிற்கு எப்படிப் பொருள் கொள்கிறீர் )" (லூக். 10 : 26)

COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P. O. BOX 601

'சேமா' என்று அழைக்கப்பட்ட காலை இறை வழிபாட்டை யூதர்கள் பெரிதும் மதித்துவந்தனர். அவர்களது நாளாந்த அலுவல் களைத் தொடங்குவதற்கு முன் தங்கள் பொறுப்புக்கள்பற்றி அவர்கள் ஆழ்ந்து சிந்தித்தனர்.........

(i) "உன் கடவுளாகிய ஆண்டவருக்கு உன் முழு உள்ளத்தோ டும், முழு ஆன்மாவோடும், முழு வலிமையோடும், முழு மனத்தோடும் அன்பு செய்வாயாக" (உபாகமம் 6 : 5)

(ii) "உன்மீது நீ அன்பு காட்டுவதுபோல உன் அயலான்மீதும் நீ அன்பு காட்டுவாயாக" (லேவி 19 : 18)

சட்ட வல்லுனன் திருச்சட்ட நூலை அறிந்திருந்தான். எனினும் இயேசுவை மேலும் வினவுகிறுன்.

என் அயலான் யார்? ...... இயேசு என்ன விடை கூறவேண்டு மென அவன் எதிர்பார்த்திருப்பான். யூத இனத்தவர், மனந்திரும்பி யோர், புற இனத்தவர் ... என இயேசு கூறுவார் என்பது அவன் எண்ணம். இவ் வினவுக்கு இயேசு அளித்த விடையை அவன் எதிர் பார்க்கவில்லை. பரிசேயர்களின் அகங்காரத்தையும் சட்டவல்லுனரின் போலி வேடத்தையும் இயேசு கண்டித்தார். முடிவில்லா வாழ்வின் அடையாளங்கள் எளிய சமாரியனின் வாழ்வில் அமைந்திருப்பதை எடுத்துக் காட்டினுர். முடிவில்லா வாழ்வு பெறுபவன் இறைவனை அனைத்திலும் மேலாக அன்பு செய்வான். தம்மீது அன்பு காட்டுவது போல, அயலாரையும் அன்பு செய்வான். இவ்வித அன்பு முழுமை யானது; தன்னலமற்றது. அடக்கவோ தடுக்கவே முடியாது. இறை வனின் உண்மையான பிள்ளைகளுக்கு அடையாளமாக இருப்பது அன்பு.

அன்பு — காமம் அன்று

அன்பு — பயனை எதிர்நோக்கும் வெற்று நட்பன்று

அன்பு — கூடா எண்ணத்துடன் சேர்ந்த முகத்துதி அன்று.

உண்மையான அன்பு முழுமையான தியாகம் தன்னை முழுமையா கக் கொடுப்பது அன்பு. அன்பு பிரதிபலனை எர்பார்ப்பதில்லை. பிற ருக்கு வாழ்வும், நம்பிக்கையும் கொடுக்க விரும்பும் ஓர் ஆவலே அன்பு. இவ்வித அன்பை வேண்டி நிற்கும் எம் அயலார் எவர்? மனிதர் அனை வரும் என் அயலவர், எதையும் எதிர்பாராது அனைவரையும் நான் அன்பு செய்வேன். எனது அன்புக்குச் சாதி, சமய இன வேறுபாடு கள் தடையாக இரா. நான் உண்மையான கிறிஸ்தவன் ஆக வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டியவை:

1. உதவி தேவைப்படுபவனை அறிதல்.

2. அவனது துன்பத்தின் அளவைப் புரிந்து கொள்ளுதல்.

3. அவனில் பரிவு கொள்ளுதல்.

4. அவனது கேட்டில் இருந்து அவனை விடுவித்தல்.

5. தன்னை மறந்து, உதவி தேவைப்படுபவர்களின் நலனுக்காக நேரத்தையும், சக்தியையும் அர்ப்பணித்தல்.

6. சமுதாயத்தில் உதவி வேண்டியவர்களுக்கு நன்மைபுரியும் நல்லெண்ணத்தை உருவாக்கல்.

7. செல்வம், நேரம், சக்தி என்பவற்றை வேறுபாடின்றித் தியாகம் செய்தல்.

இவற்றிலிருந்து எமது பொறுப்பு மிகவும் பெரிதென்பது எமக்குத் தெளிவாகிறது. உண்மையான ஒருமைப்பாட்டுக்கு இறை அன்பும், அயலார் அன்பும் அவசியமானவை. நல்ல சமாரித்தன் உவமை வழியாக இயேசு படிப்பிக்கும் உண்மை இதுவே. நாம் கொண்டுள்ள இறை வாழ்வின் அளவுகோலாக அமைவது அயலார் மட்டில் உள்ள அன்பாம்.

## 2. நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்த நங்கை :

( லூக். 10 : 38 — 42 )

மார்த்தாளும், மரியாளும் சமுதாயத்தில் என்றுமே வாழ்பவர்கள். அவர்கள் இயேசுவின் நாட்களில் மட்டும் வாழ்ந்தவர்கள் அல்லர். விசுவாசம் என்ற போர்வையில் வெளிச் சடங்குகளில் — ஈடுபட்டவர்களாகப் பலர் வாழ்கின்றனர். பெருமளவாக வெளிப் பகட்டு ........ அவர்களது விசுவாசத்துக்குத் தேவை என நினைக்கின்றனர். இதனால் சிறிது சிறிதாக அவர்களது விசுவாசம் ஆழமற்றுப் போய்விடும். இறுதியில் விசுவாசம் அற்றவர்களாகி வாழவும் தலைப்படுவர். எனவே அவர்களது பிழையான போக்கை எடுத்துக்காட்டி, நல்வழிக்குக் கொண்டு வருதல் எம் கடமையாகும்.

விசுவாசத்தின் அத்தியாவசிய பண்புகளைக் கைக்கொள்வோர் ஒரு சிலரே இன்றைய சமுதாயத்தில் வாழ்கின்றனர். அவர்கள் பல்வேறு அலுவல்களைப் பற்றி அக்கறை உள்ளோராய் இருக்கின்றனர். இதனாலும் இறை அரசு பாதிக்கப்படுகிறது. மறையரப்புபணியின் நோக்கு சமுகசேவை அன்று. இறையரசைக் கட்டியெழுப்ப சமுகசேவை கருவி

யாக அமைகிறதென்பது உண்மை. எனினும் அதுதான் எமது இறுதிக் குறிக்கோள் அல்ல. நற்செய்தி ஆன்மீக அரசை நோக்கமாக உடையது. உலக அல்லது சடப்பொருள் அரசை நிறுவுதல் அதன் நோக்கன்று. மார்த்தாவும், மரியாளும் இவ்விரு அரசுகளுக்கு அடையாளமாக விளங்குகின்றனர். சரியான அடையாளத்தை — ஆளை — பின்பற்றுதல் எம் கடமை.

"ஆனால் தேவையானது ஒன்றே. மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்துகொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது."

( லூக். 10 : 42 )

கிறிஸ்து மொழிந்த நல்லுரையை எம் மனத்தில் இருத்தி வாழ்வோம்.

ஆழ்ந்து சிந்திப்போம் :

காண்க : 1. அருளப்பர் 4 : 20 — 21, 3 : 14 — 15,
3 : 17 — 18.
1. யாகப்பர் 1 : 22

விடை தருக

1. முடிவில்லா வாழ்வை வெளிப்படுத்தும் முக்கிய வழிகள் எவை ?
2. உண்மை அன்பின் பண்புகள் பற்றி லூக். 10 : 33 — 35ஐ வாசித்தபின் எழுதுக.
3. உதவி வேண்டியவன் ஒருவன் உம்மிடத்தில் உதவி கேட்டால் எவ்விதம் ஒத்தாசை புரிவீர் ?
4. 'அன்பு, பொறுமை கொள்ளாது' என்ற தலைப்பில் ஒரு கதை எழுதுக. அல்லது இது தொடர்பாக உமது அனுபவம் ஒன்று எழுதுக.

அலகு 24:

# மெசியா போதிக்கிறார்

## ( அத்தாட்சியுடன் )

### 1. செபம் பற்றிய இயேசுவின் போதனை : (லூக். 11 : 1 — 13)

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையில் நிகழும் உரையாடலே செபம் ஆகும். தன் மனத்தையும் இருதயத்தையும் இறைவன்பால் எழுப்பும்போது இறைவனின் பராமரிப்பை மனிதன் அபரிமிதமாகப் பெறுகிறான். 'கொடுத்தலும் பெறுதலும்' செபத்தில் இடம்பெறுகிறது. செபிக்கும் மனிதன் இறைவனிடம் அண்மிச் செல்கிறான். இறைவனை 'அப்பா' என விழிக்கும் பேற்றையும் பெறுகிறான். செபம் மனிதனுக்கு இன்றியமையாதது; இறைவனுக்கல்ல. இறைவனின் பிள்ளையாகிய மனிதன் இறைவனை நம்பி வாழ்தல் நீதியானதே. இது வேதாகமந்தில் சங்கீதம் 146 : 3 — 5 தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இயேசு சீடருக்குக் கற்பித்த செபம் 'இயேசு கற்பித்த செபம்' என அழைக்கப்படுகிறது. இது நிறைவானதொரு செபம் சிறப்பான பண்புகளை உள்ளடக்கியது. ஆண்டவரின் செபம்... .....

1. இறைபுகழ் ... ... தந்தாய் உமது பெயர் பரிசுத்தம் எனப் போற்றப்படுக.

2. வணக்கம் ... ... உமது அரசு வருக.

3. விண்ணப்பம் ... ... எங்கள் அன்றாட உணவை எமக்கு நாள்தோறும் அளித்தருளும்.

4. மன்னிப்பு வேண்டுதல் ... எங்கள் பாவங்களை மன்னித்தருளும்.

5. இறைவன் பராமரிப்பில் நம்பிக்கை ... ... எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்.

இந்தச் செபம் தந்தைக்கும் மகனுக்குமிடையில் நிகழும் ஓர் உரையாடல் ஆகும். தனது படைப்பாளனான இறைவனை இச் செபத்தின் வழியாக மனிதன் புகழ்கிறான். இது தகுதி என்பதற்கு வேதாகமமே சான்று...... (காண்க சங் 99 : 1 — 3)

உன்னத வணக்கம் இறைவனுக்குரியது. வேறு எவரும் இந்த உன்னத வணக்கத்துக் குரியவர் அல்லர், ( காண்க சங். 94 ; 6 — 7 )

இறைவன் இரக்கமுள்ளவர். நல்லவற்றை அவர் எமக்குத் தருகிறார் பாவியான மனிதனே தன் பிள்ளைகளுக்கு நன்மை செய்கிறான் அல்லவா ? அவ்வாறாயின் எம் இறைவனாகிய ஆண்டவர் எவ்வளவு மேலான அளவில் எம்மில் அக்கறை கொள்வார்... பின்வரும் யேசுவின் கூற்று இதையே தெரிவிக்கிறது. ( காண்க லூக். 11 : 13 )

பாவி, இறைவன் முன் தன்னைத் தாழ்த்தித் தனது பாவங்களுக்காக உண்மையான துக்கத்தை அவருக்கு வெளிப்படுத்த வேண்டும். ( சங். 50 : 1 — 2 )

கிறிஸ்தவ வாழ்வு உலகம், அலகை, ஊனியல்பு என்பவற்றிற்கு எதிரான போராட்டமாகும். எனவே சோதனை வேளைகளில் இறைவனிடம் புகலிடம் தேடுவது பாதுகாப்புக்காக அவரிடம் செல்வது-நமக்கு நல்லது. சங்கீத ஆசிரியர் இதை எமக்குப் படிப்பித்துள்ளார். அவர் கூற்றை ( சங். 17 : 4 — 17இல் காண்க )

இடைவிடாது விடாப்பிடியாகச் செபிக்கவேண்டியதன் அவசியத்தை எமக்கு விளக்குவதற்காக இயேசு ஓர் உவமையைக் கூறினார் ( லூக். 11 : 5 — 8 ) இந்த உவமை வழியாக நாம் ஊக்கம் பெற முடியும். உண்மையான விசுவாசத்தில் இருந்து தோன்றும் செபம் உறுதியாகக் கேட்கப்படும். பதில் அளிக்கப்படும்.

> " மேலும் உங்களுக்குச் சொல்லுகிறேன் : கேளுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் ; தேடுங்கள், கண்டடைவீர்கள் ; தட்டுங்கள் உங்களுக்குத் திறக்கப்படும்." ( லூக். 11 : 9 )

**2. இயேசுவும் பெயல்செபூலும் :** ( லூக். 11 : 14 — 23 )

கிறிஸ்து தந்தையின் உன்னத அடையாளமாக விளங்குகிறார். தந்தையின் மகிமை அவரது பரிசுத்ததனம், அவரது வல்லமை என்பன மகனின் வழியாக ஏற்படுத்தப்பட்டன. இதை ஏற்றுக்கொள்ள முன்வராத யூதர்கள்,

> " பேய்கள் தலைவனான பெயல்செபூலைக்கொண்டே
> இவன் பேய் ஓட்டுகிறான்."

என்று இயேசுவைப்பற்றிப் பேசிக்கொண்டனர்.

கடவுளின் அல்லது பரிசுத்த ஆவியின் வல்லமைக்கு எதிராகப் பேசி பாவம்செய்தல் மகா பாதகமாகும். கிறிஸ்து ஆற்றிய அருஞ் செயல்கள் அலகையின் அரசின் அடையாளங்கள் அன்று ஆனால் இறை அரசின் அடையாளங்களே என்பதை நாம் அறிவோம்.; அவர் இறை வல்லமையால் பாவங்களை மன்னித்தாரே அன்றி, தீயோனின் அதிகாரத்தாலன்று. இதை ஏற்றுக்கொள்ளாதிருப்பது பாவம் ஆகும்.

இறைவனின் உண்மையான அடையாளம் கிறஸ்து என்பதை அறிந்தும் ஏற்றுக்கொள்ளாது, நாம் மேலும் அடையாளக்களைக் காட்டுமாறு கேட்டல் பிழையாகும். எமது விசுவாசமின்மையையே இது காட்டுகிறது.

தனக்கு எதிராகத் தானேபிரியும் சாத்தானின் அரசு எப்படி நிலைக்கும். – தேர்ந்தெடுத்த மக்களை இயேசு இப்படி வினவுகிறார். அவிசுவாசத்திலிருந்து அவர்கள் மீளத் துணைபுரிவதற்காகவே இயேசு இவ்விதம் வினவினார். ஆனால் அவர்களோ காதிருந்தும் செவிடர்போல் நடந்தனர்.

> "நான் பேய்களை ஓட்டுவது பெயல்செபூலைக் கொண்டு என்றால் உங்கள் மக்கள் யாரைக்கொண்டு ஓட்டுகிறார்கள். எனவே அவர்களே உங்களுக்குத் தீர்ப்பிடுவார்கள்."

நீங்கள் கூறுலது பிழை என உங்கள் மக்களே நிரூபிக்கிறார்கள். மனம் மாறுங்கள் என இயேசு விடுத்த மற்றொரு அழைப்பு இது. ஆனால் அவர்கள் பொறாமையும், வெறுப்பும் மனம் மாறத் தடையாக இருந்தன. யூதர் அரசியல் அடையாளம் ஒன்றை வேண்டி நின்றனர். அரசியல் விடுதலை அளிக்கும் மெசியாவையே அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். ஏழ்மையும், கபடமின்மையும் உருவான உண்மை மீட்பரை அவர்கள் இழிவான ஒருவராகக் கருதினர்.

வருங்காலத்தில் என்றாலும் அவர்கள் மனமாற்றம் பெறுதலை இயேசு விரும்பினார். இதனால் இயேசு கூறுவார்,

> "நான் பேய்களை ஓட்டுவது கடவுளின் விரலால் என்றால், கடவுளின் அரசு உங்களிடம் வந்துள்ளது. (லூக்கா. 11 : 20)

இறையரசில் நாங்கள் உறுப்பினர் ஆக வேண்டின், கிறிஸ்துவின் வார்த்தைகளில் விசுவாசம் கொள்ளவேண்டும். (காண்க லூக். 11:21-22) கிறிஸ்துவின் வார்த்தையை மறுப்பவன் இறையரசின் பகைவன் ஆகிறான்.

" என்னோடு இல்லாதவன் எனக்கு எதிராய் இருக்கிறான் என்னோடு சேகரிக்காதவன் சிதறடிக்கிறான்," ( லூக். 11 — 23 )

### 3 தீய ஆவி திரும்பி வருதல் : ( லூக். 11 : 24 — 26 )

அலகை இடுகாடுகளிலும், வரண்ட பாலைவனங்களிலும் வாழ்ந்ததாக யூதர்கள் நம்பிவந்தனர், இன்னும் வீட்டைவிட்டுத் துரத்தப்பட்ட தீய ஆவிகள் அலைந்து திரிவதாகவும் அவர்கள் கருதினர்.

" அசுத்த ஆவி ஒருவனைவிட்டு வெளியேறியபின் வரண்ட இடங்களிலெல்லாம் சுற்றி அலைந்து இளைப்பாற இடம் தேடியது."
( லூக். 11 : 24 )

இயேசுவின் இவ்வார்த்தைகள் உவமை வடிவில் அமைந்துள்ளன. பரிசேயர் யூத இனத்தைத் தவறான நெறியில் இட்டுச்சென்றனர். ஆனால் மீட்பரின் வருகையால் தீமையின் செல்வாக்கு விரட்டி அடிக்கப்பட்டது. இருந்தும் அலகை இஸ்ராயேலர் மத்தியில் செல்வாக்குப் பெறலாம் என எண்ணியது. அலகையின் எண்ணம் நிறைவேறியிருந்தால், தேர்ந்தெடுக்கப்பட்ட இனத்தின் நிலை இழிவடைந்திருக்கும். மிக் விரைவில் இவ் வார்த்தைகள் மெய்யாயின.

### 4. அன்னைமரிக்குப் புகழ் :

இயேசு ஆற்றிய வியத்தகு செயல்களைக் கண்டோரும், அவரின் போதனைகளைக் கேட்டோரும் அவரைப் புகழ்ந்திருப்பார்கள். இவற்றைக் க்ண்டதும் கூட்டத்தில் இருந்த பெண் ஒருத்தி இயேசுவின் அன்னைமரியைப் புகழ்ந்தாள். ( லூக். 11 : 27 ) யூதரின் பழைய வழக்கப்படி பெண் ஒருத்தி தாய்மை எய்துதல் அவளின் பெருமைக்கு அளவுகோலாக இருந்தது. மலடிகள் இழிவாகக் கருதப்பட்டனர். பிள்ளைகள் பலரைப் பெற்ற அன்னை பெருமைப்படுத்தப்பட்டாள். அவர்கள் தாய்மையைப் போற்றி வாழ்ந்தனர். வழிவந்த வழக்கத்தை ஏற்ற இயேசுவும் தமது தாயைப் புகழ்ந்தார். இறைவனின் திருவுள்ளத்தைத் தாழ்ச்சியுடனும், அமைச்சலுடனும் ஏற்று வாழ்ந்தமைக்காக அவர் அவளைப் பாராட்டினார். அவருடைய தாய் இறைவனின் வார்த்தைகளைத் தொடர்ந்து தியானித்து வந்தாள்.

"இந் நிகழ்ச்சிகளை எல்லாம் தன் உள்ளத்தில் கொண்டிருந்தாள்."
( லூக். 2 ; 51 )

அன்னை மரியாயின் தாழ்ச்சியும், அமைச்சலும் யூதத் தலைவர்களின் தற்பெருமைக்கும், தப்பறையான கருத்துகளுக்கும் முரணாக அமைந்தன. நாள்தோறும் இறைவார்த்தையை வாசித்து, அதை இடையிடையே தியானித்தல் ஆன்மீகத்தில் வளர்வதற்கு அவசியம் என்னும் பாடத்தை நாம் இதன் வழியாகப் படிக்கிறோம். விவாதம் எங்களை இறைவனிடமிருந்து பிரிக்கிறது. விசுவாசமோ இறைவனை நாடிச்செல்ல உதவுகிறது. இறைவனின் வார்த்தைக்கு ஏற்ப வாழ்தல் எமக்குக் கிடைக்கும் பெரும் பேறாகும்.

> " ஆயினும். கடவுளுடைய வார்த்தையைக் கேட்டுக் கடைப்பிடுப்பவர்கள் அதிலும் பேறுபெற்றவர்கள்." (லூக். 11 : 28)

உன் வாழ்க்கைக்கு :

1. செபத்தின் வழியாக விசுவாச வாழ்வை வெளிப்படுத்தவும், வலுப்பெறவும் கற்றுக்கொள்க.
2. கிறிஸ்துவின் வழியாக இறைவனை வேண்டுக. தொல்லை வேளைகளில் தொடர்ந்து செபிக்குக.
3. உங்களைப் புனிதமாக்கும் இறைவனுக்கு நன்றி நவில்க. தற்பெருமையைக் கொள்ளற்க.
4. இடையிடையே நற்செய்தியை வாசித்து, அதற்கு இயைய வாழ முயல்க.
5. தனது இரத்தத்தையும், பாலையும் தந்து உமக்கு உயிரளித்த அன்னையைப் போற்றி வாழ்க,

விடை எழுதுக ;

1. கர்த்தர் படிப்பித்த செபத்தில் காணப்படும் சிறப்பான பண்புகள் எவை ?
2. கிறிஸ்தவனுக்கு செபம் ஏன் அவசியம் ?
3. தூய ஆவிக்கு எதிரான பாவம் எது ?
4. உமது அன்னையைப் புகழ்ந்து ஒரு பாடல் எழுதுக.
5. மற்றவர்களின் பெற்றோருக்காகவும் செபித்தல் அவசியம், உமது குறிப்புப் புத்தகத்தில் இதற்கான செபம் ஒன்று எழுதுக.

அலகு : 25

# அடையாளங்கள்

## 1. யோனாஸ் இறைவாக்கினரும், மனுமகனும் :

(லூககாஸ் 11 : 29—32)

எம் ஆண்டவராகிய இயேசு யூதர்கள் மட்டில் எத்துணை பரிவாக இருந்தார் என்பதை இந்நிகழ்ச்சி வாயிலாக அறிகிறோம். நினிவே மக்களை இறைவாக்கினரான யோனாஸ் காப்பாற்றியதுபோல' தாம் யூத மக்களைக் காப்பாற்றுவேன் என இயேசு அவர்களுக்கு உரைத்தார்.

" எவ்வாறு யோனாஸ் நினிவே மக்களுக்கு அருங்குறியாய் இருந்தாரோ, அவ்வாறே மனுமகனும் இத்தலைமுறைக்கு அருங்குறியாய் இருப்பார் "

(லூக்காஸ் 11 : 30.)

இயேசுவை அண்டிவந்த ஏழைகளும், ஒடுக்கப்பட்டோரும் அவரே மீட்பர் மெசியா என்ற உண்மைக்குச் சான்றாக இருந்தனர். ஆனால் அவர்களின் தலைவர்களோ அடையாளங்களை அருங்குறிகளை வேண்டி நின்றனர். இதனால் அவர்களுக்கு நிகழ இருந்த தீர்ப்பைப்பற்றி இங்கு எச்சரிக்கிறார்......

" தீர்வையின்போது தென்னாட்டு அரசி இத்தலைமுறையில் மக்களுக்கு எதிராக எழுந்து, இவர்களைக் கண்டனம் செய்வாள்.''

(லூக். 11 : 31.)

சாபா அரசி தூரஇடத்தில் இருந்து சாலமோன் அரசனிடம் ஞானம் பெறுவதற்காகச் சென்றிருந்தாள். ஆனால் இயேசுவோ சாலமோனி லும் மேலானவர். நினிவே மக்கள் காலத்தில் அருங்குறிகளைப் புரிந்து கொண்டு, யோனாஸ் இறைவாக்கினரின் நல்லுரைகளைக் கேட்டு மனந் திரும்ப முன் முனைந்தனர். ஆனால் மீட்பரான கிறிஸ்துவோ யோனா சிலும் மேலானவர். அவரை ஏற்றுக்கொள்ளாத யூதர்கள் இதனால் விண்ணரசை இழந்தனர்.

## 2. விளக்கின் உவமை (லூக். 11 : 33—36.)

திருமுழுக்கு அருளப்பரின் போதனை வழியாகவும், கிறிஸ்துவின் அரும்பெரும் நல்லுரைகள், அவர் ஆற்றிய புதுமைகள் வாயிலாகவும் இறைவன் விசுவாச ஒளியை யூத இனத்தவர்மீது ஒளிரச் செய்தார். இந்த ஒளியைப் புரிந்துகொள்ளும் ஆற்றலையும் இறைவன் அவர்களுக்கு அருளினார். ஆனால் இஸ்ராயேல் மக்களோ இறைவன் செய்தவற்றை வியந்து போற்றத் தவறினர். இறைவனின் நன்மைத்தனத்தை ஏற்க மறுத்தனர்.

விசுவாச ஒளியை மனிதனுக்கு அளிக்கவே இயேசு இவ்வுலகுக்கு வந்தார். இல்வொளியைச் சிலர் கண்டுணராது வாழ்கின்றனர். இது அவர்களின் தவறுதலே அன்றி இயேசுவின் குற்றம் அன்று. மனிதனின் இருண்ட இதயம் ஒளியை ஏற்பதில்லை (லூக். 11 : 33.)

உடல் நலமாக இருப்பின் கண்ணும் நலமாக இருக்கும். அதே போன்று நேர்மையான இதயம் உள்ளவன் உண்மையை ஏற்பான். ஆனால் தீமையினால் உள்ளம் இருண்டிருப்பவன் வாழ்நாள் முழுவதும் பாவத்தில் உழலுவான். எனவே தமது தப்பறைகளை நீக்கப் பரிசேயர் முன்வருவார்களாயின் இறைவார்த்தையை அவர்கள் விரும்பி ஏற்பர் (காண்க லூக். 11 : 34.)

தீய விருப்பங்களுக்கும் நாட்டங்களுக்கும் நாம் அடிமைப்படாது வாழ்வோம். நன்மையைக் கடைப்பிடிக்கச் சிரத்தைகொள்வோம். இது எமக்குள்ள கிறிஸ்தவக் கடமையாகும். இங்ஙனம் ஒழுகின் கிறிஸ்தவ உண்மை ஒளி எம்முள் பரவும்...... இதைப் பிறர்க்கும் பரவச் செய்வோம். காண்க : (லூக். 11 : 35.)

### 3. அகத் தூய்மை (லூக்காஸ் 11 : 37—54.)

உண்மையான பரிசுத்ததனம் அகத்தூய்மையில் தங்கியுள்ளது. வெறும் புறத்தூய்மைக்கும் இதற்கும் தொடர்பில்லை. மனிதர் கைக்கொள்ளும் பழக்கவழக்கங்கள் பல வாழ்வின் புறச்செயல்களை அடிப்படையாகக் கொண்டவை. அவற்றை அணுவும் தவறாது கடைப்பிடிப்பவன் உள்ளத்தில் தூய்மை அற்றவனாக இருக்கக்கூடும். புறத்தூய்மை அகத்தூய்மையைக்காட்டும் கண்ணாடி அன்று. காண்க:(லூக். 11:33-41)

என்ன நோக்கத்தைக்கொண்டு நாம் செயலாற்றுகிறோமோ அதற்குத் தக செயல் பாவமாகவோ அன்றேல் புண்ணியமாகவோ அமையும். செயலின் நோக்கே செயலின் தகைமையை அளக்கும் கோலாகும்.

அன்பை அடிப்படையாகக்கொள்ளாத ஈதலும், புண்ணியங்களும் பயனற்றவை. உலகம் போற்றும் என்பதற்காகப் பலர் நல்லவற்றைச் செய்கின்றனர். பாவ இதயம் உள்ளவன் வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை போன்றவன் (லூக். 11 : 44). சட்டத்தை எழுத்தெழுத்தாகக் கைக்கொண்டால் மீட்பை அடைந்துவிடமாட்டோம். எனவே அநீதியான செயல்களினால் பிறரைச் சுரண்டி வாழ்வோர் வேடதாரிகள் என்பதைக் காட்டுகின்றனர். புதிய இஸ்ராயேலரின் தலைவர் இயேசுவுக்கும் பழைய இஸ்ராயேலரின் தலைவர்களான சட்டவல்லுநர்க்கும் பரிசேயர்க்கும் இடையில் பெரும் வேறுபாடு உண்டு.

| சட்டவல்லுநர், பரிசேயர் | இயேசு |
| --- | --- |
| 1. தற்பெருமையும், அகங்கார மும், தன்னலமும் உடைய வர்கள். | தாழ்ச்சியுள்ளவர்; தன்னல மின்றி வாழ்வையே அர்ப்பணித் தவர். |
| 2. புறச்சட்டங்களை மதித்து, உலக மகிமைகளை விரும்பி னர். சமுதாயநீதி, உண்மை, இவற்றைக் கடைப்பிடியா தோர். | செயலில் பெருமையைத் தேடாது உண்மைக்காக வாழ்ந்தவர். |
| 3. ஏழைகளைச் சுரண்டுவதற்கா கவும், சுயநலத்திற்காகவும் சட்டங்களையும், சடங்குகளை யும் பயன்படுத்தினர். | மனிதனை அடிமைத்தனத்திலி ருந்து மீட்டு அன்புக்கும் மன்னிப் புக்கும், உண்மையான வழிபாட் டிற்கும் முக்கியத்துவம் அளித்த வர். |
| 4. போலிப் பக்தியுடையோராய் இறைவனைப்பற்றிய தப்பறை யான கருத்துக்களை அளித்த னர். | உண்மைக்கும், வழிபாட்டிற்கும், இறைவனுக்கும் நன்முறையில் சான்று பகர்ந்தவர். |
| 5. உண்மைக்குச் சான்றுபகர்ந் தவர்களைக் கொன்றனர். | உண்மைக்காகத் தம் உயிரையே அளித்தவர். |

தியானம் : ஆன்ம உடல் நற்செயல்களைக் குறிப்பிடுக.

**இறைவன் மட்டில் எமக்குள்ள கடமைகள் :**

1. கடவுள் இருக்கிறார் என்ற உண்மையை ஏற்று வாழ்தல்—விசுவாசம்
2. அவரை முழுமையாக நம்பி வாழ்தல் —நம்பிக்கை
3. அவரில் வாழ்தல் —இறை அன்பு

நாம் பெற்ற கிறிஸ்தவ அழைப்புக்கு ஏற்ப வாழும் முறை இது வாகும். இதை ஏற்று வாழாத கிறிஸ்தவன் குறிக்கோள் இன்றி வாழ் பவன் ஆவான்.

விடை தருக :

1. ஏன் அடையாளங்கள் வழியாக இறைவன் தம்மை எமக்கு வெளிப் படுத்தினர். சில அடையாளங்களைத் தருக.
2. இயேசு இறைவனின் உன்னத அடையாளமெனப்படுகிறார். ஏன் ?

3. இறைவாக்கினர் யோனுஸ், இறைமகன் இயேசு இருவர்க்குமிடையில் உள்ள தொடர்பு என்ன ?

4. விளக்கின் உவமையால் நீர் விளங்குவது என்ன ?

5. உமது உடன் மாணவர்க்குப் புத்தி புகட்டுவதற்காக உமது குற்றங்களில் ஒன்றை வகுப்பு ஆசிரியர் உமது முன்னிலையில் சுட்டிக் காட்டினல் உமக்கு எவ்வித உணர்ச்சிகள் உண்டாகும்.

1. எனக்கு ஏற்பட்ட அவமானத்தால் கோபப்படுவேன்..........

..........................................................

அவ்வேளையில் உமது கிறிஸ்தவ உணர்ச்சி எப்படி அமைய வேண்டும்..........................................................

..........................................................

அலகு : 26

# கிறிஸ்தவ மதிப்பீடுகள்—1

## 1, கபடதாரிகளுக்கு எச்சரிக்கை :

(லூக்காஸ் 12 : 1—3.)

பசுத்தோல் போர்த்த புலி, குடிப்பது தண்ணீர் கொப்பளிப்பது பன்னீர், பேச்சு பல்லக்கு தம்பி கால்நடை ..... போன்ற பழமொழிகள் ஒருவரின் வாழ்வில் உள்ள முரண்பாடுகளைக் காட்டும் கூற்றுக்களாகும். இவ்விதம் வாழ்பவர்களை இரட்டை வாழ்வு வாழ்வோர் என்று கூறுகிறோம். இரட்டை வாழ்க்கை கிறிஸ்தவனுக்கு ஏற்றதல்ல. நாம் 'இறைவனின் பிள்ளை' என்பதற்கு அடையாளமாக அமைவது நேர்மை. இறைமக்களின் முதன்மையான புண்ணியமும் இதுவே. நமது நினைவு. சொல். செயல் என்பவற்றை இறைவன் அறிகிறார். எனவே உள் ஒன்று வைத்துப் புறம் ஒன்று பேசுவதினால் எவ்வித பயனும் இல்லை. (காண்க லூக். 12 : 1—2.)

எங்கள் எண்ணங்களை அறிந்து, அவற்றிலிருந்து எம்மை விடுவித்தல் நமது கிறிஸ்தவக் கடமையாகும். சமுதாயத்தில் சக்தி படைத்தோர் அல்லது உயர் மட்டத்திலுள்ளோர் கூடா ஒழுக்கத்தைக் கைக்கொண்டு அதனால் ஏனையோர்க்குத் துர்மாதிரியாக நடப்பார்களாயின் அக்குற்றங்களை எடுத்துக்காட்டி, அவற்றைத் திருத்த அவர்களுக்கு உதவுதல் எம் கடனாகும். இவ்விதம் நடப்பின் இறையரசு பரவத் துணை செய்கிறோம். சிறப்பாக இறைவனுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள் தீமைக்கு ஆளாகியிருந்தாலும் அவற்றை நாம் எதிர்த்துப் போராட வேண்டும். அவர்களின் வெளிவேடங்களை வெறுத்து ஒதுக்கவேண்டும். தகுதியற்ற தலைவர்களைப் பின்பற்ற வேண்டாமென இயேசு எம்மை எச்சரிக்கிறார் (லூக். 12 : 1.)

## 2. அஞ்சுவது யாருக்கு ? (லூக்காஸ் 12 : 4—7.)

இவ்வுலகில் வாழும் இறைமக்கள் பல துன்பங்கள், தீமையின் தாக்குதல்களுக்கு ஆளாகின்றனர். இதைக் காணும் மற்றவர்களுக்கு இவை புரியாத புதிராகின்றன. இதனால் இறைமக்கள் மேலும் துன்புறுத்தப்படுகின்றனர். இவ்வித சோதனைகளால் அயர்வு அடையாது, புனிதத்துவத்தில் நிலைகொள்ளத் தொடர்ந்து நாம் போராடவேண்டும் எனக் கிறிஸ்து விரும்புகிறார். விடுதலைபெற விடாமுயற்சி அவசியம்.

நாம் கொண்டுள்ள இறைவாழ்வை அழிக்கும் உரிமை உலகில் எந்த சக்திகளுக்கும் இல்லை. எம்மை நரகத்திற்குத் தீர்ப்பிடவும் இச்சக்திகள் வலுவற்றவை. ஆனால் இறைவனுக்கு இவ்வல்லமை உண்டு. எனவே

இறுதிவரையும் இறைவனுக்குப் பிரமாணிக்கமுள்ளோராய் நாம் வாழ வேண்டும். (காண்க : லூக். 12 : 4—5.)

நீதி உள்ளவனைக் கடவுள் பாதுகாத்து வருகிறார். முடிவில்லாப் பெருவாழ்வுக்கு அவன் உரிமையானவன். மிகக்குறைந்த விலையுள்ள குருவிகளையே பாதுகாத்துவரும் இறைவன், மேலான பெறுமானம் உள்ளவனான மனிதனை — இறைவனின் சாயலாகவும், மாதிரியாகவும் படைக்கப்பட்ட எம்மை – உறுதியாக மறக்கவேமாட்டார். என லூக்காஸ் ஒப்பிட்டுக் காட்டுகிறார். (காண்க : லூக். 12 ; 6—7.)

நாம் உய்த்துணரவேண்டிய மூன்று படிப்பினைகள் இப்பகுதியில் உள்ளன. இவ்வுலகில் வாழும் நாம் உண்மையான விசுவாசத்துக்குச் சான்று பகர முன்வரவேண்டும். இறை பராமரிப்பில் நாம் கொள்ளும் நம்பிக்கை உறுதியானதாக அமையவேண்டும். உலக வாழ்விலும் தெய்வீக வாழ்வு மதிப்பீடுள்ளது என்பதை உணர்ந்து அதை விரும்பி வாழவேண்டும்.

### 3. கிறிஸ்துவுக்குச் சான்று பகர்தல் :

(லூக்காஸ் 12 : 8—12.)

நாளாளாந்த வாழ்வில் இடம்பெறும் பிரச்சனைகளின்போது கிறிஸ்தவத்தைப்பற்றி வெட்கப்படுதல், விசுவாசக்குறைவை-ஆழமில்லாத விசுவாசத்தைக் காட்டும் அடையாளமாகும். ஆனால் இன்றைய சமுதாயத்தில் பலர் இவ்விதமே நடக்கின்றனர். பிரச்சினைகளுக்குக் கிறிஸ்தவ முறையில் தீர்வுகாண விழையாது, மனித முறையில் தீர்வு காண்பதுடன் திருப்தியும் அடைகின்றனர். கிறிஸ்தவன் இத்தகைய நடத்தையைக் கைக்கொள்ளல் பாவமாகும். கொடுந்தண்டனைக்கு இவர்கள் ஆளாவார்கள். (காண்க : லூக். 12 : 8—9 )

கிறிஸ்துவை வெற்று மனிதனாகவே கருதி வாழும் கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம். அவர்கள் பரிதாபத்துக்குரியவர்கள். ஆனால் தூய ஆவியிலும், இறைவனின் வெளிப்பாட்டிலும் ஐயம்கொள்ளும் கிறிஸ்தவன் முன்னையவனிலும் இழிந்தவன். அவனது பாவம் பாரதூரமானது. பரிசுத்த ஆவியைப் பழிப்பவனோ மன்னிப்புப் பெறான். (லூக். 12:10) சிக்கல்கள் எம்மை வாட்டும்போது அல்லது வாழ்வுப் பிரச்சினைகள் எதிர்கொள்ளும்போது தூயஆவி எம்முடன் தங்கி, எம் வழியாகச் செயலாற்றுகிறார். அவரில் விசுவாசம்கொண்டு, எம்மில் அவர் செயலாற்ற அனுமதித்தல் எமது கடனாகும். (காண்க : லூக். 12:11-12)

நீங்கள் இவ்விதம் தீர்மானிப்பீர்களா ?

1. என் சிந்தை, சொல். செயல் என்பவற்றில் என்றும் நேர்மையுடன் ஒழுக முயல்வேன்.

2. போலி வேடத்தினால் உலகை ஏமாற்றுவோரது தீமைகளைப் பிறர் அறியச் செய்வேன்.

3. இறைவனின் பராமரிப்பில் ஐயம் கொள்ளேன்.

4. உண்மை விசுவாசத்திற்கு நான் என்றுமே சான்று பகர்ந்து வாழ்வேன்.

5. என்னில் செயலாற்றும் பரிசுத்த ஆவியை மதித்து வாழப் பயில்வேன்.

விடை எழுதுக :

1. 'இரட்டை வாழ்வு' வாழ்வோரைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள் ? இவ்வித வாழ்வைக் கிறிஸ்தவனுன நீர் ஏற்றுக் கொள்வீரா ?

2. ஒருவன் தனது பெலவீனம், குறைபாடுகளை அறிதலால் வரக் கூடிய நன்மைகளை அட்டவணைப்படுத்துக.

3. தேவ பராமரிப்பு உண்மையென்பதைக் காட்ட உமது வாழ்வில் நிகழ்ந்த நிகழ்ச்சி ஒன்றை விளக்குக.

அலகு : 27

# கிறிஸ்தவ மதிப்பீடுகள்—II.

## 1. பணம் வாழ்வு அளிக்குமா? (லூக்காஸ் 12 : 18—21)

"போதகரே, என் சகோதரன் என்னுடன் சொத்தைப் பங்கிட்டுக்கொள்ளுமாறு சொல்லும்." (லூக். 12 : 13.)

தந்தை விட்டுச் சென்ற சொத்தைப் பங்கிட்டுக்கொள்ள விரும்பிய இளைய மகன், தனது அண்ணனின் சம்மதத்தைப் பெற்றுத் தரும்படி இயேசுவை வேண்டினன். உலக அலுவல் ஒன்றில் தலையிட்டு உதவுமாறு இயேசுவைக் கேட்டுக்கொண்ட ஒரே நிகழ்ச்சி இது. மோயீசனின் சட்டப்படி தந்தையின் பொருள் பண்டங்களின் மூன்றில் இரண்டு பாகம் மூத்த மகனைச்சேரும். தன் தாயையும், மணமாகாத சகோதரிகளையும் மூத்தவனே பராமரிக்கவும் கடமைப்பட்டிருந்தான். தந்தையின் ஆஸ்திகள் அனைத்தையும் இந்நிகழ்ச்சியில் வரும் மூத்த மகன் தனதாக்கிக்கொண்டிருக்கலாம். தனக்குச் செல்வம் கிடைக்காததால் மனம் கலங்கிய இளைய மகன், இயேசுவிடம் பொருளைப் பங்கிடத் தனக்கு உதவுமாறு கேட்டான். ஆனால் உலக நீதிபதியாகத் தம்மைக் கருதாத இயேசு இப்பிணக்கைத் தீர்க்க முன்வரவில்லை. ஆனால் உலக செல்வங்களில் பேராசைகொள்ளுதல் தவறு என்ற பேருண்மையை எமக்குப் படிப்பிக்க இயேசு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினர். (காண்க : லூக். 12 : 15.)

இந்தப் படிப்பினையை உறுதிப்படுத்த விரும்பிய இயேசு அறிவற்ற செல்வனின் உவமையைத் தொடர்ந்து கூறினர். இவ்வுவமையில் கூறப்பட்டுள்ள செல்வன் தன்னலத்தில் ஊறியவன். தன்னைப்பற்றியே அக்கறை நிறைந்தவனாக வாழ்ந்த அவன் ஏழை எளியவர்களைப்பற்றிய எண்ணம் சிறிதும் அற்றவன.

"எனது விளைச்சல் முழுவதையும் ....... சேர்த்து வைக்க
என் களஞ்சியங்களை இடிப்பேன். ..........
என் உடைமை, கோதுமை எல்லாம் சேர்த்து வைப்பேன்
என் நெஞ்சே நீ எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று
எனக்கு நான் சொல்வேன் ........"

'தான்' என்ற எண்ணத்தில் அவன் அக்களித்திருந்தான். எனவே அவன் தன்னலம் மிகுந்தவன், தனது செல்வத்தைத் தெய்வமாகக் கொண்டமையால் அவன் அறிவிலி எனப்பட்டான். அழிந்துபோகக் கூடிய உலக செல்வங்களில் பெரும் நம்பிக்கைகொண்டு அவன் வாழ்ந்

தான். ஆனால் கடவுளைப்பற்றிய அறிவில் ஒன்றுமே இல்லாத ஏழையாக இருந்தான். தனது ஆன்மாவுக்கு ஓய்வு கொடுக்கவும் அவன் எண்ணினான். இறைவனை அவன் மறந்தேவிட்டான்.

"இன்றிரவே உன் உயிரை வாங்கப்போகிறார்கள்........"

பாவம் அந்தச் செல்வன். எவ்வளவு இரங்கத்தக்க முடிவு. உலக செல்வங்களுக்கு அடிமையாகி அவன் முடிவில்லா வாழ்வை இழந்தான், இது எமக்கும் ஒரு பாடமாக அமைகிறது.

தன் தேவைகளுக்காகத் தனிச் சொத்து வைத்திருக்கும் உரிமை மனிதனுக்கு உண்டு. நேரிய வழியில் பணம்தேடும் கடமையும் உள்ளவன் அவன். ஆனால் தனது செல்வத்தைத் தகுந்த வழியில் பயன்படுத்துதல் அவனது கடமையாகும். பிறருக்கும் பயன்படத்தக்கதாகப் பணத்தை அவன் செலவழிக்கவேண்டும். சிறப்பாக வசதியற்றோர்க்கு அவன் உதவவேண்டியவன். ஆனால் ஒருவன் பொருள் பண்டங்களுக்கு அடிமையாகும்போது பாவம் கட்டுகிறான் ; தவறான வழியில் செல்கிறான். செல்வத்தை நல்வழியில் பயன்படுத்துபவன் இறைவனின் திருவுள்ளத்துக்கு இயைய வாழ்கிறான், அவன் இறையரசின் வளர்ச்சிக்காகவும் உழைக்கிறான். 'இறைவனின் பிள்ளை' என்பதற்குச் சான்றாகவும் விளங்குகிறான், (காண்க : லூக். 12 : 21.)

2. இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கை :

(லூக்காஸ் 12 : 22—30.)

உலகப் பொருள்களுக்காக ஏங்கி அலைவதும் தேவையற்ற கவலையில் மூழ்குவதும் இறைவனில் நம்பிக்கை இல்லாமைக்கு அடையாளம். எம்மைப் படைத்த இறைவன் எம்மைப் பராமரித்தும் வருகிறார். அவரின் கண்காணிப்பைப்பற்றி ஐயம்கொள்ளுதல் பாரிய குற்றமாகும். உலக செல்வங்கள்பால் நாம் கொள்ளவேண்டிய கிறிஸ்தவ மதிப்பீடுகள் பல உள. அவைகளில் சில கீழே தரப்பட்டுள்ளன.

— உணவிலும் உயிர்வாழ்வு சிறந்தது. உணவுக்கு அடிமையாதல் மடைமைத்தனம். (லூக். 12:23)

— உடையிலும் உடல் உயர்ந்தது. உடைகளுக்கு அடிமையாதல் மூடனின் பண்பு. (லூக். 12 : 23.)

— படைப்புகளை இறைவன் பராமரிக்கிறார். (லூக். 12 : 24.)

— மனிதன் இறைவனின் அருள் இல்லாது எதுவுமே செய்யமுடியாது. (லூக். 12 : 25—28.)

— படைப்பில் உன்னதமானவன் (உயர்ந்தவன்) மனிதன். கடவுள் அவனைக் கண்காணிப்பார் என்பது உறுதி. (லூக். 12:27,28,30)

— நாங்கள் உணவையோ, பானத்தையோ பற்றிக் கவலைகொள்ளாது வாழவேண்டும். அத்தகைய கவலை கிறிஸ்தவ அழைத்தலுக்கு முரணானது மாறுபட்டது. (லூக். 12 : 29—31.)

### 3. இறை அரசைத் தேடுங்கள் : (லூக். 12:31-34)

கடவுளின் அரசைக் கண்டடையும்படி கிறிஸ்தவன் அழைக்கப்பட்டுள்ளான். இதற்காக அவன் தன் நேரம், சக்தி, ஆற்றல் அனைத்தையும் அர்ப்பணிக்கவேண்டும். உலகிலே அவன் வாழ்ந்து, அதைப் புனிதப்படுத்தவேண்டும். கிறிஸ்து வாழ்ந்ததுபோல அவன் வாழவேண்டியவன். இவ்வாறு உழைப்பவனுக்கு இறைவன் அனைத்தையும் வழங்க முன் வருவார்.

" கடவுளின் அரசையே முதலில் தேடுங்கள்
இவை அனைத்தும் உங்களுக்குச் சேர்த்துக் கொடுக்கப்படும் "
(லூக். 12 : 31.)

அழிந்துபோகாத செல்வங்களையே நாம் தேடவேண்டும். புனிதம் அடைவதும், முடிவில்லாப் பெருவாழ்வைப் பெறுதலுமே எமது நோக்காக வேண்டும்.

" உங்கள் உடைமைகளை விற்றுப் பிச்சையிடுங்கள்
இற்றுப்போகாத பணப்பைகளையும் வானகத்தில் குறையாத
செல்வத்தையும் தேடிக்கொள்ளுங்கள் " (லூக். 12 : 33.)

எம்க்குள்ளவற்றைப் பகிர்ந்து சகோதரர்போல் நாம் வாழ்ந்தால் ' கடவுளின் பிள்ளை ' ஆகச் சான்று பகர்கிறோம். எம் சிந்தனை, சொல், செயல் அனைத்தும் இறையரசை மையமாகக்கொண்டு இயங்கவேண்டும். இதுவே எம் வாழ்வில் முதன்மையான குறிக்கோளாக அமைதல் அவசியம்.

" உங்கள் செல்வம் எங்குள்ளதோ அங்கே உங்கள் உள்ளம் இருக்கும் " (லூக். 12 ; 34.)

தியானம் :

1. எவ்வகைப் பொருளாசையும் கொள்ளாதபடி கவனமாயிருங்கள். ஏனெனில் எவ்வளவுதான் இருந்தாலும் செல்வப்பெருக்கினுல் வாழ்வு வந்துவிடாது. (லூக். 12 : 15.)

2. நாம் வைத்திருப்பவற்றைப் பிறருடன் பகிர்ந்து வாழ்ந்து, கடவுளது அரசைக் கட்டி எழுப்புவதற்குக் கைகொடுத்து உதவுவோம்.

3. உணவைவிட, உயிரும், உடையைவிட உடலும் உயர்ந்தவை. (லூக். 12:23)

4. அழியாத செல்வமான நித்திய வாழ்வை நாம் தேடவேண்டும். உலகப் பொருள்களுக்கு என்றுமே முதன்மை அளிக்காது வாழ்வோம்.

விடை எழுதுக !

1. லூக். 12 : 1-34 ஐ வாசித்து உம் மனதைத் தொட்ட கூற்றுக்களை எழுதுக. ஒவ்வொன்றின் கீழும் நீர் கற்கக்கூடிய பாடங்களைச் சுருக்கமாகக் குறிப்பிடுக.

2. நன்கொடையாக உமக்கு 50 ரூபா கிடைப்பின் லூக். 12:33 படி எவ்விதம் செலவு செய்வீர் ?

3. உமது சொந்த அனுபவத்தில் அல்லது கேள்விப்பட்டதிலிருந்து அறிவற்ற செல்வனின் உவமையில் விவரிக்கப்பட்டுள்ளது போன்ற ஒரு நிகழ்ச்சியை உமது பயிற்சிப் புத்தகத்தில் எழுதுக.

4. 'இறைவனின் பராமரிப்பு' என்ற தலைப்பில் ஒரு பாடல் இயற்றுக.

அலகு : 28

# வரவிருக்கும் கிறிஸ்து

## 1. விழிப்பாயிருத்தல் : (லூக்காஸ் 12 : 35—48.)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அண்மித்துவிட்டது என ஆதிக் கிறிஸ்தவர்கள் கருதி வந்தனர். அவர் வருவதற்கு முன்னர் யூதஇனம் திருச்சபையில் சேருவர் எனவும் எதிர்பார்த்திருந்தனர். கி. பி. 70இல் ஜெருசலேம் தேவாலயம் அழிக்கப்பட்டது ஆனால் யூதர்கள் திருமறையில் சேருவதை அறிந்த ஆதிக்கிறிஸ்தவர்கள் கிறிஸ்து நாம் அறியா வருங்காலத்தில் மீளவும் வருவார் என்ற முடிவுக்கு வந்தனர். ஆனால் எல்லா வழிகளிலும் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு எம்மை இட்டுச்செல்லும் அடையாளமாகத் திருச்சபையின் முயற்சிகள் அமைந்தன. கிறிஸ்தவர்கள், ஒவ்வொருவரினதும் இறப்புக் கிறிஸ்துவின் வருகைக்கால அடையாளமாகக் கருதப்பட்டது.

" இதையுணர்ந்து நீங்களும் ஆயத்தமாக இருங்கள்.

ஏனெனில், நீங்கள் நினையாதநேரத்தில் மனுமகன் வருவார் "

(லூக். 12 : 40.)

உலகம் எப்போது முடிவுறும் என நாம் அறியோம். மரணநாள் எதுவென்று எவருக்குமே தெரியாது. எனவே, நாங்கள் இறப்புக்கும், தொடர்ந்து நிகழும் தீர்வைக்கும் தயாராக இருத்தல் அவசியம். காத்திருக்கும் ஊழியன் விழித்தபடி இருப்பான். அவன் பாவத்துக்கு எதிராகப் போரிடுவான். புண்ணியங்களில் வளர்ந்து, கிறிஸ்தவ மதிப்பீடுகளை மதித்து எடுத்துக்காட்டான வாழ்வை மேற்கொள்வான் மனித உள்ளங்களில் தூய ஆவியானவர் அமைதி வாழ்வை ஒளிரச்செய்ய அவன் துணைபுரிகிறன். கிறிஸ்தவன் ஏற்றுக்கொள்ள வேண்டிய பொறுப்பு எத்துணை பெரியது என்பது இதிலிருந்து புலனாகிறதல்லவா ? எனவே, இறைவனின் பிள்ளையாகிய நான் இத்தகைய பொறுப்பை ஏற்றுவாழ என்னைப் பயிற்றுதல் எனது தலையாய கடனாகும்.

(காண்க : லூக். 12 : 42 - 44.)

கண்காணிப்பவர்களாக இருக்கும்படி, தலைவன் ஏற்படுத்திய பிரமாணிக்கம் உள்ள ஊழியர் குருக்களும், துறவிகளும் ஆவர். இறையரசுக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து வாழ்பவர்கள் அவர்கள். தன்னலமற்றவர்களாக, பிறர்க்குப் பணிபுரிந்து வாழ்கிறார்கள். பிறர்க்காக இறைவனிடம் செபிக்கின்றனர் ; அனைவர்க்கும் எடுத்துக்

காட்டாக வாழும் கலங்கரை விளக்குகள் அவர்கள். அவர்களுக்குக் கிடைக்க இருக்கும் சன்மானம் — பரிசு — என்ன?

"தலைவன் அவனைத் தன் உடைமைக்கெல்லாம் அதிகாரியா ஏற் படுத்துவான்." (லூக். 12 ; 44)

துன்மாதிரியாக வாழும் குருக்களுக்கும், துறவிகளுக்கும் என்ன நிக ழும். அவர்கள் தண்டனை பெறுவது உறுதி.

"தன் தலைவனின் விருப்பத்தை அறிந்திருந்தும், முன்னேற்பாடு செய்யாமலும், அவனது விருப்பத்தின்படி நடவாமலும் இருந்த ஊழியன் நன்றாய் அடிபடுவான். (லூக். 12 ; 47)

அறியாமையினால் இறைவன் திருவுள்ளத்துக்குப் பணியாதவன் அறிந்தும் பாவத்தில் விழுந்தவன் போன்ற கொடியவன் அல்லன். (காண்க லூக். 12 : 48) பேராற்றலும், திறமைகளும் பெற்றோன் பெரும் பொறுப்புகளுக்கு உள்ளாக வேண்டும். இறைவன் அவனிடம் அதிகமாக எதிர் பார்ப்பார், (காண்க ; லூக். 12 : 48)

## 2. மண்ணுலகில் தீயை மூட்டவே நான் வந்தேன் :
(லூக். 12 : 49 — 53)

"இதோ இப்பாலன் இஸ்ராயேல் மக்கள் பலருக்கு வீழ்ச்சியாக வோ எழுச்சியாகவோ அமைந்துள்ளான்," (லூக். 2 ; 34)

என கடவுள் பக்தனான சிமியோன் தேவலயத்தில் அன்று மொழிந் தது உண்மை என்பதை இயேசுவின் பொன்மொழிகளிலிருந்து அறிகி றோம். உண்மையில் முழு உலகுக்கும் கிறிஸ்து முரண்படும் அடையா ளமாகவே தோன்றுகிறார். அனைவர்க்கும் விருப்பளிக்கும் கோட்பாட்டை அல்லது மக்கள் விரும்பி ஏற்கத்தக்க கோட்பாட்டைப் போதிப்பதற் காக இயேசு இங்கு வரவில்லை, சுத்திகரிக்கும் நெருப்பைப்போல செயற் படுவதே அவரது கோட்பாடு, இந் நெருப்பு மக்களின் இதயங்களில் மூளாதோ என அவர் ஆவலுடன் தவித்தார். அவரைப் பலர் எதிர்ப் பார்கள்; அவரது கோட்பாடுகளை முறியடிக்க முனைவர்; அவர்கள் அவ ரைக் கொல்வர். இருந்தும் அவரது மரணம் ஆன்மீக கனிகளை — நன்மையை — அளிக்கவல்லதாய் அதை ஆவலுடன் எதிர்பார்த்திருந் தார். (காண்க : லூக். 12 : 49 — 50)

மெசியா உலகுக்கு வந்தது அமைதி நிலவும் ஒரு காலத்தைத் தொடங்குவதற்கு என யூதமக்கள் எதிர்பார்த்திருந்தனர். அவர் மண் ணுலகிற்கு வந்தபோது சிலர் அவரை ஏற்றுக்கொண்டனர். ஆனால்

சிலரோ அவரது கொள்கைகளை நிராகரித்தனர். இவ்வித போக்கினால் அன்றைய சமுதாயம் பிளவுபட்டிருந்தது. இவ்வித பிளவைக் குறித்து இதோ பின்வருமாறு கூறினார்.

" நான் ............ பிரிக்கப்படுவர்," ( லூக். 12 ; 51 — 53 )

மறைபணியில் ஈடுபட்டு உழைக்கும் இன்றைய கிறிஸ்தவன் இவ்வித பிளவை, பிரிவை ஏற்றே ஆகவேண்டும். ஆனால் மீளவும் வரவிருக்கும் கிறிஸ்து பிரமாணிக்கம் உள்ளவர்களைப் பாராட்டுவார். விசுவாசம் அற்றவர்களைத் தண்டிப்பார்.

### 3. காலங்களின் அறிகுறியைப் புரிந்துகொள்ளுதல் :

( லூக். 12 ; 54—56 )

" வெளிவேடக்காரரே, வானின் தோற்றத்தையும், பூமியின் தோற்றத்தையும் உய்த்துணர நீங்கள் அறிந்திருந்தும் இக்காலத்தை நீங்கள் உய்த்துணராமல் இருப்பது எப்படி ?" (லூக். 12 ; 56)

கற்றறிந்த யூதத் தலைவர்களை இயேசு இவ்விதம் வினவினார். இயேசு தம் வாழ்க்கைச் சான்றுகள் வழியாக விண்ணரசு இதுவெனக் காட்டியிருந்தும் இம்மக்களின் ஐயம் நீங்கியதாய் இல்லை. அகந்தையும் கல்நெஞ்சம் உள்ளோராய் இவர்கள் இருந்தனர். இயேசுவின் கூற்று உண்மை என்பதை அவர்கள் அறிந்திருந்தும் அதை ஏற்க மறுத்தனர். இதனாலேயே இயேசு அவர்களை வெளிவேடக்காரர் என விளித்தார்.

மீட்பின் செய்தி எது என கிறிஸ்தவர்களாகிய நாம் அறிந்துள்ளோம். பிறர் இதை அறியச்செய்தல் எம் கடமை. எனவே காலங்களின் அடையாளங்களை நாமும் புரிந்துகொள்ளுதல் வேண்டும். எம் சூழலில் நாம் காணும் மகிழ்வு, சோர்வு — — வெற்றி, தோல்வி — — புகழ்ச்சி, இகழ்ச்சி — — செல்வம், வறுமை — — விருப்பு, வெறுப்பு — — போன்றன இவ்வடையாளங்கள். இவ்வடையாளங்கள் காட்டும் இறைவனின் திரு உள்ளத்தை நாம் காணுதல் எம் கடமையாகும். இறைவனின் திருவுள்ளத்திற் கியைய நடக்கும்போது, பிறற்குச் சான்றாகவும் விளங்குகிறோம். இவ்விதம் செயற்படும் நாம் கிறிஸ்துவின் பாடுகளிலும், திரு மரணத்திலும் பங்குகொள்கிறோம். அவரது உயிர்ப்பின் உரிமையாளராகிறோம். எனவே தொல்லைகள் எம்மை வாட்டும்போது பொறுமையுடன் இருப்போம். துன்ப துயரங்களை மீட்பின் வழிகள் என உணர்ந்து வாழ்வோம். இதோ இயேசு விடுக்கும் அறைகூவல். நாங்கள் அழுவாரோடு அழுது, மகிழ்வாரோடு மகிழும்படி அவர் விரும்புகிறார். இவ்வறைகூவலை ஏற்கும் திடம் உமக்கு உண்டா?

### 4. கடைசிக் காசைத் திருப்பிக் கொடுக்கும்வரை ......:
( லூக். 12 : 57 — 59 )

தேர்ந்தெடுக்கப்பட்ட இஸ்ராயேலர் ஆன்மீக உண்மைகளை அறியாத குருடராக வாழ்ந்தனர். மீட்பரைக் கொலைசெய்யும் பழியையும் சுமந்தனர். இதனால் இறையரசை ஏற்காத பாவம் அவர்கள் தலையில் விழுந்தது. அதற்கான பதிலை இறுதிநாளில் அவர்கள் சொல்லி ஆக வேண்டும்

"கடைசிக் காசைத் திருப்பிக் கொடுக்குமளவும் சிறையில் இருந்து நீ வெளியேற மாட்டாய்." ( லூக். 12 : 59 )

இறையரசுக்குச் சான்று பகராதவன் கடன்பட்டவன் போன்றவன். கடனைத் தீர்ப்பது அத்துணை எளிதானதல்ல. எனவே எமது கடமைகள் எவை என ஆய்ந்து பார்த்தல் நன்மை பயக்கும்...

1. நாங்கள் நற்செய்தியைப் படிக்கவேண்டும்.
2. நாங்கள் அதைக் சீரிய முறையில் விளங்கவேண்டும்.
3. நாங்கள் அது தரும் செய்தியை ஏற்கவேண்டும்.
4. நாங்கள் அதற்கேற்ப வாழவேண்டும்.
5. நாங்கள் அதைப் பிறர் அறிய வைக்கவேண்டும்.
6. நாங்கள் பிறர் முன்னிலையில் நற்செய்திக்குச் சான்று பகர வேண்டும்.

கிறிஸ்துவின் வழி செல்லும் நாம், இக் கடமைகளில் தவறுவோமாயின் அப் பாவங்கள் மன்னிக்கப்படும்வரையில் — கடைசிக் காசைத் திருப்பிக் கொடுக்கும்வரை — வருந்தவேண்டி வரும்.

நீங்கள் மேற்கொள்ளக்கூடிய தீர்மானங்கள் ;

1. எந்நேரகும் மரணம் வரக்கூடும். எனவே அதற்குத் தயாராக என்றும் வாழ்வேன்.
2. மரணம் பற்றி ஒவ்வொரு இரவும் தியானித்தலைப் பழக்கமாக்கிக்கொள்வேன்.
3. தினமும் என் மனச்சான்றை ஆய்ந்து பார்த்து, என் பாவங்களுக்காக வருந்துவேன்.
4. நான் சாவான பாவத்தில் விழுந்தால், அதற்காக உடனே மனம் வருந்தி, கூடிய விரைவில் பாவசங்கீர்த்தனத்துக்குப் போவேன்.

5. கிறிஸ்தவர்கள் அல்லாத என் நண்பர்கள் முன்னிலையில் மீட்பின் நற்செய்திக்குச் சான்று பகர்ந்து வாழ்வேன்.

விடை எழுதுக :

1. லூக்காஸ் 12 : 40 ஐ வாசித்து, உமக்கு அளிக்கும் நற்செய்தியை விளக்குக.

2. நன்மையை வளர்த்துத், தீமையை எதிர்த்தல் கிறிஸ்தவன் ஒவ்வொருவனதும் கடமையாகும்.
   இதைச் செயற்படுத்த, நீர் எடுக்கவேண்டிய படிமுறைகள் சில தருக.

3. தீயை மூட்டவே வந்தேன் - எனக் கூறிய இயேசு எதை கருதினுர் என வினக்குக அதற்குத்தக அவர் எப்படி வாழ்ந்தார் என்றும் காட்டுக.

4. உமது நண்பர்களில் ஒருவன் பொய் பேசுகிருன்; திருடுகிருன்; பள்ளி முடியுமுன் ஒளித்து ஓடுகிருன். பிறரின் நன்மதியை அவன் கேட்பதும் இல்லே; அவன் அவ்வளவு முரடன். இறையரசைப் பரப்புவதில் சிறப்பான ஆர்வம் உள்ளவனுக விளங்க வேண்டிய நீர் எவ்வகையில் அந்த நண்பனுக்கு உதவுவீர் எனக் குறிப்பிடுக.

5. இறைவன் உமக்கு அளித்துள்ள ஆற்றல்களேயும், திறமைகளேயும் வரிசைப்படுத்தி எழுதுக. அவை ஒவ்வொன்றையும் இறை அரசைப் பரப்ப எவ்வாறு பயன்படுத்துவீர் என்று குறிப்பிடுக.

அலகு : 29

# மீட்பினதும் இறை அரசினதும் நன்மைகள்

## 1. இடுக்கண்களை இன்முகத்துடன் ஏற்று வாழ்தல் :

*( லூக். 13 : 1 — 5 )*

இவ்வுலகில் துன்ப துயரங்கள் இல்லாதோர் எவரும் இலர். மனித வாழ்வின் ஒரு பகுதியாகவே துன்பம் அமைந்துள்ளது. தண்டனைக் காளாதல் கிறிஸ்தவனுக்குப் புதிதல்ல. அரசியல் சக்திகளினால் தொல்லைகள் வருதலும், ( லூக். 13 : 1 ) இயற்கைக் காரணங்களினால் அழிவுகள் ஏற்படுதலும் ( லூக். 13 : 4 ) வரலாறு தரும் பாடமாகும். ஆனால் பாவிகள் என்பதாலேயே எம் சகோதரர் துன்பங்களுக்கு ஆளாகின்றனர் எனக் கிறிஸ்தவர்களாகிய நாம் எண்ணுதல் தவறாகும். இவ்வித மனப்பான்மை கிறிஸ்தவ அன்புக்கு முரணானது. ( லூக். 13 : 2-5 ) எமக்குத் துன்பதுயரங்கள் வராததால் நாம் குற்றமற்றோர் என்றோ, மற்றவர்களிலும் சிறந்தோர் என்றோ நினைப்பதிலும் பார்க்க, எம் பாவங்களுக்காக மனம் வருந்துதல் மிக நன்று ..... ( லூக். 13 : 3, 5) இடுக்கண்களின் வழியாக இறைவன் எம்மை மீட்புக்கு இட்டுச் செல்கிறார். தொல்லைகள், துன்பங்கள் என்பன மனம் வருந்துதலுக்கு வழியாக அமைகின்றன. எனவே வருத்தங்களுக்கு உட்பட்ட எம் சகோதரர்களைத் தீர்ப்பிடல் பாவமாகும். அவ்வேளை அவர்களுக்கு ஆறுதல் கூறி எம்மால் இயன்ற உதவி புரிதல் எம்கடனாகும்.

## 2. காய்க்காத அத்திமரம் : ( லூக். 13 : 8 — 9 )

இயேசுவின் வழியாக எமக்கு இறையரசு வந்தது. பாவங்களுக்காக மனம் வருந்தி அரசில் நுழைவது எம் கடன், இவ்வுவமையில் கூறப்பட்டுள்ள தோட்டக்காரன் இயேசு. பாவியான மனிதனுக்காக அவர் தம் தந்தையாம் இறைவனிடம் பரிந்துபேசி, பாவங்களுக்காக மனம் வருந்துவதற்கு மேலும் காலத்தைப் பெற்றுத்தருகிறார், ஆனால் இதுதான் கடைசித் கெடு. எனவே இக் காலத்தைப் பயன்படுத்தித் தூய்மையின் கனிகளைப் பயக்க வேண்டியது எம் கடமை. (லூக். 13 - 8) நாம் பெற்ற உதவி அருளை வேண்டாம் எனத் தள்ளிவிடின் எம்மையே நாம் அழித்துவிடுபவர்கள் ஆவோம். ( லூக். 13 ; 9 )

**3. கூனிப் பெண் குணமடைந்தாள் : ( லூக். 13 : 10 - 17 )**

பிறரின் துயரங்களைக் கிறிஸ்தவனின் கண்கள் பார்க்கவேண்டும். பார்ப்பவனது இதயத்தில் கருணை வழிந்தோட வேண்டும். இத்தகைய துன்பதுயரங்களைத் துடைப்பதற்குக் கிறிஸ்தவனது சக்தி பயன்பட வேண்டும். ( லூக். 13 : 10 — 13 )

மீட்புப் பணி காலத்துக்கும், சம்பிரதாய வழக்கங்களுக்கும் அப்பாற்பட்டது. ( லூக். 13 : 14 — 16 ) இறை அரசைப் பரப்புவதில் அன்பும் மனித உயிருக்கு அளிக்கும் மதிப்பும் முக்கியத்துவம் பெறுகின்றன. சட்டங்களும், கட்டளைகளும் இறையரசில் அதி முக்கியத்துவமானவை அன்று. ஓய்வு நாளன்றும் அன்புச் சட்டம் முதன்மையுள்ளதாயிருக்கிறது. கிறிஸ்துவின் வழிச்செல்லும் நாம் ஓய்வு நாளிலும் உதவி தேவையானோருக்கு உதவும் கடமைப்பாடுடையோம். அப்போது சமுதாயத்தில் இறையரசு உதயமாகி, மனிதர் மகிழ்வினால் நிறைவு பெறுவர். ( லூக். 13 : 17 )

அன்பும் பரிவும் செறிந்த செயல்களிலேயே மீட்புத் தங்கியுள்ளது. எனவே சட்டத்தின்படிக்கு உட்பட்டு, சட்டமே தஞ்சம் என வாழ்வதும், அன்புச் செயல்களில் ஈடுபடாது இருப்பதும் பிழையாகும். மனித வாழ்வு சட்டத்திற்கு அப்பாற்பட்டது. முடிவில்லாப் பெருவாழ்வை அளிப்பதுதான் மீட்புச் செய்தியே அன்றி, மனிதனைச் சட்டத்துக்கு அடிமையாக்குவது அதன் குறிக்கோள் அன்று. எனவே அன்புள்ளோராய் இருத்தலே எம் கடனாகும்.

**4. இறை அரசு பரம்பும் முறை : ( லூக். 13 : 11 - 21 )**

ஆன்மீக உண்மை ஒன்றை எமக்கு அறிவுறுத்த விழைந்த இயேசு உவமை ஒன்றைக் கையாண்டார். அவர் இறையரசைக் கடுகுமணிக்கு ஒப்பிட்டுக் காட்டுகிறார். இந்தச் சிறு விதை பெருமரமாக வளர்கிறது. ஆனால் இதன் வளர்ச்சி எம் கண்ணுக்குப் புலப்படாதிருக்கிறது. இதேபோன்று ஒரு சிலருடன் தொடங்கிய இறையரசு இன்று உலகின் நாலா திக்குகளிலும் பரந்து காணப்படுகிறது. கடுகு மரத்தில் பறவைகள் சென்று தங்குவது போன்று பல்வேறு இனத்தவர்களும் இறைவனின் திருச்சபையில் சேர்ந்து வாழ்கின்றனர். திருச்சபையின் முறையான வளர்ச்சியை இச் சிறு உவமை இங்ஙனம் விளக்குகிறது. ( லூக். 13 : 18 — 19 )

மாப்பானையில் புதைக்கப்படும் புளிப்பு மாவும் இறை அரசையே சுட்டுகிறது. இன்று திருச்சபை மக்களிடையில் புளிப்பு மாவைப்போல செயற்படுகிறது. புளிப்பு மா ஆகிய திருச்சபை மனித சமுகத்தைப் புனிதப்படுத்தி அதன் வளர்ச்சிக்காக உழைக்கிறது. ( லூக். 13 : 1202

இறையரசு மறைபொருளாகவும் இருக்கிறது. ஆனால் எவரும் அதன் வளர்ச்சியைத் தடைசெய்ய முடியாது. இது உலகெங்கும் பரவும். புறவினத்தாரும் அதில் சேர்வர். திருச்சபையின் உள்ளிருந்து தூய ஆவியானவர் வழியாகச் செயல்படும் கிறிஸ்து மனித சமுதாயத்துக்குப் புத்துயிர் அளித்து வருகிறார். கிறிஸ்துவின் இப் பணியில் உதவுவது கிறிஸ்தவர்களாகிய எமது கடமையாகும்.

## 5. ஒடுக்கமான வாயில் : ( லூக். 13 : 2 — 30 )

முடிவில்லாப் பெருவாழ்வை நாம் பெறவேண்டின் இரு காரணங்கள் எமக்கு இன்றியமையாதன. அவை அக்கறையுடன் உழைத்தல், காலம் தாழ்த்தாது செயற்படுதல், விண்ணகத்துக்குச் செல்லும் வழியான சிலுவையின் பாதை கஷ்டமானது. இதில் பயணம் செய்பவர்கள் ஊக்கம் தளராதவர்களாகவும், ஒன்றுபட்ட மனதினராகவும் இருக்க வேண்டும். இப் பயணத்தை மேற்கொள்பவன் தனித்துச் செயல்பட முடியாது. சமுதாயமாக ஒன்றுசேர்ந்தே இப் பயணத்தில் ஈடுபட வேண்டும். இப் பயணம் உறுதியான விசுவாசத்தையும், அன்பையும் அடிப்படையாகக் கொண்டது. காலம் தாழ்த்தாது செயற்படுதல் என்றால் நேரகாலத்துடன் மனந்திரும்புதலைக் குறிக்கிறது. ( காண்க : லூக் 13 : 25 ) காலம் தாழ்த்தி மனம் வருந்துதல் எவ்வித பயனையும் அளிக்காது போகலாம்.

மீட்படைதலுக்கு இயேசுவின் இரத்த உறவினராக அதாவது நெருங்கிய சொந்தக்காரராகநாம் இருக்கவேண்டியதில்லை. விசுவாசத்தினால் வலுவூட்டப்பட்ட ஞானம் இதிலும் மேலானது. ( காண்க : லூக். 13 : 26 — 27 ) ஆபிரகாமின் விசுவாசத்தை உடைய பிற மறையினர். விண்ணரசில் நுழைவார்கள். ( காண்க லூக். 13 : 27 — 29) இஸ்ராயேலரின் அவிசுவாசமே மெசியாவை ஏற்றுக்கொள்ளாததற்குக் காரணமாகும். மெசியாவை ஏற்காதார் இஸ்ராயேலர் மட்டுந்-தானா? இன்றைய சமுதாயத்திலும் இஸ்ராயேலர் போன்றோர் இல்லாமல் இல்லை. கிறிஸ்துவின் அறைகூவலைக் கேட்டும் அதை ஏற்கத் தயங்கும் உலகப் போக்குள்ள ஞானிகளே அவர்கள். ( காண்க ; லூக். 13 — 30 )

## 6. சூள்ள நரிக்குணம் படைத்த ஏரோது :

லூக்காஸ் 13 : 31 —33 )

பரிசேயர் கிறிஸ்துவின் பக்கம் சாராதிருந்தனர். எதுவிதமும் அவரை யூதேயாவுக்குக் கூட்டிவந்து கொல்லும் எண்ணத்துடன் இருந்தனர். கிறிஸ்துவிடத்தில் ஏரோது பற்றிய பயத்தை ஊட்ட அவர்கள் முனைந்தனர். ஆனால் இயேசு அவர்கள் தடுமாறத்தக்க பதிலளித்தார்.

உண்மையில் ஏரோது பயந்த இயல்பினன். ஆனல் தந்திரமிக்கவன். தன் மதிப்பில்லாது வாழ்ந்தவன். நேர்மையீனமும், வஞ்சனையுமுள்ள வனுன அவன் உண்மையில் நரிதான். இயேசுவுக்கு எதிராக அவன் தீட்டிய திட்டங்கள் பலனற்றன. இயேசுவின் செய்தி பெரையா ஊர் மக்களுக்கும் தேவையாக இருந்தது. எனவே இயேசு அங்கு கட்டாயம் செல்வார். இயேசு அங்கு செல்வதை ஏரோது தடுக்கமுடியாது. இறை வாக்கினரின் இரத்தத்தைக் குடித்தது ஜெருசலேமுக்குப் புதிதல்ல. ஆனல் ஏரோதனுக்கோ இது புதியது. ஆனல் இயேசுவின் பணி சில நாள்களில் முடிவுக்கு வந்துவிடும். அவர் ஜெருசலேமிலே சிலுவை மரணத்தைத் தழுவுவார்.

### இந்நிகழ்ச்சி எமக்கு அளிக்கும் செய்திகள்

1. வேடதாரிகளான உலக ஆட்சியாளர்களினல் இறைஅரசு என்றுமே அழியாது.
2. தப்பறையான பிழையான விசுவாசம் உள்ளோர் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து கொல்கின்றனர்.
3. மீட்பு அலுவல் மனித திட்டங்களில் தங்கியிருப்பதில்லை. இறைவனின் திட்டத்திற்கேற்ப அது இடம்பெறுகிறது.

## 7. ஜெருசலேமைப்பற்றி இதயம் நொந்து இயேசு அழுகிறர் :
( லூக்காஸ் 13 : 34 — 35 )

ஜெருசலேமில் அடிக்கடி இயேசு நல்லுரை பகர்ந்து வந்தார். ஆனல் ஜெருசலேமோ அவரை ஏற்க மறுத்தது. இதனல் தண்டனைக்கும் உள்ளானது. ஜெருசலேமுக்கு நிகழ இருப்பதை அவர் முன்மொழிந்தார்.

" ஜெருசலேமே,
இறை வாக்கினர்களைக் கொன்று
உன்னிடம் அனுப்பப்பட்டோரையும்
கல்லால் எறியும் ஜெருசலேமே...... "

இயேசு இதயம் நொந்து கூறிய வார்த்தைகள் இவை. மெசியா, தெரிந்தெடுத்த மக்களை இறையரசுக்கு அழைத்திருந்தார். அவர்கள் அவரை ஏற்க மறுத்ததால் ஆறுத்துயருக்கு ஆளானுர்.

( காண்க லூக். 13 : 34 )

...... நானும் உன் மக்களை ஒன்றுசேர்க்க எத்தனையோ முறை விரும்பினேன், நீயோ உடன்படவில்லை. இதோ உங்கள் வீடு குடியற்றுப் போகும். ஜெருசலேம் தெரிந்தெடுக்கப்பட்ட இனத்தின் அடை-

யாளமாக விளங்கியது. ஜெருசலேம் நகர் அழிவடைந்ததும், ஆபிரகாமின் சந்ததி வழி வந்தோருக்கும் நமக்கும் இடையில் சிறப்பான முறையில் இருந்துவந்த பிணைப்பை இறைவன் முடித்துக்கொண்டார். புறவினத்தார்க்கும் இறை அரசு திறக்கப்பட்டது. ஜெருசலேம் நகர வீழ்ச்சி ஆதிக் கிறிஸ்தவர்களுக்குப் பாடமாக அமைந்தது. இஸ்ராயேலர் மனம் மாறுவதற்குக் காலம் நீடித்தது. தமது இரண்டாம் வருகைக்கு முன்னர் பழைய இஸ்ராயேலர் யூதரும் புதிய இஸ்ராயேலர் திருச்சபையும் ஒன்றுபடுவர் என இயேசு முன்னறிவித்தார்.

" ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி என்று நீங்கள் கூறும் நாள்வரை என்னைக் காணமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன் " என்றார், ( லூக். 13 : 35 )

உமது வாழ்க்கைக்கு :

1. பிணி, நோவு, துன்பங்கள் வழியாக மீட்பின் வழியைக் காட்டும் கடவுளுக்கு நன்றி காட்டுக.
2. வருந்தும் சகோதரர்க்குத் தீர்ப்பிட வேண்டாம். பதிலாக அவர்களுக்கு உதவி செய்க.
3. மனித உயிரை மதித்து, உமது அயலாரை மீட்புக்கு இட்டுச் செல்ல இயன்றவரை முயல்க.
4. மனமாற்றம்பெற ஆவலாக இரு.
5. பரிசுத்த ஆவியின் செயற்பாட்டில் நம்பிக்கைகொண்டு மீட்புப் பணிக்கு உதவி செய்க.

விடை தருக :

1. மனந்திரும்புவதற்கு இறைவன் எமக்கு நேரம் தருகிறார். ஆனால் இது எவ்வளவு காலம் என நாம் அறியோம். மரணப் படுக்கையில் எவ்விதம் நடப்பீர் என விளக்குக.
2. கடவுளின் அரசு கடுகுமணிக்கு ஏன் ஒப்பிடப்பட்டுள்ளது ?
3. எவருக்கும், எப்போதும் அன்புசெய்தல் என் கடன் என்பதை விளக்கும் நிகழ்ச்சி அல்லது கதை ஒன்று எழுதுக.
4. ' சிலுவையின் வழி கடினமானது ' — என்ற தலைப்பில் நாடகம் ஒன்று எழுதி பருவம் முடிவில் நடிக்குக.
5. மனந்திரும்ப மனமில்லாதோர்க்கு நிகழும் தீமைகளை எடுத்துக் காட்டும் சில படங்களை வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுக.

அலகு : 30

# இன்றைய சமுதாயத்தில் செயற்படும் கிறிஸ்தவன்

## 1. ஓய்வு நாளில் நீர்க்கோவை குணமாதல் ;

( லூக்காஸ் 14 : 1 — 6 )

லூக்காஸ் நற்செய்தியில் மட்டும் இந் நிகழ்ச்சி கூறப்பட்டுள்ளது. 'சபாத்' அதாவது ஓய்வுநாளில் குணமளிப்பது சட்டத்திற்கு ஏற்றதா? முரணானதா? சட்டவல்லுனர் இவ் வினவுக்கு விடை அளிக்க அறியாதிருந்தனர். பரிசேயர்களும் பேசாதிருந்தனர். ஆனால் இயேசுவோ எவ்வித தயக்கமுமின்றி முன்வந்தார் நோயாளியைக் குணமாக்கினார். அன்று போல இன்றும் மனிதர் பிணிவாய்ப்படுகின்றனர். இறைவனின் பராமரிப்பில், நம்பிக்கை இல்லாதவர்கள் இத்தகைய சந்தர்ப்பங்களில் அவரை நிந்திக்கின்றனர், 'வாழ்வு' கசப்பானது, கடினமானது எனக் கருதி தற்கொலை செய்யவும் முற்படுகின்றனர். இன்றைய நிலையில் பிணியுற்ற சோதரர்க்கு நாம் செய்யவேண்டியதென்ன என்பதை நீர்க்கோவை பிடிந்த நோயாளியைக் குணமாக்கிய இயேசு எமக்குக் கற்பிக்கிறார். அவர்களில் பரிவுகாட்டி, துன்பம் துடைக்க எம்மால் இயன்றதைச் செய்ய நாம் கடமைப்பட்டுள்ளோம். மருத்துவ வசதிகள் பெற முடியாதவர்களில் அதிக கவனம் செலுத்துதல் இன்றியமையாதது. அன்புக்கு அடைக்கும் தாள் இல்லை. அன்பு காலநேரம் நோக்காது ; யார் எவர் என்றும் பார்ப்பதில்லை. அயலானுக்குத் துணைபுரியும்பேது இறைவன் உளம் மகிழ்கிறார். இவ் உதவி ஓய்வுநாளில் ஆற்றப்பட்டாலும் அவர் அகமகிழ்கிறார்.

## 2. தாழ்ச்சி ;

( லூக். 14 : 7 — 11 )

மனிதன் உலகார்ந்த புகழ்ச்சியையும், மகிமையையும் விரும்புகிறான். இது அவனது இயல்பு. அவற்றை அவனுக்குக் கொடுக்காத சமுதாயத்தில் சினம் கொள்கிறான். ஆனால் புகழ் பெறத் தொடங்கியதும் அகங்காரமும், தற்பெருமையும் கொண்டு தன்னையே மறந்து வாழ்கிறான். தனது விருப்புகளுக்கு அடிமையாகி இறைவனை மறக்கவும் முற்படுகிறான்! இந்தகையோர் அடிமைத்தனத்திலிருந்து மீள்வதற்குத் 'தாழ்ச்சி' ஒன்றே வழியாகும். ( காண்க லூக். 14 : 11 )

இத்தகைய அடிமைத்தனம் கிறிஸ்தவனுக்கு ஏற்றதல்ல, அவன் அக்ங்காரத்திலிருந்து விடுதலை பெறவேண்டும். மனிதரின் புக்ழ்ச்சியி

லும் இறைவன் திருமுன் பெறும் மகிமையையே மேலாக் மதிக்க வேண்டும். இழிந்தமுறையில் பெருமையை அவாவுதல் அவனுக்கு அழகல்ல. அகங்காரமும் தற்பெருமையும் கொண்டவன் இறைவனின் பிள்ளை என்பதை மறந்தவன் ஆவான்.

## 3. ஏழைகளுக்கு இரங்குதல் : (லூக். 14 : 12 — 14)

பரிசேயர்களுக்குத் தலைவனான ஒருவன் இயேசுவை விருந்துண்ண அழைத்திருந்தான். அழைப்பை ஏற்ற இயேசு அங்கு சென்றார். விருந்துக்கு வந்தோர் உணவு மேசையில் முதலிடம் பெறுவதற்காக ஒருவரை ஒருவர் முண்டி அடித்துக்கொண்டு முன் சென்றதை இயேசு அவதானித்தார். இத்தகைய கௌரவத்தைத் தேடவேண்டாம் எனவும் ஏழைகளுக்கு உணவு கொடுக்கும்படியும் விருந்துக்கழைத்த பரிசேயனுக்குக் கூறினார்,

இன்று பலர் அன்னதானம் கொடுத்துத் தமது அன்பைக் காட்டுகின்றனர். அவர்கள் பல்வேறு நோக்குடன் அன்னதானத்தில் ஈடுபடுகின்றனர். உறவினர்க்கு உண்டி அளிப்பவர் சிலர்; நண்பர்களுக்கு விருந்தளிப்பவர் சிலர்; பணம் படைத்தோரை அழைத்து விருந்தாடுபவர் சிலர்; ஏழைகளுக்குத் தருமம் கொடுப்பவரும் எம்மிடையே வாழ்கின்றன. ஆனால் தம்மை விளம்பரப்படுத்துவதற்காகவும், நாலுபேர் அதைப்பற்றிக் கதைப்பதற்காகவுமே இவ்விதம் செய்கின்றனர். இவர்கள் மனிதர் முன் புகழும் மகிமையும் பெறுவதற்காக ஏழைகளைப் பயன்படுத்துகின்றனர். தமக்குக் கைமாறு கிடைக்கும் என்ற எண்ணத்துடன் இவர்கள் இவ்விதமான தருமங்களில் ஈடுபட முன்வருகின்றனர். கிறிஸ்தவ விருந்தோம்பலுக்கு இது முரணானது.

யாருக்கு விருந்தளிக்க வேண்டுமென்று இயேசு தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். (காண்க ; லூக். 14 : 13 — 14)

## 4. இறை அரசுக்கு அழைப்பு ; (லூக். 14 : 15 — 24)

(திருமண விருந்து) : முன்னர் வாழ்ந்த யூத ஆசிரியர்கள் விண்ணக அரசை 'விருந்து'க்கு ஒப்பிட்டுப் பேசுவர். இதை அறிந்த விருந்தினன் ஒருவன் கடவுளின் அரசில் விருந்துண்பவன் பேறுபெற்றவன் என்றான். அவனது கூற்று சரியென ஏற்றுக் கொண்ட இயேசு விண்ணக அரசைப் பெருவிருந்து ஒன்றுக்கு ஒப்புமையாக்கி, ஓர் உவமையை அவர்களுக்குக் கூறினார். பெரு விருந்து என்பது மெசியாவின் அரசு ஆகும். அழைக்கப்பட்டோர் யூதர்கள் ஆவர் (காண்க லூக். 14: '6-17)

உலக இன்பங்களுக்கும், பருப்பொருள் வேட்கைக்கும் அடிமையாகி அதனால் கடவுள் அரசை வேண்டாம் என மறுத்த மூன்று நிலையில் உள்ள மக்கள் இங்கு சுட்டிக் காட்டப்படுகின்றனர்.

1. அசையாத பொருள்களான நில புல ஆசைகளுக்கு அடிமைப் பட்டோர்.

2. அசையும் பொருள்களான ஆடு, மாடு, வாகனங்களுக்கு அடிமைப்பட்டோர்,

3. உடல் இச்சையாகிய காமத்துக்கு அடிமைப்பட்டோர்.

இத்தகையோர் மெசியாவின் அரசைத் தள்ளிநடந்தனர். (காண்க லூக். 14 : 18 — 20) எனவே மெசியா ஏழைகளையும், எளியோரையும், புறவினத்தாரையும் தனது அரசுக்கு அழைப்பார். இதுவும் வலுக்கட்டாயத்தால் அல்ல. ஆனால் அவர்களின் சுதந்திரத்தை மதித்து விடுக்கப்படும் ஓர் அழைப்பு இது. யூத இனம் தாங்களாகவே தள்ளி வைக்கப்பட்டனர் என்பதையும் இது காட்டுகிறது. (காண்க: லூக். 14 : 21 — 24)

கடவுளின் அழைப்பை ஏற்க மறுக்கும் பலர் இன்றும் வாழ்கின்றனர். உலகார்ந்த செல்வங்களுக்கும், உடல் இச்சைகளுக்கும் அடிமையாகி வாழ்வதால் இவர்கள் அரசுக்கு அதி தூரத்தில் உள்ளனர், அவர்களுக்காக வேண்டுவதும் மீளவும் இறைவன் பக்கமாக அவர்களை வழி நடத்துவதும் கிறிஸ்துவை ஏற்று வாழும் உன் கடமையாகும்.

## 5. இயேசுவைப் பின்தொடர விரும்பினால் : (லூக். 14:25-33)

கிறிஸ்துவின் சீடனாக இருப்பது இலகுவானதல்ல. இது கிறிஸ்துவின் காலத்துக்கும் ஏன், இக் காலத்துக்கும் பொருந்தும். கிறிஸ்துவைப் பின்செல்ல விரும்புபவன் அவரது அழைப்புக்கு முதன்மைத்துவம்—முதலிடம்—கொடுக்கவேண்டும். உற்றார் உறவினர் இரண்டாம இடத்தையே வகிப்பர். சிந்தனை, சொல், செயல் மூன்றிலும் தூயவர்களாக—சிற்றின்பத்தைக் கட்டுப்படுத்துபவர்களாக—வாழ வேண்டும். வாழ்வின் சிலுவைகளைத் தோள்மீது சுமந்துசெல்ல வேண்டும். இறப்பு வரினும் கிறிஸ்துவுக்கு நம்பகமானவர்களாக வாழவேண்டும். (காண்க : லூக். 14 : 25—27) குருக்களும் பொதுநிலையினரும் திருமுழுக்கினால் பெற்ற அழைப்புக்கு முதலிடம் கொடுத்து வாழவேண்டியவர்கள். இவ்

வழைப்பின் இயல்பை விளங்குபவர்களே இதற்கு முதன்மை கொடுத்து வாழ வல்லவர். கண்மூடித்தனமாகப் பின்செல்லுதல் வீண் முயற்சியாகும். இது பயனற்றது. இவ்விதம் செல்வோர் வெறுப்படைவர். எமது அழைப்பு இது என்று அறிதல் எம் கடன். எமக்குரிய அழைப்பை கவனத்துடன் தேர்ந்தெடுத்தல் அவசியம். சந்தர்ப்பவாதியாக வேண்டியபோது, வேண்டிய அழைப்பை மாற்றுபவர்களாக நாம் இருத்தல் ஆகாது. நமக்குப் பொருந்தாத அழைப்பைத் தெரிந்து எடுப்பவன் நற்செய்தியைத் தவறுதலாக விளங்கியவன் ஆவான். (காண்க லூக். 14 : 28 — 32) உண்மையான — சீரிய — கிறிஸ்தவ வாழ்வு நிறைவான தியாகத்தையும், அர்ப்பணிப்பையும் வேண்டி நிற்கிறது. (காண்க லூக். 14 : 31)

6. சாரமற்றுப்போன உப்பு : (லூக். 14 : 34 — 35)

பிரமாணிக்கமற்ற கிறிஸ்தவன் சாரமற்ற உப்புப் போல பயனற்றவன். அவன் தனக்கும் பிறர்க்கும் பாரமாக இருப்பான். நீதிமான்களால் அவன் தள்ளிவைக்கப்படுவான். நீதிமான்கள் அவனை ஏற்றுக்கொள்ளார். இதே கருத்தை இயேசு பின்வருமாறு கூறினார் :

“ சாரமற்ற உப்பு நிலத்துக்கோ எருக்குழிக்கோ பயனற்றது. வெளியில்தான் கொட்டப்படும். கேட்கச் செவியுள்ளவன் கேட்கட்டும். ” (லூக். 14 : 35)

தியானிப்பதற்கு :

1. பொறுமையுடன் கடவுளின் திரு உள்ளத்தை விளங்கி, நோவு பிணி துன்பங்களை ஏற்று, அதனால் பாவப்பரிகாரம் செய்ய வேண்டும்.

2. வீட்டிலும், வகுப்பிலும், பள்ளியிலும் தம்பட்டம் அடியாது, அமைதிப் பணிபுரிய முயல்வேன்.

3. இலகுவான முறையில் ‘பெருமை’ தேட முனைதல் கிறிஸ்தவப் பண்பல்ல.

4. உதவி வேண்டியோர்க்கு உதவுதல் அவசியம். ஏழைகளுக்கு இரங்குதல் எம் கடன். திக்கற்ற மாணவனுக்கு எழுது கருவியோா, நூலோ, அல்லது வேறு பொருள்களோ கொடுத்துதவும் நான், கடவுளின் சீரிய பிள்ளை என்பதைக் காட்டுகிறேன்.

5. கைமாறு கிடைக்கும் என எதிர்பாராது தானதருமங்களைச் செய்வேன்.

6. விசுவாச வாழ்விற்கான அழைப்பை வியந்து போற்றுதல் எம் கடன். நல் வாசினை, திருமறை நூல் கற்றல், நல்லோரின் நல்மதிப்புக்குச் செவிமடுத்தல்..... என்னும் வழிகளால் எம்மில் விசுவாச வாள்வை வளர்ப்போம்.

விடை தருக !

1. ஓய்வு நாளன்று, நீர்க்கோவை பீடித்தவனை இயேசு குணமாக்கியது ஏன் ?

2. அன்பு செய்யக் குறிப்பிட்ட காலம், இடம் வேண்டுமா ?

3. 'ஒரு விழாவுக்கு அல்லது ஒன்றுகூடுதலுக்கு அழைக்கப்பட்டால் கடைசி இடத்தில் போயிருத்தல்' இக் குறிக்கோளை எவ்விதம் செயற்படுத்துவீர் ?

4. தன் சிலுவையைச் சுமந்துகொண்டுஎன்னைப் பின்செல்லாதவன் என் சீடனாய் இருக்கமுடியாது. இக்கூற்று யாரைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது ? உமது படிப்புத் தொடர்பாக இக் கூற்றை உம் வாழ்வில் கடைப்பிடிக்குக.

5. சாரமற்றுப்போன உப்புக்கு ஒப்பிடப்பட்டோர் யார்? வகுப்பில் சாரமற்ற உப்பைப்போல் வாழும் சக மாணவன் தன் மனப்பாங்கை மாற்றி அமைக்கத் தூண்டி ஒரு கடிதம் எழுதுக

6. நீர்க்கோவை நோயினல் பீடிக்கப்பட்டவன் குணமடைந்த நிகழ்ச்சியைச் சுருக்கமாக எழுதுக. இதுபோல ஞயிறு நாளில் எவ்வித சமுதாயப் பணி செய்வீர் என விளக்குக.

7. உமது பங்கில் உள்ள ஒன்றியங்கள். அன்புப் பணிபுரியும் சங்கங்களின் பட்டியல் ஒன்று ஆக்குக. நீர் விரும்பும் ஒன்றைக் குறுப்பிட்டு, அதை விரும்புவதற்கான காரணங்களையும் தருக

அலகு ; 31

# இரக்கத்தின் உவமைகள்

## 1. காணமற் போன ஆடு' (லூக்காஸ் 15 : 1 — 7)

கிறிஸ்து கருணை மிக்கவர் ; கண்ணோட்டம் நிறைந்தவர் என்பதை நற்செய்தி ஆசிரியரான லூக்காஸ் சிறப்பாக விளக்குகிறார். இப் பண்புக்களுக்கு அவர் சிறப்பான இடம் அளிக்கிறார். இதனால் லூக்காஸ் எழுதிய நற்செய்தி இரக்கத்தின் நற்செய்தி என்றும், அனைவரதும் மீட்பின் நற்செய்தி என்றும் அழைக்கப்படுகின்றது. யூத சமுதாயத்தில் தாழ் நிலையினராகக் கருதப்பட்ட ஆயககாரர், புற இனத்தார், பாவிகளுடன் இயேசு சேர்ந்து பழகினர். இதனால்,

"இவர் பாவிகளை வரவேற்கிறார். அவர்களோடு உண்கிறார்"

என அதிகாரிகள் முணுமுணுக்கத் தொடங்கினர்.[இயேசுவை ஏற்காது அவருடன் தொடர்புகொள்ளாது வாழ்ந்தனர். சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டோரில் பலர் இயேசுவைப் பின்சென்றனர். தாழ்த்தப்பட்டோருக்குமே இறையரசு உரியது என இவ்வுவமை வழியாகத் தெளிவாக அறிகிறோம். அறியாமையாலும், வழிநடத்துவோர் இன்மையாலும் நெறி தவறி நடப்போனைக் காணமற்போன ஆடு குறிக்கிறது. இத்தகையோர் மனம்வருந்தி, இறைவனிடம் மீளும்போது விண்ணரசில் பெருமகிழ்ச்சி உண்டாகிறது.

**இவ்வுவமையில் இருந்து நீங்கள் மனதில் இருத்த வேண்டியன சில :**

1. விண்ணரசு அனைவர்க்கும் உரியது. இது அனைவர்க்கும் உரிமை.
2. மெசியா பாவிகளைத் தேடிச் சென்றார். (காண்க லூக். 15 — 4)
3. இன்றைய சமுதாயத்தில் வாழும் கிறிஸ்துவின் உண்மைச் சீடர்கள் மெசியாவைப்போலச் செயற்பட வேண்டும்.
4. எம் அயலாரின் மீட்புக்கு நாம் பொறுப்பாளிகள்.
5. கைவிடப்பட்ட பாவி, இறைவனிடம் மீளவும் செல்லும்போது விண்ணரசில் மகிழ்ச்சி உண்டாகிறது.
6. விண்ணகம் செல்வதற்கு உளமாற்றம் அவசியம். தான் நல்லவன் என்று நடிக்கும் போலி வேடம் விண்ணரசுக்குத் தடையாகும்.

2. காணமற் போன பணம்: ( லூக். 15 : 8 — 10 )

இதுவும் ஓர் அழகான உவமை. சிறப்பாக பெண்களுக்கு இது பொருத்தமானது. லூக்காஸ் ஒருவரே இவ் வுவமையைக் குறிப்பிட்டிருக்கிறார். வெள்ளிக்காசைக் கோர்த்த சங்கிலியை — காசுமாலை — பெண்கள் தலையில் அணிவது அக்காலத்து வழக்கம். காசு மாலையில் இருந்த பத்து வெள்ளிக் காசுகளில் ஒன்றை அவள் தொலைத்துவிட்டாள். ஏழைகளான அண்டை வீட்டுப் பெண்மணிகளிற் சிலரும் அவளிடம் மாலையை இரவல் வாங்கி அணிந்துவந்தனர். தனக்கும் அயலவர்க்கும் உதவிய காசுமாலை, எவர்க்கும் பயன்படாது போனதே என்று அவள் ஆறாத்துயரடைந்தாள். இதனால் தொலைந்த வெள்ளிக்காசை, எதுவிதமும் தேடி எடுக்கவேண்டுமென்று முயற்சி எடுத்தாள். அதைக் கண்டெடுத்ததும் அயலாருடனும், தோழிகளுடனும் அகமகிழ்ந்தாள். ( காண்க : லூக். 15 : 8 — 9 )

இவ் உவமை எமக்கு அறிவுறுத்துவன

1. இறைவன் பாவிக்கு அன்பு செய்கிறார் ; பாவத்தை அல்ல. இதனால் பாவி தம்மிடம் மீளவும் வர உதவி அருளுகிறார்.

2. பாவிகளான தனது மக்களைத் திருச்சபைத் தாயானவள் இன்று தேடி அலைகிறாள்.

3. விசுவாசக் குறைவுடையோர் கிறிஸ்துவின் சீடராய் இருக்கத் தகுந்தவர் அல்லர். எளிமையும், தாழ்ச்சியும் உள்ளோராய் மனம் வருந்தும் மக்களே அவரின் சீடராய் இருக்கத் தகுதியுடையோர்.

4. உலகில் வாழும் அனைவரும் பாவச் சார்புடையோர். ( காண்க: லூக். 15 ; 10 )

3. மன்னிக்கும் தந்தையினதும், ஊதாரி மகனதும் உவமை: (லூக். 15 : 11 — 32))

கற்றோர் பலரும் எடுத்தாளும் இவ்வுவமையை நற்செய்தி ஆசிரியர்களில் லூக்காஸ் ஒருவரே கூறியுள்ளார். இது அளிக்கும் செய்தி காலம்கடந்தது. கல் மனத்தையும் தொட வல்லது. மனித இதயத்தை ஈர்க்கும் ஆற்றல் வாய்ந்தது. இது கூறும் பொருளை ஆழ்ந்து தியானித்ததால் இறைவனைக் கண்டடைந்தோர் பலர். ஊதாரியின் உவமை என்ற பெயரால் உலகெல்லாம் அறியப்பட்ட உவமை இது. ஆனால் இப் பெயரிலும் 'மன்னிப்பளிக்கும் தந்தையின் உவமை' என்ற பெயரே இதற்குச் சாலவும் பொருந்தும். இரக்கம் நிறைந்த தந்தை போன்ற

கடவுள் பொல்லாப் பாவிட்கும் மன்னிப்பளிக்கக் காத்திருக்கிறார் என் பதை இவ்வுவமை விளக்குகிறது. இது உவமைகளின் உவமை, தலை சிறந்த உவமை. கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் நிலவும் உறவு எவ்விதம் அறுகிறது? இந்தப் பிரிவினால் வரும் விளைவுகள் எவை? முறிந்த உறவை மீளவும் பெறும் வழி என்ன? உண்மையான மன மாற்றம் என்பதன் பொருள் என்ன?... இன்னோரன்ன வினாக்களுக்கு இவ்வுவமை விடை அளிக்கிறது.

## எமக்கு வரும் செய்தி

1. பாவி தன் சுயாதீனத்தைப் பயன்படுத்தி, இறைவனுக்குக் கீழ்ப் படிய மறுக்கிறான். இதனால் இறைவனை விட்டுப் பிரிகிறான். இதற்கு அவனே பொறுப்பானவன்... (காண்க: லூக், 15 : 11-13)

2. எமது சொந்த ஆபாசங்களுக்கு இடம்கொடுத்து நடத்தல் எம் மில் உள்ள இறைவாழ்வைப் பலவீனமாக்கும் வழியாகும். இவ் விதம் நடக்கும் பாவி மனிதத்தன்மையை இழக்கிறான். (காண்க: 15 : 14 — 16)

3. இறைவனது மன்னிக்கும் பரிவிரக்கத்தை நினைவுகொள்ளும் பாவி மனம்வருந்தத் தூண்டப்படுகிறான். (காண்க: லூக். 15 ; 17)

4. உளமாற்றம் பெறுபவன் தாழ்ச்சியுள்ளவன் ஆகிறான். அவன் தனது பணியை அறிகிறான். கடவுளுக்குப் பணியாமை இயற் கைக்கு முரணானது என்பது அவனுக்குத் தெளிவாகிறது, (காண்க: லூக். 15 : 18 — 19)

5. உண்மையில் மனம் வருந்தும் பாவி தன் பாவவழியை விட்டு விலகி மனம் உருகி இறைவனிடம் மீளச் செல்லும் அருளையும், வலுவையும் பெறுகிறான். (காண்க: லூக். 15 : 20)

6. பாவி தம் அண்டை மீழ்வதை இறைவன் ஆவலோடு எதிர் பார்க்கிறார். அவ்விதம் வரும் பாவியை மன்னித்து அன்புடன் அரவணைக்கிறார். (காண்க: லூக். 15 : 20)

7. உண்மையான மனவருத்தம் ஒருவனைப் பாவசங்கீர்த்தனத்துக்கு இட்டுச்செல்லும். (காண்க லூக் 15 : 21)

8. மன்னிக்கும் இறைவன் அனைவரையும் மன்னிக்கிறார். அவனை மீளவும் மனிதனுக்கி ஒன்றிப்புக்கு அவனை அழைக்கிறார். (காண்க: லூக். 15 : 22 — 24)

9. மனிதன் மனிதனுக்கே இருக்கிறான். அவன் தன் சகோதரனுக்கு மன்னிப்பளிக்கிறான். பொறுமை உள்ளவனாக வாழ்கிறான். தனது அயலானை மன்னிக்கும் இறைவனில் சினம் கொள்கிறான். அகங்காரமும் போலி வேடமும் கொண்ட யூதத் தலைவர்களைப் போல அவன் நடக்கிறான். ( காண்க : லூக். 15 : 25 — 28 )

10. இறையரசு யூதர்களுக்கு என்றுமே திறந்திருக்கிறது. (காண்க: லூக். 15 : 28 )

11. இயேசுவின் பரிவிரக்கத்தை யூதத் தலைவர்கள் விரும்பவில்லை. கட்டளைகளின் வழியாக மீட்புப் பெறலாம் என அவர்கள் எதிர் பார்த்தனர். ஆபிரகாமினதும், மோயீசனதும் வழித்தோன்றல்கள் தாம் என்பதால் வான்வீடு தமக்கு உரிமையாகக் கிடைக்குமென அவர்கள் நினைத்தனர். (காண்க: லூக். 15 : 29—30)

12. நீதிமான் என்றும் இறைவனுடன் இருக்கிறான். தன் அயலானில் அவன் பொறுமை கொள்வதில்லை. அன்பு நிறைந்த இதயம் உள்ளவனாக அவன் இருக்கிறான். பொறுமைக்கு அங்கு இடமில்லை.

> " மகனே நீ என்றும் என்னுடன் இருக்கிறாய். என்னுடையதெல்லாம் உன்னுடையதே. நாம் விருந்தாடி மகிழ்வது முறையே, ஏனெனில் உன் தம்பி இறந்துபோயிருந்தான். உயிர்த்துவிட்டான். காணாமற் போயிருந்தான், கிடைத்துவிட்டான். ( லூக். 15 : 31 — 32 )

என்பது இயேசுவின் கூற்று. நல்லறம் பரிவு என்பவற்றின் உயர்வை இயேசு இங்கு விளக்குகிறார்.

**தியானத்துக்கு :**

1. மனிதரெல்லோரும் பாவிகள். "புண்ணியத்தில் நிறைவு பெற்றவன் நான்" என எவனும் பெருமை பாராட்ட முடியாது. இவ்விதம் அகங்காரம் கொள்பவன் இறைவனிடமிருந்து தூரத்தூரத் அகன்றுபோகிறான்.

2. " எங்களுக்குத் தீமை செய்பவர்களை நாங்கள் பொறுப்பது போல எங்கள் பாவங்களைப் பொறுத்தருளும் " என செபிக்கும் நாம், தாழ்ச்சியுள்ளோராய் இருத்தல் அவசியம். பொய் பேசுபவர்களாய் இருத்தல் கூடாது. உண்மையில் பிறரை மன்னிப்பவர்களாய் இருக்கவேண்டும்.

3. இறைவனிடம் திரும்பவும் போகும்வழியை எம் சகோதரனை பாவிக்குக் காட்டுதல் எம் கடன்.

4. தீமையை அல்லது பாவத்தைக் கண்டு, வாய் பேசா ஊமைகளாக நாம் இருக்கக்கூடாது. ஆனால் பாவத்தில் வாழும் சகோதரனைக் கேலி செய்யாது இருப்போமாக.

5. நாம் பாவத்தில் விழ நேர்ந்தால் கடவுளின் கருணையை நினைவிற் கொள்வோம் மனம் வருந்துதல் வழியாக இறைவனிடம் மீளவும் செல்வோம்.

6. பாவியான மனிதனுக்கு மீட்பளிக்கும் கடவுளுக்கு நன்றி நவில்வோம் தமது ஒரே மகனை இவ்வுலகுக்கு அனுப்பி எமக்கு மீட்பருளிய அவருக்கு நாம் என்றும் கடப்பாடுடையர்.

விடை தருக

1. நல்லாயன் உவமையைப் பாட்டு வடிவில் எழுதுக,

2. சாவானபாவத்தில் விழ நேர்ந்தால், இறைவனின் பிள்ளையான நீர் மேற்கொள்ளக்கூடிய செயல்முறைகளை எழுதுக.

3. ஊதாரிப்பிள்ளையின் உவமை தொடர்பாக இறைவன் கருணை நிறைந்த தந்தை என்பதைக் காட்டுக.

4. கூடாத நண்பர்களுடன் சேர்ந்த உமது நண்பனுக்கு உதவக் கூடிய 3 ஆலோசனைகள் எழுதுக.

5. உம்மை இழிவுபடுத்திய உமது நண்பன் ஒப்புரவாக விரும்புகிறான். ஆனால் உம்மிடம் வரக் கூச்சப்படுகிறான். ஊதாரிப் பிள்ளையின் உவமை படிப்பிப்பதை மனதிற் கொண்டு அவனது பிரச்சினையைத் தீர்க்க எவ்விதம் உதவுவீர் என எழுதுக.

அலகு: 32

# இரு தலைவர்களுக்கு நாம் ஊழியம் செய்ய முடியுமா?

## 1. நீதியற்ற கண்காணிப்பாளன் : (லூக். 16 : 1—12)

உலகார்ந்த மகிழ்ச்சியைத் தேடுதல் மனிதனது இயல்பாகும். அதைப் பெறுவதற்காக இயலுமானதெல்லாம் செய்ய அவன் முனைகிறான். சிலர் உலகப் பொருள்களுக்கு மாத்திரம் முதன்மை கொடுத்து வாழ்கின்றனர். அதிக உணவு, அதிக உடை, சிறந்த வீடு...... என்பவற்றைத் தேடும் முயற்சியில் அவர்கள் ஈடுபடுகின்றனர் இவ்விதம் செயற்பட உலக ஞானம் அவர்களைத் தூண்டுகின்றது. இவ்வுவமையில் வரும் கண்காணிப்பாளன் இத்தகைய உலக ஞானியாவான். தனது தலைவனது செல்வத்தைத் தவறான வழியில் அவன் பயன்படுத்துகிறான். தன் எசமானனின் கடனாளிகளின் கடன்களை அவன் குறைத்துவிடுகிறான். தலைவன் மீதுள்ள அன்பினாலோ அன்றி, கடனாளிகள் மேலுள்ள கருணையினாலோ அவன் இவ்விதம் நடக்கவில்லை. ஆனால்...... தனது வருங்காலத்தைப்பற்றிய அக்கறையே இவ்விதம் செயற்பட அவனைத் தூண்டியது கண்காணிப்பாளனது புத்திக்கூர்மையைக் கிறிஸ்து புகழ்ந்தார். ஆனால் .. உலகச் சார்புள்ளோரின் தவறான மனப்பாங்கை அவர் கண்டித்தார்.

> "ஆகையால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: அநீத செல்வத்தைக்கொண்டு நண்பர்களைச் சம்பாதித்துக் கொள்ளுங்கள். அது உங்களைக் கைவிடும்பொழுது, அவர்கள் உங்களை முடிவில்லாக் கூடாரங்களில் ஏற்றுங்கொள்வார்கள்." ( லூக். 16 ; 9 )

விண்ணக வீட்டை அடையவேண்டின் எமது செல்வங்களைப் பிறர்க்குக் கொடுக்கவேண்டும் என்ற செய்தியை இக்கூற்று எமக்கு வற்புறுத்துகிறது. ஆனால் இன்னொரு உண்மையும் இதில் பொதிந்துகிடக்கிறது. உலகப் பொருள்களைப் பெற்று, பாதுகாப்புடன் நாம் இருந்தாலும், அதற்காக வானக வீட்டையும் பெறுவோம் என்ற உறுதி எமக்கில்லை. உலக செல்வங்களைத் தேடுவதில் நாம் காட்டும் ஊக்கத்தை, இறையரசை அடைவதில் காட்டவேண்டும் என்பதே இதில் காணும் அடிப்படை உண்மையாகும். ( காண்க : லூக். 16 : 10 ) விண்ணக வீட்டை அடைவதற்காக எமது செல்வத்தையும்; திறமைகளையும் விவேகத்துடன் பயன்படுத்த வேண்டியதும் அவசியம். ( காண்க: லூக். 16;11 ) எம் செல்வத்தை விருத்திசெய்து பாதுகாத்தலும், அயலாரும் அவ்விதமே செல்வம் தேடி அதைப் பாதுகாக்க உதவுதலும் எம் கடன் ( காண்க : லூக். 16 : 12 )

கிறிஸ்தவன் உலக செல்வங்களுக்கு அடிமை அல்லன். அவ்விதம் அவன் நடப்பதும் தவறுகும். அவனிடம் உள்ள அனைத்தையும் கடவுளின் அரசுக்காகத் தியாகம் செய்ய அவன் முன்வரவேண்டும். உலகார்ந்த செல்வங்களில் பற்றுறுதி உள்ளவன் கிறிஸ்துவின் சீடனுவதற்குத் தகுதியற்றவன். ( காண்க : லூக். 16 : 13 )

## 2. சட்டமும் மீட்பின் செய்தியும் ( லூக். 16 : 14 – 18 )

சட்டங்களை நுணுக்கமாக 'எழுத்தெழுத்தாகக்' கைக்கொள்வதைப் பரிசேயர் பெருமையாகக் கருதிவந்தனர். தமக்குச் சாதகமான முறையில் சட்டத்துக்குப் பொருள் கூறி அவற்றைக் கைக்கொண்டனர்; அதேவேளையில் சகோதர அன்பை மறந்தோராய் வாழ்ந்தனர். அவர்கள் சட்டத்துக்கு மதிப்பளித்தனர். ஆனுல் இறைவனை அவமதித்தனர். மனிதர்முன் தங்களை நீதிமான்களாகக் காட்டிக்கொண்டனர். சட்டங்களை நுணுக்கமாகப் பின்பற்ற விரும்பினர். இதனுல் உள்ளங்களை அறியும் இறைவன் அவர்களில் விருப்புக் கொள்ளவில்லை. (காண்க: லூக். 16-15)

இறைவன் நல்கிய மீட்புத் திட்டத்தில் இரண்டு காலகட்டங்களை நாம் காண்கிறேம், சட்டங்களையும், இறைவாக்கினர்களையும் கொண்டது பழைய உடன்படிக்கை. புதிய உடன்படிக்கைக் காலம் திருமுழுக்கு அருளப்பரில் தொடங்கி, உலகம் முடியுமட்டும் தொடர்ந்திருப்பது. இஸ்ராயேலர் பழைய சட்டங்களையும், இறைவாக்குகளையும் ஆதரித்தனர். ஆனுல், நற்செய்தியை ஏற்க மறுத்தனர். இதன் விளைவாக இறையரசைச் சார்ந்தோருடன் கூடி அதில் பங்குகொள்ள முடியாதவர்கள் ஆகின்றனர். ( காண்க: லூக். 16 : 16 )

பழைய சட்டமும் இறைவாக்கும் கிறிஸ்துவில் நிறைவெய்தின. மோயீசனின் சட்ட நுணுக்கங்களுக்குப் பரிசேயர் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்தனர் ஆனுல் அதிமுதன்மையானவற்றை மறந்திருந்தனர். எடுத்துக்காட்டாக : அவர்கள் திருமணத்தைப்பற்றிய கட்டளையைச் கைக்கொள்ள வில்லை. கிறிஸ்து அவர்களின் கபட நாடகத்தை இடித்துரைத்தார். மோயீசனின் கட்டளைக்ளுங்கு நிறைவும் கொடுத்தார்.

> "தன் மனைவியை விலக்கி விட்டு வேருெருத்தியை மணப்பவன் விபசாரம் செய்கிறுன். தன் கணவனுல் விலக்கப்பட்டவளை மணப்பவனும் விபசாரம் செய்கிறுன்." ( லூக். 16 : 18 )

சட்டநுணுக்கங்களுக்கு முதன்மை கொடுப்பதிலும் பார்க்க, அன்புக்கும் கருணைக்கும் அதிமுக்கியத்துவமும் கவனமும் அளிக்கவேண் டும்

இப்பாடத்தை இதிலிருந்து அறிகிறோம் இறைவனின் பிள்ளைகளாகிய நாம் விண்ணக அரசில் மற்றோருடன் சேர்ந்து பங்குகொள்ளும் வழி இதுவே.

3. பணக்காரனும் ஏழை லாசரும் : லூக், 16 : 19—31)

லூக்காசைத் தவிர்ந்த மற்ற நற்செய்தியாளர்கள் குறிப்பிடாத உவமைகளில் இதுவும் ஒன்று. இவ்வுவமையில் வரும் பணக்காரன் கொடியவன் அல்லன். ஆனால் தன் நன்மைத்தனத்துக்காக இறைவன் அளித்த கொடையை, தான் பெற்ற செல்வம் எனக் கருதினான். அவன் ஆடம்பரத்தில் விருப்புள்ளவன். ஏழை எளியவர்களை அவன் அதிகம் விரும்புவதில்லை. அவர்கள் பாவிகள் என்பது அவன் கொள்கை. அக்காலத்தில் இவ்வித கொள்கைகள் நிலவியதால் ஏழை லாசர் பற்றி எவ்வித அக்கறையும் அவன் கொள்ளவில்லை. (காண்க: லூக். 16:19-21)

இருவரும் இறந்தனர். அவர்களின் நிலை எதிர்மாறாகியது. ஏழை லாசர் ஆபிரகாமின் மடியை அடையும் பேறுபெற்றான். பணக்காரனோ பாதாளத்துக்குச் செல்லவேண்டியிருந்தது. லாசாரின் மகிமையைக் கண்ட பணக்காரன் தன்னில் இரங்கும்படி ஆபிரகாமை வேண்டுகிறான். (காண்க) லூக். 16 : 22 — 27 ) ஆனால் அவனது வேண்டுதல் பலனளிக்கவில்லை. பின்னர் நெறிதவறி வாழும் தனது சகோதரர்க்கு நல்லுரை கூறுவதற்காக எனினும், லாசாரை உலகுக்கு மீளவும் அனுப்புமாறு கேட்கிறான். இதுவும் பயனளிக்கவில்லை. மனந்திரும்புதலுக்குப் பெரும் அருஞ்செயல்கள் அவசியமற்றன என்றும்...... நற்செய்திக்குச் செவிகொடுத்து அதன்படி வாழும் எவனும் முடிவில்லாப் பெரும் பேற்றை விண்ணக வீட்டில் பெறுவரென ஆபிரகாம் விளக்கினார். ( காண்க : லூக். 16 : 28 — 31 )

நாம் பெறும் செய்தி :

1. வறுமை அல்லது செல்வம் இறைவனின் சிறப்பான கொடை என எண்ணி வாழ்தல் பிழை.

2. வசதி படைத்தோரை புனிதர் எனக் கருதுதல் மடமைத்தனம். ஏழைகளைப் பாவிகள் என மதிப்பிடல் பாவமாகும்.

3. ஆடம்பரம் தரும் இன்பங்களில் ஈடுபட்டு ஏழைகளை மறந்து வாழ்தல் கிறிஸ்தவர்களுக்கு அழகல்ல. இவர்கள் கடவுளின் பிள்ளைக்குரிய கடமைகளில் இருந்து தவறுகின்றனர்.

4. திருமறை நூலில் மீட்புக்கான நல்லுரைகளும், வழிகாட்டுதல்களும் பொதிந்து கிடக்கின்றன.

தியானிப்போம் :

1. கல்வி கற்று எம் திறமைகளை விருத்திசெய்து அயலார்க்குப் பணிசெய்தல் எம் கடமையாகும்.

2. எம் செல்வங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

3. அயலாரது செல்வங்களை மதித்து வாழ்தல் வேண்டும். அவர்களது பொருள்களைத் திருடாது இருப்போம். அவர்களின் சொத்துக்களைப் பாதுகாத்து அவர்களுக்கு உதவுவோம். செல்வம் தேடும் முயற்சியில் அயலார்க்கு உதவுதலும் எம் கடமை.

விடை தருக:

1. உமக்குள்ள சிறப்பான ஆற்றல்களை பிறர்க்குப் பணி செய்ய, அ. பள்ளியில ஆ. வீட்டில் இ. கிராமத்தில் எவ்விதம் பயன்படுத்துவீர் என விளக்குக.

2. சாதி குறைந்தவனுகக் கருதப்படும் நண்பன் ஒருவன் வாழ்வில் விரக்தி அடைந்துள்ளான். கடவுளையும் வெறுத்து நடக்கிறுன். அவன்தன் வாழ்விலும், கடவுளிலும் சரியான மதிப்பீடுகளைக் கொள்ளத்தக்கதாக ஒரு கடிதம் எழுதுக.

3. லூக். 16ஆம் அதிகாரத்தில் உமது பணத்தைத் தொட்ட இயேசுவின் 5 கூற்றுகளை எழுதி அவற்றை விளக்குக.

4. அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில் உமக்கு முதற் பரிசு கிடைப்பின்; இறைவனின் பிள்ளையாகச் சான்றுபகரத் தக்கதாக அதை எவ்விதம் பயன்படுத்துவீர் என எழுதுக.

5. பணக்காரனும் ஏழையும் உவமையை வாசித்து, பணக்காரன் பாதாளத்துச்குப் போக நேர்ந்தது ஏன் என்பதை விளக்குக.

அலகு; 33

# கடவுளின் அரசு உதயமாகிறது

**1. நான்கு அறிவுரைகள் :** ( லூக். 17 : 1 — 10 )

பரிசேயர்களுக்கு நல்லுரை கூறியதுடன் நின்றுவிடாது, இயேசு தம் சீடர்களுக்கும் அறிவுரை கூறினர். இறையரசைக் கட்டியெழுப்புதல் தொடர்பாகப் பல்வேறு அறிவுரைகளை இயேசு சீடர்களுக்குக் கூறினர்.

i. இடறலாயிருத்தல் பெரும் தீது : மனித சமுதாயத்தில் தீமை இருத்தல் வியப்பானதொன்றல்ல. ஆனல் கிறிஸ்தவன் தீமையுடன் போராடவேண்டும். ஊழல் பாவத்தை வளர்க்கிறது. கடவுளின் அரசு பரம்புவதற்கு ஊழலும், தீமையும் தடைகற்களாகின்றன. பிறரைப் பாவம் செய்யத் தூண்டுபவன் — அவர்களுக்கு இடறலாய் இருப்பவன் பெரும் துரோகம் இழைக்கிறன். (காண்க: லூக். 17 — 2)

ii. மன்னித்தல் மதிப்புக்குரியது : மன்னிக்கும் மனப்பாங்கு இன்றைய சமுதாயத்தில் அருகி வருவதைக் காண்கிறோம். பழிவாங்குபவன் பெரும் வீரனக மதிக்கப்படுகிறன். கொலை, சமுதாயப் போராட்டங்கள், போர், அநீதி, தற்கொலை... என்னும் தீமைகள் மலிந்து வரும் இந் நாட்களில் மன்னிப்பு என்னும் நற்பண்பு அருகி வருதலில் வியப்பெதுவும் இல்லை. பிறரின் பிழைகளைப் பொறுப்பவனைக் கோழை — மடையன் என்றுகூட சமுதாயம் கருதுவதைக் காண்கிறோம். ஆனல் எம்மை ஏளனம் செய்தாலும் மற்றவர்களை மன்னித்தல் கிறிஸ்துவின் வழிச் செல்லும் எம் கடன். ( காண்க : லூக். 17 : 3 — 4 )

iii. ஆன்மீக ஆர்வம் : ஊக்கத்தின் பெருமை : நாம் இறையரசை உலகுக்கு வெளிப்படுத்த வேண்டின், எளிமையுள்ளோராய் இருத்தல் அவசியம். இறைவார்த்தை எம்மில் பயன்தர எமக்குத் தேவையானது எளிமை. இவ்விதம் கனிகொடுக்கும் நாம் கிறிஸ்து அரசரின் அரசு உலகில் பரவத் துணை புரிவோம். எமது சான்றுவாழ்வு அதி பலன்தர வல்லது. (காண்க: லூக். 17 : 15 )

iv. தன்னை மறக்கும் தாழ்மை : நல்லவை அனைத்தும் ஆண்டவரிடமிருந்து வருகின்றன. நாம் ஆற்றும் நன்மைகள் எம்மில் இருந்து சுரக்கின்றன என நினைப்பது தவருகும். நாம் ஆண்டவரின் ஊழியர். எனவே ஆண்டவரின் அரசுக்காக உழைத்தல் எம்

கடன். பாராட்டுக்களைப் பெறுவதற்கோ, புகழ்ச்சியை ஏற்ப தற்கோ எமக்கு உரிமை இல்லை. புகழ்ச்சிக்குரியவர் இறைவன் ஒருவரே. இறைவனைப் புகழ்ந்தேற்றும் பணி மனிதனுக்கு உண்டு. எனவே இறைவனை வணங்குவதற்கு அயலாரைத் தூண்டவேண் டியது எமது பொறுப்பாகும். தன் கடமையை ஆற்றும் ஊழி யன் நன்றியை எதிர்பார்க்கமாட்டான். அவன் எசமானனுக் குரியவன். எனவே தாழ்ச்சியுள்ளோனாய் இருப்பான். ( காண்க : லூக். 17 : 7 — 10 )

## 2. தொழு நோயாளிகள் பதின்மர் : ( லூக். 17 : 11 — 19 )

இந் நிகழ்ச்சி ஆழ்ந்த உண்மை ஒன்றை எமக்கு அறிவுறுத்துகி றது. அருஞ்செயல்கள் அதாவது புதுமைகள் வழியாகக் கடவுளின் அரசை உருவாக்க முடியாது என்பதே இந்த உண்மை. சுகமடைந்த பதின்மரில் இயேசுவுக்கு நன்றி நவில ஒருவனே முன்வந்தான். அவன் புறவினத்தான். ஒன்பது யூதர்களையும் வெட்கித் தலைகுனிய வைத்தது அந்த அந்நியனின் செயல். மோயீசனின் சட்டத்துக்குப் புறத்தேயுள்ள உறுப்பினன் தான் சுகமடைந்தமைக்காகக் கடவுளுக்கு நன்றி சொன் னான். சுகம் அடைந்தமை இறை அரசின் அடையாளமாக மற்றவர் களுக்குப் புலப்படவில்லை. ஆனால் அந்த அந்நியனுக்கு அப் புதுமை இறையரசின் அடையாளம் என்பது தெரிந்தது.

அருஞ் செய்தி :

1. கடவுளை அன்பு செய்தலே இறையரசின் அடித்தளம். உண்மை அன்புக்கு அடிப்படை உறுதியான விசுவாசம்.

2. ஆன்மாவைப் பீடிக்கும் தொழுநோய் பாவம். இறைவாழ்வைப் பாவம் கொல்கிறது. பாவத்திலிருந்து மீட்படைய நாம் இறை வனை அண்டிச் செல்லவேண்டும். இது கடினமானது. ஆனால் உண்மையில் மனம் நொந்து தவ வழியைக் கைக்கொள்ளின் கடவுள் எமக்கு மன்னிப்பு அளிப்பார்.

3. கடவுளிடம் மன்னிப்புப் பெற்ற கிறிஸ்தவன், நன்றி மறவா நல் லவனாக வாழ வேண்டும்.

4. புதுமைகளையும், மேலான அருங்குறிகளையும் பெறுவதில் ஆழ்ந்த விசுவாசத்துக்காக வேண்டுதல் பெரும் மதிப்புள்ள செயல்.

### 3. கடவுளுடைய அரசு தோன்றுகிறது : (லூக். 17 : 20—37)

மெசியாவின் காலம் புதிய உடன்படிக்கைக் காலம். கிறிஸ்துவுடன் தொடங்குகிறது. புவியியல் எல்லைகள் இதற்கு இல்லை. இது ஆன்மீக நிறுவனம் மனித இதயங்களில் இது வளர்கிறது. இறையரசில் உயர்வு தாழ்வுக்கு இடமில்லை. திருமறை நூல் தரும் செய்தியை நடைமுறையில் கைக்கொள்ளும்போது மெசியாவின் அரசு எம்மில் பலன் கொடுக்கிறது. (காண்க : லூக். 17 : 20 — 21)

இறையரசு அல்லது மெசியாவின் காலம் மனுமகனின் நாள் என அழைக்கப்படுகிறது. ஆதியில் கிறிஸ்தவத்தைத் தழுவியோர், கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைப் பெரும் நம்பிக்கையுடன் எதிர்பார்த்திருந்தனர். அதி அண்மையில் இரண்டாம் வருகை நிகழும் என நம்பியிருந்தனர். விரோதிகளால் துன்புற்ற வேளைகளில் கிறிஸ்து சர்வ மாண்புடன் இறங்கி வருவார் என நினைத்திருந்தனர். ஆனால் அவர்கள் எதிர்பார்த்தது நிறைவேறவில்லை. கிறிஸ்து அவர்களுக்கு முன்னறிவித்தது இதுதான்.

> "காலம் வரும், மனுமகனுடைய நாட்களில் ஒன்றையாவது காண வேண்டுமென்று நீங்கள் விரும்புவீர்கள். ஆனால் காணமாட்டீர்கள். (லூக். 17 : 22)

பெரும் துன்பங்களுக்கு ஆளாகியோர் போலி இறை வாக்கினரின் போதனையைக் கேட்டு இலகுவாக ஏமாந்துவிடுவர், ஆனால் இயேசுவோ முரணான முறையில் அவர்களுக்கு நல்லுரை கூறினார்.

> "இதோ இங்கே; அதோ அங்கே என்பார்கள்.
> நீங்களோ போக வேண்டாம்." (லூக். 17 23)

என்பது அவரது வாய் மொழியாகும்

கடவுள் திருமகனது இரண்டாம் வருகை திடீரென நிகழும். எனவே அது எப்போது நிகழும் என்பதை அறிவிப்பது தேவையற்றது. (காண்க : லூக். 17 : 24) ஆனால் இரண்டாம் வருகைக்கு முன்னர் மீட்பர் துன்பதுயரங்களும் வேதனைகளும் படவேண்டும். (காண்க : லூக. 17 : 25)

பருப்பொருள்வாதக் காலம் மீண்டும் மீண்டும் வரும். அந் நாட்களில் மனிதன் உலகப் பெருள்களே சதம் என அவற்றிற்கு அடிமையாவான். நோவா காலத்திலேயே உலகில் பாவம் இருந்தது. அந் நாட்களில் பாவிகள் பெரு வெள்ளத்தினால் அழிக்கப்பட்டனர். ஆனால் மனுமகன் இரண்டாம்முறை வரும்போது பாவிகள் நெருப்பினால் அழிக்கப்படுவர். (காண்க ; லூக். 17 : 26 — 30)

மனுமகனை வரவேற்கத்தக்க நிலையில் உள்ளோர் பேறுபெற்றோர். எனவே உலக இன்பங்களினால் அலையுண்டு போகாது கடவுளின் சித்தத்தை நிறைவேற்றுபவர்கள் அரசுக்குப் போகும் தகுதி பெறுவர். அவர்கள் முடிவில்லாப் பெரும் பேற்றைப் பெறுவர். சொதோம் கொமொரு நகர்கள் எரிந்தபோது திரும்பிப்பார்த்த லோத்தின் மனைவியைப்போல பாவிகளும் அழிக்கப்படுவர். ( காண்க : லூக். 17 : 31-33 )

யார் எவர் என்ற பாகுபாடு நோக்காது கடவுள் மீட்பு அளிக்கிறார். அவரது நீதிவழி எமக்குப் புரியாததாக இருந்தாலும் இறுதியில் வெற்றி பெறும். ஒரே படுக்கையில் இருப்பவர்களில் ஒருவன் மீட்புப்பெற மற்றவன் மீட்படையா முறையில் நீதி தீர்க்கப்படும். ( காண்க : லூக். 17 ; 34 - 35 )

கடவுளின் தீர்ப்புக்கு எவரும் தப்பமுடியாது. கழுகுகள் பிண மோப்பம் அறிந்துகொள்ளல் போல ஒவ்வொருவரும் தீர்ப்பிடப்படுவர். ( காண்க : லூக். 17 : 36—37 )

செய்தி :

1. இறுதி நாளைப்பற்றி வினா எழுப்புதலிலும், புனிதத்துவத்தைத் தேடுதல் நன்று.

2. என்ன துன்பம் வந்தாலும் கடவுளின் செய்திக்குப் பிரமாணிக்கம் உள்ளோராய் இருக்கவேண்டும்.

3. நாங்கள் பாவத்தையும், தீமையையும் வெல்லப் போரிட வேண்டும். உலகார்ந்த இன்பங்களை விட்டு வாழவேண்டும்.

4. சமுதாயத்தைப் புனிதப்படுத்தல் எம் கடன்.

5. மரணத்துக்கு எந்நேரமும் கிறிஸ்தவன் ஆயத்தமாக இருக்க வேண்டும். அவன் வாழ்க்கை தியாகம், தவம், செபம் செறிந்ததாக அமைதல் வேண்டும்.

விடை தருக:

1. சிறுபிள்ளைகளுக்குத் துன்மாதிரிகையாய் இருப்பவர்களைக் குறித்து இயேசு கூறியது என்ன ?

2. சக மாணவர்க்குச் சீரிய எடுத்துக்காட்டாக விளங்க, எவ்விதம் உம் வாழ்வை ஒழுங்குபடுத்துவீர் ?

3. பின் வருவனவற்றில் நீர் பெறும் செய்தி என்ன ?

   i. சகோதரன் குற்றம் செய்யின் அவனைக் கண்டித்துத் திருத்து.

   ii. குணமடைந்த புறவினத்தான் மட்டும் இறைவனுக்கு நன்றி சொன்னான்,

   iii. கடவுளின் அரசு இதோ உங்களிடத்தில் இருக்கிறது.

4. 'இறைவனின் கரங்களில் என்னை ஒப்படைத்து வாழ்வேன்' என்ற தலைப்பில் குறுங் கட்டுரை எழுதுக.

அலகு : 34

# செபமும் தியாகமும் மதிப்புள்ளது

## 1. பொல்லாத நடுவனும் கைம்பெண்ணும் :

( லூக்காஸ் 18 : 1 — 8 )

இந்த உவமை லூக்காஸ் நற்செய்தியில் மாத்திரம் உண்டு. மனந் தளராது செபிப்பதன் மகத்துவத்தை இவ்வுவமை எமக்குப் படிப்பிக்கிறது. தொடர்ந்து தொந்தரை செய்ததால், கைம்பெண்ணின் வேண்டுகோள் நிறைவெய்தியது. இவ்வுவமையில் குறிப்பிட்டுள்ள நடுவன், கடவுள் நம்பிக்கை அற்றவன் எனலாம். விதவையின் இடைவிடா வேண்டுதல் கொடிய நடுவனையே மனமிளகச் செய்ததாயின், ஊக்கமுடன் செபிக்கும் எமக்கு இறைவன் எவ்வளவு உதவுவார். இயேசு பெருமான் எமக்குப் படிப்பிக்க விரும்பிய பாடம் இதுவே. எனவே இறைவனிடம் எம் தேவைகளுக்காகச் செபிப்போம். கடவுள் எம் வேண்டுதல்களுக்குச் செவிமடுக்கும்வரை தொடர்ந்து செபிப்போம். கேட்பவற்றிற்கு இறைவன் இரங்குகிறுர் இல்லையே என உணரும்போது இன்னும் அதிகமாக அவரை வேண்டுவோம். தீர்ப்பிடும் நாள் அதி தூரத்தில் இருக்கிறதென்று கருதிப் பாவத்தில் நிலைகொள்ளல் கிறிஸ்தவனுக்கு ஒவ்வாத செயலாகும். பதிலாக விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் செபிப்போம். ( காண்க : லூக். 18 : 8 )

## 2. பரிசேயனும் வரி வசூலிக்கும் ஆயக்காரனும்

( லூக். 18 : 9 — 14 )

தம்மை நீதிமான்களாகக் கருதி வாழ்வோர் மற்றவர்களைத் தம்மிலும் தாழ்ந்தவர் என எண்ணுதல் இயல்பு. உலகில் நிறைவுள்ள நீதிமான்களைக் காணுதல் அரிதிலும் அரிது. பாவம் மனித இனத்துக்கு இயல்பானது. போலிப் பக்தி, வேடதாரியின் அடையாளம். கடவுள் முன்னிலையில் வேடதாரி பாவியாக இருக்கிறுன். தன் குற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தாழ்ச்சியுள்ள பாவி, இறைவனின் மன்னிப்பை அடைகிறுன் தன்னைப் புகழ்வதோ, இல்லாததை இருப்பதாகப் பெருமை பாராட்டலோ செபம் அன்று. விசுவாச வாழ்வை வெளிப்படுத்துதலே செபம் ஆகும். செபிக்கும்போது எமது ஆற்றுமையையும், கடவுளின் மகத்துவத்தையும் நாம் ஏற்கவேண்டும். பெருமை பாராட்டிய பரிசேயன் இறைவனின் திருமுன் பாவியாகக் கருதப்பட்டான். ஆனுல் ஆயக்காரனே தன் பாவங்களுக்காக மனம் உருகி, மன்னிப்புப் பெற்றதால் மகிழ்வுடன் சென்றுன்.

**நாம் பெறும் செய்தி :**

கடவுள் திருமுன் எம்மைத் தாழ்த்துவோம். தாழ்ச்சியுடன் மனம் வருந்துதலுக்கு அடையாளமாக எமது செபம் அமையவேண்டும். எம் செபத்தில் அயலாரைப் பழித்தல் ஆகாது. மனம் வருந்தலும், மனத் தாழ்ச்சியுமே தூய்மையின் அளவுகோல். புறச்சடங்குகளைக் கைக்கொள் ளுதலால் உண்மையான உளமாற்றம் பெறமாட்டோம். மறுதலையாக இது போலிவேடத்தின் அடையாளமாக அமையலாம்.

**3. கடவுளின் அரசுக்கு ஏற்புடையோர் :**

(லூக். 18 : 15 - 17)

இயேசு சிறு குழந்தைகளில் அளவற்ற அன்பு கொண்டிருந்தார். அவரது அரசு திருச்சபை குழந்தை உள்ளம் படைத்தோர்க்கும், தூய் மையும் தாழ்ச்சியும் உள்ளோருக்குமே நிறுவப்பட்டது. அவரைப் பின் செல்வோர் குழந்தைகளைப் போல எளிமையும், சீலமும் உடையோ ராய் இருக்கவேண்டுமென அவர் விரும்புகிறார். ஆசிரியனின் சொற்க ளுக்குச் செவிசாய்க்கும் சிறுபிள்ளைபோலக் கிறிஸ்தவன் இயேசுவின் போதனைகளைக் கேட்கவேண்டும். இவ்விதம் நடப்பவர்கள் இறை அர சுக்குத் தகுதியுடையோர். எனவே அவர்வழிச் செல்வோராகிய நாம் சிறு பிள்ளைகளை ஒத்த நேர்மையுள்ளோராய்த் திகழ்வோமாக! புனிதம் பேணி எளிய மனத்துடன் மீட்பின் செய்தியை விசுவாசத்துடன் ஏற்று வாழ்வோமாக !

**4. செல்வந்தன் ஒருவன் :** (லூக். 18 : 18 — 30)

கடவுளின் கட்டளைகளைக் கடைப்பிடித்து நல்வாழ்வு நடத்திய இளவல் ஒருவனை இங்கு சந்திக்கிறோம். (காண்க : லூக். 18 : 21) அவனைப் பாராட்டிய இயேசு இதனிலும் உயர்ந்த நிறைவை அடை யும்படி அவனை அழைக்கிறார். (காண்க : லூக். 18 : 22) ஆனால் செல்வத்தில் பற்றுக்கொண்ட இந்தப் பணக்காரன் நற்செய்தியின் வழிநடத்தலைக் கைக்கொள்ளத் தயங்குகிறான். (காண்க : லூக். 18:23)

**இந் நிகழ்ச்சி எமக்களிக்கும் செய்தி :**

பத்துக்கட்டளைகளைக் கைக்கொள்ளலால் ஆன்மீக நிறைவு பெற்று விட மாட்டோம். உயர்ந்த நிறைவுக்கு அழைக்கப்பட்டால் நற்செய்தி நல்லுரைகளான ஏழ்மை, தூய்மை, பணிவு என்பவற்றைக் கடைப் பிடிக்க நாம் தயங்கக்கூடாது. தன் செல்வங்களுக்கு அடிமையானவன் இறையரசுள் நுழைதல் அரிது. மீட்பு கடினமானது. (காண்க :

லூக். 18 : 24 — 25 ) ஆனல் கடவுளில் நம்பிக்கை கொள்பவனுக்கு அது எளிதாகிறது. ( காண்க : லூக். 18 : 26 — 27 ) தனக்குள்ள அனைத்தையும் தியாகம்செய்து கடவுளைப் பின்செல்பவன் இம்மையிலும், மறுமையிலும் பேறுபெறுவான். காண்க : லூக். 18 : 28 — 30 )

5. பாடுகளின் வழியாக மரணம் : ( லூக். 18 : 31 — 34 )

தமது பாடுகளைப்பற்றியும், மரணத்தைப்பற்றியும் இங்கு இயேசு மூன்றும் முறையாக முன்னறிவிக்கிருர். இறைவாக்கினரும் இதை முன்னறிவித்திருந்தனர். இது பின்னர் உண்மை எனவும், இயேசுவே உண்மையான மீட்பர் எனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியிருந்தது. இறைவார்த்தை மனிதனுகியது, சிலுவையின் நிழல் அவரது வாழ்வில் வீழ்ந்தது. அவர் எமக்காக ஏழ்மை, தூய்மை, பணிவு மூன்றையும் கைக்கொண்டு சிலுவை மரணத்தை ஏற்ருர். விசுவாச மெலிவுள்ள அவரது சீடர்கள் இந்த மறைபொருளைப் புரிந்துகொள்ள முடியாதிருந்தனர். பல்வேறு படிநிலைகளில் கிறிஸ்துவின் பாடு, மரணம், உயிர்ப்பு என்பவற்றை விளக்கலாம்.

i. அவர் தமது சொந்த மக்களால் காட்டிக்கொடுக்கப்பட்டு, புறவினத்தார்க்குக் கையளிக்கப்பட்டார்.

ii. ஏளனத்துக்கும் அவமானத்துக்கும் ஆளானுர். (லூக். 18;32)

iii. அவர் கொல்லப்பட்டார்.

iv. அவர் மீளவும் உயிர்த்தெழுந்தார். ( லூக். 18 : 33 )

மீட்பின் இறைபொருள் இறுதிஇறப்பில் அல்ல, உயிர்ப்பிலேயே முடிவடைந்தது. கிறிஸ்தவத்தின் அடித்தளம் இது. இறைமக்களாகிய நாம், வாழ்வை நோக்கிச் செல்கிருேம்...... ...மரணத்தை நோக்கி அல்ல. நாம் ஒளியை நாடிப் போகிருேம்... ...இருளை நாடி அல்ல. வாழ்வின் முழுமையான இறைவனிடம் செல்கிருேம்... ஒன்றுமில்லாமையில் எம் வாழ்வு முடிவடைவதில்லை, இதுவே மீட்பின் திட்டம். கிறிஸ்து இதற்குச் சான்ருகிருர். உலகோருக்கு அவர் வழங்கிய நல்லுரை இதுதான்...... உன் சிலுவைகளை ஏற்றுக்கொள்...... முடியைப் பெற்றுக்கொள்.... இதைப்பற்றி நீர் என்ன நினைக்கிறீர். இந்த அறைகூவலுக்குப் பதில் அளிக்கத் தயாரா ?

## 6. மீட்பின் ஒளியைப் பெற்ற குருடன் :

( லூக். 18 : 35 — 43 )

அவனே குருடன். ஆனால் இயேசுவில் விசுவாசம் கொண்டிருந்தான். அவனைப் பேசாதிருக்கும்படி முன்சென்றவர்கள் அச்சுறுத்தினர். அவர்களின் பயமுறுத்தலை அவன் பொருட்படுத்தவில்லை. இதனால் அவனது வேண்டுகோள் அதி வலுவுள்ளதாக இருந்தது. காண்க : லூக். 18: 35 — 39 ) அவன் தொடர்ந்து கத்தினான் .. அவன் பார்வை பெற்றான். காண்க : லூக்: 18 : 42 ) ' பார்வை பெற்றுக் கடவுளை மகிமைப்படுத்திக்கொண்டு அவரைப் பின்தொடர்ந்தான்.' (லூக். 18:43)

நாம் பெறும் செய்தி :

பாவ இருளில் உழலும் மனிதன் மீட்பின் ஒளியைத் தேடுகிறான். விசுவாசத்தை அடித்தளமாகக்கொண்டு ஊக்கம் நிறைந்த செபத்தின் வழியாக இதை அவன் கண்டடைந்தான், உலகம் எதிரிடையாக இருந்தாலும், அஞ்சாநெஞ்சம் உள்ள அவன் வெற்றிபெற்றான். ஜெரிக்கோ நாட்டு அந்தகனின் எடுத்துக்காட்டான வாழ்வு எம் அனைவர்க்கும் உயிருள்ள அடையாளமாக அமைகிறது.

தியானிப்போம் :

1. ( காண்க : 1 இரா. 4 : 1 — 2 )
2. ( ,, : 2 இரா. 3 : 10 — 11 )
3. ( ,, : 1 திமோ. 2 : 1 — 3 )

விடை தருக :

1. பரிசேயனும் ஆயக்காரனும் என்ற உவமையிலிருந்து நீர் பெறும் செய்தியை எழுதுக.
2. ஊக்கமுடன், தொடர்ந்து செபித்தல் எமது கடமை. ஏன் ?
3. கிறிஸ்துவுக்காகத் தனக்குரிய அனைத்தையும் தியாகம் செய்த ஒருவரைப்பற்றி அறிந்தவற்றை எழுதுக.
4. நிறைந்த அர்ப்பணத்துடன் கிறிஸ்துவைப் பின் செல்லும் கடமை உமக்கு உண்டு. இந்த அழைப்பை ஏற்று வாழ விரும்பும் நீர், அடுத்த வாரம் செய்யவிருக்கும் 5 செயல்முறைகளைக் குறிப்பிடுக, வாரமுடிவில் உமது செயல்களை மதிப்பிடுக.

அலகு : 35

# ஆண்டவர் பெயரால் அரசராக வருபவர்

## 1. இயேசுவும் சக்கேயுவும் : ( லூக். 19 : 1 — 10 )

இந்நிகழ்ச்சி லூக்காஸ் நற்செய்தியில் மட்டும் உள்ளது. கடவுளின்கருணையைக் காட்டும் ஓர் அரிய நிகழ்வு இது. குள்ளனான சக்கேயு, இயேசுவைப் பார்ப்பதற்காக மரம் ஒன்றின்மேல் ஏறினான். இயேசு தம் வீட்டிற்கு விருந்தினராக வருவார் என அவன் கனவிலும் கருதவில்லை, ( காண்க : லூக். 19 — 5 )

இயேசுவின் வார்த்தையைக் கேட்ட சக்கேயு எத்துணை மகிழ்ந்திருப்பான். அவன் வாழ்வில் எதிர்பாராத அழைப்பு அவனுக்குக் கிடைத்தது. திடீரென மனமாற்றம் இடம்பெற்றது. யூதர்கள், ஆயக்காரரைப் பாவிகள் என ஒதுக்கி வந்தனர் அதைப்பற்றி அவன் மேலும் கவலைப்படவேண்டி இருக்கவில்லை. அவனது இல்லத்துக்கு இயேசு சென்றவேளையில் அவன் மனம்மாறி இருந்தான். மனமாற்றத்தால் அவன் மகிழ்வில் திளைத்திருந்தான், இத்தகைய மனநிறைவே அவனை இவ்வாறு கூறவைத்தது. ( காண்க : லூக். 19 : 8 ) இயேசு வந்ததும் சக்கேயு மீட்பின் மாண்பைச் சுவைத்தான். (காண்க: லூக். 19:9—110)

இயேசுவைத் தேடிச்சென்ற பாவியான சக்கேயு இறையரசுக்குச் செல்லும் பேறடைந்தான். இயேசுவின் கருணையைக் காட்டும் வரலாற்று நிகழ்ச்சிகள் பலவற்றை லூக்காஸ் குறிப்பிட்டுள்ளதால் ' அவரது நற்செய்தி ' தியாகத்தினதும், மீட்பினதும் நற்செய்தி என்று அழைக்கப் படுகிறது.

நாம் பெறும் செய்தி :

i. மெசியா பாவிகளைத் தேடிவந்தார்.

ii. அவர் அனைவருக்கும் மீட்பு அளித்தார்.

iii. மனமாற்றம் பெறும் பாவி புதுவாழ்வு பெறுகிறான்.

iv. பிறரிடமிருந்து அநீதியாகக் கவர்ந்தவற்றை மீளவும் அவர்களுக்குக் கொடுத்தல் நம் கடன்.

**2. பொற்காசுகளின் உவமை :** (லூக். 19 : 11 — 27)

இயேசு ஜெருசலேமை அண்மிச் சென்றபோது, உலக அரசு ஒன்றை அமைத்துத் தருவார் என பொதுமக்கள் நினைக்கத் தொடங்கினர். ஆதிக் கிறிஸ்தவர்கள்கூட கிறிஸ்துவின் இரண்டாம் வருகை அண்மையில் இடம்பெறும் என எதிர்பார்த்திருந்தனர். பொற்காசுகளின் உவமை இக் கருத்துக்கள் தவறானவை என்பதைக் காட்டுகின்றன. கடவுளின் மகிமைக்காக எமது திறமைகளை வளர்த்துப் பயன்படுத்தவேண்டுமென இவ்வுவமை எமக்குப் படிப்பிக்கிறது. இன்னும் ஆண்டவரின் நாள், வருங்காலத்தில் மறைந்திருக்கிறது என்பதையும் இதன்வழியாக அறிகிறோம். திறமைகளும், ஆற்றல்களும் பலவகைப்பட்டன; எல்லாரும் ஒரே அளவான திறமைகளையும், ஆற்றல்களையும் பெறுவிடினும், நாம் பெற்றவற்றை விருத்தி செய்தல் எம்கடமை என்பதும் இவ்வுவமை சுட்டிக்காட்டும் அரிய உண்மையாகும்,

**நாம் பெறும் செய்தி :**

தந்தையாம் இறைவன், உயிர்த்த கிறிஸ்துவை இறையரசுக்குத் தலைவனாக்குவார். (காண்க ! லூக். 19 : 15)

திரும்பிவரும்போது அனைவர்க்கும் தீர்ப்பளிப்பார். (காண்க ! லூக். 19 : 15)

அரசைச் சார்ந்த ஒவ்வொருவரும் ஆற்றிய பணி மதிப்பிடப்படும். (காண்க ! லூக். 19 ; 16 — 21)

தமது திறமைகளைப் பயன்படுத்தத் தவறியவர்கள் தண்டனை பெறுவர். (காண்க : லூக். 19 : 22 — 26)

இறையரசுக்கு எதிராகச் செயலாற்றியோர் அழிவுக்குட்படுவர் (காண்க : லூக். 19 : 27)

சமுதாயத்தைப் புனிதப்படுத்தும் பணியில் திருச்சபைக்கு உதவுதல் எம் கடன்.

**3. ஆண்டவர் பெயரால் அரசனாக வருபவர் :**

(லூக். 19 : 28 — 44)

ஜெருசலேம் (பழைய இஸ்ராயேல்) உலகார்ந்த அரசர் ஒருவரையே எதிர்நோக்கியிருந்தது. இதனால் மனிதனாகப் பிறந்த மீட்பரை ஏற்றுக்கொள்ளவில்லை. அவரை வேண்டாமெனத் தள்ளிநடந்தது. கழுதை மீது ஊர்வலம் வந்த அமைதியின் அரசரைப் புகழ்ந்து ஆர்ப்பரித்த சீடர்களை மௌனமாக்க யூதத் தலைவர்கள் முனைந்தனர்.

( காண்க : லூக். 19 : 38 — 39 ) தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களை நினைந்து மீட்பராம் இயேசு கண்ணீர் சிந்தினார் ; தொடர்ந்து ஜெருசலேமுக்கு நிகழவிருக்கும் அழிவையும் அவர் முன்னறிவித்தார். ( காண்க : லூக். 19 : 41 — 44 )

### இது எமக்குப் புலப்படும் செய்தி :

நாங்கள் எமது மீட்பரைப் பணிவுடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். சிலுவை வழியில் அவரைப் பின்சென்று... அவரில் மகிழ்வெய்தவேண்டும். மனித இதயங்களில் இறையரசைப் பரப்பும் பணியில் செயற்படும் தூய ஆவியுடன் ஒத்துழைக்கவேண்டும். உலக அரசுக்காக உழைப்பவர்களாகாது, இறையரசுக்காக எதுவும் செய்ய எம்மைத் தயார்ப்படுத்த வேண்டும். இவ்விதம் செயற்படின், இறுதிநாளில் நற்பேற்றையும் பெறுவோம்.

### 4. செபவீட்டைக் கள்வர் குகை ஆக்கலாமா ? :

கோவிலுக்குள்ளே வியாபாரம் நடந்துகொண்டிருந்தது. வாங்குபவர்களும், விற்பவர்களும் கோவிலின் தூய்மையைக் கெடுத்துவந்தனர். இந்த அநியாயத்தை ஒழிக்க இயேசு முன்வந்தார். கோவில் செபவீடெனவும், புனிதத்தலமெனவும் இயேசு பிரகடனப்படுத்தினார். இதனால் கோவிலைத் தம் நலனுக்காகப் பயன்படுத்திய கள்வரையும், சுரண்டி வாழ்வோரையும் அடித்துத் துரத்தினார். இது எமக்கு ஓர் அறைகூவலாக அமைகிறது. எமது தேவாலயங்களையும், திருப்பயணத் தலங்களையும் மதிக்கவேண்டுமென்பதை மறந்து இன்றைய சமுதாயம் வாழ்கிறது. ( காண்க. லூக். 19 : 46 )

கலிலேயாவில் இயேசுவின் பணி ஒரு முடிவுக்கு வந்தது தாம் ஏற்கவேண்டிய சிலுவையும், இறப்பும் அண்மித்துவிட்டதை அவர் அறிந்திருந்தார். இறைவனில் கொண்டுள்ள உறுதியான விசுவாசத்துடனும், நம்பிக்கையுடனும் தமது பாடுகளையும், மரணத்தையும் முகம் நோக்க அவர் தீர்மானித்திருந்தார். அவரது இந்தத் தீர்மானமே எமது மீட்பாகியது. யூதத் தலைவர்கள் இயேசுவில் பொறாமை கொண்டிருந்தனர். இதனால் அவரைக் கொல்லவிழைந்தனர். ஆனால் மக்களுக்கு அஞ்சியதால் அவரைச் சிறைப்பிடித்தனர். (காண்க. லூக். 19:47–48)

நாம் பெறும் செய்தி :

1. எமது பங்குக் கோவிலதும், மற்றைய வழிபாட்டுத் தலங்களதும் புனிதத்துவத்தைப் பாதுகாத்தல் நம் கடன்.
2. உலகோர்க்கு அஞ்சாது, உடன்படிக்கைச் சமுதாயத்தை நிறு

வுதற்காகக் கடினமாக உழைப்போம்.

3. கடவுளது அரசுக்காகப் பணியாற்றுவோர்க்கு உதவுதலும், அவர்கள் ஆற்றும் பணியைக் கண்டு பொறுமைகொள்ளாதிருத்தலும் எம் கடன்.

தியானம் :

1. (காண்க : உரோ. 12 : 9 — 13).

2. (காண்க : 2 தெசலோனி. 3 : 10 — 12).

3. நான் மாத்திரம் மீட்பு அடையவேண்டும் என்பதல்ல, மனித சமுதாயம் முழுவதும் மீட்படைய வேண்டும் என்பதே இறைவனின் திட்டம். எனவே திருச்சபையின் மறைபரப்புப்பணிகளில், எனது திறமைக்கேற்ற வழியில் உதவுதல் என் கடமை.

விடை எழுதுக :

1. சக்கேயு மரத்தின்மேல் ஏறியது ஏன் ?

2. மனம் மாறிய பாவி புதுவாழ்வு பெறுகிறான் என்ற தலைப்பில் ஒரு கதை எழுதுக.

3. கோவிலில் ஒழுகும் முறைபற்றி ஒருவர் கேட்டால் என்ன விடை அளிப்பீர் ?

4. பத்துப் பொற்காசுகள் தொடர்பாக, உமது சகோதரர்கள் ஒவ்வொருவரின் திறமைகளைக் குறிப்பிட்டு, அவர்கள் ஆற்றும் பணிகளையும் எழுதுக.

5. பங்குக் கோவிலில் நடக்கும் சீர்கேடுகளைப்பற்றி உரையாடல் ஒன்று நிகழ்த்துக.

அலகு : 36

# யூதத் தலைவர்களுடன் முரண்பாடு

## 1. அதிகாரம் கொடுத்தது யார்? (லூக். 20 : 1 — 5)

(இயேசுவின் அதிகாரம்) இயேசுவின் கருத்துக்களை யூதத் தலைவர்கள் புரிந்துகொள்ளத் தவறினர். இதனால் அடிக்கடி அவர்கள் இயேசுவுடன் முரண்பட்டனர். கோவிலில் வியாபாரத்தில் ஈடுபட்டவர்களை இயேசு அடித்து விரட்டியபோது, தலைமைக் குருக்களும், பரிசேயரும் அவரை அணுகி,

> "எந்த அதிகாரத்தால் இப்படிச் செய்கிறீர்?" என்று வினவினர். (லூக். 20 : 2)

இயேசுவின் இறை அதிகாரத்தையிட்டு அவர்கள் ஐயங்கொண்டனர், தப்பறையான எண்ணமும் பொறாமையும் உடையோராய் அவர்கள் இருந்தனர். இதனால் அவரைக் கொன்றுவிடச் சந்தர்ப்பத்தை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர். இயேசு அவர்களில் கருணை உள்ளவராக இருந்ததால், அவர்களின் உள்ளத்தைத் தொடும் முறையில் இப்படி வினவினார்.

> "நானும் உங்களை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்லுங்கள். அருளப்பருடைய ஞானஸ்நானம் வானத்திலிருந்து வந்ததா? மனிதரிடமிருந்து வந்ததா?" (லூக். 20 : 4)

இவ்வினாவின் வழியாக உளம் வருந்தும் ஒரு சந்தர்ப்பத்தை இவர்களுக்கு அளிக்க இயேசு விரும்பினார். ஆனால் அவர்களது நேர்மையீனத்தினால், கபடமான விடை ஒன்றையே அவர்கள் அளிக்கக்கூடியவர்களாய் இருந்தனர். அவர்களின் விடை இதுதான், "அது எங்கிருந்து வந்ததெனத் தெரியாது" (லூக். 20 : 7) உண்மைக்குச் சான்று பகரும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை. அவர்கள் தொடர்ந்தும் கடின உள்ளத்தினராய் இருந்தனர். இயேசு அவர்களுக்கு,

> "நானும் எந்த அதிகாரத்தால் இப்படிச் சொல்கிறேன் என உங்களுக்குச் சொல்லேன் எனக் கூறினார். (லூக். 20 : 8)

நாம் பெறும் செய்தி :

i. பரிசுத்த ஆவியில் ஐயம் கொள்ளல் பிழை.
ii. நாம் கொண்டுள்ள நன்மை எதற்கும் இறைவனே காரணம்.

iii. படைப்பை ஆய்ந்து பார்த்து, பரிசுத்த ஆவியின் செயற்பாட்டைத் தெளிந்துகொள்ளுதல், அவரது அதிகாரத்தைப் பற்றி வினவுதலும் சிறந்தது.

iv. எமது மீட்புக்காகப் பரிசுத்த ஆவி வழியாகக் கிறிஸ்து திருச்சபையில் செயலாற்றுகிறார் என்பதை ஏற்று வாழ்வோம்.

## 2. திராட்சைத் தோட்டத்தைப் பெற்ற கொடிய குத்தகைக் காரர்கள் : *(லூக். 20 : 9—19)*

இது இறையரசைப் பற்றிய வரலாற்று உவமை. யூதத் தலைவர்களது சதித்திட்டத்தை இயேசு நன்கு அறிந்திருந்தார் என்பதை இது காட்டுகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட அவரது மக்களாகிய இஸ்ராயேலை இயேசு எத்துணை அன்பு செய்தார் என்பதை இதன் வழியாக அறிகிறோம். யூதர்களின் துரோகத்தையும், நன்றி மறந்த செயலையும்கூட இது எமக்குக் காட்டுகிறது. இவ்வுவமையில் பின்வருமாறு பொருள் கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| திராட்சைத்தோட்டம் | — | கடவுளின் அரசு |
| சொந்தக்காரன் | — | கடவுள் |
| குத்தகைக்கிருந்த குடியானவர்கள் | — | யூதத்தலைவர்கள் |
| தோட்டக் காணி | — | விசுவாசமும் புனிதத்துவமும் |
| ஊழியர் | — | இறைவாக்கினர் |
| மகன் | — | கிறிஸ்து |

முன்னைய நாட்களில் வாழ்ந்த யூதத் தலைவர்கள், இறைவாக்கினரைக் கொன்றனர். அவர்கள் வழிவந்தவர்களோ மெசியாவை ஏற்காது விட்டதுடன் அவரைச் சிலுவையில் அறைந்தும் கொன்றனர். இது இஸ்ராயேலருக்கு அழிவைக் கொணர்ந்தது. இறையரசை அரவணைக்கும் அரும் பேற்றைப் புறவினத்தார் பெறும் வாய்ப்பும் பெற்றனர்.

## இவ்வுவமை தரும் செய்தி :

நாங்கள் திருச்சபையைச் சேர்ந்துள்ளோம். திருச்சபையே புதிய இஸ்ராயேல். உலகைப் புனிதப்படுத்தும் கடமை எமக்குண்டு. இதைச் செய்யாது விடுவோர் தம்மையே அழிக்கின்றனர். கிறிஸ்துவை அறிந்தும், அவரை ஏற்காது தள்ளி வாழ்வோர் மீட்படைய மாட்டார்கள். *(காண்க : லூக். 20 : 17—18)*

## 3, உரோமைச் சொருக்கு வரி : *லூக்காஸ் 20 : 20—26)*

நம் ஆண்டவராகிய இயேசு இந்நிலவுலகில் வாழ்ந்த காலத்தில் பலஸ்தீனம் உரோமைக் குடியேற்ற நாடாக இருந்தது. இதனால் யூதர்

கள் செசாருக்கு வரி செலுத்தவேண்டியோராய் இருந்தனர். யூதத் தலைவர்கள் இயேசுவைத் தொல்லையில் மாட்ட விரும்பினர். செசாருக்கு வரி கொடுப்பது முறையா? என்பது அவர்கள் இயேசுவிடம் கேட்டவினா. இயேசுவின் விடையில் இருந்து அவர் மதச்சார்புள்ளவரா அல்லது நாட்டுப்பற்று அற்றவரா என்பதை நிறுவலாம் என்பது அவர்களின் எண்ணம். ஆனால் அவர்களது தந்திரம் இயேசுவில் பலிக்கவில்லை. இயேசுவின் பதிலின் ஆழத்தை எண்ணி அவர்கள் வெட்கமடைந்தனர். (காண்க லூக். 20 : 25)

இந்நிகழ்ச்சி எமக்களிக்கும் செய்தி :

1. கிறிஸ்தவன் நற்குடி மகனாக இருக்க வேண்டியவன்.
2. தன் நாட்டுக் கடமைகளில் கவனம் செலுத்த வேண்டும்.
3. இறைவனிடமிருந்து மனிதனுக்கு அதிகாரம் வருகிறது.
4. அதிகாரத்தை நீதியான முறையில் மனிதன் பயன்படுத்தவேண்டும்.

4. உயிர்த்தெழுதல் பற்றிய பிரச்சினை : (லூக். 20 : 27—40)

அ. இறந்தோர் உயிர்த்தெழுவர் என்பதை அன்று வாழ்ந்த சதுசேயர் ஏற்கவில்லை. அவர்களது வினவுக்கு விடையளித்த இயேசு, மறுவுலகில் வாழ்வோரின் நிலைபற்றிய விளக்கம் கொடுத்தார். (காண்க : லூக். 20 : 35—36)

ஆ. எம் இறைவன் வாழும் இறைவன். எனவே அவரை அன்பு செய்பவர்களும் வாழ்வு பெறுவர் என்பது உறுதி. இறவாப் பெருவாழ்வு பெறுதல், அவன் இறைவனில் கொண்டுள்ள அன்பைப் பொறுத்தது. (காண்க : லூக். 20 : 37—38)

5. எமக்கு அளிக்கும் செய்தி :

i. இறந்தோரிடம் இருந்து நாமும் உயிர்த்தெழுவோம். இது எமது சொந்த நன்மைத்தனத்தினாலோ அல்லது பெருமையினாலோ நிகழ்வதல்ல; இறைவனின் அன்புசால் வல்லமையின் விளைவாலேயே இங்ஙனம் உயிர்ப்போம்.

ii. உயிர்த்தெழுதலின் மகிமைக்கு உரித்தாளராக வேண்டின், நாம் இறைவனின் அன்பை அனுபவிக்க வேண்டும்.

5. மெசியா இறைவனின் மகன் : (லூக்காஸ் 20 : 41—44)

இறைவன்தாமே மெசியாவாக வருவார் என்பதை யூதர்கள் எதிர்பார்க்கவுமில்லை; விசுவசிக்கவுமில்லை. தாவீது அரசரின் பரம்பரையில்

வரும் சிற்றரசனைக் மெசியா பிறப்பார் என்று அவர்கள் போதித்தனர். ஆனால் மெசியா தாவீதின் மகன் மட்டுமன்றி, அவரது ஆண்டவராக வும் இருந்தார் என்று இயேசு அறிவித்தார். (காண்க: லூக். 20:44)

நாம் பெறும் செய்தி :

கிறிஸ்துவின் வருகை மனித பரம்பரை விதிகளுக்கு உட்பட்டதல்ல. இறைவனில் மறைந்துள்ள மறைபொருள் இது. உயிர்த்த கிறிஸ்து அனைத்தையும் ஆளுகிறார். அவரது ஆட்சி அனைத்துலகுக்கும் பரந்து செல்வது. அவரது அரசு மனித அரசுகள் அனைத்தையும் கடந்து நிற்பது. உயிர்த்த கிறிஸ்து அவரது திருச்சபைக்குப் பரிசுத்த ஆவியை அருளுவார்.

6. மறைநூல் அறிஞர்க்கு எச்சரிக்கை :

(லூக். 20 : 45 — 47)

யூதர் தலைவர்கள் தவறுதலான விசுவாசம் உள்ளோராய் இருந்ததை இயேசு கண்டித்தார். அவர்களின் கபட நாடகத்தைக் கண்டு மதிமயங்காதிருக்கும்படி தமது சீடர்களுக்கு அறிவுரை நல்கினார். உயிர்த்தெழுதலில் நம்பிக்கையற்றிருந்த சதுசேயர், எளிய விதவைகளைச் சுரண்டி வாழ்ந்த குரு மரபினர் ஆகியோர் மட்டில் எச்சரிக்கையாய் இருக்கும்படி இயேசு கூறினார். இக்குருக்கள் உலகார்ந்த அரசு ஒன்றையே கண்டடைய விரும்பினர். அவர்கள் சட்டத்தையும், இறைவாக்கினரின் நல்லுரைகளையும் தமக்குச் சாதகமான முறையில் மாற்றி அமைத்தனர். அதனால் அவர்கள் செயல்களைப் பார்த்து ஏமாந்து போகாதிருக்கும்படி இயேசு தம் சீடர்களை எச்சரித்தார். (காண்க: லூக், 20 : 46—47)

இந்நிகழ்ச்சி தரும் செய்தி :

உண்மை வழிபாடு வெற்றுச் சடங்காசாரங்களில் தங்கவில்லை. தாழ்ச்சியே உண்மை விசுவாசத்தின் அடித்தளம்.

இறையரசுக்காகக் காத்திருக்கும் நீதியுடையோர், தமக்குரிய உலகப் பொருள்கள் அனைத்தையும் இதற்காக இழக்க முன்வருகின்றனர். அவர்களைக் கண்டு பாவிக்க நாம் முன்வருதல் எம் கடன். இன்றைய சமுதாயத்தில் வாழும் கபடதாரிகளின் போக்கை முடியடிக்க முயல்தல் எம் கடன்.

விடை எழுதுக :

1. இயேசு இடையிடையே யூதத் தலைவர்களைக் கண்டித்தது ஏன்?

2. கொடிய குத்தகைக்காரர் உவமையில் இருந்து நீர் படிக்கக் கூடிய படிப்பினைகள் எவை ?

3. லூக். 20 : 25 தொடர்பாக சொற்போர் ஒன்றுக்கான குறிப்புகளைச் சேர்க்குக.

4. பின்வரும் சூழ்நிலைகளில், கபட நாடகத்தை ஒழிக்க நீர் எவ்விதம் செயற்படுவீர் எனக் குறிப்பிடுக.

   i. சங்கக்கடையில் 4-50க்கு பொருள் வாங்கிக்கொண்டு 5-00 ரூபாவைக் கொடுக்கிறீர். காசாளர் 5-50 மீதி தருகிறார்.

   ii. பேருந்தில் பயணச் சீட்டின்றிப் பயணம் செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது.

   iii. வகுப்பறையில் 5 ரூபாத் தாள் ஒன்றைக் கண்டெடுத்தால்.

அலகு : 37

# மனுமகனின் வருகைக் காலம்

## 1. ஏழைக் கைம்பெண்ணின் காணிக்கை :

(லூக்காஸ் 21 : 1—4)

இறையரசு எளிய மனத்தோர்க்கு உரியது. ஏழைகள் எளிய மனத்தோர் என்றும், செல்வந்தர் கர்வம் உடையோர் என மதிப்பிடுதல் பிழையாகும். உண்மையான ஏழ்மை மனப்பாங்கிலே தங்கியுள்ளது: பணத்தைத் தெய்வமாகக் கருதி வாழ்தல் பிழை. கடவுளின் அரசுக்காக உலகப் பொருள்களைத் தியாகம் செய்யக் கிறிஸ்தவன் முன்வர வேண்டும். விதவைப் பெண் இட்ட காணிக்கை மற்றையோரின் காணிக்கையிலும் மதிப்பு மிக்கது. (காண்க : லூக். 21 : 4 ) கொடையின் மதிப்பு கொடுக்கும் அளவில் அல்ல, ஆனால் கொடுப்பவரின் மனதைக் கொண்டு மதிக்கப்படும்.

### இந்நிகழ்ச்சி தரும் செய்தி :

1. ஒருவனைச் சிறுமைப்படுத்தும் நோக்குடன் பிச்சையிடுதல் பயனற்றது.
2. பணக்காரர் செய்யும் பெரிய அன்னதானங்களிலும், ஏழைகளின் முழுமையான தியாகம் சிறந்தது.
3. இறையரசுக்காக அனைத்தையும் இழப்பது நிறைந்த புனிதத்துவத்தின் அடையாளமாகும்.

## 2. ஜெருசலேம் அழிவு பற்றிய முன்னுரை ;

(லூக்காஸ் 21 : 5—6)

மனிதனால் ஆக்கப்படுகிற உலகப் பொருள்கள் அனைத்தும் ஒரு நாள் அழிக்கப்படும். அவையே எம் கதி என வாழ்தல் பயனற்றது. உலகப் பொருள்களில் தங்கியிராது, ஆன்மீக அலுவல்களுக்கு உயர்ந்த மதிப்பு அளித்து வாழப் பழகுவோம்.

## 3. துன்பமும் பாடுகளும் தொடங்குகின்றன :

(லூக்காஸ் 21 : 7—10)

ஜெருசலேம் தேவாலயத்தின் அழிவுக்குப் பின்னர் இறைவன் இன்னொரு தேவாலயத்தைக் கட்டி எழுப்புவார். மீட்பைக் கண்டடைவதற்காக அங்கு செல்வோர் பேறு பெற்றவர்கள். இப்புதிய கோவில்

திருச்சபை அல்லது கிறிஸ்துவின் மறையுடல் என அழைக்கப்படுகிறது. இது உலகெங்கும் பரவும். ஆனால் அதற்கு முன் பல அடையாளங்களும், இடுக்கண்களும் இடம்பெறும். அவை :

i. போலி இறைவாக்கினர் கிறிஸ்தவர்களைப் பிழையாக வழி நடத்துவர். காண்க : லூக். 21 : 8

ii. சமுதாயம் பெரிதும் பிளவுபடும் ,, ,, 21 : 10

iii. அகில உலகிலும் போர் நிகழும் ,, ,, 21 ; 10

iv. துன்புறுத்தல்கள் பெருமளவில் இடம்பெறும் ,, 21 : 12

v. குடும்பத்திலே பிளவுகளும் காட்டிக் கொடுத்தலும் இடம் பெறும் ,, ,, 21 : 16

vi. பிரமாணிக்கமுள்ளோர் கொல்லப்படுவர் ,, ,, 21 : 17

vii. நிலநடுக்கமும், தொற்றுநோய்களும் பஞ்சமும் ஏற்படும் ,, ,, 21 : 11

ஆனால் திருச்சபையின் பரம்புதலை எவரும் தடுக்கமுடியாது, இறைவனின் வல்லமையை அலகை அல்லது மனித சக்தி அழிக்கமுடியாது. பரிசுத்த ஆவி திருச்சபையைப் பாதுகாப்பார்...காண்க: லூக் 21:14—15
அனைவருக்கும் மீட்புக்கிடைக்கும் வாய்ப்புண்டு ,, ,, 21:18—19

4. பழைய ஜெருசலேமின் அழிவு : (லூக். 21 : 20—24)

மெசியாவைத் தள்ளிவைத்த பழைய இஸ்ராயேல் அழிக்கப்படும் என இயேசு முன்னுரைத்தார். கி. பி. 70 ல் இக்கூற்று உண்மையானது. அன்றிலிருந்து இஸ்ராயேல் மக்கள் அங்குமிங்கும் சிதறிச் சென்றனர். கிறிஸ்துவின் முன்னுரை இவ்வண்ணம் நிறைவேறியது. (காண்க லூக். 21 : 20) ஆனால் புதிய ஜெருசலேம் திருச்சபை உலகனைத்தோர்க்கும் உரியது.

5. மனுமகனின் வருகை : (லூக்காஸ் 21 : 25—28)

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை பற்றி இப்பகுதி விளக்குகிறது. எதிர்காலத்தில் நிகழவிருக்கும் நிகழ்ச்சி இது. உலக முடிவைப்பற்றியும், அதற்குமுன் நிகழவிருக்கும் குறிகள் பற்றியும் இயேசு இங்கு பேசுகிறார்.

i. இயற்கை அழிவுகள் இடம்பெறும் காண்க : லூக். 21 : 25
ii. ஏக்கமும் அச்சமும் இடம்பெறும் ,, ,, 21 : 26
iii. அப்பொழுது மனுமகன் வருவார் ,, ,, 21 : 27
iv. அவரது இரண்டாம் வருகையின்போது நீதிமான்களை விடுவிப்பார் ,, ,, 21 : 28

6. **அத்திமரம் அளிக்கும் பாடம் : (லூக்காஸ் 21 : 29—31)**

புதிய செழுந்தளிர்கள் அத்திமரத்தில் தோன்றுவதைக் காணும் போது கோடை அண்மித்துவிட்டதை அறிகிறோம். இதேபோல, முன்னர் குறிப்பிட்ட அடையாளங்கள் இடம்பெறும் வேளையில், ஆண்டவரின் நாள் நெருங்கிவிட்டதை நாம் அறிவோம். ஆனால் அன்று நாம் உண்மை மீட்பைக் கண்டடைய வேண்டின்,

i. உலகார்ந்த கவலைகளில் மூழ்காது, ஆன்மீக அலுவல்களைத் தேடி அதற்காக உழைக்க வேண்டும். (காண்க : லூக். 21 : 34)

ii. இறையரசை எம்முள் உருவாக்கி, எம்மிலும் பிறரிலும் அது வளர ஊக்கமாக உழைக்க வேண்டும். செபத்தின் மதிப்பை உணர்ந்து, தொடர்ந்து செபித்தலும் அவசியம். (காண்க : லூக். 21 : 36)

**தியானத்துக்கு :**

1. காண்க : 1 இராயப்பர் 5 : 8—10
2. ,, 2 திமோத். 3 : 2—5
3. ,, கொலோ. 4 : 2—3

**விடை எழுது :**

1. லூக். 21 : 2—4 வழியாக நீர் பெறும் செய்தியை எழுதுக.
2. இறுதி நாளைப்பற்றி இயேசு கூறியவற்றின் சுருக்கத்தை எழுதுக
3. கிறிஸ்தவம் அழிந்துபோகாதென இயேசு எவ்விதம் அறிவிக்கிறார். பொருத்தமான மேற்கோள்களைக் காட்டுக.
4. செபித்து விழிப்பாயிருங்கள் ...... இயேசுவின் இக்கூற்றினால் நீர் விளங்குவது என்ன? இக்கூற்றுக்கு இயைய வாழ்பவர்களின் படங்களைச் சேர்த்து வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுக. அவர்களைப்பற்றிச் சுருக்கமாக எழுதுக.

அலகு: 38

# சிலுவையின் பாதையில் I...

## 1. அலகைக்கு அடிமைப்பட்ட அப்போஸ்தலன் :

( லூக். 22 : 1 — 6 )

'பாஸ்கா' எனப்படும் கடத்தல் விழாவுக்குச் சில நாட்களே இருந்தன. ஜெருசலேமுக்குப் பெருங் கூட்டம் சென்றவண்ணம் இருந்தது. இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இயேசுவும் கோவிலில் ஒவ்வொருநாளும் போதித்து வந்தார். அவர்களின் தீநெறிகளை மறந்து, அன்பின்வழி நின்று நல்லன செய்ய முடியும்படி அவர் படிப்பித்தார். அவரின் நல்லுரைக்குச் செவிமடுக்க பெருங் கூட்டங் கூடியது. இதைக் கண்டு பொறாமையடைந்த யூதத் தலைவர்கள், எவருக்கும் தெரியாது அவரைக் கைது செய்யத் திட்டம் வகுத்தனர்.

நன்மைக்கும் தீமைக்கும் இடையே பெரும் போராட்டம் ஒன்று நடந்தது. தீமையுடன் போராட அழைக்கப்பட்டான் யூதாஸ் இஸ்கரியோத். தீமைக்கு அவன் வயப்பட்டான். இதனால் பாவத்தில் வீழ்ந்து உலகம் மறவாத இழி பெயரையும் தேடிக்கொண்டான். ( காண்க : லூக். 22 : 4 )

பணத்துக்குப் பேராசைப்பட்டு அடிமையானவன் பாவத்தில் வீழ்வது உறுதி. பேரவா என்பது மிகக் கொடிய அடிமைத்தனமாகும். கையூட்டு வாங்குவதும், அநீதியை ஆதரிப்பதும், நம்பிக்கைத் துரோகம் செய்வதும் சமுதாயத்தில் பெரு வழக்காகிவிட்டன. இக் கொடிய பாவங்கள் கிறிஸ்துவைச் சிலுவைக்கு இட்டுச் சென்றன; செல்கின்றன. பணத்துக்கு அடிமைப்பட்ட யூதாசும், அலகைக்கு அடிமைப்பட்ட யூதத் தலைவர்களும் ஒன்றுபட்டதில் எவ்வித வியப்பும் இல்லை. ( காண்க : லூக். 22 : 5 — 6 )

மீட்பின் செய்தியைத் தவறுதலாகப் புரிந்துகொண்ட யூதாஸ், இயேசுவை 30 வெள்ளிக் காசுக்கு மதிப்பிட்டான்; விலை பேசினான். எத்தகைய பிழையான மதிப்பீடுள்ளவன் யூதாஸ். தனது ஆசைகளுக்கு அடிமைப்பட்டவன், தனது மதிப்பீடுகளையே இழந்துவிடும் இழிநிலைக்கு வந்துவிடுவான். வெற்று மிருகம் ஆகிவிடுவான்.

' தன் வீட்டாரே தனக்குப் பகைவர்.' ( காண்க : மத். 10 : 36 ) என்ற இயேசுவின் மொழிக்கு சான்றாகிய சீடன் யூதாஸ்; வானதூதர்கள் இறைவனின் செய்நன்றியை மறந்து பாவத்தில் வீழ்ந்தனர்;

ஆதிமனிதனும், மீட்பையும் — மீட்பரையும் காட்டிக்கொடுத்த யூதாசும் இதே வழியையே தேர்ந்தெடுத்தனர். இஸ்கரியோத்தின் உள்ளத்தில் அலகை புகுந்து ஆட்சியும் செய்தான். இதனால் மனம்நொந்து வருந்தும் நிலையில் அவன் இருக்கவில்லை.

## இந்நிகழ்ச்சி தரும் செய்தி :

i. சோதனைக்குட்படுதல் எவர்க்கும் பொது. நல்லவன் தீயவன் என்ற பாகுபாடின்றி சோதனை அனைவரையும் வாட்டுகிறது. இதனால் சோதனையை மேற்கொள்ள அருள் வழங்கும்படி ஆண்டவரைக் கேட்டல் எம் கடன். பாவச் சந்தர்ப்பங்களில் சிக்கிக்கொள்ளாது தப்பியோடுதல் வேண்டும்.

ii. கிறிஸ்தவர்களிடையே அலகை அதி ஊக்கத்துடன் செயற்படுகிறான். தீமையுடன் போராடவேண்டிய கடமை கிறிஸ்தவனுக்குண்டு. எனவே கிறிஸ்தவனைப் பாவத்தில் வீழ்த்தினால் சாத்தானுக்குப் பெரு வெற்றி. எனவே கிறிஸ்துவின் அடிச்சுவட்டில் செல்லும் நாம் பாவத்தில் விழாது விழித்திருப்போம்.

iii. கையூட்டு கனமான பாவமாகும். மனித சமுதாயத்தைக் காட்டிக் கொடுத்தலே கையூட்டெனலாம்.

iv. பேராசைக்கு அடிமையானவன் — அதற்கு வயப்பட்டவன் — தனது அழைத்தலுக்குத் துரோகம் இழைக்கிறான்.

v. சாவான பாவத்தில் விழ நேர்ந்தால், அதி விரைவில் மனம் வருந்தி இறைவன் பக்கம் சார்தல் எம் கடன்.

## 2. — பாஸ்கா — கிறிஸ்துவின் பிரியாவிடை உணவு :

(லூக். 22 ; 7 — 23

புளியாத அப்பத் திருவிழா, யூதர்களின் விடுதலை விழாவாக இருந்தது. தாம் விடுதலைபெற்ற பெரும் நிகழ்ச்சியை அவர்கள் அன்று நினைவுகொள்வர். பழைய உடன்படிக்கைக்கால வழக்கத்துக்கு இயைய இயேசு பாஸ்கா விழாவில் பங்குகொள்ளவிரும்பினார்.

"நாம் பாஸ்காப் பலியுணவை உண்ணுவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று இராயப்பரையும், அருளப்பரையும் அனுப்பினார். (லூக். 22 ; 8.)

இயேசு யூத இனத்தவர்; நல்லன என்று தாம் கண்ட யூத வழக்கங்களுக்கு அவர் மதிப்பளித்து நடந்தார்.

பாஸ்கா — கடத்தல் — உணவு பிரியாவிடை உணவாகவும் அமைந்தது. தமது முடிவு நாட்கள் நெருங்கிவிட்டதை அறிந்த இயேசு, திவ்விய நற்கருணை விழாவையும் நிறுவினார். அவர் மோயீசனின் சட்டத்தை நிறைவுசெய்து, அதன் வழியாக இறையரசை மனித இதயங்களில் நிலவச் செய்தார். புதிய உடன்படிக்கையின் புதிய செம்மறியான அவர், தம் உயிருள்ள பலியின் அடையாளமாகத் திவ்விய நற்கருணையை எமக்குத் தந்துள்ளார். (காண்க : லூக். 22 : 19 — 20)

பிரிந்துசெல்லும்வேளையில் உணவு அளித்தல் இயேசுவுக்குப் புதிதல்ல. இறையரசின் அடையாளமாக திருமண விருந்தின் பெருவிழா உவமையைத் தந்தார் இயேசு. கிறிஸ்தவர்கள் அனைவரதும் பொது ஆன்மீக உணவாக திவ்விய நற்கருணையின் பொருள், மேலும் விழங்க இவ் வுவமை உதவுகிறது. இன்று ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலி விண்ணக வீட்டில் நிகழும் திருமணத்தின் அடையாளமாகும். (காண்க: லூக். 22 : 15 — 16)

இந்த விருந்தில் பாவத்துடன் பங்குகொள்பவன் கிறிஸ்துவைக் காட்டிக் கொடுக்கிறான். சாவான பாவத்துடன் திவ்விய நன்மை உட்கொள்ளுபவன் தன் அழிவைத் தானே தேடிக்கொள்கிறான். (காண்க: லூக். 22 : 21 — 23)

மனம் வருந்தும்படி பாவியை அழைக்கும் கிறிஸ்து இறைவனின் இரக்கத்துக்குச் சான்று பகர்கிறார். ஆனால் கிறிஸ்துவின் இந்த அழைப்பை ஏற்காதவன், காட்டிக்கொடுத்த யூதாசுக்குச் சான்று பகர்கிறான். எனவே எம் சகோதரர்களுக்குத் தீர்ப்பு இடுவதற்குப்பதிலாக, எம் பாவங்களுக்காக மனம் வருந்துதல் எம் கடமையாகும்.

செய்தி :

i. கிறிஸ்தவன் என்றும் பாவத்துடன் போராடவேண்டும்.

ii. பாவத்தில் வீழ்ந்தவன் உடனடியாக மனம்வருந்துதல் மன்னிப்புப் பெற வழிவகுக்கிறது.

iii. பிறரின் அலுவல்களில் சரி பிழை காண்பதிலும், எம்மை ஆய்தல் நன்று. கடவுளின் பிள்ளை என்பதற்குச் சான்று பகரும் வழி இதுவாகும்.

iv. சாவான பாவத்துடன் திவ்விய நற்கருணையைப் பெறாது இருப்போம்.

தியானப்பொருள் :

1. காண்க : 1 கொரி. 11 : 27—28
2. ,, எபேசி. 4 : 17—23
3. ,, எபேசி. 5 : 15—17

விடை தருக :

1. பாவச்சோதனை வேளைகளில், கிறிஸ்துவின் பிள்ளையாகிய நீர் எவ்விதம் நடப்பீர் என்று விளக்குக.

2. யூதாஸ் இஸ்கரியோத் ஏன் ஆண்டவராகிய இயேசுவைக் காட்டிக் கொடுத்தான் ?

3. புதிய உடன்படிக்கையின் செம்மறி இயேசுக்கிறிஸ்து இப்பெயரை விளக்க ஒரு படம் வரைக.

4. நீர் கிறிஸ்துவின் வழிச் செல்பவன். திவ்வியநற்கருணை விருந்தில் சிறந்த முறையில் பங்குகொள்ள யாது செய்வீர் என விளக்குக.

அலகு : 39

# சிலுவையின் பாதையில் II...

## 1. பணிதலைப் பற்றிய நல்லுரை :

(லூக்காஸ் 22 : 24—30)

''தங்களுள் யாரைப் பெரியவனுக்க் கருதவேண்டும் என்ற வாக்குவாதம் அவர்களிடையே உண்டாயிற்று'' (லூக் 22 : 24)

சமுதாயத்தில் பதவியும், அதிகாரமும் பெறும் விருப்புள்ளவனுக மனிதன் வாழ்கிருன்; அதற்காக அவன் உழைக்கிருன். கால நேரத்தையும், பணத்தையும் அதற்காமச் செலவும் செய்கிருன். ஆனுல் அதிகாரம் கிடைத்ததும் பிறரைச் சுரண்டி வாழ முற்படுகிருன். தன்னை எதிர்ப்போரை அழிக்கவும் முனைகிருன். நீதி, அமைதி, சமத்துவம் இவற்றை மறந்து வாழ முன்நிற்கிருன். தான் இறைவன் என நினைக்கவும் தலைப்படுகிருன். இவை வரலாறு தரும் பாடங்களாகும்.

கடவுளின் அரசுக்கும், மனித அரசுக்குமிடையே பெரிய வேறுபாடு உண்டு. (காண்க : லூக் 22 : 25 — 26.)

இறையரசின் தலைவர்களாகிய அப்போஸ்தலர் எளிமை உள்ளோராய் இருத்தல் வேண்டும். மகிமை பெறுவதல்ல, ஆனுல் பணிவிடை புரிதலே அவர்களின் கடமையாகவேண்டும். நற்செய்தி தரும் மதிப்பீடுகளைத் துணையாகக்கொண்டு தீமையை எதிர்த்துப் போராடுவதே அவர்களின் தலையாய செயல்களாகவேண்டும். சந்தர்ப்பம் ஏற்படின் தம் உயிரையும் இறையரசுக்காக இழக்க முன்வர வேண்டியதும் அவர்கள் பொறுப்பு. தாம் பெற்ற அழைத்தலுக்குத் தக நிலைத்து நின்ருேர் சம்பாவனை பெறுவர். (காண்க : லூக். 22 : 30)

## 2. இராயப்பருக்கு நல்லுரை: ( லூக். 22 : 31 — 34 )

திருச்சபையின் காணக்கூடிய முதற் தலைவர் இராயப்பர். அலகை அவர்மீது பொருமையும், வெறுப்பும் கொண்டிருந்தான். அவரது விசுவாசத்தை நிலைகுலையச் செய்யும் அளவுக்கு அவன் செயற்பட்டான். (லூக். 22 : 31) ஆனுல் இராயப்பர் மெசியாவில் கொண்டிருந்த விசுவாசத்தின் வழியாக, மீளவும் விசுவாசத்தில் நிலைகொண்டார். (காண்க : லூக். 22:32) இராயப்பர் இயல்புக்கு மேம்பட்ட இந்தப் போராட்டத்தைப்பற்றி அறியாதிருந்தார். இதனுல் இயேசு அவரின்

விசுவாசத்தை உறுதிப்படுத்தினுர். ( காண்க : லூக். 22 : 33 ) ஆனுல் இயேசு மனிதனின் பலவீனத்தை அறிந்திருந்தார். இதனுல் இராயப்பரைப் பின்வருமாறு எச்சரிக்கிறுர். ( காண்க : லூக். 22 : 34 )

நாம் பெறும் செய்தி :

i. உலகைப் புனிதப்படுத்தவேண்டின் கிறிஸ்தவன் பணிவுள்ளவனுக இருக்கவேண்டும். உலகப் புகழ்ச்சியை வெறுத்து வாழவேண்டும்.

ii. இறைவனின் திருச்சபையில் பணிசெய்தல், பணி பெறுதலிலும் மேலானது.

iii. உலகில் எவரும் புனிதர் அல்லர். பாவிகளான நாம் எமது வலுவில் நம்பிக்கை கொள்ளாது, இறை வல்லமையில் நம்பிக்கை கொள்ளவேண்டும். முதலாவது பாப்புவே கிறிஸ்துவை மறுதலித்தார் எனின் ......... மற்றவர்களைப்பற்றிக் கூறவா வேண்டும்?

3. கிறிஸ்தவ உலகுக்கு நல்லுரை ; (லூக். 22 : 35—38)

மனிதனுகிய கிறிஸ்து இவ்வுலகில் இருந்தபோது, எதிர்நோக்கிய அதே தீமைகள் இன்றைய உலகிலும் இருக்கின்றன. ஆதிக் கிறிஸ்தவர்களை வேதனை பலவற்றுக்கு ஆளாக்கியதும் இதே தீமைதான். வேதசாட்சிகளின் இரத்தம் குடித்ததும், இராயப்பரைச் சிலுவை மரணத்துக்கு ஆளாக்கியதும் இதே தீமைதான். இவை எல்லாம் நிகழவிருப்பதை இயேசு அறிந்திருந்தார். இதனுல் அப்போஸ்தலர்களையும், திருச்சபையையும் எச்சரிக்கை செய்கிறுர். (காண்க ; லூக். 22 : 36)

இந்தச் சொற்களைச் சீடர்கள் பிழையாகப் புரிந்துகொண்டனர். இதனுல் அவர்கள், "ஆண்டவரே, இதோ இரண்டு வாள்கள் உள்ளன" என்றனர்.

அலகையுடன் போராட ஆயுதங்கள் தேவையில்லை. எமக்கு அவசியம் தேவையானது விசுவாசம், நம்பிக்கை, இறையன்பு. ஆன்மீகச் செய்தி ஒன்றுக்கு உலகார்ந்த கருத்துக் கொடுக்க முனையின் தொல்லையில் மாட்டுப்படுவோம். எமது பிழையான புரிந்துகொள்ளும் தன்மையை அறியும் இயேசு போதும் என்று சொல்லுவார். (காண்க : லூக். 22 : 38)

இது தரும் செய்தி :

i. அலகைக்கும் ஆற்றல் உண்டு.

ii. மனித பலத்தில் மட்டும் நம்பிக்கை கொள்ளல் மடமைத்தனம்.

iii. விசுவாசம், நம்பிக்கை, இறையன்புக்காக என்றும் கிறிஸ்தவன் செபிக்க வேண்டியவன்.

iv. காலத்தின் அடையாளங்களைப் புரிந்துகொண்டு, நற்செய்தி அறிவுரைகளுக்கு ஏற்ப அவன் ஒழுக வேண்டும்.

4. ஒலிவ மலையில் ஒலித்த செபம் :

(லூக்காஸ் 22 : 39—46)

ஒலிவ மலையிலுள்ள கெத்சேமனித் தோட்டத்தில் செபித்துக்கொண்டிருக்கும்போது இயேசு பிடிபட்டார். தீமைக்கு எதிரான போராட்டத்தில், இயேசு திடம் பெறவேண்டுமென்று தொடர்ந்து செபித்தார். சிலுவை அண்மித்துவிட்டதை அறிந்த அவர், தாம் அனுபவிக்க இருந்த கொடிய உடல் வேதனைகளை நினைத்து அஞ்சியிருப்பார். பாவத்தின் கொடிய விளைவுகளை ஆழ்ந்து தியானித்த அவர் தமது தந்தையைப் பார்த்து

> ''தந்தையே உமக்கு விருப்பமானால், இத் துன்பக் கலத்தை என்னிடமிருந்து அகற்றியருளும்; எனினும் என் விருப்பம் அன்று உம் விருப்பமே நிறைவேறட்டும்'' என்று செபித்தார்.

அவ்வேளை வானதூதன் அவரண்டை வந்து அவரைத் திடப்படுத்தினார். கொடிய வேதனையின் விளைவாக, இரத்தத்துளிகளாக வியர்வை சிந்தினார். மனித பயம் அத்தனையும் மேற்கொண்ட இயேசு, நித்திரை செய்து கொண்டிருந்த அப்போஸ்தலர்களைப் பார்த்து,

> ஏன் தூங்குகிறீர்கள் ? எழுந்திருங்கள், சோதனைக்கு உட்படாதபடி செபியுங்கள் (லூக். 22 : 46) என அவர்களுக்கு அறிவுரை கூறினார்.

### இது தரும் செய்தி :

i. புனிதத்துவத்துக்காகப் போராடவேண்டிய கிறிஸ்தவன் மேற்கொள்ள வேண்டிய பகைவர் மூவர். அவை : அலகை, உலகு உடல்.

ii. இப்பகையை வெற்றி கொள்ள இடைவிடாத செபம் அவசியம்.

iii. துன்ப துயரங்கள் எம்மை வாட்டும்போது, இறைவனின் திரு உள்ளத்தைப் புரிந்துகொள்ள எமக்குத் துணைபுரியும்படி இறைவனை வேண்டுதல், இவ்வித துன்பங்களை நீக்குமாறு கடவுளை வேண்டுதலிலும் சிறந்தது.

தியானிப்பதற்கு

1. காண்க : எபேசியர் 6 : 14—16
2. ,, ,, 6 : 17—18
3. ,, ,, 4 : 1—6

விடை தருக :

1. இறை அரசில் உயர்ந்தோனய் இருப்பவன் யார் ?
2. சோதனைக்குட்படாதபடி செபியுங்கள் — இது கூறும் பொருளை மையமாக் அமைத்து செபம் ஒன்று எழுதுக.
3. இயேசு ஏன் இரத்த வியர்வை சிந்தினர் ?
4. லூக். 22 : 42-ல் அழகான செபம் ஒன்றுண்டு. அதை வாசித்து ஆய்வு செய்க.

அலகு : 40

# சிலுவையின் பாதையில் III.

## 1. இயேசு பிடிபடுதல் : ( லூக். 22 : 47 —53 )

இந்நிகழ்ச்சியில் நான்கு பிரிவுகள் உள்ளன. அவை :

(அ) யூதாசின் துரோகம் (ஆ) இராயப்பரின் சிந்தனையற்ற செயல்
(இ) யூதத் தலைவர்களின் வெளிவேடம் (ஈ) கடவுளின் கருணை

### ( அ ) யூதாசின் துரோகம் :

யூதாசே,முத்தமிட்டோ மனுமகனைக் காட்டிக்கொடுக்கிறாய்? இயேசு யூதாசைப் பார்த்து இவ்விதம் வினவினார். இவ்விதம் கேட்டு மனந்திரும்பும்படி அவனை அவர் அழைத்தார். கல்மனத்தையும் தொடக்கூடிய அழைப்பு இது. ஆனால் யூதாஸ் மட்டில் இது பயனற்ற அழைப்பாகியது, நம்பிக்கைத் துரோகம் இழைத்தான் யூதாஸ். இது இயேசுவின் மனதைப் பெரிதும் புண்படுத்தியது. தமது சொந்த நண்பர்களில் ஒருவனால் காட்டிக்கொடுக்கப்படுதல்... இயேசு எத்துணை வேதனைஅடைந்திருப்பார். பழைய உடன்படிக்கைக்கால பண்ணிசையாளர் இத்தகைய துன்பம்பற்றி கூறியவற்றைப் பின்வரும் சங்கீதங்களில் காணலாம். ( சங். 54 : 12 — 14 ; சங். 40 : 10 )

### (ஆ) இராயப்பரின் சிந்தனையற்ற செயல் :

பாவம் இரயப்பர். அவர் இன்னும் உலக அரசு பற்றியே சிந்தித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் முன்வந்து, தலைமைக்குருவின் ஊழியனைத் தாக்கியதுடன், அவனது வலது காதையும் வெட்டினார். ( அரு. 18 : 10 ) மீன்களைக் கொன்றவர் இப்போது மனிதரையும் கொல்ல முனைகிறார். ஆனால் இறை அரசுக்கு ஆட்களைச் சேர்ப்பதுதான் அவர் கடமை என்றும், அவர்களை அழிப்பதல்ல...... என்றும் இயேசு இராயப்பருக்கு நினைவுபடுத்தினார், போதும் விடுங்கள் என்று கூறிய இயேசு அவன் காதைத் தொட்டுக் குணமும் அளித்தார். இராயப்பர் இயேசுவை அன்புசெய்தது உண்மைதான். ஆனால் இயேசுவின் மீட்புப் பணி பற்றி அவர் அறியாதிருந்தார்.

### (இ) யூதத் தலைவர்களது வெளிவேடம் :

பசுத்தோல் போர்த்த புலிபோல, வெளியில் பக்திமான்களாக நடித்த யூதத் தலைவர்களை இயேசு பலமுறைகளில் கண்டித்துப் பேசினார். இதனால் சினங்கொண்ட அவர்கள் இயேசுவைக் கொல்ல

விரும்பினர். இயேசுவின் நல்லுரைகளைக் கேட்ட புத்தியில் சிறந்த அவர்கள், இயேசுவின் வழியைத் தேர்ந்திருக்கலாம். ஆனால் தங்கள் வெளிவேடத்தை நினைத்து மனம் வருந்துவதற்கு அவர்கள் முன்வர வில்லை. ஆனால் சாதாரண குற்றவாளி ஒருவனைத் தேடிப் போவது போல, வாளோடும் தடிகளோடும் இயேசுவைப் பிடிக்கச் சென்றனர். யூதத் தலைவர்களது போதனை சரியானதெனில் ஏன் அவர்கள் நாள் தோறும் கோவிலில் இருந்த இயேசுவை அங்கு பிடிக்க முன்வரவில்லை. அது மிகவும் இலகுவாக இருந்திருக்கும் அல்லவா? அவர்களின் போக்கு தப்பறைகள் நிறைந்தது. எனவே தமது அநீதச் செயலை மூடி மறைக்க இருள் ஆட்சிபுரியும் இரவுவேளையில் சென்றனர். எமது பாவங்களை இருள் மறைத்துவிடுமா?

(ஈ) கடவுளின் கருணை :

இயேசுவைக் காட்டிக் கொடுக்க கூடி இருந்து கழுத்தறுக்க முன்வந்தான் யூதாஸ். ஆனால் இயேசு அவனை 'மன்னிக்கத் தயாராய் இருந்தார். இராயப்பர் தம்மை மறுதலிப்பார் என்று இயேசு அறிந் திருந்தும், அவருக்காகச் செபித்தார். தாம் பிடிபட்ட அந்தநேரத்தில், தலைமைக்குருவின் ஊழியனை இராயப்பர் காயப்படுத்தினபோது அவ னைக் குணமாக்கினார்; தாம் செய்வது இன்னதென்று இயேசு அறிந்தி ருந்தார். ஆனால் மற்றவர்கள் இதை அறியாதிருந்தனர். எமது மீட் புக்காக... அவர் தாமாக சிலுவை மரணப் பாதைக்குச் செல்ல உடன் பட்டார். தம்மை வெறுத்தோர்க்கு அன்பு காட்டினார், கொடுமை இழைத்தவர்களுக்குக் கருணை காட்டினார், தமக்கு நயவஞ்சகம் செய் தோர்க்கு மன்னிப்பளித்தார்... இவ்விதம் நடந்து தாம் 'தெய்வ மகன்' என்பதற்குச் சான்றாகினார்.

இராயப்பர் மறுதலிக்கிறார் : (லூக். 22 : 54 — 62)

திருச்சபையின் முதலாவது பரிசுத்ததந்தை இராயப்பர் கிறிஸ்துவை மும்முறை மறுதலித்தார். இருந்தும் யூதாசுக்கும், இராயப்பருக்கும் இடையில் வேறுபாடு உண்டு. இருவரும் அப்போஸ்தலர், இருவரும் பிரமாணிக்கம் இழந்தனர், இருவரும் நம்பிக்கைத் துரோகம் இழைத் தனர். ஆனால், யூதாஸ் மனம் வருந்தப் பின்வாங்கினான். இதேவேளை யில் இராயப்பர் ஆண்டவரின் வார்த்தையை நினைவுகூர்ந்து வெளியே போய் மனம் வெதும்பி அழுதார்.

நாம் பெறும் செய்தி :

1. பாவி எவனுக்கும் மனம் வருந்தும் சந்தர்ப்பத்தைக் கடவுள் கொடுக்கிறார்.

2. சிலர் மனம் வருந்துவதில்லை. இதனால் அறிவைத் தேடுகின்றனர்.

3. மற்றையோர் மனம் வருந்துகின்றனர். இதனால் மீட்படைகின்றனர்.

4. சாவான பாவத்தில் விழ நேர்ந்தால் மனம் வருந்தி, அதி விரைவில் பாவசங்கீர்த்தனம் செய்தல் நம் கடன்.

### 3. இயேசுவை ஏளனம் செய்து அடிக்கின்றனர் :

(லூக். 22 : 63 — 65)

இறைவன் மனிதனைப் படைத்தார். அதே மனிதனின் கேலிப் பொருளாக, ஏளனம் செய்யப்பட்டவராக, வன்செயல்களை ஏற்கும் செம்மறியாக இறைவன் மனிதர் முன் நிற்கிறார். இயேசுவை எள்ளிநகையாடினர், எச்சிலை உமிழ்ந்து அவமதித்தனர்; முகத்தில் அடி, தொடர்ந்து உடலில் அடி, பழிச் சொல், கசையடி இன்னும் எத்தனை ஏளனம் கிறிஸ்துவுக்கு இது ஒரு பெரும் மறைபொருள். இறைவனின் தாழ்ச்சியை மனிதன் புரிந்துகொள்ள முடியாது. கடவுளை ஏளனம் செய்த மனிதன் இன்னும் மனிதனாக இருப்பது அவனது நன்றிகெட்ட செயலைக் காட்டும் அடையாளமாக இருக்கிறது. பழைய காலத்தில் வாழ்ந்த இசையாஸ் இறைவாக்கினர் வரவிருக்கும் மெசியாவுக்கு வருங்காலப் பரம்பரை என்ன செய்யும் என்று எழுதி வைத்துள்ளார். (காண்க : இசை. 53 : 3 — 6)

**நாம் பெறும் செய்தி :**

1. நட்பு நிலவாத சூழ்நிலையிலும் கிறிஸ்தவன் உண்மைக்குச் சான்றுபகர்பவன்.

2. கிறிஸ்துவுக்காக ஏளனப்பட, கேலிக்குட்பட, சித்திரவதைக் குட்பட்ட சந்தர்ப்பம் எமக்குக் கிடைப்பின் அது பெரும்பேறு

3. தமக்குத் துன்பம் இழைப்பவர்களையும், பகைமை பாராட்டுபவர்களையும் உண்மைக் கிறிஸ்தவன் மன்னிப்பான், அவர்களுக்காக வேண்டுவான்.

**தியானம் :**

1. (காண்க : 2 கொரிந் 4 : 10 — 17)

2. (காண்க : கொலோ 3 : 12 — 13)

**விடை தருக**

1. எமது மீட்பராகிய இயேசுவில் நீர் கொண்டுள்ள விசுவாசத்தைக் காட்டக்கூடிய வாழ்வின் நிகழ்ச்சிகள் 5 குறிப்பிடுக.

2. இயேசு பிடிபட்ட வேளையில் இராயப்பர் என்ன செய்தார்; இவ்வித செயலைச் சரி என நீர் ஏற்றுக்கொள்கிறீரா?

3. மனிதனைப் படைத்த இறைவன் ஏன் மனிதனின் ஏளனத்துக்கு ஆளானார்?

4. இன்றைய சமுதாயத்தில் சிலுவையைச் சுமப்பவர்கள் — என்ற தலைப்பில் சில படங்களை வெளிக்களப் புத்தகத்தில் ஒட்டுக. ஒவ்வொன்றைப்பற்றியும் சுருக்க விளக்கம் தருக,

---



COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P. O. BOX 601
COLOMBO.

அலகு : 41

# சிலுவையை நோக்கி — IV

## 1. பிலாத்து முன் இயேசு : ( லூக். 25 : 1 — 7 )

சனெத்திறின் என அழைக்கப்பட்ட மூப்பர் சபையினர் மரணத் தீர்ப்பு அழிக்கும் அதிகாரம் அற்றிருந்தார். இதனுல் இயேசுவைப் பிலாத்து முன் அழைத்துச் சென்றனர். இயேசுவுக்கு எதிராக மூன்று குற்றச்சாட்டுகளைச் சமர்ப்பித்தனர்.

அவை :—

i. யூத மக்களைப் புரட்சிக்குத் தூண்டியது.

ii. செசாருக்கு வரி செலுத்தாது தடுத்தது.

iii. யூதர்களின் அரசன் எனக் கோரியமை.

பரிசேயரும், மறைநூல் அறிஞரும், மூப்பர் சபையினரும் இயேசுவைத் தொலைக்கும் எண்ணம் உடையோராக இருந்தனர். இதனுல் எவ்விதபொய்க் குற்றச்சாட்டுகளையாவது கொணர்ந்து, அவருக்குச் சதி செய்ய நினைத்தனர். அவர்கள் எதிர்பார்த்திருந்த மெசியா, இயேசு போன்ற ஒருவர் அல்லர். எனவே தமது எதிர்பார்ப்புக்கு ஒவ்வாதிருந்த இயேசுவை அவர்கள் விற்றனர். பணத்துக்கும் பதவிக்கும் பித்துப் பிடித்து அலைந்த அவர்கள் உண்மையைச் சாகடித்தனர். மெசியாவைப் புரிந்துகொள்வதற்கான தாழ்ச்சி அவர்களிடம் இருக்கவில்லை. அரசியல் விடுதலையை விரும்பினரே அன்றி ஆன்மீக மீட்பை அவர்கள் நினைத்தும் பார்க்கவில்லை.

புறவினத்தானுன பிலாத்து நீ யூதரின் அரசனு? என வினவிய போது, இயேசு விடையாக நீர்தான் சொல்லுகிறீரே என்ருர். குற்றம் இல்லாத மெய்யியல் அறிஞர் ஒருவராக இயேசுவைப் பிலாத்து கண்டான். உரோமைப் பேரரசுக்கு எதிராகச் சதிசெய்யத் திட்டமிட்ட ஓர் அரசியல்வாதி அவர் அல்லர் என்பதையும் அறிந்திருந்தான். இதனுல் சிறைப்படுத்தப்பட்ட குற்றவாளியான இயேசுவை விடுதலையாக்க முடிவுசெய்த பிலதத்து, " இம் மனிதனிடத்தில் ஒரு குற்றமும் காணேனே " என்ருன். இதைக் கேட்ட யூதத் தலைவர்கள் ஆத்திரம் கொண்டு,

" யூதேயா எங்கணும் போதித்து மக்களிடையே கிளர்ச்சியைத் தூண்டுகிறான். கலிலேயாவில் இங்ஙனம் தொடங்கினான். இப்போது இங்கும் வந்துவிட்டான் எனக் கூக்குரல் இட்டனர்.

பிலாத்துவின் திட்டமில்லாத பண்பை இங்கு காண்கிறோம். குற்றமில்லை என அறிந்தும் இயேசுவை விடுதலையாக்குவதற்கு அவனிடத்தில் துணிவு இருக்கவில்லை. இயேசு கலிலேயன் என்பதை அறிந்ததும் பிலாத்து அவரைக் கலிலேய ஆட்சியாளரான ஏரோதிடம் அனுப்பி வைத்தான்.

### 2. ஏரோது முன் இயேசு : ( லூக் 23 : 8 — 12 )

ஏரோது உலகப்பற்று மிக்கவன். இயேசுவைக் கண்டதும் அவன் பெருமகிழ்வெய்தினான். இயேசுவைக்கொண்டு அருஞ்செயல்கள் சில செய்விப்பதற்கு ஆர்வத்துடன் இருந்தான். ஆனால் அவன் நினைத்தது நடக்கவில்லை. அவன் இயேசுவிடம் பல கேள்விகளைக் கேட்டான். ஆனால் இயேசுவோ மௌனம் சாதித்தார். இதனால் ஏரேது வெட்கம் அடைந்தான். அவன் தனது படையினருடன் இயேசுவை எள்ளி நகையாடினான். அவர்கள் அவரை அவமானப்படுத்தினர்; கேலி செய்யும் நோக்குடன் ஏரோது பகட்டான ஆடை ஒன்றை அவருக்கு அணிவித்து மீளவும் பிலாத்துவிடம் அனுப்பிவைத்தான். பகைமை பாராட்டிவந்த ஏரோதும், பிலாத்தும் அன்றே நண்பராயினர்.

### 3. மரண தண்டனை : ( லூக். 23 : 13 — 25 )

மனித சட்டம், சட்டம் என்ற முறையில் நீதி உள்ளதாக இருக்கலாம். ஆனால் அச் சட்டத்தை நடைமுறைப்படுத்துபவர்கள் அதிகமாக அநீதி படைத்தவர்களாயிருப்பர். இயேசு குற்றமற்றவர் என்பதைப் பிலாத்து அறிந்திருந்தான். ஏரோதனும் எவ்வித குற்றத்தையும் இயேசுவில் கண்டுகொள்ள முடியவில்லை. இருந்தும் பிலாத்து,

" இவனைத் தண்டித்து ( கசையாலடித்து ) விடுதலைசெய்வேன் " என்றான். ( லூக். 23 : 16 )

— குற்றம் அற்றவருக்குக் கசையடி ஏன் ?
— இது அநீதி இல்லையா ?
— நீதியின்படி அவர் விடுதலை செய்யப்பட வேண்டியவரல்லவா?
— அப்படியாயின் பிலாத்து அவரை ஏன் விடுவிக்கவில்லை ?
— பரபாசை விடுதலை செய்தது ஏன் ?

மனவலுக் குறைந்த ஆள்பதி, நீதி கோண நடக்கும் மனிதருக்கு அடையாளமாக விளங்குகின்முன். அநீதிக்கு எதிராகப் போரிடும் சந் தர்ப்பம் பிலாத்துவுக்குக் கிடைத்தது. இருந்தும், தன் பதவியும் அதி காரமும் போய்விடுமே என்ற அச்சத்தால் ஒருபக்கம் சார்ந்து நீதி செலுத்தினுன். இதனுல் அநீதியான கோரிக்கையை ஏற்றதுடன், இயேசு வைச் சிலுவை மரணத்துக்கும் தீர்ப்பிட்டான்.

— மனிதன் தனது மீட்பரையே கொல்கிமுன். இதுவா நன்றி

— இவ்வித மனிதன் அலகையின் அடிமை இல்லையா ?

— பிலாத்துவின் கொடிய தீர்ப்புக்கு மனித இனம் முழுவதுமே பொறுப்பேற்க வேண்டும்.

நாம் பெறும் செய்தி ;

1. நீதியின் முன் தயங்கும் கிறிஸ்தவன், தனது அழைத்தலை மறுத்து வாழ்பவன்.

2. நாங்கள் என்றும் பிறரைத் தீர்ப்பிடக்கூடாது.

3. நேர்மையான கிறிஸ்தவன் சமுதாயத்தில் விடுதலை, சமத்து வம், அமைதி, நீதி என்பவற்றுக்காகப் போராடுவான்.

4. தவறுதலான கொள்கைகளை நாம் ஏற்று வாழக்கூடாது.

5. பிழையானதை விட்டு, சரியானதைத் தேர்ந்துகொள்ளும் வழி யைப் பிறர்க்குக் காட்டுதல் நன்று.

6. சீரிய கிறிஸ்தவன் வருந்துபவர் பக்கம் சார்ந்திருப்பான். ஏழை களுடனும், சமுதாயத்தில் விலக்கப்பட்டவர்களுடனும் அவன் உறவாடுவான். அவர்களின் உயர்வுக்காக ஆனதெல்லாம் ஆற்றுவான்.

7. இறையரசுக்காகத் துன்பதுயரங்களை எதிர்நோக்குதல் எம் கடன். இதற்காக உயிரை இழக்கவும் நாம் முன்வரவேண்டும்.

தியானம் :

1. ( காண்க : அப். பணி. 2 : 22 — 23 )

2. ( காண்க : உரோ. 14 : 10 — 13 )

3. ( காண்க : 1 இராய. 2 : 21 — 24 )

விடை தருக!

1. இயேசுவுக்கு எதிராகக் கொண்டுவரப்பட்ட குற்றச்சாட்டுகள் எவை ?

2. அவை நீதியானவை எனக் கருதுகிறீரா ? ஏன் ?

3. அயலானைக் குற்றம் சாட்டுதல் ஏற்புடைத்தா ? ஏன் ?

4. கிறிஸ்தவ மாணவனுன நீர் நீதி, நேர்மை உள்ளவனுக இருக்க வேண்டும். பள்ளியிலும், விளையாட்டிடத்திலும் நீதி நேர்மை காக்க எவ்வகையில் உதவுவீர் என 3 எடுத்துக்காட்டுகளைத் தருக.

5. சக மாணவன் உம்மைக் கேலிசெய்தால், அதைப்பற்றி நீர் எடுத்துக்கூறிய பல்வேறு செயல்முறைகளைப் பின்வரும் அட்டவணையின்கீழ் வகைப்படுத்துக.

| | கிறிஸ்தவச் செயல்கள் | கிறிஸ்தவனுக்கு ஒவ்வாத செயல்கள் |
|---|---|---|
| 1. | ................................ | ................................ |
| 2. | ................................ | ................................ |
| 3. | ................................ | ................................ |

அலகு : 42

# தமது சாவினுல் எமக்கு வாழ்வுதந்த செம்மல் இயேசு

## 1. சிலுவையில் இயேசு : லூக். ( 23 : 26 — 48 )

ஆள்பதி பிலாத்து பரபாசை விடுதலைசெய்து, இயேசுவுக்கு மரண தண்டனை விதித்தான். அவன் நன்மையைக் கொன்று, தீமைக்கு இடம் கொடுத்தான். நன்மைக்குச் சாவுமணி அடித்து, தீமைக்குத் தூபம் இட்டான். ஆளுநர் பதவிக்கு ஆபத்து வருமா என அஞ்சி அதற்காகப் பேராசைப்பட்டவன் அவன்; அரசர்க்கரசனுன இயேசு வையே கொலைக்குத் தீர்க்க முன்வந்தான். பாவத்தின் வயப்பட்ட மனிதர்க்கு அடையாளமாகப் பிலாத்துவின் செயல் அமைகிறது. தீமைக்கு அடிமைப்பட்டு, கடவுளின் கருணை மறுத்து வாழும்போது, கிறிஸ்துவைச் சிலுவைக்கு அனுப்புகிருேம். துன்புறும் எம் சகோதரர் நிலை கண்டும் கண்மூடித்தனமாக வாழும்போது அவரைச் சிலுவைக்கு இட்டுச் செல்கிருேம். வாழ்வின் தொல்லைகளையும், இன்பங்களையும் அனுபவிக்கும் அயலானுக்கு உதவுதல் நம் கடன். சீரேனே ஊரான் சீமோன் இயேசுவின் சிலுவைப் பாரத்தில் பங்குகொண்டதுபோல ( லூக். 23 : 26 ) நாமும் பிறரின் துன்பங்களில் பங்குகொள்வோம்.

கடவுளுக்கு எமது கண்ணீர் தேவையில்லை; அழுகை எமக்குத் தேவைப்படுகிறதேயன்றி கடவுளுக்கன்று. முடிவில்லாப் பெருவாழ்வை இழப்பவன் உண்மையில் பெரும் அபாக்கியசாலியே. ஒரு குற்றமும் அறியாத செம்மறிப்புருவையாகிய கிறிஸ்து பாடுகளை அனுபவிக்க வேண்டி வந்ததெனில் நாங்கள் துன்பப்படாமல் இருக்க முடியுமா ? ..

"பச்சை மரத்துக்கே இப்படிச் செய்கிருர்கள் என்ருல் பட்ட மரத் துக்கு என்ன நேருமோ " ( லூக். 23 : 28 ) என கிறிஸ்து கூறியதை நினைவிற்கொள்வோம். கிறிஸ்துவின் பாடுகளை நினைத்து, நினைத்து அதுபற்றி இரங்குவதும், கண்ணீர் வடிப்பதும் சிறந்த செயல் என்பதில் ஐயமில்லை. கிறிஸ்தவர்கள் அல்லாதவர்கள்கூட இதைச் செய்கிருர்கள் — ஆனுல் எமது பாவங்களை நினைத்து, அவற்றிற்காக. கவலைப்படுதல், அவருக்காகக் கண்ணீர் வடிப்பதிலும் அதி சிறந்தது ( காண்க : லூக். 23 : 28 )

உலகையும், அதில் மனிதனையும் படைத்தமைக்காகக் கடவுளைக் குறைகூறும் பழக்கம் எம்மிற் பலரிடையே உண்டு. பாவத்தில் விழுவார்கள் எனத் தெரிந்திருந்தும் ஆதாமையும், ஏவாளையும் ஏன் இறைவன் படைத்தார் என நாம் கேட்கிறோம். நன்மையை அழித்து அதையே தீமையாக மாற்றவும் முயல்கிறோம். மனிதன் தனது சுயாதீனத்தைப் பயன்படுத்திப் பாவ வழியைத் தேர்ந்தெடுத்தான். இதனால் இரு கள்வர் மத்தியில் இயேசுவை நிறுத்தி அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றாலும், தான் குற்றமற்றவன் என்று வாதிட முடியாது. குற்றமின்மையும் பாவமும் கலக்க முடியாதவை. சிலுவை மரணம் மனிதனின் பாவத்தை மூடி மறைக்கவில்லை. ஆனால் அதற்காகப் பரிகாரம் செய்கிறது ( காண்க : லூக். 23 : 35 — 38 ) எம் மீது மீட்பர் பரிதாபம் கொண்டு கருணைமழை பொழிகிறார். (காண்க : லூக். 23 : 34 )

மனிதன் இறைவனின் மன்னிப்பைப் பெறும் வாய்ப்பை அவனது அறிவினால் பெறவில்லை என்பதும், மன்னிப்புப் பெறுவதற்குக் காரணமாய் அமைவது அவனது அறியாமையே என்பதும் தெரிகிறது. தலைமைக் குருவின் ஊழியன் இயேசுவின் முகத்தில் அறைந்ததற்குக் காரணம் அவனது அறியாமையாகும். நீதியிலும் மேலாக செசாரின் நட்பை விரும்பிய பிலாத்துவின் செயலும் அறியாமையை அடிப்படையாகக் கொண்டதே. பகட்டான ஆடை அணிந்து இயேசுவை எளிமைப்படுத்திய ஏரோதிலும் அறியாமையே குடிகொண்டிருந்தது. கிறிஸ்துவைச் சிலுவையில் அறையவும், பரபாசை விடுவிக்கவும் கூக்குரலிட்ட கும்பல் அறிவுள்ளதாய் இல்லையே. தான் பெற்ற உலக அறிவினால் மனிதன் இறைவனின் மன்னிப்புக்கு உரித்தாகவில்லை. அவனது அறியாமையே மன்னிப்படையும் வாய்ப்பை அவனுக்களித்தது. கல்வாரியில் மீட்பைச் சுவைத்த முதலாம் ஆள் ஒரு திருடன். அவன்,

> " இயேசுவே, நீர் அரசுரிமையோடு வரும்போது என்னை நினைவுகூரும் " ( லூக. 23 : 41 )

என வேண்டினான். மரணத்தின் நுழைவாயிலில் இருப்பவன், முடிவில்லா வாழ்வை வேறொருவரிடம் இரக்கிறான். இரப்பாளன் ஒருவன் இன்னொரு இரப்பாளனிடம் அரசு கேட்கும் விந்தை. ஒரு கள்வன் இன்பவனத்தைத் திருட உத்தரவு கேட்கிறான். இது எத்துணை வியப்புக்குரிய செயல். அவன் தன் முயற்சியில் வெற்றியும் பெறுகிறான் ( காண்க : லூக். 23 : 43 )

சிலுவையில் உயிர் நீத்துக்கொண்டிருந்த மெசியா தமது பணி பற்றி மறக்கவே இல்லை. அவர்பணி என்ன ? இறையரசுக்கு மனிதரை வெல்லுதல் — இது எமது கிறிஸ்தவ அழைப்பு என்பதை நாம் உணர்கிறோமா ? உணர்ந்து செயற்படுவோம்!

**2. இயேசு உயிர் நீத்தல் : ( லூக்காஸ் 23 : 44 — 49 )**

இறக்கப்போகும் நாளும் நேரமும் எமக்குத் தெரியாது. ஆனல் வாழ்வின் ஊற்ருகிய இயேசு, மனமுவந்து தம்மை இறைவனுக்குப் பலியாக்க விரும்பித் தமது இறுதி மூச்சை விட்டார். அவரது பலி அவராகத் தேர்ந்தெடுத்த தொன்று. மனிதர் எவரதும் தூண்டுதலால் இது அவர்மீது திணிக்கப்படவில்லை — மீட்புப் பணியை அவர் ஏற்று, பிரமாணிக்கத்துடன் அதை நிறைவேற்றி, எமக்கு முடிவில்லாப் பேற்றை வென்றெடுத்தார். கல்வாரியில் நின்ற சிலர் செபிக்கத் தொடங்கினர். சிலர் பாவங்களுக்காக மனம் வருந்தி தம் மார்பில் அறைந்துகொண்டனர். ஆனல்.

"நிகழ்ந்ததைக் கண்ட நூற்றுவர் தலைவன், உள்ளபடியே இவர் நீதிமான் என்று சொல்லி, கடவுளை மகிமைப்படுத்தினன்." ( லூக். 23 : 47 )

கிறிஸ்தவர்களாகிய நாம் கல்வாரியில் நடந்த பலிக்குச் சான்று பகர வேண்டியவர்கள். எமது கடமை முப்படிகளை அடக்கியது.

i. எங்கள் பாவங்களுக்காக மனம் வருந்துதல்.

ii. இறைவனிடம் மன்னிப்பு வேண்டுதல்.

iii. கிறிஸ்துவுக்குச் சான்று பகருதல்.

கல்வாரியில் இருந்து திரும்பிய விசுவாசிகள் புதிய ஜெருசலேமைக் கண்டு கொண்டனர். இறை அரசு அனைவர்க்கும் திறக்கப்பட்டது. புனிதத்திலும் புனிதம் வாய்ந்த பழைய ஜெருசலேமின் இரத்தப்பலி, கிறிஸ்துவில் புதுநோக்கைப் பெற்றது. மீட்பின் நற்செய்தியும், கல்வாரியில் நிகழ்ந்த திருப்பலியும் முழு உலகத்தினதும் விடுதலைக்கு அடிப்படையாக அமைகின்றன. இயேசு மனித இனம் முழுவதன் மீட்பர் என்பதைக் காட்ட விழைந்த லூக்காஸ், பழைய உடன்படிக்கை கிறிஸ்துவில் நிறைவாக்கம் பெறுகின்றது என்பதை உறுதிப்படுத்துகிருர். ஆலயத்தின் திரை நடுவில் கிழிந்தது. ( லூக். 23 : 45)

**3. இயேசுவின் அடக்கம் : ( லூக். 23 : 50 — 56 )**

சொந்தம் இல்லாத அந்நியனின் மாட்டுக் கொட்டிலில் பிறந்த இயேசு, இன்னெரு அந்நியனின் கல்லறை ஒன்றில் அடக்கம் செய்யப்பட்டார். மனிதப் பிறப்பும், இறப்பும் இறைவனுகிய அவருக்குப் புறம்

யானவை. எனவே அவரது அடக்கம் அவரது வாழ்வின் முடிவாக அமையாது உயிர்ப்புக்கு ஆயத்தமாகியது.

அரிமத்தியா என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்ட சூசை போன்ற யூதர்கள் கடவுளுடைய அரசில் உறுப்பினராகும் தகைமையைப் பெற்றிருந்தனர். பழைய உடன்படிக்கை தந்த செய்தியைச் சரியாகப் புரிந்துகொண்ட சூசை போன்ற யூதர்கள், கிறிஸ்துவின் திருச்சபையில் முதலிற் சேர்க்கப்பட்ட உறுப்பினராவர். ( லூக். 23 : 50 — 51 ) சூசை பிலாத்துவை அணுகி அடக்கம் செய்வதற்காக இயேசுவின் உடலைக் கேட்டார். (லூக். 23 : 53 ) தமது கிறிஸ்தவ அழைப்புக்குச் சூசை இவ்விதம் சான்றாக விளங்கினார்.

கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவுடன் பாவத்துக்கு மரிக்கிறோம். திருமுழுக்கின் வாயிலாக அலகை, உலகு, உடல் மூன்றையும் வெறுத்தொதுக்கி, விசுவாசத்தை எம்மில் நிலைத்திருக்கச் செய்கிறோம். வருங் காலத்தில் நாமும் உயிர்த்தெழுவோம் என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம்.

## இது எமக்களிக்கும் செய்தி :

1. எமக்குத் தீங்கு இழைப்பவர்களை நாம் மன்னிக்கவேண்டியவர்கள்.

2. அவர்களுக்காகச் செபிப்போம்.

3. எமது பாவங்களுக்காக மனம்நொந்து, பாவசங்கீர்த்தனத்தின் வழியாக மன்னிப்புத் தேடுவோம்.

4 எண்ணம், சொல், செயல் மூன்றிலும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்வோம். இறப்பிலிருந்து உயிர்ப்போம். என்ற நம்பிக்கையுடன் வாழ்வோம்.

5. அயலாருக்கு அன்பும், பணியும் ஆற்றுவதன்வழியாக இறைவன்மீது உள்ள அன்பைப் புலப்படுத்தி உண்மைக் கிறிஸ்தவர்களாக வாழ்வோம்.

**தியானப்பொருள் :**

1. காண்க : எபிரே. 5 : 8 — 10

2. காண்க : எபிரே. 9 : 12

3. காண்க : 1 இராய 4 : 1— 2

விடை எழுதுக ;

1. எம்மை வருத்துபவர்களை ஏன் நாம் மன்னிக்கவேண்டும் ?

2. கல்வாரிப் பலிக்குச் சான்றுபகர விரும்பும் நாம், எவ்விதம் வாழவேண்டும் ?

3. 'எல்லார்க்கும் எல்லாமாக வாழ்வேன்'... இக் கிறிஸ்தவக் கொள்கைக்கு இயைய வாழவிரும்பினுல் என்னென்ன செய்வீர் என்று எழுதுக

4. அதிபரிடம் பொய்யான சாக்குப் போக்குச் சொல்லிவிட்டு, படத்துக்குப்போகும் உமது நண்பர்களைத் திருத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுப்பீர் ?

5. சிலுவை மரணம் எய்திய எங்கள் ஆண்டவரது அன்பை வெளிப்படுத்தி, அன்புப்பலியாக நன்றி செலுத்தி ஒரு பாடல் எழுதுக.

அலகு ; 43

# சாவை வென்ற சத்தியன் கிறிஸ்து

## 1. கிறிஸ்துவின் உயிர்ப்பு : ( லூக். 23 : 1 — 12 )

இயேசுவின் உடலுக்கு வாசனைப் பொருள்களால் நறுமணம் ஊட்டும் நோக்குடன் சில பெண்கள் கல்லறைக்குச் சென்றனர். அங்கு நின்ற வானதூதர் இருவர் கூறிய வார்த்தைகள் அப் பெண்களை வியப்பில் ஆழ்த்தியது. ( காண்க : லூக். 24 : 5 — 7 ) சீடர்களுக்குத் தாம் கண்டவற்றை அறிவித்தனர். ஆனால் சீடர்கள், பெண்கள் கூறியவற்றை வெறும் பிதற்றல் என நினைத்ததுடன் நம்பவுமில்லை.

ஆனால் இராயப்பர் எழுந்து கல்லறைக்கு ஓடினார். குனிந்து பார்த்தார் உடலை மூடியிருந்த துணிகளை அவர் கண்டார். வேறெதுவும் அங்கில்லை. என்ன நடந்திருக்குமோ என்ற வியப்புடன் வீட்டுக்குச் சென்றார்.

கிறிஸ்து உயிர்த்த நிகழ்ச்சியை எந்தச் சீடரும் காணவில்லை. வானதூதர்களே அதற்குச் சான்று பகர்ந்தனர். அன்று போலவே இன்றைக்கும், கிறிஸ்துவின் உயிர்ப்பு என்னும் மறைபொருளை விசுவாசத்தின்வளியாக மாத்திரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாக இருக்கிறது. வெறும் நியாயத்தின்வழியாக இதை ஏற்றுக்கொள்ள முடியாது. கிறிஸ்துவின் உயிர்ப்பை ஏற்றுக்கொள்ளாவிடின் நாம் கிறிஸ்துவர்கள் ஆகமுடியாது. கிறிஸ்து உயிர்த்திராவிடின் எம் விசுவாசம் பொருளற்றதும், எமது நம்பிக்கை வீணாகவும் போயிருக்கும்.

## 2. எம்மாவுஸ் செல்லும் பாதையில் : ( லூக். 24 : 13 – 35 )

அண்மையில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சிகளைப்பற்றிக் கலந்துரையாடியவண்ணம் இரு சீடர்கள் எம்மாவுஸ் என்ற ஊருக்குப் போய்க்கொண்டிருந்தனர். இயேசுவின் இறப்பை இட்டு அவர்கள் பெரிதும் துக்கித்தனர். ஆனால் அவரது உயிர்ப்புப் பற்றிக் கேள்வியுற்ற அவர்கள் வியப்படைந்தனர். பயணத்தின் இடையில் இயேசுவும் அவர்களுடன் சேர்ந்து கொண்டார். சீடர்கள் அவரை அடையாளம் காணவில்லை. ஆனால் பின்வரும் உண்மைகளுக்கு அவர்கள் சான்றுபகர்ந்தனர்.

i. இயேசு இறைவாக்கினர். ( லூக். 24 : 19 )

ii. யூதத் தலைவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றனர். ( லூக். 24 : 20 )

iii. இஸ்ராயேலரின் மீட்பர் இயேசு என்பதை சீடர்கள் நம்பியிருந்தனர். ( லூக். 24 : 21 )

iv. தேவதூதர்கள், பணிபுரியும் பெண்களுக்குத் தோன்றி இயேசு மரித்தோரிடையில் இருந்து உயிர்த்தெழுந்தார் எனக் கூறினர். ( லூக். 24 : 22 — 23 )

சீடர்கள் இதுபற்றி ஆய்ந்து, உண்மையை அறிந்தனர். ( லூக். 24 : 24 )

அந்த இரு சீடர்களும் விசுவாசமின்றி இருந்தமையை இயேசு கண்டித்தார். திருமறை நூலில் உள்ளவற்றை எடுத்துக் கூறினார். அப்படி இருந்தும் அவர்கள் அவரை அடையாளம் காணவில்லை.

சீடர்கள் தங்களுடன் தங்கும்படி கேட்ட அழைப்பை ஏற்றுக் கொண்ட இயேசு, அவர்களுடன் இராவுணவருந்தச் சம்மதித்தார். அப்பத்தைப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தபோது அவர்களின் கண்கள் திறக்கப்பட்டன அவரை அடையாளம் கண்டுகொண்டனர். இதை மற்றைய அப்போஸ்தலர்களுக்கும் விளக்கிக் கூறினர்.

இது அளிக்கும் செய்தி :

1. உயிர்ப்பை விளங்கிக்கொள்வது மனித நுண்ணறிவுக்கு அப்பாற்பட்டது.

2. இதைப் புரிந்துகொள்ள விசுவாசம் அவசியம்,

3. உண்மைக் கிறிஸ்தவன், அனைத்துலகுக்கும் கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டியவன்.

4. திருமறை நூலை வாசித்தலும், அதுபற்றிப் படித்தலும் எம்மில் விசுவாச வாழ்வை வளம்படுத்தும் வழிகளாகும்.

தியானத்துக்காக :

1. காண்க : 2 கொரி 5 : 14 — 15

2. காண்க : உரோமை : 5 — 11

விடை தருக :

1. கிறிஸ்தவ விசுவாசம் எந்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது எனக் குறிப்பிட்டு விளக்குக.

2. லூக், 24 : 11 — 12 தொடர்பாக, கிறிஸ்துவின் சீடர்களின்

விசுவாசமின்மைக்கான காரணங்களைக் குறிப்பிடுக.

3. எம்மாவுஸ் செல்லும் வழியில் இயேசுவுக்கும், இரண்டு சீடர்களுக்கும் இடையில் நடந்த உரையாடலை எழுதுக.

4. அந்தச் சீடர்கள் இருவரும் கிறிஸ்துவை எப்போது அடையாளம் கண்டுகொண்டனர்.

5. உயிர்த்த கிறிஸ்துவுக்குச் சான்றுபகரும் கடமை உமக்கும் உண்டு. பின்வரும் சந்தர்ப்பங்களில் எவ்விதம் நடப்பீர் எனக் குறிப்பிடுக.

i. சாப்பாட்டுவேளையில்; சுவையான உணவு சொற்பம் உமக்குக் கிடைத்தால்,

ii. பிறந்த நாளன்று உமது பெற்றோர் எதிர்பார்த்தளவு பரிசு தராதிருந்தால்.

iii, பரீட்சையின்போது உமக்கு விடை தெரியாத கேள்வி ஒன்றுக்குப் பார்த்தெழுதச் சந்தர்ப்பம் கிடைத்தால்,

அலகு : 44

# விண்ணேற்றம்

## 1. அப்போஸ்தலர்களுக்கு இயேசு காட்சியளிக்கிறார் :
(லூக். 24 : 36 — 49)

கிறிஸ்து உயிர்த்ததை ஏற்றுக்கொள்வது, அவரது சீடர்களுக்கு இலகுவானதாக இருக்கவில்லை. இதனால் அவர் அவர்களுக்குக் காட்சி யளித்தபோது திடுக்கிட்டனர். ஏதோ ஆவியைக் காண்பதாகக் கருதினர். பரிசுத்த ஆவியின் வருகையின் பின்னரே, கிறிஸ்துவின் பணியை அவர்கள் புரிந்துகொண்டனர். அவர்களின் விசுவாச நலிவை அறிந்த கிறிஸ்து, அவர்களில் பரிவிரக்கம் கொண்டு தம்மைத் தொட்டுப் பார்த்து மயக்கத்திலிருந்து தெளிவு பெறும்படி அவர்களுக்கு உரைத்தார். (காண்க : லூக். 24 : 38 — 40) அவர்கள் முன்னிலையில் உணவு உண்டார்.

(காண்க : லூக். 24 : 41 — 43) திருமறைநூல் பற்றிய விளக்கங்களை அவர்களுக்கு அளித்தார். (லூக். 24 : 44 — 47) அவர்கள் மேற்கொள்ளவேண்டிய பணிபற்றிப் படிப்பித்தார். (காண்க : லூக். 24 : 48) இறுதியாகப் பரிசுத்த ஆவியை அனுப்புவதாகவும் வாக்குறுதியும் கொடுத்தார். (காண்க : லூக். 24 : 49)

### நாம் பெறும் செய்தி :

1. கிறிஸ்து உண்மையாகவே இறந்தோரிடமிருந்து உயிர்த்தார்.
2. திருமறைநூல்கள் அவரில் நிறைவுபெற்றன.
3. மீட்பின் செய்தி ஜெருசலேமில் தொடங்கி அனைத்துலகுக்கும் பரந்து செல்கிறது.
4. கிறிஸ்துவின் பெயரால் அனைத்துலகுக்கும் திருமறைநூல் போதிக்கப்படுகிறது.
5. உலகெங்கும் உள்ள கிறிஸ்தவர்கள் திருமறைநூலுக்குச் சான்று பகரவேண்டியவர்கள்.
6. கிறிஸ்துவின் மீட்புச்செயல் இப்பொழுது பரிசுத்த ஆவியின் வழியாகத் திருச்சபையில் இடம்பெறுகிறது.

**வானகம் சென்ற வள்ளல் கிறிஸ்து : ( லூக். 24 : 50 — 53 )**

" பெத்தானியாவை நோக்கி............. புகழ்ந்து கொண்டிருந்தனர்
(காண்க : லூக். 24 : 50 - 53)

**சிந்தனைக்கு :**

இயேசு உயிர்த்தபின்னர் தமது சீடர்களுக்குப் பன்முறை காட்சி கொடுத்தார். பின்னர் வானகத்திலுள்ள தம் தந்தையிடம் சென்றுர். விண்ணேற்றத்தின்போது கூட இருந்த சீடர்கள் ஜெருசலேமுக்குத் திரும்பி, அங்குள்ள ஆலயத்தில் இறைவனைப் புகழ்ந்துகெண்டிருந்தனர். ( லூக். 24 : 50 — 53 ) பரிசுத்த ஆவியானவர் வருகையால் இறை அரசுக்காகத் தம் வாழ்வைப் பலியாக்கும் வலுவையும் பெற்றனர். அதே ஆவியானவர் இன்றும் திருச்சபையில் செயலாற்றுகிருர். திருச்சபையே புதிய ஜெருசலேம், இறைமக்களின் இதயமே புதிய ஆலயம். மனித இதயங்களில் ஆட்சிசெய்யும் கிறிஸ்து மீட்புப் பணியைத் தொடர்ந்து ஆற்றுகிருர்,

கிறிஸ்துவின் வரலாற்று முடிவு அவரது தொடக்கமாக இருக்கிறது. கிறிஸ்து எக்காலத்திலும் மீளவும் பிறக்கிருர். அவரது அன்புச் செய்தியை வானதூதர்கள் உலகின் நாலா திசைகளுக்கும் எடுத்துச் செல்கின்றனர். உண்மைக் கிறிஸ்தவனின் வீரம் செறிந்த போராட்டமும், அவன் தழுவும் மரணமும் விண்ணக ஜெருசலேமுக்கு அவன் மேற்கொண்டுள்ள புனித பயணமாகிறது.

**நாம் பெறும் சக்தி :**

மீட்பின் மறைபொருள் கிறிஸ்துவின் பிறப்பு, வாழ்வு, பாடுகள், மரணம், உயிர்ப்பு என்பவற்றில் அடங்கும். அவர்வழியாக உளமாற்றத்துக்கான அருளைப் பெறுகிறேம். மீட்பு அவரில் இருந்து பரந்து செல்கிறது. அவரது மீட்புப்பணியில் பங்குகொள்வதே உண்மைக் கிறிஸ்தவ இரகசியம். மனிதனின் ஆளுமையின் இறுதி நிறைவான இறைவனை அடையும் வாய்ப்பைப் பெறுவதற்காக நற்செய்தி அனைவர்க்கும் அருளப்படுகிறது.

**தியானம் :**

| | | | |
|---|---|---|---|
| 1. | காண்க : | திருவெளிப்பாடு | 21 : 2 — 4 |
| 2. | ,, | எபிரே | 4 : 14 — 15 |
| 3. | ,, | திருவெளிப்பாடு | 22 : 24 — 27 |
| 4. | ,, | ,, | 22 : 20 — 21 |

**விடை தருக !**

1. உயிர்த்த கிறிஸ்து அப்போஸ்தலர்களுக்குக் காட்சி கொடுத்து, அவர்கள் முன்நிலையில் உணவு உண்டது ஏன் ?

2. புதிய ஜெருசலேம் எது ? புதிய ஜெருசலேமின் கோவில் எது

3. படிப்பில் பின்தங்கிய சகமாணவர்க்கு, புதிய நம்பிக்கை வரக் கூடிய முறையில் நீர் என்ன செய்யலாம்.

4. உமது பள்ளியைச் சேர்ந்த கிறிஸ்தவ மாணவர்களின் தீய நடத்தையைக் கண்ணுற்ற கிறிஸ்தவனல்லாத சகமாணவன் கிறிஸ்தவத்தைப்பற்றி இழிவாகக் கதைக்கிறுன். அவன் உண்மையான கிறிஸ்துவையும், அவர் போதனையையும் அறியச் செய்ய ஒரு கடிதம் எழுதுக.

5. நீர் புனித லூக்காசின் நற்செய்தியைப் படித்து முடித்து விட்டீர், சரியானநெறியில் உம் வழியை மாற்றி அமைப்பதற்கு இந் நூலில் இருந்து நீர் பெற்ற படிப்பினைகளை எழுதுக.

6. இந்த நற்செய்தி நூல் வழியாக இறைவன் மனிதனுக்கு வழங்கும் செய்தியைப் படித்துள்ளீர். இதற்காக நன்றி தெரிவித்து ஒரு செபம் ஆக்குக.

756

...வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்.

COUNCIL FOR COMMUNAL HARMONY
THROUGH THE MEDIA
P. O. BOX 601
COLOMBO.